1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் சட்டத்தை நீக்கி பதிலீடு செய்வதற்கான ஒரு சட்டம்.

**இலங்கை மக்களின் நலன் கருதி கடல்சார் கடற்றொழில், நீரியல்வளங்கள் மற்றும் கடல்சார் சூழல்முறைமை ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தல், நீண்ட கால பேணிக்காத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாடு என்பன பொருட்டும்; பிராந்திய மற்றும் சருவதேச உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளுக்கு பயன்கொடுப்பதற்கும்; 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் சட்டத்தை நீக்கி பதிலீடு செய்வதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:

## பிரிவுகளின் ஒழுங்கமைப்பு

### அறிமுக ஏற்பாடுகள்

பிரிவு 1 – சுருக்கப்பெயரும் தொடக்கமும்

பிரிவு 2 – நோக்கெல்லையும் ஏற்புடைமையும்

பிரிவு 3 – குறிக்கோள்கள்

### பாகம் I – நிருவாகம்

பிரிவு 4 – கடற்றொழில் மறறும நீரியல் வளங்கள் திணைக்களம் (க.நீ.தி)

பிரிவு 5 – பணிப்பாளர் தலைமையதிபதி.மற்றும் ஏனைய அலுவலர்களின் நியமனம்

பிரிவு 6 – பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிகளும் கடமைகளும்

பிரிவு 7 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் மதியுரை சபை

பிரிவு 8 – தேசிய கடற்றொழில் சம்மேளனம்,மாவட்ட மற்றும் கிராமிய கடற்றொழில் அமைப்பு

பிரிவு 9 – வருடாந்த நிருவாக அறிக்கை

### பாகம் II – பதிவுசெய்தல்

**அத்தியாயம் 1 – மீன்பிடிக் கலன்களைப் பதிவுசெய்தல்**

பிரிவு 10 – மீன்பிடிக் கலன்களை பதிவு செய்யும் இடாப்பு

பிரிவு 11 – பதிவுசெய்தல

பிரிவு 12 – இறக்குமதிசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றை பதிவுசெய்தல்

பிரிவு 13 – பதிவுச் சான்றிதழை கப்பலில் கொண்டு செல்வதற்கு உள்ள கடப்பாடு

பிரிவு 14 – மீன்பிடிக் கலன்களை இனங்காணல் மற்றும் அடையாளமிடுதல்

பிரிவு 15 – மாகாண நிதியத்துக்கு கட்டணங்களை செலுத்துதல்.

பிரிவு 16 - மாகாணத்துக்கு தகவல்களை அனுப்புதல்

பிரிவு 17 – இடாப்பிலுள்ள தகவல்களை மாற்றுதல்

பிரிவு 18 – மீன்பிடிக் கலன்களின் பதிவை இடைநிறுத்தலும் இரத்துச்செய்தலும்

பிரிவு 19 – மீன்பிடிக் கலன்களின் பதிவை இடாப்பிலிருந்து நீக்குதல்.

பிரிவு 20 – அடமான சாதனத்தின் பதிவு

பிரிவு 21 – அடமான சாதனத்தின் முன்னுரிமை

பிரிவு 22 – மீன்பிடிக் கலன்களின் பதிவுசெய்யப்பட்ட அடமானம் மேலோங்குதல்

பிரிவு 23 – அடமான விடுவிப்பின் பதிவு

பிரிவு 24 – வங்குறோத்தினால் பாதிக்கப்படாத அடமானம்

பிரிவு 25 – அடமானத்தை கைமாற்றுதலும் பதிவு செய்தலும்

பிரிவு 26 – வங்குரோத்து போன்ற சந்தர்ப்பத்தில் அடமான வட்டியை அனுப்புதல்

பிரிவு 27 – பிரச்சாரம்

பிரிவு 28 – தேடுதல்களும் பிரதிகளும்

பிரிவு 29 – சான்று

பிரிவு 30 – ஏற்புடையதாகாத வேறு எழுத்திலான சட்டம்

**அத்தியாயம் 2 – மீனவர்களையும் கடற்றொழில் சார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்களையும் பதிவு செய்தல்**

பிரிவு 31 – மீனவர்கள் மற்றும் மீன்பிடி சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை பதிவு செய்தல்

**அத்தியாயம் 3 – மீன்பிடிப்படகு கட்டும் தளங்கள்,மீன்பிடிக் கருவிகள், கடல்சார் உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் துணைக்கருவிகள் உற்பத்தியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல்**

பிரிவு 32 – மீன்பிடிப்படகு கட்டும் தளங்கள்,மீன்பிடிக் கருவிகள், கடல்சார் உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் துணைக்கருவிகள் உற்பத்தியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல்

**அத்தியாயம் 4 – மேன்முறையீடு**

பிரிவு 33 – மேன்முறையீடு

**பாகம் III – உரிமம் வழங்கல்**

**அத்தியாயம் 1 – மீன்பிடிக் கலன்கள் பொருட்டான உரிமங்கள்**

பிரிவு 34 – மீன்பிடிச் செயற்பாடுகளுக்கான உரிமம் வழங்கல்

பிரிவு 35 – மீன்பிடி நடவடிக்கை உரிமம் வழங்கலின் பொதுவான கோட்பாடுகள்

பிரிவு 36 – மீன்பிடி நடவடிக்கை உரிமத்தின் கால எல்லை

பிரிவு 37 – மீன்பிடி நடவடிக்கை உரிமங்களின் கைமாற்றல்

பிரிவு 38 – வெளிநாட்டு கொடிதாங்கிய கலன்கள் மூலம் இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடை செய்தல்

பிரிவு 39 – உரிமம்வழங்கும் அலுவலர்

பிரிவு 40 – இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம்

பிரிவு 41 – இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றை புதுப்பித்தல்

பிரிவு 42– ஆழ்கடலில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம்

பிரிவு 43 – பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம்

பிரிவு 44 – ஆழ்கடலில் அல்லது பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றை புதுப்பித்தல்

பிரிவு 45 – மீன்பிடி நடவடிக்கை உரிமமொன்றை இரத்துச்செய்தல் அல்லது இடைநிறுத்துதல்

பிரிவு 46 – மாகாணங்களுடன் தகவல்களை பரிமாறுதல்

**அத்தியாயம் 2 – மீன்பிடி உரிமங்களைக் கொண்டிருப்போருக்கான கடப்பாடுகள்**

பிரிவு 47 – சட்டத்துடன் அமைந்தொழுகுதல்

பிரிவு 48 – மீன்பிடி உரிமம் மீதான கடப்பாடுகள்

பிரிவு 49 – உரிமத்தை கப்பலில் எடுத்துச்செல்ல வேண்டுமென்பது

பிரிவு 50 – புறப்பாடு மற்றும் வருகை

பிரிவு 51 – கடற்றொழில் தரவுகளின் பதிவு

பிரிவு 52 – மீன்களை தரையிறக்குதல் மற்றும் அறிக்கையிடல்

பிரிவு 53 – மீன்பிடி உபகரணங்களை அடையாளமிடுதல்

பிரிவு 54 – கப்பலில் பயணிக்கும் அவதானிகள்

பிரிவு 55 – அவதானிகள் செலவு

**அத்தியாயம் 3 –** மீன்பிடிக் கலன் அற்ற மீனவர்களுக்கான மீன்பிடி உரிமங்கள்

பிரிவு 56 – மீன்பிடிக் கலன் இன்றி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற மீனவர்களுக்கான மீன்பிடி உரிமங்கள்

பிரிவு 57 – வெளிநாட்டு கலனொன்றில் மீன்பிடி செயல்பாடுகளில் ஈடுபடுவதற்காக மீனவர்களுக்கான உரிமங்கள்

**அத்தியாயம் 4 – கப்பல் தலைவர்களுக்கான உரிமங்கள்**

பிரிவு 58 – கப்பல் தலைவர்களுக்கான உரிமங்கள்

**அத்தியாயம் 5 - பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல்**

பிரிவு 59 - பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல்

**அத்தியாயம் 6 – உரிமங்களுக்கான இடாப்பு**

பிரிவு 60 – உரிமங்களுக்கான இடாப்பு

**அத்தியாயம் 7 – மேன்முறையீடுகள்**

பிரிவு 61 – மேன்முறையீடுகள்

**பாகம் IV – தேசிய நியாயாதிக்கத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் மீன்பிடி செயல்பாடுகள்**

பிரிவு 62 – ஆழ்கடலில் ஒழுங்குபடுத்தப்படாத இனங்கள்

பிரிவு 63 – பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பினால் **(RFMO)** ஒழுங்குபடுத்தப்பட்ட இனங்கள்

பிரிவு 64 – அனுகை உடன்படிக்கையுடன் பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடித்தல

பிரிவு 65 – நாட்டுக்கு திருப்பியனுப்புவதற்கான உரிமை

**பாகம் V – கடற்றொழில் முகாமைத்துவம்**

பிரிவு 66 – கடற்றொழில் முகாமைத்துவத்தின் பொதுவான கோட்பாடுகள்

பிரிவு 67 – கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தலுக்கான அறிவியல் மதியுரை

பிரிவு 68 – தேசிய கடற்றொழில் கொள்கை

பிரிவு 69 – கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் வகைகள்

பிரிவு 70 – முகாமைத்துவ மற்றும் பேணிக்காத்தல் நடவடிக்கைகள்

**அத்தியாயம் 1 – கடற்றொழில் இணை ஒருங்கிணைப்பு**

பிரிவு 71 – குறித்தளிக்கப்பட்ட கடற்றொழில்கள்

பிரிவு 72 – கடற்றொழில் குழுக்கள்

பிரிவு 73 – கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசங்கள்

பிரிவு 74– கடற்றொழில் முகாமைத்துவ இணை ஒருங்கிணைப்புக் குழுக்கள்

பிரிவு 75 – கடற்றொழில் முகாமைத்துவத் திட்டம்

பிரிவு 76 – வாழ்வாதாரத்துக்காக கரையோர மக்களையும் கடற்றொழிலையும் பாதுகாத்தல்

**அத்தியாயம் 2 – மீன் அறுவடையை ஒதுக்கீடு செய்வதற்கு விகிதாசார முறையில் மீன்பிடி முயற்சிகளை பயன்படுத்துதல்**

பிரிவு 77 – மீன் அறுவடையை ஒதுக்கீடு செய்வதற்கு விகிதாசார முறையில் மீன்பிடி முயற்சிகளை பயன்படுத்துதல்

பிரிவு 78 – மீன்பிடி இயலளவினை முகாமைசெய்தல்

**அத்தியாயம் 3 – மீன்பிடி உபகரணங்களையும் முறைகளையும் முறைப்படுத்துதல்**

பிரிவு 79 – மீன்பிடி உபகரணங்களையும் முறைகளையும் முறைப்படுத்துவதன் குறிக்கோள்கள்

பிரிவு 80– மீன்பிடி உபகரணங்களையும் முறைகளையும் பயன்படுத்துதலை தடை செய்தல்

பிரிவு 81 – சுழியோடி நடவடிக்கைகள்

பிரிவு 82 – சீன்வலை, செவுள்வலை மற்றும் வேறு விதித்துறைத்த வலை வகைகளின் பாவனை மீதான ஒழுங்குவிதி

பிரிவு 83 – மீன்களை பிடிக்க நச்சுத்தன்மையான அல்லது வெடிக்கக்கூடிய பதார்த்தங்களை பயன்படுத்துவதற்கான தடை

பிரிவு 84 – கீழ் இழுவை ட்ரோல் வலைகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான தடை

**பாகம் VI - பாதுகாத்தல் நடவடிக்கைகள்**

பிரிவு 85 – கடல்சார் சூழற்றொகுதிகளின் சூழல் மாசுறலைக் கட்டுப்படுத்தல்

பிரிவு 86 – கைவிடப்பட்ட, தொலைந்த அல்லது அகற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்களை மீளப்பெறல்

பிரிவு 87 – இடஞ்சார் முடிவாக்கல், திறந்த மற்றும் மூடிய பருவங்கள்

பிரிவு 88 – கடற்றொழில் பாதுகாப்புப் பிரதேசங்கள்˙

பிரிவு 89 – பாதுகாக்கப்பட்ட/தடை செய்யப்பட்ட இனங்கள்

**பாகம் VII –அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தரவு சேகரிப்பு**

பிரிவு 90 – மீன்பிடிக் கப்பல்கள் மூலம் அறிவியல் ஆராய்ச்சி

பிரிவு 91–வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பு அல்லது பிறிதொரு அரசு ரீதியாக அறிவியல் ஆராய்ச்சி

பிரிவு 92 – கடற்றொழில் தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

பிரிவு 93 – தரவு சேகரிப்பு,ஊடுகடத்தல் மற்றும் அவற்றினை சரிபார்த்தல்

**பாகம் VIII – மீனின் தரம், உணவு பாதுகாப்பு, மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களின் வர்த்தகம்**

பிரிவு 94 – பொதுக் குறிக்கோளும் விண்ணப்பமும்

பிரிவு 95– மீனின் தரம்,சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் உணவு பாதுகாப்பு

பிரிவு 96 - சட்டவிரோதமாக பெறப்பட்ட கடற்றொழில் விளைபொருட்களை வைத்திருப்பதற்கான விற்பதற்கான தடை

பிரிவு 97 – குறிப்பிட்ட சில மீன் கடற்றொழில் விளை் பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும் மீள் ஏற்றுமதியும்.

பிரிவு 98 – கண்டறிதல் ஆற்றல் மற்றும் மீன்பிடிக்கும் சான்றிதழ்

பிரிவு 99 - மீன் பதப்படுத்தல் தாபனங்ளை பதிவுசெய்தல்

பிரிவு 100 – மீன்கள் மற்றும் மீன்பிடி விளைபொருட்களை பதனிடல், ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள்ஏற்றுமதி செய்வதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம்

பிரிவு 101 – பதிவு செய்யும் உரிமங்களை இரத்துச்செய்தல் அல்லது இடைநிறுத்துதல்

பிரிவு 102 – மேன்முறையீடுகள்

பிரிவு 103 –களஞ்சியங்கள் மற்றும் மீன் பதனிடல் நிறுவனங்களை சோதனையிடல்

பிரிவு 104 – தகுதிவாய்ந்த அதிகாரி

பிரிவு 105–சோதிக்கப்பட்ட மீன் அல்லது மீன்பிடி விளைபொருட்களில் தலையிடல்

பிரிவு 106 – இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படுகின்ற மீன்கள் மற்றும் மீன்பிடி விளைபொருட்களுக்கு செஸ் வரியை விதித்தல்

**பாகம் IX – கடற்றொழில் நிதியம் மற்றும் கடற்றொழில் மானியங்கள்**

பிரிவு 107- கடற்றொழில் நிதியம்

பிரிவு 108 – கடற்றொழில் மானியங்கள் மற்றும் உதவிகள்

**பாகம் X – கண்காணிப்பு,கட்டுப்பாடு, தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்பு அமுலாக்கம்**

**அத்தியாயம் 1 – கண்காணிப்பு,கட்டுப்பாடு மற்றும் தேடுதல் நடவடிக்கை**

பிரிவு 109 – துறைமுக பிரவேசம்

பிரிவு 110- கலன் கண்காணித்தல் முறைமை

பிரிவு 111 – கலம் மாற்றி கப்பலேற்றுதல்

பிரிவு 112 – மீக்களை கரையிறக்கல்

பிரிவு 113 – வெளிநாட்டு கலன்களுக்கான துறைமுக அரசு தொடர்பான நடவடிக்கைகள்

பிரிவு 114 – அவதானி நிகழ்ச்சித்திட்டம்

பிரிவு 115– அவதானிகளின் நியமனமும் இனங்காணுதலும்

பிரிவு 116 அவதானிகளின் கடமைகள்

**அத்தியாயம் 2 – அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்**

பிரிவு 117 – கண்காணிப்பு,கட்டுப்பாடு மற்றும் தேடுதல் நடவடிக்கை(எம்.சீ.எஸ்) நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களையும் வேறு அலுவலர்களையும் நியமித்தல்

பிரிவு 118 – அதிகாரமளிக்கும் அலுவலர்களை இனங்காணுதல்

பிரிவு 119 – அதிகாரமளிக்கும் அலுவலர்களின் பொதுவான தத்துவங்கள்

பிரிவு 120 – பின்தொடர்கை தத்துவம்

பிரிவு 121 – கப்பலேறுதல் மற்றும் சோதித்தல் பற்றிய வெளிப்படுத்தல்

பிரிவு 122 – உட்பிரவேசித்து சோதிப்பதற்கான தத்துவம்

பிரிவு 123 –தகவல்களையும் சான்றுகளை பெறுவதற்கான மற்றும் பாதுகாப்பதற்கான தத்துவம்

பிரிவு 124 - மீன்பிடிக் கலமொன்றை நிறுத்தி கட்டுப்பாட்டில் எடுப்பதற்கான தத்துவம்

பிரிவு 125 – மீன்பிடிக் கலனொன்றை நகர விடாமைக்கான தத்துவம்

பிரிவு 126 – கடவுச்சீட்டு,கப்பற் தலைவரின் உரிமம் மற்றும் மாலுமிகளின் புத்தகங்களை பறிமுதல் செய்வதற்கான தத்துவம்

பிரிவு 127 – தடுத்துவைப்பதற்கான தத்துவம்

பிரிவு 128 –கைவிடப்பட்ட மீன்பிடிக் கலன்கள்,உபகரணம் மற்றும் கடற்றொழில் விளைபொருட்கள் தொடர்பிலான தத்துவம்

பிரிவு 129 – அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கடமைகள்

## பாகம் XI – மத்தியஸ்தம், நிருவாக மற்றும் சட்ட நடவடிக்கைகள்

**அத்தியாயம் 1 – மத்தியஸ்தம்**

பிரிவு 130 – மீன்பிடி பிணக்கு தீர்த்தல் குழாம்

பிரிவு 131 – மீன்பிடி பிணக்கொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல்

**அத்தியாயம் 2 – நிருவாக நடைமுறைகள்**

பிரிவு 132 – நிபுணர்கள் குழாம்

பிரிவு 133– சமரசமாக தீர்த்துக் கொள்ளுதல்

**அத்தியாயம் 3 – நீதித்துறை நடைமுறை,தவறுகள் மற்றும் தண்டனைகள்**

பிரிவு 134– நியாயாதிக்கம் மற்றும் வழக்கு தொடர்வதற்கான உரிமை

பிரிவு 135– செயல்முறை

பிரிவு 136– பொதுவான தவறுகள்

பிரிவு 137– குற்றப்பண மட்டங்கள்

பிரிவு 138 – தொடாச்சியான தவறுகள்

பிரிவு 139 – மீண்டும் தவறிழைப்போர்

பிரிவு 140– அரசினால் ஏற்கப்படுகின்ற செலவுகள்

பிரிவு 141 – தடையுத்தரவு

பிரிவு 142 – கொடுப்பனவு செலுத்தாமை

பிரிவு 143 – அபராதங்களை செலுத்தாமை பொருட்டான பொறுப்பு

பிரிவு 144 – இழப்பு அல்லது நட்டத்திற்கான பொறுப்பு

பிரிவு 145 – கம்பனிகளின் அலுவலர்களினதும் கலன்களின் தலைவர்களினதும் பொறுப்பு

பிரிவு 146 - இயக்குநர்களின் பொறுப்பு

பிரிவு 147 – பிரசைகளின் வழக்கு மற்றும் குடிசார் வலியுறுத்தல்

பிரிவு 148 – தடைக்கட்டளை

பிரிவு 149– துரித விடுவிப்பு

பிரிவு 150– பிணை வழங்குதல்

பிரிவு 151 –பறிமுதல்

பிரிவு 152-கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட ஆதனத்தின் கையுதிர்ப்பு

**அத்தியாயம் 4 – சான்று மற்றும் ஊகங்கள்**

பிரிவு 153– சான்றுச் சான்றிதழ்

பிரிவு 154 – சான்றிதழ்களுக்கான செல்லுபடித்தன்மையும் நடவடிக்கை முறைகள்

பிரிவு 155 – கலமொன்றின் அமைவிடத்துக்கான சான்றிதழ்

பிரிவு 156 – தன்னியக்க அமைவிட முறைமை,அனுமானம் மற்றும் சான்றிதழ்

பிரிவு 157 - புகைப்படச் சான்று

பிரிவு 158 – நிபுணர் சான்றுகள்

பிரிவு 159 – அனுமானங்கள்

பிரிவு 160 – எண்பித்தற் பொறுப்பு

பிரிவு 161 – தலையிடல் அல்லது சான்றினை திரிபுபடுத்துதல் அல்லது அவையிரண்டும்

**பாகம் XII – பொது**

பிரிவு 162– மாகாண சபைகளுடன் கலந்தாலோசித்தல்

பிரிவு 163– அறிவித்தல்கள்

பிரிவு 164 – அந்தரங்க தகவல்களின் பெயரிடல்

பிரிவு 165 – தகவல்களின் சொத்துவம்

பிரிவு 166 – மீனவர்களுக்கான கல்விசார் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

பிரிவு 167 – ஒழுங்குவிதிகள்

பிரிவு 168 – பொருள்கோடல்

பிரிவு 169 – இச்சட்டத்தை ஏற்புடையதாக்கல்

பிரிவு 170– நீக்கங்கள்

பிரிவு 171 – சேமிப்புக்கள்

பிரிவு 172 - சிங்கள சட்டம் மேலோங்கி நிற்றல்

| | **அறிமுக ஏற்பாடுகள்** |
|---|---|
| சுருக்கப் பெயரும் தொடக்கமும்<br>பிரிவு **1** | 1. இச்சட்டமானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப் பின்னர் ‘‘நியமித்த தேதி’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும். |
| நோக்கெல்லையும் ஏற்புடைமையும்<br>பிரிவு **2** | 1. கடல்சார் உள்ளக நீர்நிலைகளில் மீன்பிடித்தல் மற்றும் அதுதொடர்பிலான செயற்பாடுகள் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏதேனும் விடயம் அல்லது செயற்பாடு,<br>அ) இலங்கையின் நிலப்பரப்பில் அல்லது இலங்கையின் நீர்ப்பரப்பில் ;<br>ஆ) பிறிதொரு நாட்டின் கொடியுடனான அல்லது பிறிதொரு அரசில் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் உள்ளிட்ட மீன்பிடிக் கலன்களால் இலங்கை நீர்ப்பரப்புகளில்;<br>இ) இலங்கை கொடி தாங்கிய நுழைவு உடன்படிக்கையுடன் பிறிதொரு நாட்டில் பதிவு செய்துள்ள மீன்பிடிப்படகுகள்<br>ஈ) இலங்கை நீர்ப்பரப்புக்கு வெளியே செயற்படும் இலங்கை கொடிதாங்கிய கலன்களால்; அல்லது<br>உ) கொடியுடனான அரசின் முதனிலை பொறுப்புக்கு பங்கமின்றி இலங்கையர்களால் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் |

| | |
|---|---|
| | ஊ) இலங்கை நீர்ப்பரப்பினுள் நுழைகின்ற வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்<br><br>இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.<br><br>2.நீர்உயிரினவளர்ப்பு நடவடிக்கைககள் இச்சட்டத்தின் நோக்கெல்லையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.அவ்வாறிருப்பினும் கடல்சார் மற்றும் முகத்துவாரங்களில் மேற்கொள்ளப்படும் கடல்சார் நீர் உயிரின வளர்ப்பு செயற்பாடுகள் மூலம் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்களுக்கு பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.<br>மேலே 1 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட கடல்சார் நீர் உயிரின வளர்ப்பிற்காக பணிப்பாளர் தலைமையதிபதியின் ஒப்புதலை பெறுதல் வேண்டும். |
| குறிக்கோள்கள்<br><br>பிரிவு **3** | கடற்றொழில், நீரியல்வளங்களின் நீண்ட கால பேணிக்காத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாடு மற்றும் இலங்கை மக்களின் நலனுக்காக கடற்றொழில் துறையை முகாமைத்துவம் செய்தல் ,ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் பேணிக்காத்தலை உறுதிப்படுத்துதல் என்பன குறிக்கோள்களாவதுடன் அதற்கு<br>அ) கடற்றொழில் முகாமைத்துவம், அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் தொடர்புற்ற கடற்றொழில் நடவடிக்கைகளை கடைப்பிடிக்கும்போது கிடைப்பனவிலுள்ள சிறந்த அறிவியல் மற்றும் சமூகபொருளாதார சான்றுகளை பயன்படுத்துதலும் அறிவியல் தரவுகளின் சேகரிப்புக்கு பங்களித்தலும்;<br><br>ஆ) கடல்சார் மற்றும் நீரியல்வளங்களை அதிகமாக பிடிக்காமல் பொருளாதார ரீதியாக சாத்தியமான படகுத்தொகுதிகளை கொண்டிருக்கும் நோக்கில் கடற்றொழில் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டுடன் மீன்பிடி முயற்சி மட்டங்கள் அந்த அளவினை விஞ்சுவதில்லை என்பதனை உறுதிப்படுத்தல்.<br><br>இ) கடல்சார் வளங்களின் அறுவடையினூடாக உச்ச நிலைபேறான விளைவை தருகின்ற மட்டங்களில் பிடிக்கப்பட்ட கடல்சார் மற்றும் நீரியல் வள இனங்களில் மீன்களின் தொகையை மீள்நிலைப்படுத்தி பேணுவதை உறுதிசெய்யும் முகமாக கடற்றொழில் முகாமைத்துவத்திற்கு முற்காப்பு அணுகுமுறையை பிரயோகித்தல்;<br><br>ஈ) நீரியல் கடல்சார் வளங்களுடன் தொடர்புற்ற வாழிடங்கள் மற்றும் சூழல்முறைமையின் உயிர்பல்வகைமையை பாதுகாக்கும் பொருட்டும், கடல்சார் சூழல்முறைமையில் மீன்பிடி செயற்பாடுகளின் எதிர்மறையான தாக்கங்கள் இழிவளவாவதை உறுதிப்படுத்தும் பொருட்டும் கடற்றொழில் முகாமைத்துவத்திற்கு சூழல்முறைமை அணுகலை பிரயோகித்தல்;<br>உ) தெரிவுசெய்யப்பட்ட, சூழல்ரீதியாக பாதுகாப்பான மற்றும் கிரய பயனுறுவான மீன்பிடி உபகரணங்கள் மற்றும் நுட்பங்களின் பயன்பாட்டினை அபிவிருத்திசெய்தலும் ஊக்குவித்தலும்;<br>ஊ) மீன்பிடித்தல், அகற்றப்படுபவைகளிருந்து ஏற்படும் கடல் மாசுறலையும் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களில் மீன்கள் பிடிபடுவதையும் இழிவளவாக்குதல்;<br>எ) மீன்பிடி சமூகங்களின் சமூகபொருளாதார அபிவிருத்திக்காகவும் அவர்களுக்கு நியாயமான வாழ்க்கை தரமொன்றை ஏற்படுத்துவதில் பங்களிக்கக்கூடியவாறும் வாழ்வாதார தொழிலான கரையோர மீன்பிடிக் கைத்தொழிலின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளல்.<br>ஏ) தேசிய,பிராந்திய மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கமைவாக செயற்பட்டு,சட்டவிரோத,அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத('IUU') மீன்பிடி நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு செய்கின்ற பொருளாதார உதவிகள் உள்ளிட்ட எவ்வித ஊக்குவிப்புக்களையும் செய்தலாகாது.<br>ஐ) மீன்பிடி மற்றும் மீன்பிடி தொடர்புற்ற செயற்பாடுகளின் பயனுறு கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் சட்ட |

| | |
|---|---|
| | அமுலாக்கமும்;<br>ஒ) இயைபான பிராந்திய அல்லது சர்வதேச கடப்பாடுகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் ஏற்புடைய விதிகளை பின்பற்றுதல்;<br>ஓ) மீனவர்களினதும் மீனவப் பணியாட்களினதும் பாதுகாப்பினையும் நலனையும் உறுதிப்படுத்தல்;<br>ஔ) வேலைவாய்ப்பு, சமூக பங்களிப்பை, பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கடற்றொழில் துறையில் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளில் பங்குபற்றல் என்பனவற்றில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான பாலின சமநிலையை பேணல்;<br>க) மீன் மற்றும் கடற்றொழில் உற்பத்திகளின் பதனிடல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பவற்றிற்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் போட்டியடிப்படையிலான மீன்பிடிக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக உகந்த சூழலொன்றை உருவாக்குதல் ; அத்துடன்<br>ச) மீன்களின் தரத்தையும் உணவு பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல் மற்றும் அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை இழிவளவாக்குதல்<br><br>என்பன உள்ளடங்குதல் வேண்டும்.˙. |
| | **பாகம் I**<br>**நிருவாகம்** |
| கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் திணைக்களம் **(DFAR)**<br>பிரிவு **4** | கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் திணைக்களமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி அமுல்படுத்தும் பொறுப்பு அளிக்கப்பட்ட அரசாங்க முகவர் நிலையமாதல் வேண்டும். |
| பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் வேறு அலுவலர்களின் நியமனம்<br><br>பிரிவு **5** | அ) இலங்கைச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய நடைமுறைக்கிணங்க கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதி (‘பணிப்பாளர் தலைமையதிபதி’) ஆக இருப்பதற்கான அல்லது செயலாற்றுவதற்கான ஆளொருவர்;<br><br>ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிகள் மற்றும் கடமைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களின் பணிப்பாளர் (‘பணிப்பாளர்’) ஆக இருப்பதற்கான அல்லது செயலாற்றுவதற்கான ஓர் ஆள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள்;<br><br>இ) உரிமம்வழங்கும் அலுவலர்கள், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பிணக்கு தீர்க்கும் அலுவலர்கள் அடங்கலாக இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கங்களுக்காக காலத்துக்குக் காலம் தேவையான வேறு அத்தகைய அலுவலர்கள்<br><br>நியமிக்கப்படுதல் வேண்டும்.<br><br>மொத்தமான அசட்டைத்தனமான அல்லது கவனயீனமான செயல்களைத் தவிர, (1)ஆம் உட்பிரிவை அனுசரித்து நியமிக்கப்பட்ட ஆட்கள் அல்லது இச்சட்டத்தின் சார்பாக செயலாற்றும் அல்லது இச்சட்டத்தின் கீழான பணிகளை நிறைவேற்றும் வேறு ஆள், பணியாளர் அல்லது முகவர் சட்டபூர்வமாகச் செய்கின்ற, அல்லது இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் பணிகள், தத்துவங்கள் அல்லது கடமைகளை அனுசரித்து அல்லது உத்தேசமாக அனுசரித்து ஏதேனும் செயலை செய்யாதுவிடுதல், நியாயமான ஏது இன்றி தீயெண்ணத்தில் புரிந்திருந்தாலொழிய அத்தகைய செயல் தொடர்பில் எவ்வித சட்ட நடவடிக்கைக்கும் அல்லது குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புக்கு உட்படுதலாகாது. |
| பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிகளும் பொறுப்புக்களும்<br><br>பிரிவு **6** | 1. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் கட்டுப்பாடு மற்றும் உத்தரவுகளுக்கு உட்பட்டு இச்சட்டத்தைத் நிர்வகித்தல் மற்றும் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றல் வேண்டும் |

| | |
|---|---|
| | 2. பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் பின்வரும் பொதுவான பணிகளை நடாத்துதல் வேண்டும்.<br><br>அ) இலங்கை மக்களின் நலன் பொருட்டு கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களை முகாமை செய்தல்,ஒழுங்கு முறைப்படுத்தல், பேணிக்காத்தல், அபிவிருத்தி மற்றும் நிலைபேறான பயன்பாடு என்பவற்றை நோக்காகக் கொண்டு இச்சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்வதற்காக;<br>ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களின் முகாமைத்துவம்,ஒழுங்குமுறைப்படுத்தல், பேணிக்காத்தல்,அபிவிருத்தி மற்றும் நிலைபேறான பயன்பாட்டின் பொருட்டு கடற்றொழில் துறையின் இறையாண்மை உரிமைகளை உறுதி செய்யும் வண்ணம் தேசிய கடற்றொழில் கொள்கையை தயாரிப்பதற்காக செயலாளருக்கு உதவுவதற்காகவும் இச்சட்டத்தின் நிருவாகம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு வழிகாட்டுவதற்காக உத்திகளையும் அபிவிருத்திசெய்தல்;<br>இ) இருபக்க, உப பிராந்திய, பிராந்திய மற்றும் சர்வதேச செயன்முறைகள் மற்றும் அமைப்புக்களில் இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் அடங்கும் விடயங்களில் இலங்கையின் அக்கறைகளினதும் உரிமைகளினதும் மேம்பாடு மற்றும் இலங்கையின் கடப்பாடுகளுக்கு இணங்கி நிறைவேற்றுதல்; அத்துடன்<br>ஈ) கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பொருட்டு வெளிப்படைத்தன்மையான வகைகூறும் செயன்முறைகளை அபிவிருத்திசெய்தல் மற்றும் மேலே சொல்லப்பட்ட பணிகளின் செயலாற்றுகையில், மதியுரை சபை அடங்கலாக இச்சட்டத்திற்கிணங்க தாபிக்கப்படக்கூடிய நிறுவனங்களின் அத்தகைய மதியுரைகளையும் பரிந்துரைகளையும் ஏற்புடையவாறு கருத்திலெடுத்தல் வேண்டும். .<br><br>3. இச்சட்டத்திற்கு அமைய பணிப்பாளர் தலைமையதிபதி, மேலே பிரிவுகளில் அடங்கிய அத்தகைய கடமைகளை எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது அவரது முகாமைத்துவத்தின் கீழுள்ள வேறு எவரேனும் அலுவலருக்கு எழுத்துமூலம் கையளிக்கலாம்.<br>4. இச்சட்டத்தின் ஏதேனுமொரு ஏற்பாடு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனுமொரு ஒழுங்குவிதியின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அவருடைய விருப்பின்படி செய்யப்படுகின்ற ஏதேனுமொரு விதிப்பு அல்லது தீர்மானத்தின் மீது அது தொடர்பாக செய்யப்படுகின்ற மேன்முறையீடொன்று அல்லது வேறு ஏதேனும் விதத்தில் இரத்துச் செய்வதற்கு மாற்றம் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு சட்டரீதியான அதிகாரம் உள்ளது.<br>5. அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சரின் தீர்மானமே இறுதியானதாவதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியும் அதன் மூலம் தாக்கமடைந்த ஏனைய அனைத்து நபர்களும் அத்தீர்மானத்திற்கு உடன்படுதல் வேண்டும். |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் மதியுரை சபை<br><br>பிரிவு **7** | 1. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் மதியுரை சபையொன்று இத்தால் தாபிக்கப்படுகிறது.<br><br>2. மதியுரை சபையின் பணிகளும் பொறுப்புக்களும்:<br>a) இலங்கை நீர்ப்பரப்புகளில் கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களின் முகாமை, ஒழுங்குபடுத்தல், பேணிக்காத்தல், அபிவிருத்தி மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பிலான எல்லா விடயங்களிலும், மதியுரை பெறும் முகமாக அமைச்சர் மதியுரை சபைக்கு ஆற்றுப்படுத்தும் அத்தகைய வேறு விடயங்கள் பற்றியும் ; அத்துடன்,<br>b) மதியுரை பெறும் முகமாக பணிப்பாளர் தலைமையதிபதியினால் மதியுரை சபைக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய இச்சட்டத்தின் நிருவாகம் தொடர்பிலான அத்தகைய எல்லா விடயங்கள் பற்றியும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு.<br>மதியுரை வழங்குவதாதல் வேண்டும். |

| | |
|---|---|
| | 3. மதியுரை சபை, I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிரந்தர உறுப்பினர்கள் பதினொருவரையும் (11) அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற தற்போதைய உறுப்பினர்கள் எண்மரையும்(8) உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.<br>4. உறுப்புரிமை மற்றும் கூட்டங்களில் பங்குபற்றுதல் தொடர்பாக பின்வரும் விதிகள் ஏற்புடையனவாகும்:<br>சபையின் தவிசாளர் கடற்றொழில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளராக இருத்தல் வேண்டும்.<br>மதியுரை சபையின் உறுப்பினர்களின் நிரல் இச்சட்டத்தின் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் நிரலுக்கு மேலதிகமாக, மதியுரை சபை அவதானிகளாக அதன் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு அத்தகைய வேறு ஆட்களை அழைக்கலாம்.<br>இ. மதியுரை சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் பதின்மூன்று [13] உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்;<br>ஈ. உறுப்பினரொருவர், பின்வரும் நிலைமையில், மதியுரை சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருப்பதற்கான தகைமையிழக்கிறார்:<br>அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பின் அல்லது பாராளுமன்ற உறுப்பினராக மாறினால்; அல்லது<br>அவர் இலங்கை பிரசையாக இல்லாவிடின் அல்லது இலங்கை பிரசை எனும் நிலையை இழந்தால்.<br>அமைச்சர், அவரது சொந்த தற்றுணிபின் பேரில், மதியுரை சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரதும் உறுப்புரிமையை அகற்றலாம்.<br>ஊ. அமைச்சர், பின்வரும் சந்தர்ப்பங்களில், பதவி வகிப்பதற்கு பதிலீட்டு உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்:<br>நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் பதவியை வெறிதாக்கியவிடத்து;<br>(4)ஆம் உட்பிரிவின் (ஈ) இற்கிணங்க உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்பட்டவிடத்து; அல்லது<br>நியமிக்கப்பட்ட உறுப்பினர், ஆரோக்கியமின்மை அல்லது இலங்கையில் இல்லாமை அல்லது வேறு ஏதேனும் ஏது காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளை புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவிடத்து.<br><br>மதியுரை சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், மூன்று வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவிக்காலத்திற்கு முன்னர் பதவியை வெறிதாக்கினாலன்றி அல்லது (4)ஆம் உட்பிரிவின் (உ) பகுதயின் கீழ் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.<br><br>மதியுரை சபை அதனது கூட்டங்களை நடாத்துவதற்காக சொந்த நடைமுறை விதிகளை கையாளலாம் என்பதுடன் விதித்துரைக்கப்படவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளை பின்பற்றுதலும் வேண்டும். மதியுரை சபையின் செயல் அல்லது நடவடிக்கைகள் எதுவும், மதியுரை சபையில் வெற்றிடமொன்று உள்ள ஒரே ஏதுவினால் அல்லது மதியுரை சபையின் உறுப்பினரொருவரை நியமிப்பதில் ஏதேனும் குறைபாட்டினால் செல்லுபடியற்றலாகாது. |
| தேசிய கடற்றொழில சம்மேளனம்.மாவட்ட கடற்றொழில் அமைப்பு மற்றும் கிராமிய கடற்றொழில் அமைப்பு<br>பிரிவு **8** | இச்சட்டத்தின் பணிகளுக்காக(இதனகத்துப் பின்னர் சம்மேளனம் என அழைக்கப்படுவது) தேசிய மட்டத்தில் தேசிய கடற்றொழில் சம்மேளனமும் மாவட்ட மட்டத்தில் மாவட்ட கடற்நொழில் அமைப்புக்களும் கிராமிய மட்டத்தில் கிராமிய கடற்றொழில் அமைப்புக்களும் தாபிக்கப்படுதல் வேண்டும்.<br>கடற்றொழில் அமைச்சரினால்<br>தேசிய கடற்றொழில் சம்மேளனம் மற்றும் கடற்றொழில் அமைப்புக்களின் நடவடிக்கைகள்,நிதியியல் மற்றும் கணக்காய்வு தொடர்பான ஒழுங்கு விதிகளை உருவாக்கப்பட முடியும். |
| வருடாந்த நிருவாக அறிக்கை<br><br>பிரிவு **9** | பணிப்பாளர் தலைமையதிபதி வருடாந்தம் நிருவாக அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அதனை அமைச்சரினால் பாராளுமன்றத்திற்கு<br>சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். |
| | **பாகம் II**<br>பதிவு |

| | அத்தியாயம் 1 –மீன்பிடிக் கலன்களைப் பதிவுசெய்தல் |
|---|---|
| மீன்பிடிக் கலன்களை பதிவு செய்யும் இடாப்பு<br><br>பிரிவு **10** | பணிப்பாளர் தலைமையதிபதி, மீன்பிடிக் கலன்கள் பற்றிய பயனுறு கட்டுப்பாட்டினை பிரயோகிக்கும், இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மீன்பிடி கப்பற்தொகுதிகளினதும் நடவடிக்கைகளினதும் இயலளவினை முகாமைசெய்யும் நோக்கத்திற்காக கலன் பதிவிலக்கம், உரிமையாளரின்/ர்களின் பெயர் மற்றும் முகவரி மற்றும் கலனின் விபரம் உள்ளிட்ட கலன் பண்புகள் மற்றும் செயல்பாடு பற்றிய குறைந்தபட்ச தகவல்களுடனான மீன்பிடிக் கலன்களின் இடாப்பு ஒன்றை பேணுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, கலன் பற்றிய தகவல்கள், கலன் பதிவிலக்கம் மற்றும் உரிமையாளரின் பெயரும் முகவரியும் உள்ளிட்ட பொழுதுபோக்கு மீன்பிடிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற கலன்களின் இடாப்பு ஒன்றை பேணுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர், (1) மற்றும் (2) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட இடாப்பில் அடங்கிய தகவல்களின் அடிப்படையில், தேவையென அவர் கருதுகின்ற அளவுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய படகுத்தொகுதியை நன்கு முகாமைசெய்யும் மற்றும் கட்டுப்படுத்தும் நோக்கங்களுக்காக அதில் செயற்படுத்தும் ஒழுங்குவிதி அல்லது இலங்கை கட்டுப்பட்டுள்ள ஏதேனும் சர்வதேச உடன்படிக்கை பொருட்டு பின்வரும் படகுத்தொகுதி பற்றிய அறிக்கை அடங்கலாக கலன்கள் பற்றிய அறிக்கையை பேணலாம்:<br>அ) அறிவியல் நோக்கங்களுக்காக மீன்பிடித்தல்;<br>ஆ) ஆழ்கடலில் இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவினால் IOTC ஒழுங்குபடுத்தப்பட்ட இனங்களை பிடித்தல்;<br>இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைவாக பிறிதொரு நாட்டு நீர்ப்பரப்புகளில் மீன்பிடித்தல்;<br>ஈ) தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மீன்பிடித்தல்; மற்றும்,<br>உ) பொழுதுபோக்கின் பொருட்டு மீன்பிடித்தல்<br>தனக்கு தேவையெனக் கருதுகின்ற படகுகள் தொடர்பாக அறிக்கைகளை பேண முடியும்.<br><br>பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களின் இடாப்பிலுள்ள தகவல்களும், இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கலன்களின் ஏதேனும் பதிவேட்டில் தரப்பட்ட தகவல்களும் இற்றைப்படுத்தி மாறாதுள்ளன என்பதனை பணிப்பாளர் தலைமையதிபதி உறுதி செய்தல் வேண்டும். |
| பதிவு செய்தல்<br>பிரிவு **11** | இப்பிரிவிலும் 12 ஆம் பிரிவிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல் ஒழுங்குகளுக்கமைவாக முறையாக மீனபிடிப் படகு பதிவு செய்திருந்தாலன்றி இலங்கை மீன்பிடிப் படகொன்றின் உரிமையாளர் அல்லது இயக்குனரினால் எவ்வித கடற்றொழில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படலாகாது.<br><br>மீன்பிடிக் கலனொன்றாக கலனொன்றை பதிவுசெய்வதற்கு அத்துடன் அக்கலன் தொடர்பில் பதிவுச் சான்றிதழைப் பெறுவதற்கு உத்தேசிக்கும் உரிமையாளர் அல்லது இயக்குநர் குறித்துரைத்த படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதற்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலருக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும் என்பதுடன் குறித்துரைத்த கட்டணம் இணைக்கப்படுதலும் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் கலனொன்று பரிசோதிக்கப்பட்டு அத்துடன் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவு விண்ணப்பத்துடன் இணைக்கப்படவுள்ள கடற்றகுதி அறிக்கையொன்று வழங்கப்பட்ட பின்னர் மாத்திரமே அந்த மீன்பிடிக் கலனை பதிவுசெய்தல் வேண்டும். அத்துடன், பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்திக் |

| | |
|---|---|
| | கொள்ளுதல் வேண்டும்:<br>அ. மீன்பிடிக் கலன் பற்றிய முழுமையான, துல்லியமான தகவல்கள் விதித்துரைத்த படிவத்தின் கீழான தேவைப்பாடுகளுக்கிணங்க பெறப்பட்டுள்ளன;<br>ஆ. செல்லுபடியான காப்புறுதிச் சான்றிதழ்;<br>இ. கப்பலில் போதிய எண்ணிக்கையிளலான உயிர்காப்பு உடைகள்;<br>ஈ. மீன்பிடிக் கலன் ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பின் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத கலன் நிரலில் நிரற்படுத்தப்பட்டிருக்கவில்லை;<br>உ. மீன்பிடிக் கலன் அல்லது இயக்குநர் ஏதேனும் கொடி அரசுடன் ஏதேனும் முடிவுறாத தடைகளை கொண்டிருக்கவில்லை;<br><br>ஊ. மீன்பிடிக் கலன் பிறிதொரு அரசில் பதியப்பட்டிருக்கவில்லை; அத்துடன்,<br>எ. இப்பிரிவின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்படவாறான ஏதேனும் வேறு தேவைப்பாடுகள்.<br><br>இறக்குமதிசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றை பதிவுசெய்தலானது, (12)ஆம் பிரிவில் தரப்பட்ட நடைமுறைக்கிணங்க இறக்குமதிசெய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களின் பதிவுக்கான தொழில்நுட்பக் குழுவிலிருந்தான முன்னங்கீகாரத்துக்கு அமைய இருத்தல் வேண்டும்.<br>(2)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று கிடைத்ததன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி, மீன்பிடிக் கலனின் உரிமையை நிரூபிக்கும் முகமாக மேலதிக ஆவணங்களை அல்லது தகவல்களை தருமாறு விண்ணப்பதாரரைக் கோரலாம்.<br><br>மீன்பிடிக் கலன்களின் இடாப்பில் யாருடைய பெயர் காணப்படுகிறதோ அந்த ஆள் அத்தகைய கலனின் உரிமையாளராக கருதப்படுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி மீன்பிடிக் கலனொன்றின் பதிவுக்கான விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு தீர்மானிக்குமிடத்து, நிராகரிப்பதற்கான காரணங்கள் விண்ணப்பதாரருக்கு எழுத்தில் முறையாக அறிவிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தில் தரப்பட்ட முகவரிக்கு பதிவுதபால் மூலம் அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் தொடர்பாடல் முறைகள் மூலம் அத்தகைய முடிவு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து முப்பது (30) நாட்கள் காலாவதியான பின்னர் அத்தகைய நிராகரிப்பு தீர்மானம் அறிவிக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.<br><br>மீன்பிடிக் கலனொன்று பதிவுசெய்யப்பட்டதன் பிற்பாடு பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுச் சான்றிதழொன்றை அதிலுள்ள விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்.<br><br>9. பதிவை உரிமை மாற்றம், இரத்து அல்லது இடைநிறுத்தம் செய்யும் வரை பதிவுச்சான்றிதழ் செல்லுபடியானதாகும்.<br><br>10. உள்நாட்டில் கட்டப்பட்ட புதிய கலன்கள் பொருட்டு, ஆரம்ப பதிவுக்காக விண்ணப்பமொன்று. கிடைத்ததன்மேல், பதிவுச் சான்றிதழ் வழங்கும் வரையில் தற்காலிக பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>11. (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற உரிமையாளர் அல்லது இயக்குநர் தவறொன்றை புரிகிறார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இற்கு இயைபாள ணெ்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டும்.<br><br>12. அமைச்சர், மீன்பிடிக் கலன்களை அடையாளமிடல் மற்றும் இச்சட்டத்தின் நோக்ககெல்லையினுள் கலன்களின் பதிவு தொடர்பிலான வேறு ஏதேனும் விடயம் அடங்கலாக விண்ணப்பத்துக்கான படிவம், செலுத்தத்தக்க கட்டணங்கள், இணைக்கும் சான்றிதழ்கள், பதிவிலக்கம் மற்றும் கலனின் பெயர் என்பனவற்றை தீர்மானிப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |

| | |
|---|---|
| | |
| இறக்குமதிசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றை பதிவுசெய்தல்<br><br>பிரிவு **12** | இறக்குமதி செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களை கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதாயின் இதற்காக அமைச்சின் செயலாளரினால் தாபிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவொன்று காணப்படுதல் வேண்டும்.<br>தொழில்நுட்பக் குழுவானது, பின்வரும் முகவர்நிலையங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:<br>அ) கடற்றொழில் அமைச்சு<br>ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்<br>இ) முதலீட்டுச் சபை;<br>ஈ) வணிகத் திணைக்களம்: குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்;<br>உ) சுங்கத் திணைக்களம்; அத்துடன்,<br>ஊ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்<br>இப்பிரிவின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றை பதிவுசெய்வதற்கு முன்னர் தொழில்நுட்பக் குழுவானது, ஏற்புடையவாறு (4) மற்றும் (5) ஆகிய உட்பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மற்றும் (6)ஆம் உட்பிரிவின் கீழான நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகி அதன் அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.<br>வெளிநாட்டு மீன்பிடிக் கலனொன்றை இறக்குமதிசெய்வதற்கு உத்தேசிக்கும் ஆள் எவரும், அக்கலனை கொள்வனவு செய்வதற்கு பெறப்பட்ட வருமான மூலங்களை வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீடு பொருட்டு தொழில்நுட்பக் குழுவுக்கு அனுப்பிவைப்பதற்காக பின்வரும் ஆவணங்களை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குதலும் வேண்டும்.:<br>அ) கொடி அரசினால் வழங்கப்பட்ட புதிய மீன்பிடி உரிமத்தின் மூலப்பிரதி;<br>ஆ) கடந்த மூன்று அடுத்தடுத்த வருடங்களுக்காக கலனின் முன்னைய உரிமையாளர்(களை) இனங்காணும் முந்திய விற்பனைப்பட்டியல்; அத்துடன்,<br>இ) மீன்பிடி கலனில் மேலும் சட்டரீதியான, பயனளிக்கும் அல்லது நிதித் தேவை அல்லது அதன் கட்டுப்பாடு முன்னாள் உரிமையாளர் அல்லது இயக்குநருக்கு இருக்கவில்லை என்பதனை எண்பிக்கும் ஏதேனும் இயைபான ஆவணங்கள்.<br><br>அவ்வாறிருப்பினும், (4)(அ) (ஆ),(இ) வரையான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், புதிதாக கட்டப்பட்ட மீன்பிடிக் கலனொன்றின் இறக்குமதிக்கு ஏற்புடையனவாகா, அதற்குப் பதிலாக, புதிதாக கட்டப்பட்ட கலன்கள் பொருட்டான கப்பல் கட்டுனரின் மூல சான்றிதழ் வழங்கப்படல் வேண்டும்.<br>பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகலானது, வெளிநாட்டில் கட்டப்பட்ட மீன்பிடிக் கலனொன்றின் இறக்குமதி பொருட்டு கடட்டாயமானதாக இருத்தல் வேண்டும்:<br>அ)இறக்குமதிசெய்யப்படவுள்ள மீன்பிடிக் கலன் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பொன்றின் சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கலன்களின் நிரலில் உள்ளடக்கப்பட்டிருத்தலாகாது; அத்துடன்,<br>ஆ)பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புக்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இனங்களை பிடிக்கும் பொருட்டு செயற்படுத்தப்பட்ட மீன்பிடிக் கலன் ஒன்றின் ஏற்றுமதி அரசு அவ்வமைப்பின் தரப்பினராக இருத்தல் வேண்டும்.<br><br>7.தொழில்நுட்பக் குழுவினது முன்னங்கீகாரத்தின் அடிப்படையில் பணிப்பாளர் தலைமையதிபதி, மீன்பிடிக் கலனின் பதிவினை தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை சுங்கம், குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கமைய, மீன்பிடிக் கலனை இறக்குமதிசெய்வதற்கு தற்காலிக பதிவுச் சான்றிதழொன்றை கலன் உரிமையாளருக்கு வழங்குதலும் வேண்டும். |
| பதிவுச் சான்றிதழை கப்பலில் எடுத்துச் செல்வதற்கான கடப்பாடு | 1.பதிவுச்சான்றிதழின் மூலப்பிரதி அல்லது உரிமையாளரினால் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று எந்நேரமும் கப்பலில் எடுத்துச் செல்லப்படுவதாக கப்பற்தலைவன் அல்லது இயக்குநர் உறுதிப்படத்த வேண்டும்.அத்துடன் 117 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவர் பரிசீலனைக்காக வேண்டி நிற்கும் |

| | |
|---|---|
| பிரிவு 13 | சந்தர்ப்பத்தில் அச்சான்றிதழை முன்வைத்தலும் வேண்டும்.<br><br>2.(1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற உரிமையாளர்,கப்பற்தலைவர் அல்லது இயக்குநர் தவறொன்றிற்கு குற்றவாளியாவதுடன்,குற்றவாளியாக்கப்படுகின்ற போது அட்டவனை III இற்கு இயைபான தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும். |
| மீன்பிடிக் கலன்களை அடையாளமிடுதல்<br><br>பிரிவு 14 | 1. பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன் ஒன்றின் உரிமையாளர்,கப்பற் தலைவர் அல்லது இயக்குநரினால் உரிய நிபந்தனைகளின் பிரகாரம் பதிவை மேற்கொள்கின்ற போது ஒதுக்கம் செய்து கொண்ட இலக்கத்தையும் எழுத்துக்களையும் கலனின் எல்லாப் பகுதிகள் மற்றும் இயக்குநர் அறையின் கூரையின் மீது தெளிவாக புலப்படும் வண்ணம் குறித்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.<br>2. (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றவாறு செயற்படுகின்ற உரிமையாளர், கப்பற் தலைவர் அல்லது இயக்குநர் ஒருவர் பாரதூரமான தவறொன்றைப் புரிவதுடன்,பணிப்பாளர் தலைமையதிபதிக்கு தான் பொருத்தமானதெனக் கருதுகின்ற காலத்துக்கு அவ்வுரிமத்தை இடைநிறுத்துவதற்கு அதிகாரம் காணப்படுவதுடன்,குற்றவாளியானதன் பிற்பாடு அட்டவணை III இற்கு இயைபான தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.<br><br>3. இச்சட்டத்தினுள் மீன்பிடிப் படகுகளை அடையாளமிடுவதற்கான நிபந்தனைகளை விதிப்பதற்கு அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| மாகாண நிதியத்துக்கு கட்டணங்களை செலுத்துதல்<br><br>பிரிவு **15** | பணிப்பாளர் தலைமையதிபதி ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், (11) மற்றும் (12) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் வதியும் நபர்களுக்குரிய மீன்பிடிக்கலன்களின் பதிவின் பொருட்டு அவ்வாண்டில் பெறப்பட்ட கட்டணங்களின் அத்தகைய சதவீதமொன்றை உரியவாறு ஒவ்வொரு மாகாணத்தின் நிதியத்திற்கும் செலுத்துதல் வேண்டும். |
| மாகாணத்துக்கு தகவல்களை அனுப்புதல்<br><br>பிரிவு **16** | பணிப்பாளர் தலைமையதிபதி ஒழுங்கான அடிப்படையிலும் குறைந்த பட்சம் ஆண்டிற்கு ஒரு தடைவ,(11) மற்றும் (12) ஆம் பிரிவுகளின் கீழ் பெறப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் வசிக்கும் நபர்களுக்குச் சொந்தமான மீன்பிடிக் கலன்களின் பதிவு பற்றிய தகவல்களை மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும். |
| இடாப்பிலுள்ள தகவல்களை மாற்றுதல்<br><br>பிரிவு 17 | மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர் அல்லது இயக்குநர், அக்கலனின் பதிவு பொருட்டு வழங்கப்பட்ட தரவுகளின் ஏதேனும் மாற்றத்தை தரப்பட்ட காலவரையறையினுள் விதித்துரைத்த படிவத்தைப் பயன்படுத்தி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். குறிப்பாக, பின்வரும் தகவல்கள் அனுப்பப்படுதல் வேண்டும்:<br>அ பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றின் உரிமையின் அல்லது உடைமையின் ஏதேனும் கைமாற்றம் அத்தகைய மாற்றம் இடம்பெற்று இருபத்தொரு(21) நாட்களுள் அறிவிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்,<br>ஆ)பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றின் உடைவு அல்லது தொலைவு, அத்தகைய உடைவு அல்லது தொலைவு ஏற்பட்டு பதிநான்கு(14) நாட்களுக்கு பிந்தாமல் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்.<br><br>பதிவுசெய்யப்பட்ட மோட்டரில்லாத மீன்பிடிக் கலனொன்றில் எஞ்சினொன்றை நிறுவுதலானது, விதித்துரைக்கப்பட்ட படிவத்தை பயன்படுத்தி (19)ஆம் பிரிவின் கீழ் அந்த கலனின் மீள்பதிவுக்காக விணணப்பிப்பதற்கு உரிமையாளரை தேவைப்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| | பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் பிரிவின் கீழ் தரப்பட்ட புதிய தகவல்களை மற்றும் விதித்துரைத்த கட்டணத்தை செலுத்தியமை உறுதிப்படுத்தியன்மேல், (13)ஆம் பிரிவின் கீழ் க.நீ.வ.தி.இனால் பேணப்படவுள்ள இடாப்பில் புதிய தகவல்களை பதிதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் கீழான தகவல்களை கொடுக்கத் தவறும் உரிமையாளர் அல்லது இயக்குபவர் தவறொன்றை புரிகிறார். பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு விடயத்திலுமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு குற்றப்பணத்தை விதித்தல் வேண்டும் என்பதுடன் (137)ஆம் பிரிவு *ஏனையவற்றுடன்* ஏற்புடையதாதல் வேண்டும். |
| மீன்பிடிக்கலன்களின் பதிவை இடைநிறுத்துதலும் இரத்துச் செய்தலும்<br><br>பிரிவு **18** | மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், பின்வரும் சூழ்நிலைகளில் மீன்பிடிக் கலன்களின் இடாப்பிலிருந்து அவரது பெயரிலுள்ள அத்தகைய கலத்தின் பதிவை இரத்துச்செய்யும் பொருட்டு எல்லா தேவையான துணை ஆவணங்களுடன் விதித்துரைத்த படிவத்தை பயன்படுத்தி எழுத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்:<br>அ)வணிகரீதியாக மீன்பிடித்தல் பொருட்டு எப்போதும் பயன்படுத்தப்படாதிருத்தல்;<br>ஆ)கடந்த அடுத்தடுத்த மூன்று ஆண்டுகளில் கலன் செயற்பாட்டிலில்லாமை;<br>இ) முழுமையாக அழிவடைந்துள்ளது, தொலைந்த அல்லது தொழில்நுட்ப கோளாறுகளின் அடிப்படையில் நிரந்தரமாக சேவைநிலைப்படுத்தமுடியாதவை.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவர் திருப்தியடைந்ததன் பிற்பாடு (1)ஆம் உட்பிரிவின் கீழ் மீன்பிடிக் கலனின் பதிவை இரத்துச்செய்தல் வேண்டும்:<br>அ) எந்த மீன்பிடிக் கலனுக்காக இரத்துச்செய்தல் ஆரம்பிக்கப்பட்டதோ அக்கலன் இலங்கை கொடியொன்றின் கீழ் வணிகரீதியாக மீன்பிடித்தல் பொருட்டு எவ்போதும் பயன்படுத்தப்படாது; அத்துடன்,<br>ஆ) உரிமையாளர் அல்லது மீன்பிடிக் கலன் மீது முடிவுறாத தடைகள் எதுவுமில்லை.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி மீன்பிடிக் கலனொன்றின் பதிவினை இரத்துச்செய்ய முன்னெடுக்கலாம், அத்தயை மீன்பிடிக் கலன்:<br>அ) கடற்பயணதகுதி நிலையில் இல்லாத;<br>ஆ) கைவிடப்பட்டதாக கண்டுபிடிக்கப்படல் மற்றும் / அல்லது கலனின் உரிமையாளர் கண்டுபிடிக்க முடியாமை;<br>இ) பிறிதொரு அரசில் பதிவுசெய்யப்பட்டதாக கண்டுபிடிக்கப்படல்;<br>ஈ) மீன்பிடிக் கலனின் பதிவு இரத்துச்செய்தலை தேவைப்படுத்தும் சட்டவிரோத, அறிக்கையிடாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி செயற்பாடுகள் பொருட்டு குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்;<br>உ) தேவையான எல்லா புலனாய்வினை நடாத்திய பிற்பாடு வேறு ஏதேனும் நிலமையில் கலன் கண்டுபிடிக்கப்பட முடியாமை;<br>ஊ) முன்னங்கீகாரமின்றி ஆரம்ப கட்டமைப்பு, எஞ்சின் மற்றும் உபகரணங்களின் மாற்றங்களை அறிக்கையிடாமை; அத்துடன்,<br>எ) பணிப்பாளர் தலைமையதிபதி, மீன்பிடி நடவடிக்கை உரிமத்தை இரத்துச்செய்யப்படும்போது மீன்பிடிக் கலனின் பதிவினை இரத்துச்செய்வதற்கு தீர்மானிக்கலாம்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (1) மற்றும் (3)ஆகிய உட்பிரிவுகளின் கீழ் இரத்துச்செய்தல் பயனுறும் தேதியை உரிமையாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அதற்கு பயன்கொடுக்கும் வகையில் இரத்துச்செய்தல் சான்றிதழை வழங்குதலும் வேண்டும்.<br>பணிப்பாளர் தலைமையதிபதிக்கு,<br>அ) விண்ணப்பதாரியினால் போலியான,தவறாக வழிநடத்தக்கூடிய அல்லது பிழையான தகவல்களின் அடிப்படையில் பதிவுச் சான்றிதழ் ஒன்று |

| | |
|---|---|
| | வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அல்லது:<br>ஆ) கலன் உரிமையாளர் அல்லது இயக்குநர் முன் அனுமதியின்றி ஆரம்பக்கட்டமைப்பிலும் இயந்திரம் மற்றும் உபகரணங்களில் ஏற்படுத்திய மாற்றங்களை அறிக்கையிட்டிராத சந்தர்ப்பமொன்றில்:<br>மீன்பிடிக் கலனொன்றின் பதிவை இடைநிறுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு ஏற்புடையதான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். |
| மீன்பிடிக் கலனின் பதிவை இடாப்பிலிருந்து நீக்குதல்<br><br>பிரிவு 19 | 1 .பணிப்பாளர் தலைமையதிபதியினால் மீன்பிடிக் கலன் ஒன்றின் பதிவை இடாப்பிலிருந்து நீக்குவதற்கு முன்னர் அம்மீன்பிடிக் கலன் தொடர்பில் சட்டவிரோத அறிக்கையிடப்படாத அல்லது முறைசாரா மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கு எதிரான ஏதேனும் வழக்கு நடவடிக்கைகள் விசாரணை செய்யப்படவில்லை என்பது உறுதி செய்யப்படல் வேண்டும்.<br><br>2. பணிப்பாளர் தலைமையதிபதியினால் (1) ஆம் உட்பிரிவின் தகவல்களை உறுதிப்படத்திக் கொள்ளல் தொடர்பாக திருப்தியடைந்த பின்னர் பின்வரும் நிபந்தனைகள்:<br>(அ) கலன் கண்காணிப்பு அமைப்பு அல்லது ஏதேனும் வேறு கண்காணிப்பு உபகரணமொன்று கலனிலிருந்து துண்டிக்கப்பட்டிருப்பினும் அவ்வுபகரணம் அரச உடைமையாகும் சந்தர்ப்பத்திலும் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.<br>(ஆ) இலங்கை குறியீட்டு இலக்கத்திற்கு மாற்றப்பட்ட தானியங்கி அடையாளம் காணும் தொகுதி அல்லது ஏதேனும் வேறு மின் உபகரணமொன்று துண்டிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>(இ) நிரந்தரமாக அடையாளமிடப்பட்ட மீன்பிடிக் கலன் பதிவு இலக்கம் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரின் முன்னிலையில் முற்றாக நீக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் 11 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்திலிருந்து மீன்பிடிக் கலன் பதிவு நீக்கப்படுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதிவு இடாப்பிலிருந்து நீககப்படும் திகதியை கலன் உரிமையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதற்கு இயைபான பதிவு நீக்கற் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும். |
| அடமான சாதனத்தின் பதிவு<br><br>பிரிவு 20 | மீன்பிடிக் கலன் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், மீன்பிடிக் கலனுடன் தொடர்புற்ற ஒவ்வொரு அடமான சாதனம் பற்றி பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் கிடைத்ததன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, (11)ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலன் இடாப்பில் எந்த ஒழுங்கில் சமர்ப்பிக்கப்பட்டதோ அந்த ஒழுங்கில் அடமான சாதனத்தை பதிவுசெய்தல் வேண்டும். |
| அடமான சாதனத்தின் முன்னுரிமை<br><br>பிரிவு 21 | ஒரே மீன்பிடிக் கலன் தொடர்பில் பதிவுசெய்யப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட அடமான சாதனங்கள் காணப்படும்போது அத்தகைய சாதனங்கள் எழுதி கைச்சாத்திடும் தேதிக்கு இணங்கவன்று அத்தகைய சாதனம் பதிவுசெய்யப்பட்ட தேதிக்கு இணங்க முன்னுரிமை கொடுக்கப்படுதல் வேண்டும், ஆயின், ஏதேனும் அடமான சாதனத்தின் முன்னுரிமையை பெறுவதற்கு மோசடி அல்லது மறைசூழ்ச்சி இடம்பெற்றிருப்பின் அதன்கீழ் உரிமைகோரும் ஆளின் முன்னுரிமை இல்லாதாதல் வேண்டும். |
| உள்நாட்டு மீன்பிடிக் கலன்களின் பதிவுசெய்யப்பட்ட அடமானம் மேலோங்குதல்<br><br>பிரிவு 22 | ஒரே வேறு ஏதேனும் எது எவ்வாறிருப்பினும், மீன்பிடிக் கலனொன்றின் அடமான சாதனமொன்று (24)ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்படுமிடத்து, அடமானம்பெறுபவரினால் அல்லது அவருக்கு எதிராக மீன்பிடிக் கலனின் ஏதேனும் விற்பனை அல்லது வேறு வகையிலான கையுதிர்ப்பு, அடமானம் வலுவில் இருக்கும் காலம் வரையில் அந்த மீன்பிடிக் கலனின் அடமானம் இரத்துச்செய்தலாகாது அல்லது இரத்துச்செய்யப்பட்டதாக கருதப்படுதலாகாது; அக்கலன் அடமானம்வைப்பவருக்கு அல்லது அத்தகைய கையுதிர்ப்பு செய்யப்பட்ட வேறு ஆளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அடமான விடுவிப்பின் பதிவு<br><br>பிரிவு 23 | உள்நாட்டு மீன்பிடிக் கலனொன்றின் அடமானம் விடுவிக்கப்படுமிடத்து பணிப்பாளர் தலைமையதிபதி, அவ்வடமானம் விடுவிக்கப்பட்டதான சான்றுரையை அடமான சாதனத்தில் குறிப்பிட்டு, உரியவாறு ஒப்பமிட்டு சான்றுப்படுத்தி அச்சாதனத்தையும், பெற்றுக்கொண்ட தொகை தொடர்பில் அடமானம்பெறுபவரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தலின்மேல் அவ்வடமானம் விடுவிக்கப்பட்டது என பயன்கொடுக்கும் வகையில் உள்நாட்டு மீன்பிடிக் கலனின் இடாப்பில் பதிவொன்றை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| வங்குறோத்தினால் பாதிக்கப்படாத அடமானம்<br><br>பிரிவு 24 | அடமானம்பெறுபவர் அவரின் வங்குறோத்து ஆரம்பிக்கையில் அவரது உடைமையில், ஆணையில் அல்லது கையுதிர்ப்பில் அல்லது அதன் பிரபல்யமான உரிமையாளராக இருத்தல் எதுஎவ்வாறிருப்பினும், அடமானம் பதிவுசெய்யப்பட்ட தேதிக்கு பின்னர் அடமானம்பெறுபவரினால் புரியப்பட்ட ஏதேனும் வங்குறோத்து செயலினால் மீன்பிடிக் கலனொன்றின் பதிவுசெய்யப்பட்ட அடமானம் பயன்கொடுத்தலாகாது என்பதுடன் வங்குறோத்தாளரின் ஏனைய கடன்கொடுநர்கள், அல்லது அவர்கள் சார்பாக எவரேனும் நம்பிக்கைபொறுப்பாளர் அல்லது சாட்டுநர் ஒருவரின் உரித்து, உரிமைக்கோரிக்கை அல்லது அக்கறைக்கு விஞ்சி அடமானத்துக்கு முன்னரிமை கிடைத்தல் வேண்டும். |
| அடமானத்தை கைமாற்றுதலும் பதிவு செய்தலும்<br><br>பிரிவு25 | உள்நாட்டு மீன்பிடிக் கலனொன்றின் பதிவுசெய்யப்பட்ட அடமானம் எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படலாம் என்பதுடன் கைமாற்றலுக்கு பயன்கொடுக்கும் சாதனம் ('கைமாற்றல் சாதனம்') விதித்துரைத்த படிவத்தில் இருத்தலும் வேண்டும். கைமாற்றல் சாதனம் ஒவ்வொன்றும், பதிவுக்காக பணிப்பாளர் தலைமையதிபதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br><br>அடமானமொன்றின் ஒவ்வொரு கைமாற்றல் சாதனமும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் உள்நாட்டு மீன்பிடிக் கலன்களின் இடாப்பில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.<br><br>எந்த ஆளுக்கு அத்தகைய அடமானம் கைமாற்றப்பட்டதோ அந்த ஆள், உள்நாட்டு மீன்பிடிக் கலன்களின் இடாப்பில் முறையாக பதிவுசெய்யப்பட்டதாயின் கைமாற்றுநரினால் துய்க்கப்படும் அதே முன்னுரிமையை துய்த்தல் வேண்டும். |
| வங்குரோத்து போன்ற சந்தர்ப்பத்தில் அடமான வட்டியை அனுப்புதல்<br><br>பிரிவு26 | உள்நாட்டு மீன்பிடிக் கலனொன்றின் அடமானத்திலுள்ள வட்டி, (29)ஆம் பிரிவின் கீழான கைமாற்றல் மூலமன்றி, வங்குரோத்து, இறப்பு அல்லது வேறு ஏதேனும் சட்டரீதியான முறையில் அனுப்பப்படுமிடத்து, எந்த ஆளுக்கு அத்தகைய வட்டி அனுப்பப்படுகிறதோ அந்த ஆள்:<br><br>அ)அவரது பெயர், முகவரி மற்றும் அடமானத்திலுள்ள வட்டி எவ்விதத்தில் அவருக்கு அனுப்பப்பட்டதோ அவ்விதத்தை குறிப்பிட்டு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு பிரகடனமொன்றை செய்தல் வேண்டும்; அத்துடன்<br><br>ஆ)உள்நாட்டு மீன்பிடிக் கலனின் அடமானத்திலுள்ள வட்டி அனுப்பியதன் சான்றினை பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்காக முன்வைத்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரகடனத்தை பெற்றதன்மேல் மற்றும் சான்றினை முன்வைத்ததன்மேல், உள்நாட்டு மீன்பிடிக் கலனின் அடமானம்வைப்பவராக வட்டி யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த ஆளின் பெயர் மற்றும் முகவரியை உள்நாட்டு மீன்பிடிக் கலன்களின் இடாப்பில் பதிவுசெய்தல் வேண்டும்.<br><br>அடமானத்தின் வட்டி வங்குரோத்து, இறப்பு அல்லது வேறு ஏதேனும் சட்டரீதியான முறையில் எந்த ஆளுக்கு அனுப்பப்படுகிறதோ அந்த ஆள், (29)ஆம் பிரிவின் கீழான கைமாற்றல் மூலமன்றி, அத்தகைய அடமானம்வைப்பரினால் துய்க்கப்படும் |

| | |
|---|---|
| | அதே முன்னுரிமையை துய்த்தல் வேண்டும். |
| பிரச்சாரம்<br><br>பிரிவு 27 | (10)ஆம் பிரிவின் கீழ் மீன்பிடிக் கலன்களின் இடாப்பிலுள்ள தகவல்களையும் (31)ஆம் பிரிவின் கீழ் மீனவர்களின் இடாப்பிலுள்ள தகவல்களையும், தகவல் அந்தரங்கம் தொடர்பிலான ஏதேனும் ஏற்படைய சட்டத்திற்கு அமைய மற்றும் இச்சட்டத்தின் குறிப்பாக (163) மற்றும் (164) ஆகிய பிரிவுகளுடன் ஒத்தாகுமளவிற்கு பகிரங்கமாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். |
| தேடுதல்களும் பிரதிகளும்<br><br>பிரிவு 28 | இச்சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ள எல்லா இடாப்புக்கள் மற்றும் ஆவணங்கள், அதில் ஆர்வமாக இருப்பதாகக் கூறும் எந்தவொரு நபராலும் அல்லது அவரது சட்டத்தரணியால் அல்லது எழுத்துப்பூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் தேடப்பட்டு ஆய்வு செய்யப்படலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் இடாப்பு அல்லது ஆவணத்தில் இருந்தான சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை அல்லது பிரித்தெடுப்புகளை விதித்துரைத்த கட்டணத்தைச் செலுத்துவதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். |
| சான்று<br><br>பிரிவு 29 | பணிப்பாளர் தலைமையதிபதியின் கையொப்பத்தின் கீழ் சான்றளிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு பிரதி அல்லது பிரித்தெடுப்பு, இந்தப் பாகத்தை அனுசரித்து வைக்கப்பட்டுள்ள எந்தவொரு இடாப்பு அல்லது ஆவணத்தில் இருந்தான உண்மையான பிரதியாக அல்லது பிரித்தெடுப்பாக கருதப்படுகிறது. சான்றுப்படுத்தப்பட்ட பிரதியானது, பணிப்பாளர் தலைமையதிபதியின் கையொப்பம் அல்லது நியமனத்திற்கான ஆதாரம் இல்லாமல் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், (160)ஆம் பிரிவிற்கேற்ப அனைத்து நோக்கங்களுக்காகவும், சிவில் அல்லது குற்றவியல், அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் அத்தகைய இடாப்பு அல்லது ஆவணத்தின் உள்ளடக்கங்களின் *முதல்தோற்ற* சான்றாக அமைதலும் வேண்டும். |
| ஏற்புடையதாகாத வேறு எழுத்திலான சட்டம்<br><br>பிரிவு 30 | இந்தச் சட்டத்தைத் தவிர, அசையும் சொத்தின் அடமானத்தை உருவாக்கும் எந்தக் கருவியையும் அந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டியதான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அடமானக் கருவிக்கு ஏற்புடையதாதலாகாது. |
| | அத்தியாயம் 2- மீனவர்களையும் கடற்றொழில் சார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்களையும் பதிவு செய்தல் |
| மீனவர்களையும் கடற்றொழில் சார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நபர்களையும் பதிவு செய்தல்<br><br>பிரிவு 31 | பணிப்பாளர் தலைமையதிபதி, மீனவர்களினதும் கடற்றொழில் சார் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள ஆட்களின் இடாப்பு ஒன்றை பேணுவதற்கு செய்வித்தல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்பட்டவாறு அடையாள அட்டையொன்றை அத்தகைய ஆள் ஒவ்வொருவருக்கும் வழங்குதலும் வேண்டும்.<br><br>கடற்றொழில் அல்லது கடற்றொழில் சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உத்தேசிக்கும் எவரேனும் ஆள், விதித்துரைக்கப்பட்டவாறு மீனவரொருவராக பதிவுசெய்வதற்காக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>(2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகிறார் என்பதுடன், குற்றவாளியாக்கப்பட்டதன் மேல் ,IIIஆம் அட்டவணையிலுள்ள தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டும்.<br><br>அமைச்சர், (2)ஆம் உட்பிரிவின் கீழ் அடையாள அட்டையொன்றை பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் விண்ணப்ப நடைமுறை அத்துடன் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீனவர் இடாப்பினை தயாரித்தல் மற்றும் திருத்துதலில் பின்பற்றப்படவுள்ள நடைமுறை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| | அத்தியாயம் -3 மீன்பிடிக் கருவிகள், கடல்சார் உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் துணைக்கருவிகள் உற்பத்தியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு |

| | |
|---|---|
| | செய்தல் |
| மீன்பிடிக் கருவிகள், கடல்சார் உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் துணைக்கருவிகள் உற்பத்தியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல்<br><br>பிரிவு 32 | 1 .எந்தவொரு நபரும் குறித்த ஒழுங்குவிதிக்கும் மாதிரிக்கும் அமைவாக பதிவு செய்யாத நிலையில் மீன்பிடிக் கருவிகள்,கடல்சார் உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் துணைக்கருவிகள் உற்பத்தி செய்யும் மற்றும் இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகாது.<br><br>2 பணிப்பாளர் தலைமையதிபதி, மீன்பிடிக் கருவிகள்,கடல்சார் உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் துணைக்கருவிகள் உற்பத்தியாளர்களினதும் இறக்குமதியாளர்களினதும் இடாப்பொன்றை குறித்துரைக்கப்பட்டவாறு பேணுதல் வேண்டும்.<br><br>3. (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகிறார் என்பதுடன், குற்றவாளியாக்கப்பட்டதன் மேல் ,IIIஆம் அட்டவணையிலுள்ள தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டும். |
| | அத்தியாயம் - 4 மேன்முறையீடு |
| மேன்முறையீடு<br><br>பிரிவு 33 | 1.மீன்பிடிக் கலனொன்றை பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று 11 ஆம் பிரிவின் கீழ் மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில், 18 ஆம் பிரிவின் கீழ் இடைநிறுத்தம் செய்யப்படுகின்ற போது அல்லது இரத்துச் செய்யப்படுகின்ற போது அத்தீர்மானத்தினால் அதிருப்தியடைகின்ற விண்ணப்பதாரர் அல்லது உரிமதாரரினால் அத்தீர்மானம் தனக்கு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து முப்பது (30) நாட்களினுள் விதித்துரைக்கப்படக் கூடியவாறான நடைமுறைகளின் கீழ் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யப்பட முடியும்.<br><br>2.மீனவராக பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று 31 ஆம் பிரிவின் கீழ் மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில், அத்தகைய தீர்மானத்தினால் அதிருப்தியடைகின்ற விண்ணப்பதாரரினால் அத்தீர்மானம் தனக்கு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து முப்பது(30) நாட்களினுள்,விதித்துரைக்கப்படக் கூடியவாறான நடைமுறைகளின் கீழ் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யப்பட முடியும்.<br><br>3.உற்பத்தியாளர்களாக அல்லது இறக்குமதியாளர்களாக பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று 32 ஆம் பிரிவின் கீழ் மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில், அத்தீர்மானத்தினால் அதிருப்தியடைகின்ற விண்ணப்பதாரர் அல்லது உரிமதாரரினால் அத்தீர்மானம் தனக்கு அறிவிக்கப்பட்டு முப்பது(30) நாட்களினுள், விதித்துரைக்கப்படக் கூடியவாறான நடைமுறைகளின் கீழ் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யப்பட முடியும்.<br>4.செயலாளர்,1 முதல் 3 வரையான உட்பிரிவுகளின் கீழான மேன்முறையீடொன்றை கவனத்தில் கொண்டு குறித்த மேன்முறையீட்டாளரின் அல்லது உரிமதாரரின் அறிவித்தல் கிடைக்கப் பெற்று முப்பது (30)நாட்களினுள்,இயைபான மேன்முறையீட்டு தீர்மானத்தை அது தொடர்பான ஏதுக்களுடன் மேன்முறையீட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.<br><br>5.செயலாளரின் தீர்மானத்தில் அதிருப்தியடைகின்ற எவரேனும் ஒரு நபர்,தீர்மானம் கிடைக்கப் பெற்று முப்பது(30) நாட்களினுள் சட்டம் தொடர்பான பிரச்சினை ஒன்றின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யலாம். |
| | பாகம் III– உரிமம் வழங்கல் |
| | அத்தியாயம் - 1 – மீன்பிடிக் கலன்கள் பொருட்டான உரிமங்கள் |
| மீன்பிடிச் செயற்பாடுகளுக்கான உரிமம் வழங்கல்<br><br>பிரிவு 34 | மீன்பிடிக் கலன்களினதும் அவற்றின் செயற்பாடுகளினதும் பயனுறு கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பொருட்டும், (3) (ஏ) மற்றும் (ஐ)ஆம் பிரிவிற்கேற்ப சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிச் செயற்பாடுகளுக்கு போதியளவில் எதிர்த்துநிற்கும் பொருட்டும், இலங்கையர் மீன்பிடிக் கலனொன்று, இப்பாகத்தில் குறித்துரைத்த நடைமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட மீன்பிடி உரிமமொன்றின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கவேயன்றி இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது தேசிய நியாயாதிக்கத்துக்கு |

| | |
|---|---|
| | அப்பால் உள்ள மீன்பிடிச் செயற்பாடுகளில் அதிகாரத்தின் கீழ் தவிர ஈடுபடுதலாகாது.<br><br>விண்ணப்பத்திற்கான படிவம், செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் மீன்பிடி கப்பல்கள் மற்றும் மீனவர்களுக்கு மீன்பிடி நடவடிக்கைகளை நடத்துவதற்கான உரிமம் மற்றும் இந்த பகுதியின் கீழ் விளையாட்டு மீன்பிடித்தலுக்கான உரிமம் தொடர்பான பிற விஷயங்களை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகளை அமைச்சர் ஆக்கலாம். |
| மீன்பிடி நடவடிக்கை உரிமம் வழங்கலின் பொதுவான கோட்பாடுகள்<br><br>பிரிவு 35 | இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கு 40ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படவுள்ள மீன்பிடி உரிமங்களின் எண்ணிக்கையானது, 3(ஆ) ஆம் பிரிவின் கீழ் தரப்பட்டுள்ள குறிக்கோளுக்கிணங்க, கடற்றொழில் வளங்களின் அறிவியல் சான்றுகள் மற்றும் அவற்றின் நிலைபேறான பயன்பாட்டுட்டின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.<br><br>தேசிய நீரியல் வள மற்றும் அபிவிருத்தி முகவர்நிலையம் (‘நாரா’) அல்லது அதன் சார்பாக வேறு ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்நிலையம், (1)ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற விண்ணபத்தின் மேல், கடற்றொழில் வளங்களின் இருப்பு நிலமை சம்பந்தமான அறிக்கையொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, தேசிய கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி திட்டத்துக்கு மற்றும் ஏற்புடையவிடத்து, தேசிய கப்பல்தொகுதி அபிவிருத்தி திட்டத்துக்கேற்ப (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்துவதற்கு வருடாந்தம் வழங்கப்படவுள்ள மீன்பிடி உரிமங்களின் மொத்த எண்ணிக்கை பற்றி தீர்மானித்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தை விதித்ததன் பின்னர் தேசிய கடற்றொழில் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய கலன்கள் அபிவிருத்தி திட்டம் என்பவற்றை உருவாக்கி இலங்கை நீர்ப்பரப்பில் கடற்றொழில் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு வெளியிடப்படுகின்ற மொத்த கடற்றொழில் உரிமங்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் வேளையில் அத்திட்டத்தை பயன்படுத்துதல் வேண்டும். |
| மீன்பிடி உரிமத்தின் கால எல்லை<br><br>பிரிவு 36 | மீன்பிடி உரிமங்கள், முன்னமே இடைநிறுத்தம் அல்லது இரத்துச்செய்யப் பட்டாலொழிய அத்தகைய உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாகும். |
| மீன்பிடி நடவடிக்கை உரிமங்களின் கைமாற்றல்<br><br>பிரிவு 37 | இப்பாகத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் எதுவும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப, பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது உரிமம் வழங்கும் அலுவலரின் எழுத்திலான அங்கீகாரத்துடனாலன்றி கைமாற்றப்படுதலாகாது:<br><br>மீன்பிடி உரிமமொன்று (1)ஆம் உட்பிரிவின் கீழ் கைமாற்றப்படுமிடத்து, :<br>அ) 40ஆம் பிரிவின் கீழ் இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான உரிமம், அத்தகைய உரிமம் மீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.<br>ஆ) 42 மற்றும் 43 ஆகிய பிரிவுகளின் கீழ் தேசிய நியாயாதிக்கத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமம், அத்தகைய உரிமம் மீது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.<br>3. (2)ஆம் உட்பிரிவின் கீழ் கைமாற்றம் இடம்பெறும்பட்சத்தில், மீன்பிடிக் கலனின் பதிவு கைமாற்றிபெறுபவரின் பெயருக்கு மாற்றப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| | 4. 45ஆம் பிரிவின் கீழ் யாருடைய உரிமம் இரத்துச்செய்யப்பட்டதோ அந்த ஆளின் பெயரில் உரிமமொன்று மாற்றப்படுவதற்கு உரித்திருத்தலாகாது.<br><br>5. இப்பிரிவின் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை மீறும் எவரேனும் ஆள் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III அட்டவணையின் தண்டனைகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும். |
| வெளிநாட்டு கலன்கள் மூலம் இலங்கை நீர்ப்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதலை தடை செய்தல்<br><br>பிரிவு 38 | வெளிநாட்டு கொடிதாங்கிய மீன்பிடி கலன்களினால் இலங்கை நீர்ப்பரப்புகளில் மேற்கொள்ளும் மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.<br>வெளிநாட்டு கலனொன்றின் கப்பற்தலைவன்,உரிமையாளர் அல்லது இயக்குபவர்,வாடகைக்கு அமர்த்திய நபர்,கலனில் பயணிக்கின்ற அல்லது பயணித்ததாக சந்தேகிக்கின்ற எவரேனுமொரு நபர் இலங்கை நீர்ப்பரப்புகளுக்கு நுழையும் போது மீன்பிடி உபகரணங்கள் இலகுவாக பயன்படுத்தப்பட முடியாதவகையில் விதித்துரைத்த நிபந்தனைகளுக்கிணங்க இறுக்கமாகக்கட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.<br><br>இச்சட்டத்தை அனுசரித்து அல்லது ஏற்புடைய அனுகல் உடன்படிக்கையின் கீழ் இலங்கை நீர்ப்பரப்புகளில் உரிமம்பெற்றிராத அல்லது அதற்காக அதிகாரமளிக்கப்பெறாத இலங்கை நீர்ப்பரப்புகளுக்கு நுழையும் வெளிநாட்டு கொடிதாங்கிய கலனொன்றின் உரிமையாளர் அல்லது இயக்குபவர், (4)ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்ட தகவல்களை வழங்க மறுக்குமிடத்து அல்லது வேறு விதத்தில் அறிக்கையிடுவதற்கு தவறுமிடத்து, முரணான சான்று எதுவுமில்லையெனின், கப்பலில் கண்டுபிடிக்கப்பட்ட மீன்கள் அனைத்தும் இச்சட்டத்தை மீறுவதன்மூலம் இலங்கை நீர்ப்பரப்புகளினுள் பிடிக்கப்பட்டவை என ஊகிக்கப்படுதல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுகின்ற வெளிநாட்டு கலனொன்றின் கப்பற்தலைவன்,உரிமையாளர், இயக்குபவர்,வாடகைக்கு அமர்த்திய நபர்,கலனில் பயணிக்கின்ற அல்லது பயணித்ததாக சந்தேகிக்கின்ற எவரேனுமொரு நபர் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தண்டனைகளுக்கு உள்ளாதல் வேண்டுமென்பதுடன் (151) மற்றும் (152) ஆம் பிரிவுகளின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக கலன் மற்றும் அதிலுள்ள மீன்பிடிக் கருவிகள்,உபகரணங்கள்,களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் அல்லது கலன் பொருட்கள் மற்றும் மீன்கள் மற்றும் நீரியல் தாவரங்கள் அரசுடைமையாதல் வேண்டும். . |
| உரிமம் வழங்கும் அலுவலர்<br><br>பிரிவு 39 | பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கை நீர்ப்பரப்புகளில், ஆழ்கடலில் மற்றும் இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பிறிதொரு அரசின் நீர்நிலைகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமங்களை வழங்குவதற்கான, புதுப்பிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கையில் பதிவு செய்துள்ள கடற்றொழில் கலன் ஒன்றிற்கு பிறிதொரு நாட்டில் கடற்றொழில் நடவடிக்கை மேற் கொள்வதற்காக பரிந்துரைப்பதற்கு அதிகாரம் பெற்றவராவார்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, உரிமம் வழங்கும் அதிகாரத்தை இப்பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற உரிமமளிக்கும் அலுவலருக்கு எழுத்து மூலம் வழங்க முடிவதுடன் இப்பணிக்காக ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்கும் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரையோ பலரையோ நியமிக்கலாம்.<br><br>கடற்றொழில் பரிசோதகர் பதவிக்கு மேலான பதவி வகிக்கின்ற எந்தவொரு அலுவலரும் உரிமமளிக்கும் அலுவலராக நியமிக்கப்படாதிருத்தல் வேண்டும். |
| இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி | மீன்பிடி கலனொன்றின் உரிமையாளர்,இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர், எந்த நிருவாக மாவட்டத்தில் மீன்பிடிச் செயற்பாடு நடாத்தப்படவுள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் உரிமம்வழங்கும் அலுவலருக்கு, விதித்துரைத்த படிவத்தை பயன்படுத்தி விதித்துரைத்த கட்டணத்துடன் சேர்த்து இலங்கையில் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்காக விண்ணப்பித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| உரிமமொன்றுக்கான விண்ணப்பம்<br><br>பிரிவு 40 | உத்தேச மீன்பிடிச் செயல்பாடு நடாத்தப்படவுள்ள நிருவாக மாவட்டத்தில் உரிமம்வழங்கும் அலுவலர் இல்லையெனின், அத்தகைய விண்ணப்பம் பணிப்பாளருக்கு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப, உரிமம்வழங்கும் அலுவலர் அல்லது பணிப்பாளர், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் கலன் சோதிக்கப்பட்டு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால் மாத்திரமே மீன்பிடி உரிமமொன்று அளித்தல் வேண்டும்:<br>அ) கலன் மற்றும் உரிமையாளர்,இயக்குநர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் தொடர்பான பூரண, துல்லியமான தகவல்கள் விதித்துரைத்த படிவத்தில் குறித்துரைத்த தேவைப்பாடுகளுக்கிணங்க பெறப்பட்டிருத்தல்;<br>ஆ) மீன்பிடிக் கலன், உரிமையாளர்,இயக்குநர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமை பொருட்டு அவர்களுக்கு எதிராக எவ்வித வழக்கு விசாரணையும் நடாத்தப்படவில்லை என்பதாக;<br>இ) மீன்பிடிக் கலன் பதிவிலக்கமொன்றை கொண்டிருப்பதுடன் உரியவாறு வெளிப்புறத்தில் அடையாளமிடப்பட்டிருத்தல்;<br>ஈ) மீன்பிடி உபகரணம் விதித்துரைத்த நிபந்தனைகளுக்கிணங்க முறையாக அடையாளமிடப்பட்டிருத்தல்;<br>உ) கடற்படை மற்றும் பாதுகாப்பு உபகரணம் விதித்துரைத்த நிபந்தனைகளுக்கிணங்க கப்பலில் முறையாக நிறுவப்பட்டிருத்தல்;<br>ஊ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் கலனுடன் தொடர்புகொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் தொடர்பாடல் உபகரணம் முறையாக நிறுவப்பட்டிருத்தல்.<br><br>(3)ஆம் உட்பிரிவில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும், வெளிநாட்டு மீனவர்களுக்கு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது உரிமமளிக்கும் அலுவலரினால் உரிமம் அளித்தலானது குறித்த கடற்றொழில் அலுவலரின் பரிந்துரையினடிப்படையில் வழங்குதல் வேண்டும். அவ்வாறிருப்பினும்,பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உரிமமளிக்கும் அலுவலரினால் இச்சட்டத்தின் (72) ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கடற்றொழில் குழுக்களின் உடன்பாட்டினை பெற்றுக் கொள்ளலும் வேண்டும்.<br><br>(4) ஆம் உட்பிரிவின் உடன்பாட்டிற்கான தேவைப்பாடுகள் பாரம்பரிய குடிபெயர் மீனவர்களுக்கு ஏற்புடையதாகாது.<br><br>சூழ்நிலைக்கேற்ப,(3) ஆம் உட்பிரிவின் கீழ் மீன்பிடி நடவடிக்கை உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தை மறுப்பதற்கு உரிமமளிக்கும் அலுவலர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து, அவ்வாறு மறுப்பதற்கான ஏதுக்களை விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.அத்தகை ஏதேனும் மறுப்பு தொடர்பான அறிவித்தலை பதிவுத் தபாலில் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அல்லது வேறு இலத்திரனியல் ஊடகமொன்றினூடாக அத்தகைய தீர்மானம் அனுப்பப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டும்.<br><br>(3)ஆம் உட்பிரிவிற்கிணங்க, மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுமிடத்து, விடயத்திற்கேற்ப, உரிமம்வழங்கும் அலுவலர் அல்லது பணிப்பாளர், மீன்பிடி உரிமத்தை விதித்துரைத்த படிவத்தில் விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். மீன்பிடி உரிமம் பின்வரும் தகவல்களை கொண்டிருத்தல் வேண்டும்:<br>அ)மீன்பிடி உரிமம் எந்த கலனுக்காக வழங்கப்பட்டதோ அந்தக் கலனின் பதிவிலக்கம்;<br>ஆ)உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மீன்பிடி உபகரணம்/ முறைகள்;<br>இ)மீன்பிடி பிரதேசம்;<br>ஈ)பெயரிடப்பட்ட கரையேறும் ஸ்தலங்கள்;<br>உ)ஏற்புடையவிடத்து மீன்பிடி பருவம்(ங்கள்<br>ஊ)ஏற்புடையவிடத்து மீன்பிடி நேரம்(ங்கள்); |

| | |
|---|---|
| | எ)உரிமத்தின் கீழ் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட இலக்கு வைக்கப்பட்ட மீன் இனங்கள்; அத்துடன்,<br>ஏ)பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படற்பாலான வேறு ஏதேனும் நிபந்தனைகள்.<br><br>8. இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தண்டனைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றை புதுப்பித்தல்<br><br>பிரிவு 41 | மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் அக்கலனின் மீன்பிடி உரிமத்தை புதுப்பிப்பதற்காக உரிமம்வழங்கும் அலுவலருக்கு விண்ணபிக்கலாம். புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், இப்பிரிவில் தரப்பட்ட நடைமுறைக்கிணங்க, மீன்பிடி உரிமம் காலாவதியாகும் தேதியிலிருந்து அறுபது (60) நாட்கள் முன்னதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.<br><br>மீன்பிடி செயல்பாடானது உரிமத்தின்மூலம் எந்த நிருவாக மாவட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதோ அந்த மாவட்டம் பொருட்டு உரிமம்வழங்கும் அலுவலர் எவரும் நியமிக்கப்படவில்லையெனின், புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் பணிப்பாளருக்கு செய்யப்படல் வேண்டும்.<br><br>விடயத்திற்கேற்ப, உரிமம்வழங்கும் அலுவலர் அல்லது பணிப்பாளர், பின்வருவன தொடர்பாக திருப்தியடைவராயின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் மீன்பிடி உரிமத்தை புதுப்பித்தல் வேண்டும்:<br>அ)மீன்பிடிக் கலன், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் மீன்பிடி உரிமத்தின் நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறியமை பொருட்டு ஏதேனும் முடிவுறாத தடைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை;<br>ஆ)உரிமம்பெற்றவர் மீன்பிடி உரிமத்தின் புதுப்பித்தலுக்கான விதித்துரைத்த கட்டணத்தை செலுத்தியுள்ளார்; அத்துடன்,<br>இ)உரிமத்தை புதுப்பித்தலானது, இச்சட்டத்தின் கீழான பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் அல்லது அதன் ஏதேனும் செயற்படுத்தும் ஒழுங்குவிதிகளின் பயனுறுத்தன்மையை பாதிக்காது என்பதுடன் மீன்பிடி உரிமத்தை புதுப்பித்தலின்மேல் புதிய மீன்பிடி உரிமமொன்று விதித்துரைத்த படிவத்தில் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>விடயத்திற்கேற்ப, பணிப்பாளர் அல்லது உரிமம்வழங்கும் அலுவலர், மீன்பிடி உரிமத்தை புதுப்பிக்காமை பற்றிய தீர்மானத்தை உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம் விண்ணப்பபடிவத்தில் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிய தேதியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் ஊடகம்மூலம் அனுப்பிய தேதியிலிருந்து இரு வாரங்களுக்குள் அத்தகைய புதுப்பிக்காமை பற்றிய தீர்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாக கருதப்படுதல் வேண்டும். |
| ஆழ்கடலில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம்<br><br>பிரிவு 42 | 1.மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் விதித்துரைத்த படிவத்தை பயன்படுத்தி விதித்துரைத்த கட்டணம் மற்றும் உறுதி மொழி ஆவணத்துடன் சேர்த்து இலங்கையில் ஆழ்கடலில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்காக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>பிறிதொரு அரசினால் ஆழ்கடலில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான செல்லுபடியான மீன்பிடி உரிமமொன்று விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என சத்தியக்கடதாசியொன்றில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். |

(1)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் கலன் சோதிக்கப்பட்டு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால் மாத்திரமே மீன்பிடி உரிமமொன்று அளித்தல் வேண்டும்:

அ)கலன் மற்றும் உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் தொடர்பான பூரண, துல்லியமான தகவல்கள் உருவாக்கப்பட்ட விதித்துரைத்த படிவத்தில் குறித்துரைத்த தேவைப்பாடுகளுக்கிணங்க பெறப்பட்டிருத்தல்;

ஆ)மீன்பிடிக் கலன், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமை பொருட்டு ஏதேனும் முடிவுறாத தடைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை;

இ)மீன்பிடிக் கலன் பதிவிலக்கமொன்றையும் உரியவாறு பதிக்கப்பட்ட வெளி அடையாளங்களையும் கொண்டிருக்கிறது;

ஈ)உரிமையாளரை இனங்காணுவதற்கு ஏற்றவகையில் மீன்பிடி உபகரணம் விதித்துரைத்த நிபந்தனைகளுக்கிணங்க முறையாக அடையாளமிடப்பட்டிருத்தல;

உ)கப்பலோட்டம், தொடர்பாடல் மற்றும் பாதுகாப்பு உபகரணம் என்பன விதித்துரைத்த நிபந்தனைகளுக்கிணங்க கப்பலில் முறையாக நிறுவப்பட்டிருத்தல்;

ஊ)மீன்பிடிக் கலன்களின் நிருமாணம் தொடர்பாக இச்சட்டத்தின் கீழான செயற்படுத்தும் ஒழுங்குவிதிகளுடன் இந்த மீன்பிடிக் கலன் அமைந்தொழுகுதல்;

எ)கலன் கண்காணிப்பு முறைமையை இந்த மீன்பிடிக் கலன் கொண்டுள்ளது;

ஏ)பொருத்தமானவிடத்து, இலங்கைக்கு ஏற்புடையதான தேசிய அல்லது பிராந்திய விதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அல்லது இலங்கை ஒப்பந்தம்செய்த தரப்பினரொருவரான சருவதேச கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பின் நடவடிக்கைகளினால் பிணிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் குறித்துரைத்த நிபந்தனை.

(3)ஆம் உட்பிரிவின் கீழ், விடயத்திற்கேற்ப, உரிமம்வழங்கும் அலுவலர் அல்லது பணிப்பாளர், மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு தீர்மானிக்குமிடத்து, அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

அத்தகைய தீர்மானம் விண்ணப்பபடிவத்தில் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிய தேதியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் ஊடகம்மூலம் அனுப்பிய தேதியிலிருந்து இரு வாரங்களுக்குள் அத்தகைய நிராகரிப்புக்கான தீர்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாக கருதப்படுதல் வேண்டும்.

(3)ஆம் உட்பிரிவிற்கிணங்க, மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுமிடத்து, விடயத்திற்கேற்ப, உரிமம்வழங்கும் அலுவலர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி, மீன்பிடி உரிமத்தை விதித்துரைத்த படிவத்தில் விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். மீன்பிடி உரிமம் பின்வரும் தகவல்களை கொண்டிருத்தல் வேண்டும்:

அ)மீன்பிடி நடவடிக்கை உரிமம் எந்த கலனுக்காக வழங்கப்பட்டதோ அந்தக் கலனின் பதிவிலக்கம்;

ஆ)மீன்பிடி காலப்பகுதி;

இ)உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மீன்பிடி உபகரணம்/ முறைகள்;

ஈ)மீன்பிடி பிரதேசம்;

உ)அதிகாரமளிக்கப்பட்ட கரையேறும் ஸ்தலங்கள்;

ஊ)உரிமத்தின் கீழ் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட மீன்பிடி இனங்கள்; அத்துடன்,

எ)ஏதேனும் புவியிடங்காட்டி (GPS) கருவி மற்றும் எதிரொலி ஒலிப்பான் (Echo sounder) கப்பலில் எடுத்துச்செல்லப்படுகின்றனவா என்பதுபற்றி. அத்துடன்,

ஏ)பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் நிபந்தனையொன்று

7. இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார்

| | |
|---|---|
| | என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III ஆம் அட்டவணையின் இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| பிறிதொரு நாட்டின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பம்<br><br>பிரிவு 43 | பிறிதொரு நாட்டின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கு உத்தேசிக்கும் மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் விதித்துரைத்த படிவத்தை பயன்படுத்தி விதித்துரைத்த கட்டணத்துடன் சேர்த்து பணிப்பாளர் தலைமையதிபதிக்கு முதலில் விண்ணப்பித்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் கலன் சோதிக்கப்பட்டு (42)ஆம் பிரிவின் கீழான நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால் மாத்திரமே மீன்பிடி உரிமமொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் அளிக்கப்படலாம்.<br><br>(1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மீன்பிடி உரிமம் கிடைக்கப்பெற்றதன்மேல் பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கு உத்தேசிக்கும் மீன்பிடிக் கலனின் உரிமையாளர் அல்லது இயக்குபவர், அந்த கரையோர அரசின் நடைமுறைகள் அத்துடன் (64)ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட.வாறான ஏதேனும் கடற்றொழில் உடன்படிக்கையின் அல்லது வேறு ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு இணங்க மீன்பிடி உரிமமொன்றுக்காக அந்த கரையோர அரசுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவின் கீழ், மீன்பிடி உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு தீர்மானிக்குமிடத்து அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானம் விண்ணப்பபடிவத்தில் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் ஊடகம்மூலம் அனுப்பிய தேதியிலிருந்து பதினான்கு(14) நாட்களுக்குள் எழுத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததாக கருதப்படுதல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III ஆம் அட்டவணையின் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| ஆழ்கடலில் அல்லது பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை நடாத்துவதற்கான மீன்பிடி உரிமமொன்றை புதுப்பித்தல்<br><br>பிரிவு 44 | ஆழ்கடலில் அல்லது பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடிச் செயல்பாடுகளை தொடர்வதற்கு உத்தேசிக்கும் கலனின் உரிமையாளர் அல்லது இயக்குபவர், மீன்பிடி உரிமத்தை புதுப்பிப்பதற்காக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம். புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், இப்பிரிவில் தரப்பட்ட நடைமுறைக்கிணங்க மீன்பிடி உரிமம் காலாவதியாகும் தேதியிலிருந்து நாற்பத்தைந்து (45) நாட்கள் முன்னதாக ஆரம்பிக்கப்படல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் விடயங்கள் தொடர்பில் திருப்தியடையின், (1) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பதினான்கு(14) நாட்களுக்குள் மீன்பிடி உரிமத்தை புதுப்பித்தல் வேண்டும்:<br><br>அ) மீன்பிடிக் கலன், உரிமையாளர் அல்லது இயக்குபவர், மீன்பிடி உரிமத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறியமை பொருட்டு ஏதேனும் முடிவுறாத தடைகளுக்கு உட்பட்டிருக்கவில்லை;<br>ஆ) உரிமம்பெற்றவர் மீன்பிடி உரிமத்தின் புதுப்பித்தலுக்கான விதித்துரைத்த கட்டணத்தை செலுத்தியுள்ளார்; அத்துடன்,<br>இ) உரிமத்தை புதுப்பித்தலானது, இச்சட்டத்தின் கீழான பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் பயனுறுத்தன்மையை பாதிக்காது,<br><br>மீன்பிடி உரிமம் புதுப்பித்தலின்மேல் புதிய மீன்பிடி உரிமமொன்று, விதித்துரைத்த படிவத்தில் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவின் கீழ், மீன்பிடி உரிமமொன்றின் |

| | |
|---|---|
| | புதுப்பித்தலை மறுப்பதற்கு தீர்மானிக்குமிடத்து, அத்தகைய புதுப்பிக்காமைக்கான காரணங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானம் விண்ணபபடிவத்தில் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் ஊடகம்மூலம் அனுப்பிய தேதியிலிருந்து பதினான்கு(14) நாட்களுக்குள் எழுத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததாக கருதப்படுதல் வேண்டும். |
| மீன்பிடி உரிமத்தை இரத்துச்செய்தலும் இடைநிறுத்துதலும<br><br>பிரிவு 45 | விடயத்திற்கேற்ப, பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், (40)ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட. மீன்பிடி உரிமத்தை இரத்துச்செய்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, (42) மற்றும் (43) ஆகிய பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட. மீன்பிடி உரிமத்தை பின்வரும் சந்தர்ப்பங்களில் இரத்துச்செய்தல் வேண்டும்:<br>அ) மீன்பிடி உரிமத்தின் பதிவு 18 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்யப்பட்டிருத்தல் அல்லது இடைநிறுத்தப்பட்டிருத்தல்;<br>ஆ) உரிமம் எந்த மீன்பிடிக் கலனுக்கு ஏற்புடையதோ அந்த மீன்பிடிக் கலன் இலங்கையின் மீன்பிடிக் கலனொன்றாக கருதுதல் நிறுத்தப்படல்;<br>இ) மீன்பிடிக் கலன், உரிமையாளர் அல்லது இயக்குபவர், பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் அனுமதிக்கப்படாத மீன்பிடியை நடாத்தியுள்ளனர் என இயைபான சான்று குறிப்பிடுமிடத்து ; அல்லது,<br>ஈ) மீன்பிடி உரிமத்தை இரத்துச்செய்தலை தேவைப்படுத்தும் தவறொன்றுக்காக மீன்பிடிக் கலன், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் தடைக்குட்பட்டிருத்தல்.<br><br>விடயத்திற்கேற்ப, பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், (40)ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட. மீன்பிடி நடவடிக்கை உரிமத்தை இடைநிறுத்துதல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதி, (42) மற்றும் (43) ஆகிய பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட. மீன்பிடி நடவடிக்கை உரிமத்தை பின்வரும் விடயங்கள் தொடர்பில் திருப்பதியடைந்த பின்னர் இடைநிறுத்துதல் வேண்டும்:<br>அ)மீன்பிடிக் கலன், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் மீன்பிடி நடவடிக்கை உரிமத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறுதல்;<br>ஆ)விண்ணப்பதாரரினால் வழங்கப்பட்ட பொய்யான, தவறாக இட்டுச்செல்லும் அல்லது உண்மையற்ற தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை உரிமம் வழங்கப்பட்டிருத்தல்; அல்லது,<br>இ)மீன்பிடி நடவடிக்கை உரிமத்தின் இடைநிறுத்தலை தேவைப்படுத்தும் தவறொன்றுக்காக மீன்பிடிக் கலன், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் தடைக்குட்பட்டிருக்குமிடத்து.<br>3. (1) அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் மீன்பிடி கலனொன்றின் மீன்பிடி நடவடிக்கை உரிமத்தை இரத்துச்செய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கும் அதிகாரி அத்தீர்மானத்தை பதிவுத் தபால்மூலம் அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் ஊடகம்மூலம் உரிமையாளருக்கு அல்லது இயக்குபவருக்கு தெரிவித்தல் வேண்டும்.<br>4. அந்தத் தீர்மானத்துக்கான காரணங்கள் விண்ணப்பபடிவத்தில் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் ஊடகம்மூலம் அனுப்பிய தேதியிலிருந்து பதினான்கு(14) நாட்களுக்குள் எழுத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததாக கருதப்படுதல் வேண்டும். |
| மாகாணங்களுடன் தகவல்களை பரிமாறுதல்<br><br>பிரிவு 46 | பணிப்பாளர், ஏதேனும் மாகாணத்தில் வசிக்கும் ஆட்களுக்குச் சொந்தமான மீன்பிடிக் கலன்கள் தொடர்பில் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அளிக்கப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட, இரத்துச்செய்யப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட எல்லா உரிமங்களின் விபரங்களை மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு கொடுத்தல் வேண்டும். |
| | **அத்தியாயம் 2 – மீன்பிடி உரிமங்களைக் கொண்டிருப்போருக்கான கடப்பாடுகள்** |

| | |
|---|---|
| சட்டத்துடன் அமைந்தொழுகுதல்<br><br>பிரிவு 47 | ஆள் எவரும், இச்சட்டத்துக்கிணங்க மற்றும் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய ஏற்புடைய அனுகல் அல்லது வேறு உடன்படிக்கை தவிர்ந்த இச்சட்டத்தில் குறித்துரைத்த ஏதேனும் செயல்பாடுகளில் ஈடுபடுதலாகாது அல்லது இலங்கை மீன்பிடிக் கலனை, வெளிநாட்டு மீன்பிடிக் கலனை அல்லது வேறு கலனை பயன்படுத்தலாகாது.<br><br>மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், கப்பற்தலைவன், இயக்குபவா,வாடகைக்கு பெற்ற நபர் அல்லது கப்பல் உறுப்பினர் உள்ளிட்ட இலங்கை தேசத்தவர்கள், சட்டவிரோத,அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிச் செயற்பாடுகளில் ஒத்துழைத்தலாகாது அல்லது ஈடுபடுதலாகாது.<br><br>கொடி அரசின் முதனிலை பொறுப்புடமைக்கு பங்கமின்றி பணிப்பாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட. இலங்கை தேசத்தவர்களை மீன்பிடியில் ஈடுபடுத்திக்கொள்ளும் வேறு நாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு எத்தணிக்க வேண்டுமென்பதுடன், சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத (IUU) மீன்பிடிச் செயல்பாடுகளில் ஒத்துழைக்கும் மற்றும்/அல்லது ஈடுபடும் தேசத்தவர்களை இனங்காணுவதற்கும் அந்த தேசத்தவர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் செயலாற்றதலும் வேண்டும். |
| மீன்பிடி உரிமத்தின் மீதான கடப்பாடுகள்<br><br>பிரிவு 48 | மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர்,கப்பற் தலைவர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு செல்லுபடியான, ஏற்புடைய மீன்பிடி உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது தேசிய நியாயாதிக்கத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் மீன்பிடிச் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், இப்பாகத்தில் குறித்துரைத்த நடைமுறைகளின் கீழ் அளிக்கப்பட்ட அத்தகைய மீன்பிடி உரிமமொன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மீன்பிடிச் செயல்பாடுகள் நடாத்தப்படுகின்றன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III ஆம் அட்டவணையின் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| உரிமத்தை கப்பலில் எடுத்துச்செல்ல வேண்டுமென்பது<br><br>பிரிவு 49 | உரிமையாளர் அல்லது இயக்குபவர், மீன்பிடிக் கலனின் கப்பற்தலைவன் எந்நேரமும் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் மூலப்பிரதியை அல்லது சான்றுபடுத்திய பிரதியொன்றை கப்பலில் எடுத்துச்செல்கிறார் எனவும், முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் காட்டுமாறு தேவைப்படுத்தும்போது பார்வையிடுவதற்காக அத்தகைய உரிமத்தை முன்வைக்கிறார் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III ஆம் அட்டவணையின் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| புறப்பாடு மற்றும் வருகை<br><br>பிரிவு 50 | உள்ளக என்ஜினுடைய மீன்பிடிக் கலனொன்று புறப்படுதலை அல்லது உள்நுழைதலை குறித்துரைக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகத்திலிருந்து அல்லது நங்கூரமிடும் இடத்திலிருந்து மாத்திரம் மேற்கொள்ளுதல் வேண்டும்.<br>உள்ளக என்ஜினுடைய மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர், கப்பற்தலைவன், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்ற நபர் குறித்தளிக்கப்பட்ட மீன்பிடி துறைமுகமொன்றிலிருந்து அல்லது நங்கூரமிட்ட இடத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அல்லது அவ்விடங்களுக்கு வருவதற்குக் முன்னர், அத்தகைய நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்தை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரிடமிருந்து பெறுதல் வேண்டும்.<br><br>மீன்பிடிக் கலனொன்றின் கப்பற்தலைவன் மற்றும் கப்பல் உறுப்பினர் அவர்களது ஆளடையாளத்தை புறப்படுவதற்கு முன்னரும் வந்ததன் பின்னரும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும்.<br><br>மீன்பிடிக் கலனொன்றின் புறப்பாட்டுக்கும் வருகைக்கும் இடையிலான |

| | |
|---|---|
| | காலத்தின்போது ஏதேனும் நிகழ்வு இடம்பெற்றால் அதற்கு அத்தகைய கலனின் கப்பற்தலைவன் மற்றும் கப்பல் உறுப்பினர் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற உரிமையாளர், கப்பற்தலைவன், இயக்குபவர், வாடகைக்கு பெற்ற நபர் அல்லது கப்பல் உறுப்பினர், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| கடற்றொழில் தரவுகளின் பதிவேடுகள்<br><br>பிரிவு 51 | இலங்கை நீர்ப்பரப்புகளில் அல்லது ஆழ்கடலில் இயங்கும் ஏதேனும் பொறிமுறைசார் மீன்பிடிக் கலனின் கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட லொக்புத்தகமொன்றை கப்பலில் எடுத்துச்செல்லுதல் வேண்டும் என்பதுடன் மீன்பிடி உரிமத்தில் விதித்துரைத்தவாறு ஒவ்வொரு மீன்பிடி விஜயம் பொருட்டு பிடித்தவை மற்றும் பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்டவை அடங்கலாக மீன்பிடி தரவுகளின் பதிவொன்றை அந்த லொக்புத்தகத்தில் பேணுதல் அல்லது பேணுவதற்கு செய்வித்தல் வேண்டும்.<br><br>கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், லொக்புத்தகத்தை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் காட்டுமாறு தேவைப்படுத்தப்படும்போது பார்வையிடுவதற்காக அதனை முன்வைத்தல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| மீன்களை தரையிறக்குதல் மற்றும் அறிக்கையிடல்<br><br>பிரிவு 52 | மீன்பிடிக் கலனொன்றின் கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், (112) ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க, மீன்பிடி உரிமத்தில் குறித்தளிக்கப்பட்ட துறைமுகத்தில், நங்கூரமிட்ட இடத்தில், அல்லது கரையேறுமிடத்தில் மட்டுமே அவரது மீன்பிடிக் கலனினால் கொண்டுவரப்பட்ட மீன்களை கரையிறக்குதல் வேண்டும்.<br><br>துறைமுகமொன்றுக்கு அல்லது நங்கூரமிடும் இடத்திற்கு வந்ததும் கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், அத்தகைய தகவல்களை விதித்துரைத்தவாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III ஆம் அட்டவணையின் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| மீன்பிடி உபகரணங்களை அடையாளமிடுதல்<br><br>பிரிவு 53 | பல்தினமீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர் அல்லது இயக்குபவர், விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க, கப்பலிலுள்ள எல்லா மீன்பிடி உபகரணங்களையும் அடையாளமிடுதல் வேண்டும்.<br><br>மீன்பிடி உபகரணங்களையும் அடையாளமிடுதல் தொடர்பான ஒழுங்குவிதிகளை மீறுகின்ற மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர் அல்லது இயக்குபவர், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும்.<br><br>மீன்பிடி உபகரணங்கள் பதிவு மற்றும் அடையாளமிடுதல் தொடர்பில் நிபந்தனைகளை செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம். |
| கப்பலில் பயணிக்கும் அவதானிகள்<br><br>பிரிவு 54 | அவதானி ஒருவர் அமர்த்தப்பட்டுள்ள ஏதேனும் கலனின் உரிமையாளர், கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர் மற்றும் ஒவ்வொரு கப்பல் உறுப்பினர், (114)ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, (117)ஆம் பிரிவிற்கிணங்க நியமிக்கப்பட்ட அத்தகைய அவதானிக்கு அல்லது வேறு ஆளுக்கு பின்வருவன பொருட்டு வசதியளித்து உதவுதல் வேண்டும்:<br>அ)பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தவாறான அத்தகைய நேரத்தில், அத்தகைய இடத்தில் அத்தகைய கலனில் ஏறும் பொருட்டு; |

| | |
|---|---|
| | ஆ)கலனின் தொடர்பாடல் உபகரணம் ஊடாக செய்திகளை பெற்றுக்கொள்ளுதலும் அனுப்புதலும் அத்துடன் கரை மற்றும் வேறு கலன்களுடன் தொடர்புகொள்ளும் பொருட்டு;<br>இ)அவரது கடமைகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும், இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்காகவும் தேவைப்பட்டவாறு கடற்றொழில் சம்பந்தமான அத்தகைய தகவல்களை திரட்டும் பொருட்டு;<br>ஈ) கலனின் பாதுகாப்பான செயல்பாடுகளுக்கு இணங்குபவராயின் பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தவாறான அல்லது ஏற்புடைய அணுகல் உடன்படிக்கைக்கிணங்க அத்தகைய நேரத்திலும் இடத்திலும் இறங்கும் பொருட்டு; அத்துடன்<br>உ)கலனானது இலங்கை நீர்ப்பரப்புகளில் ஏதேனும் இடத்தில் இருக்கும்போது பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தவாறான அல்லது விதித்துரைக்கப்பட்டவாறான அவதானிகள் அல்லது துறைமுக மாதிரியாளர்கள் தொடர்பிலான அத்தகைய வேறு தேவைப்பாடுகளுடன் அமைந்தொழுகும் பொருட்டு.<br><br>அவதானி ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் கலனின் கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர், குறித்த அவதானிக்கு அவசியமான உணவுபானங்கள், தங்குமிடம், ஏதேனும் சமையல் மற்றும் மலசலகூட வசதிகள், அலுவலர் மட்டத்திற்கான பொதுவசதிகள் அல்லது அதேபோன்ற அங்கீகரிக்கப்பட்ட நியமங்களின்படி எந்நேரமும் இலவசமாக வழங்குதல் வேண்டும்.<br><br>அவதானி, இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட கடமைகள், அதன் ஏதேனும் செயற்படுத்தல் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை நிறைவேற்றுதல் வேண்டும்.<br><br>இச்சட்டத்திற்கிணங்க அவதானியொருவர் ஈடுபடுத்தப்பட்ட ஏதேனும் கலனின் உரிமையாளர், கப்பற்தலைவன் அல்லது இயக்குபவர் மற்றும் பதவியினர் உறுப்பினர், (1), (2) ஆகிய உட்பிரிவுகளுடன் அமைந்தொழுகாவிடின் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் III ஆம் அட்டவணையின் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும்.<br><br>இச்சட்டத்திற்கிணங்க ஏதேனும் கலனில் உள்ள எவரேனும் அவதானி, (3) ஆம் உட்பிரிவுடன் அமைந்தொழுகாவிடின் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| அவதானிகள் செலவு<br><br>பிரிவு 55 | இச்சட்டத்தை அனுசரித்து அவதானி நிகழ்ச்சித்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கான செலவுகள், இச்சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் கலனின் கப்பற்தலைவனிடமிருந்து அல்லது இயக்குபவரிடமிருந்து பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தவாறான அத்தகைய மட்டத்தில் அத்தகைய விதத்தில் மீளஅறவிட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும்.<br>(2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட செலவுகளின் கொடுப்பனவு தேவையான நேரத்தில் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான முப்பது(30) நாட்களுக்குள் மேற்கொள்ளாதுவிடத்து, இயைபான உரிமம் இரத்துச்செய்யப்படுதல் வேண்டும். |
| | **அத்தியாயம் 3 – மீன்பிடிக் கலனற்ற மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கான உரிமங்கள்** |
| மீன்பிடிக் கலன் அற்ற மீனவர்களுக்கான மீன்பிடி உரிமம்<br><br>பிரிவு 56 | ஆள் எவரும், இச்சட்டத்தினால் ஏற்பாடுகள் மற்றும் அதன் ஏதேனும் செயற்படுத்தல் ஒழுங்குவிதிக்கு இணங்க அளிக்கப்பட்ட மீன்பிடி உரிமமொன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் தவிர, இலங்கை நீர்ப்பரப்புகளில் விதித்துரைத்த மீன்பிடி உபகரணத்துடன் மீன்பிடி செயல்பாடுகளில் ஈடுபடுதலாகாது.<br>வாழ்வாதாரத்திற்காக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கு (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகாது.<br>(1)ஆம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல், அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |

| | |
|---|---|
| | |
| வெளிநாட்டு கலனொன்றில் மீன்பிடி செயல்பாடுகளில் ஈடுபடுவதற்காக மீனவர்களுக்கான உரிமம்<br><br>பிரிவு 57 | வெளிநாட்டு கொடிதாங்கிய மீன்பிடி கலனொன்றில் சேவையாற்றுவதற்கு உத்தேசிக்கும் மற்றும் இச்சட்டத்தின் (31)ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் இலங்கை பிரசை, மீன்பிடி உரிமமொன்றுக்காக விதித்துரைத்த படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டமை பொருட்டு குற்றவாளியாக்கப்பட்டுள்ள அல்லது முடிவுறாத தடைகளுள்ள எவரேனும் இலங்கை பிரசைக்கு (1)ஆம் உட்பிரிவின் கீழ் உரிமமொன்று அளித்தலாகாது.<br><br>(1)ஆம் பிரிவின் கீழ் உரிமமொன்றை கொண்டிருப்பதற்கான கடப்பாட்டினை மீறுகின்ற வெளிநாட்டு கொடிதாங்கிய மீன்பிடி கலனொன்றில் சேவையாற்றும் எவரேனும் இலங்கை பிரசை, தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தண்டனைக்கு ஏற்புடையதாதல் வேண்டும். |
| | **அத்தியாயம் 4 – கப்பல் தலைவர்களுக்கான உரிமங்கள்** |
| கப்பல் தலைவர்களுக்கான உரிமங்கள்<br><br>பிரிவு58 | மீன்பிடிச் செயல்பாடுகளை:<br>அ) இலங்கை நீர்ப்பரப்புகளில்; அல்லது,<br>ஆ) ஆழ்கடலில்; அல்லது,<br>இ) பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில்<br>நடாத்துவதற்காக மீன்பிடி கலனொன்றில் கப்பற்தலைவனாக சேவையாற்றுவதற்கு உத்தேசிக்கும் எவரேனும் இலங்கை பிரசை, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழைப் பெறுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழை முன்வைத்ததன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி இயைபான உரிமத்தை கப்பற் தலைவருக்கு வழங்குதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் ஏதேனும் தவறு பொருட்டு குற்றவாளியாக்கப்பட்ட அல்லது ஏதேனும் முடிவுறாத தடைக்குட்பட்ட எவரேனும் ஆளின் உரிமமொன்றை (1)ஆம் உட்பிரிவின் கீழ் இடைநிறுத்துதல்,இரத்துச் செய்தல் அல்லது உரிமமொன்று அளித்தலாகாது:<br>அ)(1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமத்தில் குறித்துரைத்த நிபந்தனைகளை மீறுதல்;<br>ஆ)அவரது கட்டளையின் கீழ் மீன்பிடிச் செயல்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மீன்பிடி உரிமம் பொருட்டு தரப்பட்ட நிபந்தனைகளை மீறுதல்;<br>இ)இச்சட்டத்தின் ஏதேனும் தவறினை புரிதல் அல்லது ஏதேனும் ஏற்பாடுகளை மீறுதல்.<br><br>இப்பிரிவிற்கிணங்க வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ் மற்றும் இயைபான உரிமமின்றி (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு மீன்பிடிக் கலனொன்றின் கப்பற்தலைவனாக சேவையாற்றும் எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| | **அத்தியாயம் - 5 பொழுது போக்கு சார் மீன்பிடித்தல்** |
| பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல் | பொழுதுபோக்குசார் மீன்பிடித்தலில் ஈடுபட்ட எவரேனும் ஆள், விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க விதித்துரைத்த கட்டணம் செலுத்தப்பட்டதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட மீன்பிடி உரிமமொன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அத்தகைய செயற்பாட்டினை நடாத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| பிரிவு 59 | பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல் செயற்பாடுகள், இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் அத்துடன் இச்சட்டத்தை அனுசரித்த ஏதேனும் செயற்படுத்தல் ஒழுங்குவிதிகளுக்கு இசைவுடையதாயித்தல் வேண்டும்.<br><br>பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல் உரிமத்தைகொண்டிருப்போர், அவ்வாறு பிடித்த மீன்கள் மற்றும் நீரியல் வளங்களின் ஒரு பகுதியை அல்லது முழுவதை விற்பதற்கு அல்லது விற்பதற்காக வைப்பதற்கு உரித்திருத்தலாகாது.<br><br>பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல், முகாமைத்துவத் திட்டங்களின் கீழான இனங்கள் பொருட்டு அனுமதிக்கப்படுமிடத்து, மீன்பிடித்தலுக்கான நிபந்தனைகள் அத்தகைய திட்டங்களின் கீழ் விதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இன் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும்.<br><br>அமைச்சர், தேசிய நீரியல் வளங்கள் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் (நாரா) அல்லது ஏதேனும் வேறு அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் மேல் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு உரிமம் பொருட்டான நிபந்தனைகள், நடைமுறை மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| | **அத்தியாயம் - 6 உரிமங்களுக்கான இடாப்பு** |
| உரிமங்களுக்கான இடாப்பு<br><br>பிரிவு 60 | பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவனவற்றில் மீன்பிடிச் செயற்பாடுகளை நடாத்தும் முகமாக மீன்பிடி உரிமங்களின் இலத்திரனியல் இடாப்பு ஒன்றை பேண செய்வித்தல் வேண்டும்:<br>அ) 40 ஆம் பிரிவிற்கிணங்க இலங்கை நீர்ப்பரப்புகள்;<br>ஆ) 42 ஆம் பிரிவின் கீழ் ஆழ்கடல்; அத்துடன்,<br>இ) 43 ஆம் பிரிவின் கீழ் பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகள்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவனவற்றிக்காக உரிமங்களின் இடாப்பு ஒன்றை பேண செய்விக்கலாம் :<br>அ)32ஆம் பிரிவின் கீழ் மீன்பிடி உபகரணங்கள், கடலோட்டு உபகரணங்கள் மற்றும் மீன்பிடி சார் மேலதிக துணைக்கருவிகள் உற்பத்தியும் இறக்குமதியும்;<br>ஆ)(56) மற்றும் (57) ஆகிய பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு மீனவர்கள்;<br>இ)(58)ஆம் பிரிவின் கீழ் கப்பற்தலைவர்கள் ;<br>ஈ)(59)ஆம் பிரிவில் தரப்பட்டவாறு பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல்;<br>உ)(90) மற்றும் (92) ஆகிய பிரிவுகளின் கீழ் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தரவு சேகரிப்பு பொருட்டான மீன்பிடித்தல்;<br>ஊ)(91)ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பு அல்லது பிறிதொரு அரசு ரீதியான அறிவியல் ஆராய்ச்சி;<br>எ)(100)ஆம் பிரிவின் கீழ் பதனிடுதல பதனிடுதல், மீன்களை மற்றும் மீன்பிடி விளைபொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள்ஏற்றுமதி ;<br>ஏ)(111)ஆம் பிரிவின் கீழ் மீன்களை மற்றும் மீன்பிடி விளைபொருட்களை மீள கப்பலேற்றுதல்;<br>ஐ) (112)ஆம் பிரிவின் கீழ் மீன்களை மற்றும் மீன்பிடி விளைபொருட்களை கரையேற்றுதல்; அத்துடன்,<br><br>ஒ)விதித்துரைக்கப்படற்பாலான வேறு ஏதேனும் செயற்பாடு அல்லது செயற்பாடுகள்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதியின் ஒப்பத்துடன் சான்றுப்படுத்தப்பட்டதாக கருதும் பிரதி அல்லது பிரித்தெடுப்பு ஒன்று, இச்சட்டத்தினால் பேணப்படுகிற ஏதேனும் இடாப்பின் உண்மைப் பிரதி அல்லது அதிலிருந்தான உண்மைப் பிரித்தெடுப்பாக |

| | |
|---|---|
| | கருதப்படுவதுடன் அவ்வாறு சான்றுப்படுத்தப்பட்ட பிரதி அல்லது பிரித்தெடுப்பு, பணிப்பாளர் தலைமையதிபதியின் ஒப்பத்தின் அல்லது நியமனத்தின் எண்பிப்பு இன்றி அனுமதிக்கத்தக்க சான்றாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்படுகின்ற எல்லா குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் எல்லா நோக்கங்களுக்காக அத்தகைய இடாப்பின் பொருளடக்கத்தின் முதல் தோற்ற சான்றாதல் வேண்டும். |
| | **அத்தியாயம் 7 – மேன்முறையீடுகள்** |
| மேன்முறையீடுகள்<br><br>பிரிவு **61** | மீன்பிடி உரிமமொன்றிக்கான விண்ணப்பமொன்று, (40), (42) அல்லது (43) ஆம் பிரிவுகளின் கீழ் மறுக்கப்படுமிடத்து, (41) அல்லது (44) ஆம் பிரிவின் கீழ் புதுப்பிக்கப்படாதவிடத்து, (45) ஆம் பிரிவின் கீழ் இரத்துச்செய்யப்படுமிடத்து அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து, அத்தகைய தீர்மானத்தினால் இடருறும் விண்ணப்பதாரர் அல்லது உரிமம்பெற்றவர், அத்தீர்மானம் அவருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் விதித்துரைக்கப்படற்பாலான அத்தகைய நடைமுறைகளின் கீழ், செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.<br><br>உரிமமொன்றிக்கான விண்ணப்பமொன்று, (56) முதல் (59) வரையான பிரிவுகளின் கீழ் மறுக்கப்படுமிடத்து, அத்தகைய தீர்மானத்தினால் இடருறும் விண்ணப்பதாரர் அல்லது உரிமம்பெற்றவர், அத்தீர்மானம் அவருக்கு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் விதித்துரைக்கப்படற்பாலான அத்தகைய நடைமுறைகளின் கீழ், செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.<br><br>செயலாளர், (1) மற்றும் (2) ஆகிய உட்பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டினை கருத்திற்கொண்டு, மேன்முறையீட்டு அறிவித்தல் விண்ணப்பதாரரினால் அல்லது உரிமம்பெற்றவரினால் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் அத்தீர்மானத்தை அதற்கான காரணங்களுடன் சேர்த்து மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தீர்மானம் இறுதியானதாதலும் வேண்டும்.<br><br>செயலாளரின் தீர்மானத்தினால் இடருறும் ஆள் எவரும், சட்டப் பிரச்சினை தொடர்பில், அத்தகைய தீர்மானம் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றை ஆற்றுப்படுத்தலாம். |
| | **பாகம் IV – தேசிய நியாயாதிக்கத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் மீன்பிடி செயல்பாடுகள்** |
| ஆழ்கடலில் ஒழுங்குபடுத்தப்படாத இனங்கள்<br><br>பிரிவு **62** | பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பொன்றினால் ஒழுங்குபடுத்தப்படாத இனங்கள் சம்பந்தமான மீன்பிடித் தொழிற்பாடுகளை ஆழ்கடலில் நடாத்துவதற்கான அதிகாரம், அத்தகைய மீன்பிடிச் செயல்பாடுகள் இச்சட்டத்தின் 92 ஆம் பிரிவுக்கிணங்க தேடல் கடற்றொழில் தரவு சேகரிப்பு பொருட்டான அறிவியல் நிகழ்ச்சித்திட்டமொன்றின் பகுதிகளாக இருந்தால் மட்டுமே மீன்பிடி கலன்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு, தேடல் கடற்றொழில் பொருட்டு மீன்பிடித் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு திட்டமிடுகின்ற உரிமையாளர் அல்லது இயக்குபவர், 42 ஆம் பிரிவின் கீழான மீன்பிடி உரிமமொன்று பொருட்டு விண்ணப்பித்தை சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி, தேடல் கடற்றொழில் தரவு சேகரிப்பு பொருட்டான நிகழ்ச்சித்திட்டத்தில் மீன்பிடி கலனை உள்ளடக்குவதற்காக மீன்பிடி கலனின் விபரங்களையும் திட்டமிட்ட மீன்பிடித் தொழிற்பாடுகளையும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையத்திற்கு (நாரா) அனுப்புதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (2)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு, மீன்பிடி உரிமமொன்றை வழங்குவதற்கு தீர்மானிப்பதாயின் அவர், அந்த மீன்பிடிக் |

| | |
|---|---|
| | கலனின் மீன்பிடித் தொழிற்பாடுகள் ஆழ்கடலில் ஒழுங்குபடுத்தப்படாத இனங்கள் பற்றிய தேடல் கடற்றொழில் தரவு சேகரிப்பு பொருட்டான அறிவியல் நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதிகளாகும் என்பதனை குறிப்பிடுதல் வேண்டும்.<br><br>தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையம் (நாரா), தேடல் கடற்றொழிலின் கீழான தரவு சேகரிப்பு பற்றிய பகுப்பாய்வொன்றை 67 ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கடற்றொழில் வளங்களின் நிலமை பற்றிய வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும். |
| பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பினால் **(RFMO)** ஒழுங்குபடுத்தப்பட்ட இனங்கள்<br><br>பிரிவு **63** | பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பொன்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இனங்கள் தொடர்பான மீன்பிடித் தொழிற்பாடுகளை, இலங்கை அந்த அமைப்பின் திறத்தவராயிருக்குமிடத்து, 42 ஆம் பிரிவிற்கிணங்க வழங்கப்பட்ட மீன்பிடி உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் மாத்திரமே மீன்பிடிக் கலன்கள் நடாத்துதல் வேண்டும்.<br><br>உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், கடுமையான தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும்.<br><br>அமைச்சர், இலங்கை திறத்தவராகவுள்ள பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தல், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு வழிமுறைகளை செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.. |
| அணுகை உடன்படிக்கையுடன் பிறிதொரு நாட்டின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடித்தல்<br><br>பிரிவு **64** | இலங்கை மீன்பிடிக் கலனொன்றின் கப்பற்தலைவன், இயக்குபவர்,வாடகைக்கு பெற்ற நபர், கப்பற்தொகுதியினர் அல்லது கப்பலிலுள்ள எவரேனும் ஆள், இலங்கைக்கும் அந்த பிறிதொரு அரசுக்கும் இடையிலுள்ள மீன்பிடி உடன்படிக்கையொன்றின் அல்லது வேறொரு ஒழுங்கின் உருவரைச்சட்டகத்தின் கீழ் அல்லது 43ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்க வழங்கப்பட்ட மீன்பிடி உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் அத்தகைய செயல்பாடுகளை மேற்கொள்ளுமிடத்து, பிறிதொரு அரசின் நீர்ப்பரப்புகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>அரசாங்கம் சார்பாக அமைச்சர், இச்சட்டத்திற்கு மற்றும் இலங்கையின் ஏதேனும் சருவதேச கடப்பாடுகளுக்கு இணங்க அத்துடன் ஏற்புடைய நியமங்கள், கொள்கைகள் அல்லது உபாயங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, கடற்றொழில் அணுகல் அல்லது ஒத்துழைப்பு தொடர்பில் வேறு நாடுகளுடன் அணுகை உடன்படிக்கையுடன் இருபக்க, உபபிராந்திய, பிராந்திய, சருவதேச உடன்படிக்கைகள் அல்லது ஒத்த ஒழுங்குகளை செய்துகொள்ளலாம். |
| நாட்டுக்கு திருப்பியனுப்புவதற்கா ன உரிமை<br><br>பிரிவு **65** | 1. இலங்கை கலன்களில் கப்பல்பணி உறுப்பினர்களாக சேவையாற்றும் இலங்கை தேசத்தவர்கள், பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏதேனும் சூழ்நிலையில் கப்பல் உரிமையாளர் அல்லது இயக்குபவரைக் கொண்டு தமது நாட்டுக்கு திருப்பியனுப்பப்படுவதற்கு உரித்துடையவர்களாவர்:<br>கப்பற்தொகுதியினர் உறுப்பினரின் தொழில் உடன்படிக்கை வெளிநாட்டில் இருக்கும்போது காலாவதியாதல்;<br>தொழில் உடன்படிக்கை நியாயமான காரணத்திற்காக கப்பல் உரிமையாளரால் |

| | |
|---|---|
| | அல்லது கப்பற்தொகுதியினர் உறுப்பினரினரால் முடிவுறுத்தப்படும்போது; அல்லது,<br>இ) கப்பற்தொகுதியினர் உறுப்பினர் தொழில் உடன்படிக்கையின் கீழ் அவரது கடமைகளை மேற்கொள்வதற்கு இயலாதவர் அல்லது பிறிதொரு நாட்டினால் கலன் கைப்பற்றப்படல் அடங்கலாக விசேட சூழ்நிலைகளில் அக்கடமைகளை மேற்கொள்ளுதல் அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாதபோது.<br><br>கப்பற்தொகுதியினர் உறுப்பினர்கள் அவர்களது நாட்டுக்கு திருப்பியனுப்பப்படுவதற்காக முற்பணக் கொடுப்பனவொன்று செய்யுமாறு கப்பல் உரிமையாளர் அல்லது இயக்குபவர் அவர்களது தொழில் ஆரம்பத்தில் தேவைப்படுத்தலாகாது, என்பதுடன் கப்பற்தொகுதியினர் உறுப்பினர் அவரது தொழில் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பெரிதும் தவறும்பட்சத்தில் தவிர, அவர் நாட்டுக்கு திருப்பியனுப்பப்படுகையில் உறப்படுகின்ற செலவுகளை அவரது வேதனத்திலிருந்து அல்லது வேறு உரித்துடமைகளிலிருந்து அறவிடுவதற்கு கப்பல் உரிமையாளர் அல்லது இயக்குபவர் நடவடிக்கை எடுத்தலாகாது.<br><br>அமைச்சர், மீன்பிடி தொடர்பான சருவதேச தொழில் சமவாயத்தின் ஏற்பாடுகளை மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு விடயங்களை செயற்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| | **பாகம் V**<br>**கடற்றொழில் மற்றும் வேறு நீரியல் வளங்களின் முகாமைத்துவம்** |
| கடற்றொழில் முகாமைத்துவத்தின் பொதுவான கோட்பாடுகள்<br><br>பிரிவு **66** | இப்பாகத்தின் கீழ் கடைப்பிடிக்கப்படும் கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தல் நடவடிக்கைகள், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் நீண்டகால நீடிப்புத்தன்மையையும் அவற்றின் உச்ச பயன்பாட்டினையும் உறுதிப்படுத்தும் முகமாக, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையத்தினால்(நாரா), பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் இயைபான அறிவியல் நிறுவகத்தினால் மற்றும் ஏற்புடையவாறு வேறு இயைபான அறிவியல் நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கிடைக்கப்பெறும் சிறந்த அறிவியல் சான்று அடிப்படையில் அமைதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இப்பாகத்தின் கீழ் மற்றும் இப்பாகத்துடன் தொடர்பிலான பணிகள் மற்றும் கடமைகளை செயற்படுத்துகையில் எல்லா ஆட்களும், (3)(அ) முதல் (எ) வரை மற்றும் (ஒ) ஆகிய பிரிவுகளின் குறிக்கோள்களை கடைப்பிடித்தல் வேண்டும்.<br><br>ஏற்புடைய அல்லது போதுமான அறிவியல் தகவல்கள் இல்லாதபட்சத்தில், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையம்(நாரா) அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு இயைபான அறிவியல் நிறுவகம், இலக்கு இனங்கள், தொடர்புற்ற அல்லது தங்கியுள்ள இனங்களின் நிலைபேறான பயன்பாட்டினை உறுதிசெய்யும் முகமாகவும், இலக்கு அல்லாத இனங்களினதும் அவற்றின் சூழலினதும் பாதுகாப்பினை உறுதிசெய்யும் முகமாகவும் மாற்று முகாமைத்துவ நடவடிக்கைகளையும் தெரிவுகளையும் முன்மொழிவு செய்தல் வேண்டும்.<br><br>(3)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கடற்றொழில் முகாமைத்துவத்திற்கு முற்காப்பு அணுகுமுறையை பிரயோகிக்கையில் அதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவகம், மீன்பிடித்தல் அழிவுநிலை மற்றும் மீன்தொகை உயிர்த்திணிவுகளுக்கு சார்பாக மீன்தொகை குறித்த தொடர்பு புள்ளிகளை மற்றும் சருவதேசரீதியாக உடன்பட்ட நியமங்களுக்கேற்ப தொடர்புற்ற அறுவடை கட்டுப்பாட்டு விதிகளை தீர்மானித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | |
| கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தலுக்கான அறிவியல்சார் மதியுரை<br><br>பிரிவு **67** | உயிரினவியலுதுக்குரிய, பொருளாதார, சூழல்சார், சமூக மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் உள்ளிட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி ஒழுங்கான இடைவெளிகளில் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையத்தை(நாரா) கலந்தாலோசித்தல் வேண்டும்.<br><br>தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையம்(நாரா), கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் நிலை பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்; அவ்வறிக்கை, இச்சட்டத்தின் IV முதல் VI வரையான பாகங்களின் கீழான முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தல் நடவடிக்கைகளின் மதிப்பீடொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அமைச்சர் ஆகியோர், கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தல் நடவடிக்கைகளையும் இச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளையும் விருத்திசெய்து செயற்படுத்தும்போது தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையத்திடமிருந்தான(நாரா) மதியுரையை கருத்திற்கொள்ளுதல் வேண்டும். |
| தேசிய கடற்றொழில் கொள்கை<br><br>பிரிவு **68** | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்,ஒழுங்குமுறைப்படுத்தல்,பேணிக்காத்தல்,அபிவிருத்தி மற்றும் நிலைபேண்தகு பயன்பாடு என்பவற்றை விளித்துரைக்கும் தேசிய கடற்றொழில் கொள்கையொன்று, விருத்திசெய்யப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அது குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கொரு முறை மீளாய்வுசெய்யப்படலும் வேண்டும்.<br><br>கொள்கையானது, 3ஆம் பிரிவில் பதிக்கப்பட்ட இச்சட்டத்தின் குறிக்கோள்களையும் இயைபான தேசிய கொள்கைகளையும் கருத்திற்கொண்டு இலக்குகளை இனங்காணுதல் வேண்டும்.<br><br>செயலாளர், கடற்றொழில் மதியுரைச் சபையினதும், ஏற்புடையவாறான அத்தகைய வேறு அக்கறைதாரர்களின் மதியுரையை கருத்திற்கொண்டு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக தேசிய கடற்றொழில் கொள்கைக்கான முன்மொழிவை வகுத்தமைக்கும் பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>சான்றுபடுத்தியதன்மேல் அமைச்சர், தேசிய கடற்றொழில் கொள்கையை அங்கீகாரம் பொருட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| கடற்றொழில் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் வகைகள்<br><br>பிரிவு **69** | கடற்றொழில் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டுக்கான நடவடிக்கைகள் *ஏனையவற்றுடன்* பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:<br>கடற்றொழில் முகாமைத்துவ திட்டங்கள்;<br>மீன்பிடி முயற்சிகள்;<br>இ) மீன்பிடி கப்பல்தொகுதியின் மீன்பிடி இயலளவின் முகாமைத்துவம்;<br>ஈ) மீன்பிடி உபகரணங்கள் மற்றும் முறைகளின் பயன்பாடு மற்றும் செயல்பாடு தொடர்பிலான ஒழுங்குவிதிகள்;<br>ஒரு சில இனங்களை பிடிப்பதற்கான தடை; அத்துடன்<br>இடஞ்சார் / நிலையற்ற முடிவாக்கல். |
| முகாமைத்துவ மற்றும் பேணிக்காத்தல் நடவடிக்கைகள் | இச்சட்டத்தின் கீழான மற்றும் சட்டத்திற்கு தொடர்புடைய தத்துவங்களை பிரயோகிக்கையில் பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் கடற்றொழில் துறை பொருட்டு அனுமதிக்கத்தக்க மொத்த மீன்பிடிப்பு அல்லது மொத்த மீன்பிடி அளவு ஆகியவற்றை தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன் வளங்களின் பாதுகாப்பு மற்றும் |

| | |
|---|---|
| பிரிவு **70** | நீண்டகால நீடிப்புத்தன்மையை உறுதிசெய்வதற்கு தேவைப்பட்டவாறான அத்தகைய வேறு பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை கடைப்பிடித்தலும் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு இனத்தின் நிறையில் அல்லது எண்ணிக்கையில் சில வர்த்தக மீன் தொகை அல்லது மீன்தொகை குழுக்கள் பொருட்டு கடற்றொழில் தரவுகளின் கிடைப்பனவு மற்றும் ஒவ்வொரு கடற்றொழிலின் இயல்புகள் என்பனவற்றின் அடிப்படையில் அனுமதிக்கத்தக்க மொத்த மீன்பிடிப்பு, பருவமொன்றுக்கு, வருடாந்தம் அல்லது வருடத்துக்கு இரு முறை என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படலாம்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, ஒரு வருடத்தினுள் அறுவடை செய்யத்தக்க (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கடற்றொழில் துறை பொருட்டு அனுமதிக்கத்தக்க மொத்த மீன்பிடிப்பு அல்லது மொத்த மீன்பிடி அளவு பற்றிய நிரலொன்றை தயாரித்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதியின் பரிந்துரையின்மேல் அமைச்சர், அத்தகைய நிரலை கட்டளைமூலம் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.<br><br>பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை விருத்திசெய்து தீர்மானிக்கும் நோக்கத்திற்காக பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்திணங்க வெளிப்படைத்தன்மையிலான, வகைகூறத்தக்க நடைமுறைகளை உருவாக்கலாம். அத்துடன் ஏற்புடையவாறு மதியுரைச் சபையின் அல்லது கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக்களின் பரிந்துரைகளை கருத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் கடற்றொழில் முகாமைத்துவ திட்டமொன்றில் உருவாக்கப்பட்டவாறான அத்தகைய நடைமுறைகளை பின்பற்றுதலும் வேண்டும்.<br><br>அமைச்சர், 75ஆம் பிரிவிற்கிணங்க ஒன்று அல்லது மேற்பட்ட கடற்றொழில் முகாமைத்துவ திட்டத்தின்(ங்களின்) பாகமொன்றாக பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை கடைப்பிடிக்கலாம்.<br><br>(1) மற்றும் (2) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள், இலங்கை திறத்தவராகவுள்ள பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பொன்றினால் ஆழ்கடல் கடற்றொழில்களுக்காக உருவாக்கப்பட்ட அதே மீன்தொகையை அல்லது மீன்தொகையை அல்லது தொடர்புற்ற அல்லது தங்கியுள்ள இனங்கள் பொருட்டான முயற்சிகளை கருத்திற்கொள்ளுதல் வேண்டும். |
| | **அத்தியாயம் 1 – கடற்றொழில் ஒருங்கிணைப்பு** |
| குறித்தளிக்கப்பட்ட கடற்றொழில்<br><br>பிரிவு **71** | அமைச்சர், இச்சட்டத்திற்கிணங்க பணிப்பாளர் தலைமையதிபதியின் பரிந்துரையின்மேல், இலங்கை நீர்ப்பரப்புகளில் இடம்பெறும் ஏதேனும் கடற்றொழில் அல்லது கடற்றொழில்கள், விசேட கடற்றொழில் முகாமைத்துவ திட்டத்திற்கு உட்பட்டதாக குறித்தளிக்கலாம், என்பதுடன் அத்தகைய குறித்தளிக்கப்பட்ட கடற்றொழில் அல்லது கடற்றொழில்கள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் கீழ் குறித்தளிக்கப்பட்ட கடற்றொழில்கள், 75 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்றுக்கேற்ப முகாமை செய்யப்படல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் கடற்றொழில் அல்லது கடற்றொழில்களின் குறித்தளித்தலானது, இயைபான விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்றை ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னதாக அல்லது அதே நேரத்தில் இடம்பெறலாம். |

| | |
|---|---|
| கடற்றொழில் குழுக்கள்<br><br><br>பிரிவு **72** | 31ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் மீன்பிடி சார்ந்த செயற்பாடுகள் அவர்களாகவே கடற்றொழில் குழுவொன்றை உருவாக்கலாம்.<br><br>கடற்றொழில் குழு ஒவ்வொன்றும், 73ஆம் பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அதன் கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசத்தினுள் வசிக்கும் அல்லது மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் இடாப்பு ஒன்றை விதித்துரைத்த விதத்தில் மற்றும் வடிவில் தயாரித்தல், திருத்தியமைத்தல் மற்றும் பேணுதல் வேண்டும்.<br><br>கடற்றொழில் குழு ஒவ்வொன்றும், (2)ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட இடாப்பின் இற்றைவரைப்படுத்தப்பட்ட தகவல்களை ஒழுங்கான அடிப்படையில் வருடத்துக்கு குறைந்தபட்சம் ஒருமுறையேனும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.<br><br>கடற்றொழில் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அட்டவணை II இல் தரப்பட்டுள்ளவாறு ஒருங்கிணைப்புக் குழுவில் பங்குபற்றலாம்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, கடற்றொழில் குழுவின் விண்ணப்பத்தின்மேல், அதன் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் அத்தகைய குழுவை பதிவுசெய்யலாம் என்பதுடன் அத்தகைய பதிவு பற்றிய அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடுதலும் வேண்டும்.<br><br>இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கடற்றொழில் குழு ஒவ்வொன்றும், (4)ஆம் உட்பிரிவின் கீழான பதிவின்மேல், அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு, இடையறா வழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன், அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கொதிராக வழக்குத் தொடரவும்படலாம்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் கடற்றொழில் குழு செயலிழந்து அல்லது அதன் உறுப்பினர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்குத் தவறி உள்ளது என அவர் திருப்தியடையின் ஏதேனும் கடற்றொழில் குழுவின் பதிவை இரத்துச்செய்யலாம்.<br><br>கடற்றொழில் குழுவொன்றின் பதிவை இரத்துச்செய்யுமிடத்து பணிப்பாளர் தலைமையதிபதி, அந்தக் கடற்றொழில் குழுவின் ஒழிப்போனாக செயற்படுவதற்கு ஆளொருவரை நியமித்தல் வேண்டும்; அவர் பின்வரும் தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும்:<br>கடற்றொழில் குழுவின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை உடைமையில் எடுத்தல்;<br>கடற்றொழில் குழுவின் ஆதனங்களை விற்றல்; |
| கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசம்<br><br>பிரிவு **73** | விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசங்கள், கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்றுக்கிணங்க கூட்டு முகாமைத்துவ நோக்கங்களுக்காக இப்பிரிவுக்கிணங்க தாபிக்கப்படலாம்.<br><br>விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசமொன்றை உருவாக்கும் பொருட்டான விண்ணப்பம், மீனவர்களால் அல்லது 72ஆம் பிரிவிற்கிணங்க உருவாக்கப்பட்ட ஏதேனும் இயைபான கடற்றொழில் குழுவினால் மற்றும் ஏற்புடையவாறு வேறு அக்கறைதாரர்களினால் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு செய்யப்படலாம்.<br><br>(2) ஆம் உட்பிரிவை அனுசரித்து செய்யப்படும் விண்ணப்பமொன்று பின்வருவனவற்றை குறிப்பிடுதல் வேண்டும்:<br>உத்தேச பிரதேசம்;<br>ஏதேனும் முகாமைத்துவ பிரச்சினை அடங்கலாக விண்ணப்பத்துக்கான காரணங்கள்;<br>இ) கடற்றொழில் அல்லது நீரியல் வளங்கள் பொருட்டான எதிர்கால நலன்கள்;<br>ஈ) உத்தேச பிரதேசத்திலுள்ள வளங்கள்;<br>மீனவர்கள் மற்றும் வேறு அக்கறைதாரர்கள் பொருட்டான எதிர்கால நலன்கள்; |

| | |
|---|---|
| | ஏற்புடையவாறு, அதே இனங்களை அல்லது மீன் தொகைகளை வேறு பிரதேசங்களில் முகாமைசெய்யும் முகாமைத்துவ அதிகாரிகளுடன் உத்தேச ஒத்துழைப்பு; அத்துடன்<br>ஏற்புடையவாறான அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி வேண்டுகின்ற விண்ணப்பத்துக்கு ஆதரவான வேறு ஏதேனும் விடயம்.<br><br>(3) ஆம் உட்பிரிவை அனுசரித்து செய்யப்படும் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதை உறுதிசெய்தல் வேண்டும் :<br>அ) (3)ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன;<br>கோரப்பட்டவாறு விசேட கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசமொன்றின் பிரகடனம் இச்சட்டத்தின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் ஒத்ததாகவிருத்தல்;<br>இ) உத்தேச விசேட கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசத்தில் மீன்பிடித்தலில் ஈடுபடும் பெரும்பாலான மீனவர்கள், உத்தேச பங்கேற்பு முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல் அல்லது அதில்; பங்குபற்றுவார்கள்; அத்துடன்<br>ஈ) ஒருங்கிணைப்பு முகாமைத்துவ திட்டங்கள், இச்சட்டத்திற்கேற்ப இனங்காணப்பட்டு இணங்கப்படுகின்றன.<br><br>(4)ஆம் உட்பிரிவிலுள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன என்பதனை பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்குமிடத்து அவர்,விசேட கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசமொன்றை உருவாக்குதல் பற்றி அமைச்சருக்கு பரிந்துரை செய்தல் வேண்டும்.<br><br>அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பரிந்துரையின்மேல், இச்சட்டத்திற்கிணங்க விசேட கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசமொன்றை பிரகடனப்படுத்தும் கட்டளையை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை பின்வருவனவற்றை குறித்துரைத்தல் வேண்டும்:<br>பிரதேசமொன்று எந்த நோக்கங்களுக்காக விசேட கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டதோ அந்த நோக்கம் (ங்கள்);<br>ஆ) 75ஆம் பிரிவிற்கிணங்க விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்றை விருத்திசெய்து நடைமுறைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகள்; அத்துடன் ஏற்புடையவாறு,<br>பங்கேற்பு முகாமைத்துவம் மற்றும் தீர்மானமெடுத்தல் அடங்கலாக முகாமைத்துவ ஒழுங்குகளும் நடைமுறைகளும். |
| கடற்றொழில் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுக்கள்<br><br>பிரிவு **74** | ஒவ்வொரு விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசம் பொருட்டு மாவட்ட கடற்றொழில் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவொன்று (''ஒருங்கிணைப்புக் குழு'') இருத்தல் வேண்டும்.<br><br>ஒருங்கிணைப்புக் குழு, அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு அட்டவணை II இல் நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் ஒன்பது(9) *வேளைக்கேற்ற* உறுப்பினர்களை கொண்டமைதல் வேண்டும்.<br><br>3. ஒருங்கிணைப்புக் குழுவானது,விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசத்தின் ஆட்சி அங்கமாதல் வேண்டும். அவ்விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசத்தை உருவாக்கும் கட்டளை வெளியீட்டுத் தேதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசம் தொடர்பிலான கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத் திட்டமொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கும் பொறுப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டங்களை அங்கீகரிக்கும் போது பின்பற்றுவதற்கான நடைமுறை 75ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளது.<br><br>ஒருங்கிணைப்புக் குழுவானது, அத்தகைய ஒருங்கிணைப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படவுள்ள விடயத்தையும் கருத்திலெடுத்து இச்சட்டத்தின் அட்டவணை |

| | |
|---|---|
| | IIஇல் குறித்துரைத்த ஆட்கள் மத்தியிலிருந்து அமைச்சருடன் கலந்தாலோசித்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் அமைக்கப்படுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராக அல்லது ஏற்பாட்டாளராக அட்டவணை II(அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலர்கள் மத்தியிலிருந்து நியமித்தல் வேண்டும். செயலாளர் அல்லது ஏற்பாட்டாளர் விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசமொன்றுக்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் எல்லா கூட்டங்களையும் ஒன்றுகூட்டுதல் வேண்டும்.<br><br>விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசமொன்றுக்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது, குறைந்தபட்சம் மாதத்துக்கு ஒரு முறை அல்லது அவசர நிலமையில் ஒன்றுகூடுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரின் நியமத்தர், ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டங்களுக்கு தலைமைதாங்குதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி வராதவிடத்து, இயைபான மாவட்ட செயலாளர் அந்தக் கூட்டத்திற்கு தவிசாளராதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, ஒருங்கிணைப்புக் குழுவினர்களாக இருப்பதற்கு, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் பிரதிநிதிகள், விசேட கடற்றொழில் முகாமைத்துவ பிரதேச எல்லைகளினுள் நடாத்தப்படும் வேறு வணிக செயற்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர் மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் முகாமைத்துவ பிரதேச எல்லைகளினுள் இயற்கை வள முகாமைத்தவத்திலும் மீனவர்களின் நலனோம்பலிலும் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட வேறு ஆட்களை நியமிக்கலாம்.<br><br>மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுவொன்றின் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:<br>அ) பின்வருவன அடங்கலாக இயைபான கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் பிரச்சினை தீர்வுக்கான அரங்கொன்றை வழங்குதல்:<br>i. கண்காணிப்பு பொறிமுறைகள்;<br>ii. கடுங்கண்காணிப்பு மற்றும் அமுலாக்கல் முன்னுரிமைகள்; அத்துடன்,<br>iii.கடற்றொழில் வள முகாமைத்துவத்தின் குறிக்கோள்களுக்கிணங்க ஆராய்ச்சி முன்னுரிமைகள்.<br><br>ஆ) மீன் வளங்களுக்கான முகாமைத்துவ ஒழுங்குகள்;<br>இ) இச்சட்டத்தின் நோக்கெல்லையின் விடயங்கள் தொடர்பாக தகவல்கள் மற்றும் தரவுகளின் சேகரிப்பை முகாமைசெய்தல்;<br>ஈ) அக்கறைதாரர்களிடையே தகவல் பகிரலுக்கு வசதியளித்தல்; |
| விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டம்<br><br>பிரிவு **75** | பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கை நீர்ப்பரப்புகளில் இடம்பெறும் ஏதேனும் கடற்றொழில் அல்லது கடற்றொழில்கள் தொடர்பில் விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்றை வரைவதற்கு செய்வித்தல் வேண்டுமென்பதுடன் 71ஆம் பிரிவிற்கிணங்க கடற்றொழில் குறித்தளிக்கப்படுமிடத்து அவ்வாறு செய்தலும் வேண்டும்.<br><br>விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒத்திருத்தல் வேண்டும் அத்துடன் பின்வரும் அம்சங்களை கொண்டிருத்தலும் வேண்டும்:<br>பின்வருவன அடங்கலாக கடற்றொழில் மற்றும் அதன் இயல்புகளை |

| | |
|---|---|
| | இனங்காணுதல்:<br>வளங்களின் தற்போதைய நிலமை;<br>பங்குபற்றுவோர், மீன்பிடி உபகரணம், மீன்பிடித் தொழிற்பாடுகள், ஏனைய நடவடிக்கைகள் மற்றும் கடற்றொழில் தொடர்பிலான பொருளாதார, சமூக காரணிகள் அடங்கலாக கடற்றொழிலின் தற்போதைய நிலமை;<br>கடற்றொழிலின் அபிவிருத்தி மட்டம்;<br>சூழல்முறைமை நிலமை மற்றும் மீன்பிடித்தலுக்கு மற்றும் கடற்றொழில் தொடர்பிலான வேறு செயற்பாடுகள் காரணமாக சாத்தியமான பாதகமான சுற்றாடல்சார் தாக்கம்;<br>இயைபான நிறுவனஞ்சார், சட்ட மற்றும் கொள்கை கருத்திலெடுப்புகள்; அத்துடன்<br>இயைபான பிராந்திய மற்றும் சருவதேச கடப்பாடுகள்.<br>மீனவர்கள், கடற்றொழில் குழுக்கள் மற்றும் வேறு அக்கறைதாரர்களுடன் உசாவுகை பற்றிய அறிக்கை;<br>இ) கடற்றொழில் பொருட்டான முகாமைத்துவ குறிக்கோள்கையும் செயலாற்றுகை குறிகாட்டிகளையும் குறித்துரைத்தல்;<br>ஈ) கடற்றொழில் துறைக்கு பிரயோகிக்கப்படவுள்ள முகாமைத்துவ நடவடிக்கைகளை குறித்துரைத்தல்;<br>கடற்றொழில் முகாமைத்துவத் திட்டத்தின் மீளாய்வு மற்றும் திருத்தம் பொருட்டான செயன்முறையை குறித்துரைத்தல்;<br>கடற்றொழிலின் பயனுறு முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல்,பேணிக்காத்தல்,அபிவிருத்தி மற்றும் நிலைபேறான பயன்பாடு பொருட்டு தேவையான வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் ஏற்புடையவாறு ஏற்பாடுகளை செய்தல்.<br><br>விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டமொன்று:<br>அ) 72ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் கடற்றொழில் குழுவுக்கு முகாமைத்துவ பொறுப்புக்களை கையளிக்கலாம்;<br>பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு விசேட கடற்றொழில் முகாமைத்துவத் திட்டத்துடன் ஒத்திசைக்கும் அளவுக்கு செல்லுபடியான ஏதேனும் கடற்றொழில் குழுவினால் கடைப்பிடிக்கப்படும் துணை முகாமைத்துவத் திட்டங்கள் பொருட்டு வழங்கலாம்; அத்துடன்<br>இ) பொதுவாக அக்கறைதாரர்கள் பொருட்டான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை குறித்துரைக்கலாம்.<br><br>விசேட கடற்றொழில்கள் முகாமைத்துவத் திட்டம் மற்றும் அத்தகைய திட்டமொன்றின் திருத்தம் ஒவ்வொன்றும், அங்கீகாரத்திற்காக அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டதன்மேல் சட்ட வலுவை கொண்டிருத்தலும் வேண்டும்.<br><br>அமைச்சர், விசேட கடற்றொழில்கள் முகாமைத்துவத் திட்டத்தை வெளியிடப்படாமைக்கான காரணங்களை குறிப்பிட்டு அதனை திருத்தி, மீள சமர்ப்பிப்பதற்காக பணிப்பாளர் தலைமையதிபதியிக்கு திருப்பியனுப்புதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வொரு கடற்றொழில் முகாமைத்துவ திட்டத்தையும் வர்த்தமானி மூலம் அறிவித்தல் வேண்டும். |
| வாழ்வாதாரத்துக்காக கரையோர மீன்பிடிக்கும் மக்களையும் கடற்றொழிலையும் | இப்பிரிவில் தரப்பட்ட வழிமுறைகள், இச்சட்டத்தின் (3)(எ)ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோளின் நடைமுறைப்படுத்தலுக்கு பங்களிக்கிறது.<br><br>கரையோர மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு |

| | |
|---|---|
| பாதுகாத்தல்<br><br>பிரிவு **76** | அடிப்படையான வளங்களுக்கான உடைமை உரித்துக்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.<br><br>தேசிய கடற்றொழில் கொள்கையை விருத்திசெய்யும்போது கரையோர மீன்பிடிக்கும் மக்களுக்கான விசேட தேவை மற்றும் வாழ்வாதார, சுதேச மக்களுக்கான மீன்பிடித்தலை கவனத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் செயலாளர், பாரம்பரிய, கைவினைசார் கடற்றொழில் விளைபொருட்களின் சந்தைப்படுத்தலையும், அத்தகைய விளைபொருட்களின் உள்ளூர் நுகர்வையும் மேம்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும்.<br><br>அமைச்சர், ஒதுக்கப்பட வேண்டிய சில பிரதேசங்கள் மற்றும் செயற்பாடுகளை தீர்மானிக்கும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் என்பதுடன் அவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவர்களின் ஜீவனோபாயத்துக்காக கரையோர மீன்பிடிக்கும் மக்கள் மற்றும் வாழ்வாதாரத்துக்கான மீன்பிடித்தல் பொருட்டு பாதுகாப்பதற்காக குறித்துரைத்த நிபந்தனைகளையும் விதிக்கலாம். |
| | **அத்தியாயம் 2 – மீன்பிடி முயற்சி மற்றும் விகிதாசார முறையில் பிடித்தல்** |
| மீன்பிடி முயற்சி மற்றும் விகிதாசார முறையில் பிடித்தல்<br><br>பிரிவு **77** | பணிப்பாளர் தலைமையதிபதி, ஒழுங்குவிதியினால் விதித்துரைத்தவாறான வெளிப்படையினதும் குறிக்கோள் கட்டளைக்கற்களினதும் அடிப்படையில் தரப்பட்ட கடற்றொழில் அல்லது கடற்றொழில் குழு பொருட்டு வருடாந்தம் விகிதாசார முறையில் பிடித்தலை மீன்பிடி உரிமம் கொண்டிருப்பவர்களுக்கு ஒதுக்குதல் வேண்டும்.<br><br>மீன்பிடி உரிமம் கொண்டிருப்பவர்கள் *ஏனையவற்றுடன்* தனிப்பட்ட மீனவர்கள், மீன்பிடி உரிம கலன்கள், கூட்டுறவுகள் மற்றும் கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசங்களில் கடற்றொழில் அமைப்புக்கள் அல்லது முகாமைத்தவ அதிகாரிகள் ஆகலாம்.<br><br>மீன்பிடி உரிமம் கொண்டிருப்பவர்கள், மீன்பிடித் தொழிற்பாட்டு உரிமத்துக்கு அனுசரித்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மீன்பிடி முயற்சி, இனங்கள் மற்றும் அளவுக்கு மிகையாக மீன்பிடித்தலாகாது.<br><br>முயற்சிக்கு அமைவாக, முயற்சி இன்றி மீன் அல்லது நீரியல் வளங்களை பிடிக்கும் எவரேனும் மீன்பிடி உரிமம் கொண்டிருப்பவர் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>மீன்பிடி உரிமம் கொண்டிருப்பவர் அவருக்கு ஒதுக்கப்பட்ட முயற்சிக்கு மற்றும்/அல்லது முயற்சியை விஞ்சிகின்றவிடத்து, அதிகளவிலான மீன்களை கருத்திற்கொண்டு தவறொன்றை புரிகிறார் என்பதுடன் குற்றப்பண மட்டம் அட்டவணை III இல் குறித்துரைத்த ஏதேனும் ஏற்புடைய தண்ட மட்டம் தடைகள் ஏற்புடையதாதலும் வேண்டும்.<br><br>அமைச்சர், மீன்பிடி முயற்சி, இனங்கள் மற்றும் அளவுகளை ஒதுக்குவதற்கான கட்டளைக்கற்கள், மீன்பிடி முயற்சியை கொண்டிருப்பவர்களிடையே கைமாற்றல் மற்றும் பரிமாற்றல்களுக்கான நிபந்தனைகள், அதிகசுடும் முயற்சிக்கான வரம்பு அல்லது நெகிழ்ச்சித்தன்மை அத்துடன் அதிக மீன்பிடித்தல் பொறுத்தமட்டில் குறைப்புகள் மற்றும் மீள்ஒதுக்கலுக்கான நடைமுறைகளை எடுத்துக்காட்டும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| மீன்பிடி இயலளவினை முகாமைசெய்தல்<br><br>பிரிவு **78** | பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு மற்றும் அதன் ஏதேனும் செயற்படுத்தல் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, நிலைபேறான கடற்றொழில் பயன்பாட்டினை உறுதிசெய்வதற்காக மீன்பிடி கப்பல்தொகுதிகளின் இயலளவினை சீராக்குவற்கான வழிமுறைகளை கடைப்பிடித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | மீன்பிடி கப்பல்தொகுதிகளின் இயலளவினை முகாமைசெய்வற்கான வழிமுறைகள் *ஏனையவற்றுடன்* பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:<br>வழங்கப்படவுள்ள மீன்பிடி உரிமங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல்;<br>மீன்பிடிக் கலனின் ஒட்டுமொத்த நீளம்;<br>இ) மீன்பிடி இயலளவுக்கும் கிடைக்கும் கடற்றொழில் வளங்களுக்குமிடையில் சமநிலையை பிரதிபலிக்கும் மீன்பிடிக் கலனின் மொத்த தொன்கள்(GT) அல்லது அதன் பிரதான எஞ்சின் கிலோவோற்று(Kw) வெளிக்காட்டும் மீன்பிடி கப்பல்தொகுதிகளுக்கு அல்லது கடற்றொழிலுக்கு இயலளவின் தொடர்பு மட்டத்தை உருவாக்குதல்;<br>ஈ) பிரவேசத்தை கடைப்பிடித்தல்: குறைந்தபட்சம் ஒரே மட்டத்திலான இயலளவுடைய கப்பல்தொகுதிகள் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டவுடன் புதிய பிரவேசமொன்றின் பதிவு சீராக்கப்படல், அத்துடன் /அல்லது;<br>மீன்பிடிக்கும் திறனை *ஏனையவற்றுடன்* வெளிச்சங்கள் மற்றும் மீன் பெருக்க கருவி('FADs') என்பவற்றை மேம்படுத்தும் மீன்பிடி உபகரணம் மற்றும் ஏதேனும் கருவியின் வகையை ஒழுங்குபடுத்தல்.<br>அமைச்சர், இச்சட்டத்திற்கிணங்க மீன்பிடி கப்பல்தொகுதிகளின் இயலளவினை முகாமைசெய்வற்கான ஏதேனும் நிபந்தனைகள், விதிகள் மற்றும் நடைமுறைகளை செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை கடைப்பிடிக்கலாம். |
| | **அத்தியாயம் 3 – மீன்பிடி உபகரணங்களையும் முறைகளையும் ஒழுங்குபடுத்தல்** |
| மீன்பிடி உபகரணங்களையும் முறைகளையும் ஒழுங்குபடுத்துவதன் குறிக்கோள்கள்<br><br>பிரிவு 79 | மீன்பிடி உபகரணங்களின் பயன்பாடு மற்றும் இயக்குவிக்கும்முறை குறித்த விதிகள் மற்றும் இப்பிரிவில் உருப்பட்டுள்ள முறைகள் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்கு பங்களிப்புச்செய்தல் வேண்டும்.<br><br>அ) இளம் வயதினரைப் பாதுகாப்பதற்கும், புறக்கணிக்கப்பட்ட மற்றும் தேவையற்ற உயிரினங்களின் அளவைக் குறைப்பதற்கும் மீன்பிடி உபகரணங்களின் தெரிவாற்றலை செம்மைப்படுத்துதல்;<br><br>ஆ) கடற்பரப்பு, கடல்சார் சூழல்முறைமை, உணர்வுபூர்வமான பகுதிகள மற்றும் பாதுகாக்கப்பட்ட உயிரினங்கள் ஆகியவற்றில் மீன்பிடி நடவடிக்கைகளின் தாக்கத்தை இழிவுபடுத்தல்; அத்துடன்<br>இ) மீன்பிடி உபகரணங்கள்,கப்பலோட்டல் கருவிகள் மற்றும் கடற்றொழில் சார்ந்த துணைகருவிகளை இறக்குமதிசெய்வதை கட்டுப்படுத்தல்.<br><br>2. அமைச்சர், கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞானரீதியான ஆதாரங்களின் அடிப்படையில் நிறுவுவதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்; மீன்குஞ்சுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக கடல்வாழ் உயிரினங்களின் குறைந்தபட்ச அளவு, மீன்பிடி வலைகள், கலங்கள் மற்றும் முறைகளின் அதேபோன்று இச்சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் கோட்பாடுகளுக்கமைவாக பகுதி IV மற்றும் V இன் கீழ் மீன்பிடி வலையொன்றில், உபகரணத்தால் அல்லது முறையால் மற்றும் பாதுகாக்கப்பட்ட இனங்களைப் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இனங்களின் அதிகபட்ச சதவீதத்தின் பயன்பாட்டிற்கான, செயற்பாட்டிற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| மீன்பிடி உபகரணங்களை மற்றும் முறைகளைப் பயன்படுத்துவதற்கான தடைகள்<br><br>பிரிவு 80 | இலங்கை நீர்பரப்பிலேனும்சரி அல்லது ஆழ்கடலிலேனும்சரி கப்பலொன்றின் தலைவன் அல்லது இயக்குபவர் எவரும், இச்சட்டத்திற்கு அனுசரித்து தேவைப்படுத்தப்பட்ட அல்லது விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இசைவுறாத உபகரணத்தை அல்லது கருவியை அந்தக் கப்பலில் எடுத்துச் செல்லுதலாகாது.<br><br>தலைவனோ அல்லது இயக்குபவரோ இச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட எந்தவொரு மீன்பிடி உபகரணத்தையும் அல்லது முறையையும் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்துதலாகாது.<br><br>பின்வரும் மீன்பிடி உபகரணங்கள் அல்லது முறைகளைப் பயன்படுத்தி கடல்சார் வளங்களைப் பிடிப்பது தடை செய்யப்படுதல் வேண்டும்:<br>அ) 83ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு ஏதேனும் இரசாயன, நச்சு அல்லது |

| | |
|---|---|
| | தீங்கு விளைவிக்கும் பதார்த்தம், அல்லது பொருள், தைனமயிட் அல்லது வெடிபொருள் பதார்த்தம் அல்லது சாதனம் ;<br>ஆ) ஏதேனும் ஈட்டி பொருத்திய துப்பாக்கி அல்லது கையில் வைத்திருக்கும் ஈட்டிகள்<br>இ) ஏதேனும் தள்ளு வலை ;<br>ஈ) பவளப்பாறைகள் அல்லது பாறைகளில் மேல ஏதேனும் மூடுவலை, செவுள்வலை, முக்கூட்டுவலை அல்லது கட்டுவலை,<br>உ) பவளப்பாறைகள் அல்லது கடற்பாசிகளை அறுவடை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் சாதனம்<br>ஊ) இச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்படாத ஏதேனும் மீன்பிடி உபகரணங்கள் அல்லது முறை.<br>எ) தங்கூஸ் வலை, அத்துடன்<br>ஏ) இச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் தடைசெய்யப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் மீன்பிடி உபகரணங்கள் அல்லது முறை.<br><br>ஆள் எவரும், தங்கூஸ் வலையை பயன்படுத்துதல், வைத்திருத்தல், இறக்குமதிசெய்தல், கொண்டுசெல்லுதல், கொள்வனவுசெய்தல் அல்லது விற்றல் ஆகாது.<br><br>இப்பிரிவிலுள்ள ஏற்பாடுகள், குதங்களை பேணுதல், மீன்பிடி உபகரணங்களின் போக்குவரத்து மற்றும் வர்த்தகம், கப்பலோட்டல் கருவிகள் மற்றும் மீன்பிடி சார்ந்த துணைகருவிகள் என்பனவற்றில் ஈடுபடும் எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.<br><br>கப்பலோட்டல் விளக்குகள் மற்றும் கப்பலில் பாதுகாப்பான வேலை நிலைமைகளுக்கு தேவையான விளக்குகளைத் தவிர, ஆள் எவரும், இலங்கை நீர்பரப்பில் மீன் சேகரிப்பு நோக்கத்திற்காக மேற்பரப்பு அல்லது மூழ்கிய செயற்கை விளக்குகளைப் பயன்படுத்துதலாகாது.<br><br>இந்தப் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், இந்தப் பிரிவின் கீழ் கைப்பற்றப்படுகின்ற எல்லா மீன்கள் அல்லது மீன்பிடி பொருட்கள் பறிமுதல் செய்யப்படுதலும் வேண்டும். அத்துடன், அத்தகைய மீன்கள் அல்லது மீன்பிடி பொருட்களை கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கப்பல் அல்லது வாகனம் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படற்பாலான அல்லது விதித்துரைக்கப்படற்பாலான வேறு ஏதேனும் தண்டப்பணத்திற்கு மேலதிகமாக பறிமுதல் செய்யப்படலாம். |
| சுழியோடும் நடவடிக்கைகள்<br><br>பிரிவு 81 | சுழியோடும் நடவடிக்கைகள், நாளில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் மற்றும் இச்சட்டத்தின் கீழுள்ள ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதில் விதித்துரைக்கப்பட்டவாறு சில பகுதிகளில் பிடிக்கப்படவுள்ள ஒவ்வொரு மீன் வகை பொருட்டான உரிம அதிகாரத்தின் கீழ், மாத்திரமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>சுழியோடி மீன்பிடிக்கின்ற நடவடிக்கைகளுக்காக உரிமம் கொண்டிருப்பவர்கள், இலங்கை நீர்ப்பரப்பிலுள்ள சங்கு, கடலட்டை, சிங்கஇறால்கள், துடுப்பு மீன்கள் மற்றும் அலங்கார மீன்களைப் பிடிப்பதற்கு எந்தவொரு மண்டா, கூர்மையான கருவிகள் அல்லது ஈட்டி பொருத்திய துப்பாக்கிகளைப் பயன்படுத்துதலாகாது.<br><br>சுழியோடி மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உரிமம் கொண்டிருப்பவர்கள், அத்தகைய உரிமத்தைப் பயன்படுத்தி எந்தவொரு பர்ஸ் சீன் நடவடிக்கைகளில் ஈடுபடுதலாது.<br><br>சுழியோடி மீன்பிடி நடவடிக்கைகளுக்கு உரிமம் கொண்டிருப்பவர் இந்த பிரிவின் ஏற்பாடுகளை மீறியுள்ளதாக பணிப்பாளர் தலைமையதிபதி நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றவிடத்து, அவர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த உரிமத்தை இரத்துச் செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | இந்த பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகிறார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறித்துரைத்த குற்றப்பண மட்டத்துக்கு ஆளாதலும் வேண்டும். |
| கரைவலை, செவுள் வலை மற்றும் வேறு விதித்துரைத்த வலை வகைகளின் பாவனை மீதான ஒழுங்குவிதிகள்<br><br>பிரிவு 82 | ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் பர்ஸ் சீன் கப்பல் தலைவன், முலையூட்டி வகை மீன்கள், திமிங்கில சுறாக்கள், நரிச் சுறாக்கள், வெண்முனைச் சுறாக்கள்,யானைத் திருக்கைகள் மற்றும் கடலாமைகள் தொடர்ந்து வசிக்கும் பகுதிகளில் வேண்டுமென்றே வலைகளை இடுதலாகாது என்பதுடன் தற்செயலாக பிடிபட்டால், *முலையுட்டி வகை மீன்கள்,* திமிங்கல சுறாக்கள்,நரிச் சுறாக்கள்,வெண்முனைச் சுறாக்கள்,யானைத் திருக்கைகள் மற்றும் கடலாமைகளுக்கு தீங்கிளைக்காது உடனடியாக மீண்டும் கடலில் விடப்படுதலும் வேண்டும்.<br>பர்ஸ் சீன் கப்பல் தலைவன்,கடலிலிருந்து பிடித்துக் கொண்டு வரப்படும் அனைத்து இலக்கு வைக்கப்படும் மீன்கள் பெருங்கண் சூரை,வரிச்சூரை,மஞ்சட்சூரை மற்றும் இலக்கு வைக்கப்படாத மீன்கள் (வேறு சூரை மீன்கள்,லேனா பாரை,வன்னா,கொப்பரன்,சப்பரா,தலபத்து,சீலா போன்ற மீன்களை கரை வரை எடுத்து வந்து தரையிறக்குதல் வேண்டும். மனித உணவாகப் பயன்படுத் பொருத்தமற்றதாக இருந்தாலன்றி இந்த மீன்களை கடலில் அகற்றுதல் கூடாது.)<br>பணிப்பாளர் தலைமையதிபதி,தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் (NARA) அறிவியல் அறிக்கையின் அடிப்படையில் சுரை மீன் இனங்கள் தவிர்த்து (Tuna like species) இலங்கை நீர்ப்பரப்பில் மற்றும் ஆழ் கடலில் வளைய வலைகளின் எண்ணிக்கை,அதன் விவரக்குறிப்புகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட மீனினங்கள் தொடர்பாக தீர்மானிக்கலாம்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, மாவட்டமொன்றுக்கு கட்டுவலைகளின் எண்ணிக்கை, அவை தயாரிக்கப்படக்கூடிய பொருட்கள், அறிவியல்சார் சான்றுகளின் அடிப்படையில், வலையின் குறைந்தபட்ச வலை கண்ணின் அளவு, அவற்றைப் பயன்படுத்தக்கூடிய பிரதேசம், கட்டுவலைகளுக்கு இடையிலான தூரம் மற்றும் இச்சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் கோட்பாடுகளின் கீழ் அவற்றை எவ்வாறு இனங்காண்பது என்பதனை தீர்மானிக்கலாம்.<br><br>அமைச்சர், இலக்கின்றிய உயிரினங்களின் தற்செயலான பிடிப்புகள் மற்றும் சூழல் சேதத்தை குறைப்பதற்காக அதிகபட்ச பட்டய ஆழமான கீழ் உபகரணங்கள் அமைக்கப்படுதல் மற்றும் அதிகபட்சம் ஊறவைக்கும் நேரம் ஆகியவை தொடர்பில் ஒழுங்குவிதிகளைக் ஆக்கலாம்.<br><br>இந்தப் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், இந்தப் பிரிவின் கீழ் கைப்பற்றப்படுகின்ற எல்லா வலைகள், மீன்கள் அல்லது மீன்பிடி பொருட்கள் பறிமுதல் செய்யப்படுதலும் வேண்டும். அத்துடன், அத்தகைய மீன்கள் அல்லது மீன்பிடி பொருட்களை,பித்தல் அல்லது கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கப்பல் அல்லது வாகனம் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படற்பாலான அல்லது விதித்துரைக்கப்படற்பாலான வேறு ஏதேனும் தண்டப்பணத்திற்கு மேலதிகமாக பறிமுதல் செய்யப்படலாம். |
| மீன் பிடிப்பதற்கு நச்சு அல்லது வெடிபொருளை பயன்படுத்துவதற்கான தடை<br><br>பிரிவு 83 | எந்தவொரு ஆளும், மீன்களைக் கொல்லுதல், எடுத்தல், உணர்விழக்கச்செய்தல், மயக்குதல் அல்லது செயலிழக்கச் செய்தல் அல்லது எந்த வகையிலும் மீன்களை எளிதில் பிடிக்கச் செய்தல் போன்ற நோக்கங்களுக்காக பின்வருவன வற்றை மேற்கொள்ளுதலாகாது:<br>அ) பயன்படுத்துதல், பயன்படுத்துவதற்கு அனுமதித்தல் அல்லது பயன்படுத்துவதற்கு முயற்சித்தல் ;<br>ஆ) எடுத்துச் செல்லுதல்,எடுத்துச் செல்வதற்கு அனுமதித்தல், வைத்திருத்தல் அல்லது கட்டுப்படுத்துதல் ; அல்லது<br>இ) தண்ணீரில் வைத்தல் அல்லது தண்ணீரில் வைப்பதற்கு உதவுதல். |

| | |
|---|---|
| | ஏதேனும் இரசாயனம், நஞ்சு அல்லது தீங்கு விளைவிக்கும் பதார்த்தம், அல்லது பொருள், தைனமயிட் அல்லது வெடிப் பொருள் அல்லது சாதனம்.<br><br>இப்பிரிவின் நோக்கங்களுக்காக, எந்தவொரு மீன்பிடிக் கப்பலிலும் காணப்படும் நச்சு, வெடிக்கும் அல்லது மயக்கமளிக்கும் பொருள் (தைனமயிட் உட்பட) அல்லது பிற நஞ்சு அல்லது தீங்குவிளைவிக்கும் பொருள் அல்லது பதார்த்தம், (1)(அ) ஆம் உட்பிரிவிற்கு முரணாக மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்துவதற்கு முயற்சிக்கும் நோக்கம் கொண்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.<br><br>இப்பிரிவை மீறும் வகையில் எந்தவொரு ஆளும் கரையேறுதலோ, விற்பனைக்காக காட்சிப்படுத்துதலோ, மீன் அல்லது மீன் பொருட்களை வாங்குதலோ, விற்றலோ, பேரம் பேசுதலோ, கொண்டுசெல்லுதலோ, பெறுதலோ அல்லது உடைமையில்வைத்திருத்தலோ ஆகாது.<br><br>எந்தவொரு ஆளும், இப்பிரிவுக்கு முரணாக ஏதேனும், மீன், மீன்பிடி தயாரிப்பு, நீரியல்வள அல்லது நீரியல்வளத் தயாரிப்பு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிந்து அல்லது நம்புவதற்கு நியாயமான காரணத்தைகொண்டிருந்து, பின்வருவன தொடர்பான தகவல்களை எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கும் வேண்டுகோளின் பேரில் வழங்குவதற்குத் தவறுதலாகாது அல்லது நிராகரித்தலாகாது:<br>அ) (1) ஆம் உட்பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள, அல்லது அத்தகைய செயற்பாட்டிற்கு ஆதரவாக அல்லது பங்களிக்கின்ற எந்தவொரு செயலும் ; அல்லது<br>ஆ) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருளின் வழங்கல் மூலம்.<br><br>5. இப்பிரிவிற்கு எதிரான எந்தவொரு குற்றத்திற்கான நடவடிக்கைகளிலும், 158 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட எந்தவொரு மீனின் இறப்பு அல்லது காயத்திற்கான காரணத்தைக் குறிப்பிட்டு பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரால் எழுத்துப்பூர்வமாக வழங்கப்பட்ட சான்றிதழ் *ஏனைய மாற்றங்களுடன்* அந்த நிகழ்வின் முதற்தோற்ற சான்றாக இருக்கும்.<br><br>6. உட்பிரிவுகள் (1), (3) அல்லது (4) ஆகியவற்றை மீறுகின்ற எந்தவொரு ஆளும், கடுமையான தவறை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், இந்தப் பிரிவின் கீழ் கைப்பற்றப்படுகின்ற எல்லா மீன்கள் அல்லது மீன்பிடி பொருட்கள் பறிமுதல் செய்யப்படுதலும் வேண்டும். அத்துடன், அத்தகைய மீன்கள் அல்லது மீன்பிடி பொருட்களை பிடித்தல் அல்லது கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கப்பல் அல்லது வாகனம் இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படற்பாலான அல்லது விதித்துரைக்கப்படற்பாலான வேறு ஏதேனும் தண்டப்பணத்திற்கு மேலதிகமாக பறிமுதல் செய்யப்படலாம். |

| | |
|---|---|
| | |
| கீழ் இழுவை வலைகளை இட்டு மீன்பிடியில் ஈடுபடுவதை தடை செய்தல்<br><br>பிரிவு 84 | இரண்டு இறக்கைகள் கொண்ட அல்லது இல்லாத வலைகள் அல்லது வலைகளின் இரண்டு கட்டற்ற முனைகளில் நிலைக்குத்தான கம்பங்களைப் பயன்படுத்தி, மோட்டார் பொருத்தப்பட்ட அல்லது பொறிமுறை மீன்பிடி கலனினால் இழுக்கப்படும் கீழ் இழுவை வலைகளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.<br><br>ஆள் எவரும், இலங்கை நீர்ப்பரப்புகளில் கீழ் இழுவை வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடவோ அல்லது வேறு எந்த நபரையும் மீன்பிடியில் ஈடுபடச் செய்தலாகாது.<br><br>ஆள் எவரும், இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடிக்கும் நோக்கத்திற்காக ஏதேனும் கீழ் இழுவை வலையை பயன்படுத்துதல், வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், கொண்டு செல்லுதல், கொள்வனவுசெய்தல் அல்லது விற்றல் ஆகாது.<br><br>இலங்கை நீர்ப்பரப்புகளில் கீழ் இழுவைப் வலைகள்மூலம் மேற்கொள்ளப்படும் மீன்பிடி தொழிற்பாடுகளுக்கு இச்சட்டத்தின் பாகம் III இன் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரிமம் வழங்கப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய மீன்பிடி தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் தற்போதுள்ள மீன்பிடி உரிமத்தைப் புதுப்பித்தலுமாகாது.<br>(1) முதல் (3) வரையான உட்பிரிவுகளில் எதுஎவ்வாறிருப்பினும், சில பிராந்தியங்களில் வாழ்வாதாரத்திற்காக சில கரையோர சமூகங்கள் மற்றும் மீன்வளத்தின் உயர் சமூக-பொருளாதார சார்புநிலையை கருத்தில் கொண்டும், பாரம்பரிய மென் இழுவை இறால் தொழிலில் *(Penaeoideafamily)* ஈடுபடுவதற்கு பின்வரும் நிபந்தனைகளை பூர்த்திசெய்யும்போது இந்த உபகரணத்தின் பயன்பாடு பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படலாம்:<br>அ) ஒட்டுமொத்த நீளம் 35 அடிகளை விட விஞ்சாத உள்ளூர் கப்பல்களால் மேற்கொள்ளப்படுகின்றது.<br>ஆ)செயற்பாட்டுப் பகுதி ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.<br>இ) ஏற்கனவே வழங்கியுள்ள உரிமங்களை மாத்திரம் புதுப்பித்தல் வேண்டும் என்பதுடன் புதிதாக உரிமம் வழங்காதிருத்தல் வேண்டும்.<br><br>அமைச்சர், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி முகவர்நிலையத்தில்(நாரா) இருந்தான பரிந்துரைக்கமைவாக,மென் இழுவை உபகரணத்தின் செயற்பாடு பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்குவதற்கு மற்றும் செயற்பாடு நடாத்தப்படும் காலப்பகுதி மற்றும் இழுவை கடற்றொழிலின் நடத்தை பொருட்டு இழுவையின் எல்லைக்குறித்தல் மற்றும் வேறு ஏதேனும் தேவைப்பாடுகளை தீர்மானிப்பதற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.<br><br>இந்தப் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது இணங்கத் தவறுகின்ற எந்தவொரு ஆளும், கடுமையான தவறொன்றிக்கு குற்றவாளியாகவும், சுருக்க விசாரணைக்குப் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும். |

| | |
|---|---|
| | |
| | **பாகம் VI – பேணிக்காத்தல் வழிமுறைகள்** |
| கடல்சார் சூழல் முறைமையில் மாசுறுதலைக் கட்டுப்படுத்தல்<br><br>பிரிவு 85 | எந்தவொரு ஆளும், ஏதேனும் மாசுபடுத்தி, கழிவுகள் அல்லது வெளிநாட்டு பொருட்களை மீன்கள் மற்றும் நீரியல் வளங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கை நீர்ப்பரப்புகளில் வெளியேற்றுதலாகாது.<br><br>எந்தவொரு ஆளும், மீன்கள் மற்றும் நீரியல் வளங்களை அழிக்கும் வகையில் இலங்கை நீர்ப்பரப்புகளில் நிரப்புதல் அல்லது மீட்டெடுத்தல் ஆகாது.<br><br>எந்தவொரு ஆளும், கரையோரப் பகுதியில் அல்லது இலங்கை நீர்ப்பரப்புகளை அண்மித்த எந்தவொரு பிரதேசத்திலும் வளர்க்கப்படும் கண்டல் சூழல் முறைமைகளை அகற்றுவதில், வெட்டுவதில் அல்லது மாற்றுவதில் ஈடுபடுதலாகாது.<br><br>எந்தவொரு ஆளும், இலங்கை நீர்ப்பரப்புகளிலோ அல்லது அதனை அண்மித்த கரையோரப் பகுதிகளிலோ மீன் இனங்களின் பேணிக்காத்தலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும், அத்தகைய பேணிக்காத்தல் மீது தீங்கு விளைவிக்காத எந்தவொரு செயற்பாட்டிற்கும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிபந்தனைகளை உள்ளடக்கி பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி, எந்தவொரு செயலிலும் ஈடுபடுதலாகாது.<br><br>வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலுள்ள ஏற்பாடுகளில் எதுஎவ்வாறிருப்பினும், இந்த பிரிவின் ஏற்பாட்டை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும். |
| கைவிடப்பட்ட, தொலைந்த அல்லது அப்புறப்படுத்தப்பட்ட மீன்பிடி உபகரணங்களை மீளப்பெறல்<br><br>பிரிவு 86 | 1. இச்சட்டத்தின் பிரிவு 3(ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோளை அமுல்படுத்துவதற்கு இப்பிரிவில் தரப்பட்டுள்ள வழிமுறைகள் பங்களிக்கின்றன.<br><br>2. மீன்பிடி உபகரணங்கள், நங்கூரமுஞ் சங்கிலியும் மற்றும் கடலிலுள்ள வேறு பொருட்களை அப்புறப்படுத்தப்படுத்தவும் அத்துடன் மீன்பிடி வலைகள் மற்றும் சாதனங்களை கடலில் அல்லது கடல்படுக்கையில் கைவிடவும் தடை விதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>3. மீன்பிடிக் கப்பலொன்றின் தலைவன் ஏதேனும் மீன் பெருகல் சாதனம் (FAD) அல்லது செவுள்வலைகள் தொலைந்தமைபற்றி, அவை தொலைந்துபோன மாவட்டத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு நடைமுறைச்சாத்தியமான வகையில் பின்வரும் தகவல்களை வழங்குவதன்மூலம் அறிக்கையிடுதல் வேண்டும்:<br>அ) தொலைந்த செவுள்வலை அல்லது FAD இன் வகை மற்றும் அடையாள இலக்கம் அத்துடன்<br>ஆ)செவுள்வலை அல்லது FAD தொலைந்து போன நேரம் மற்றும் நிலமை.<br><br>4. பணிப்பாளர் தலைமையதிபதி, கடலில் இருந்து தொலைந்துபோன, கைவிடப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட மீன்பிடி உபகரணங்களை, சிறுபடகுகள் மற்றும் வேறு உபகரணங்கள் அடங்கலாக, மீட்பதற்கான நடவடிக்கைகள் அல்லது அத்தகைய உபகரணங்களுக்கான மாற்றுக்களை மீள்சுழற்சி போன்ற செயல்களை அல்லது நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் கடற்றொழில் குழுவுக்கு(குழுக்களுக்கு) வெகுமதி வழங்குவதற்கு தீர்மானிக்கலாம். |

| | |
|---|---|
| | 5. உட்பிரிவு (2) இன் ஏற்பாட்டினை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| இடஞ்சார் முடிவாக்கல், திறந்த மற்றும் மூடிய பருவங்கள்<br><br>பிரிவு **87** | 1.அமைச்சர், இருப்பு மீட்புக்கு பங்களிக்கும் குறிக்கோளுடன் கடல் வளங்களின் குஞ்சுகளை அல்லது மீன்முட்டை திரளலை பாதுகாக்கும் நோக்கத்துடன் மீன்பிடிச் நடவடிக்கைகளுக்கு அல்லது தரப்பட்ட பகுதியில் குறிப்பிட்ட சில மீன்பிடி உபகரணங்கள் மற்றும் முறைகளைப் பயன்படுத்துவதை மட்டுப்படுத்துவதற்கு, 'நாரா'வினால் வழங்கப்பட்டுள்ள சிறந்த அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் பணிப்பாளர் தலைமையதிபதியின் மதியுரையுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் ஒரு பிரதேசத்தை மூடப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தலாம்.<br><br>உட்பிரிவு (1) இல் எதுஎவ்வாறிருப்பினும், எண்ணெய்க் கசிவு அல்லது வேறேதும் வகையிலான ஆபத்தான வெளியேறல்கள் அல்லது தொடக்க கூறுகள் அல்லது மீன்பிடித்தலை பாதிக்கும் கடல்சார் அனர்த்தம் போன்ற அவசர நிலைமையில் அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதியின் மதியுரையுடன், ஏதேனும் குறித்துரைத்த பிரதேசத்தை, மீன்பிடி மற்றும் மீன்பிடிசார்ந்த நடவடிக்கைகளுக்கு தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தலாம்.<br><br>உட்பிரிவு (1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பிரதேசத்தை மூடுவதற்கான அறிவித்தலானது, பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:<br><br>அ) முடிவாக்கலின் குறிக்கோள்<br>ஆ)இப்பிரதேசத்தின் புவியியல்சார் ஆள்கூறுகள்<br>இ) முடிவாக்கலின் காலப்பகுதி<br>ஈ) குறிப்பிட்ட உபகரணங்கள் மீதான வரையறைகள்<br>உ) கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு ஒழுங்குகள் அத்துடன்<br>ஊ) வழிமுறையின் அறிவியல்சார் மீள் மதிப்பீடு.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, இருப்பு மீட்புக்காக செயற்கை பவளப்பாறைகளைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம். உட்பிரிவுகள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் ஏற்பாடுகள் *ஏற்ற மாற்றங்களுடன்* பிரயோகித்தல் வேண்டும்.<br><br>(1) அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் கடப்பாடுகளுக்கு அமைவான மீன்பிடி கலன்கள் மற்றும் மீனவர்கள், அதற்கேற்ப மூடப்பட்ட பிரதேசம் அல்லது செயற்கை பவளப்பாறைக்குள் மீன்பிடி தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதலாகாது.<br><br>அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதியின் மதியுரையுடன், நாராவினால் வழங்கப்பட்டுள்ள மிகச் சிறந்த அறிவியல்சார் சான்றுகளின் அடிப்படையில், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் இலங்கை நீர்ப்பரப்புகளில் சில இனங்களுக்கான மீன்பிடி பருவங்களை பிரகடனப்படுத்தலாம். மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீனவர்கள், அத்தகைய மீன்பிடி பருவத்திற்கு முனனர் அல்லது பின்னர் மீன்பிடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதலாகாது.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கையின் மூன்று நாளாந்த சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் செய்தித்தாள்களில் அல்லது வேறு ஏதேனும் வழிவகையிலான இலத்திரனியல் தொடர்பாடல் வழிகளில் வெளியிடுதல் உள்ளடங்கலாக வர்த்தமானியில் அறிவிக்கப்படும்போது மூடப்பட்ட பிரதேசங்கள், செயற்கை பவளப்பாறைகள் மற்றும் மீன்பிடி பருவம் பற்றிய உரிய பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.<br><br>உட்பிரிவு (4) அல்லது (5) ஐ மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் |

| | |
|---|---|
| | குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| கடற்றொழில் ஒதுக்குப்பிரதேசங்கள்<br><br>பிரிவு 88 | அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பரிந்துரையின்பேரில், வனசீவராசிகள் எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலமும் எந்தவொரு பிரதேசத்தையும் கவனத்தில் கொண்டும், விசேட வழிமுறைகள் பின்வருவனவற்றிக்கு அவசியமென்று அவர் கருதுகின்றவிடத்து, இலங்கை நீர்ப்பரப்புகளில் எந்தவொரு பிரதேசத்தையும் அல்லது அதனை அண்மித்த எந்தவொரு காணியையும் கடற்றொழில் ஒதுக்குப் பிரதேசமாக பிரகடனப்படுத்தலாம்.<br><br>அ) இயற்கையான இனப்பெருக்க இடங்கள் மற்றும் மீன்கள், நீரியல் வளங்களின் வாழ்விடங்கள் உள்ளடங்கலாக கடல்சார் சூழல் தரத்தை பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.<br>ஆ) ஏற்புடையவாறு, மீன் மற்றும் நீரியல் வளங்களை உரிய முறையில் புனரமைத்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்.<br>இ) இச்சட்டத்தின் கீழ் அல்லது இலங்கையின் ஏனைய சட்டங்களின் கீழ் அழிவின் விளிம்பில் இருப்பதாக அறிவிக்கப்பட்ட இனங்களைப் பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தல்.<br>ஈ) அறிவியல்சார் ஆராய்ச்சி, பிற ஆய்வுகளை ஊக்குவித்தல் அல்லது<br>உ) மீன்வளம் மற்றும் நீரியல் வளங்களை நிருவகிப்பதற்கான சூழலியல் அணுகுமுறையை ஊக்குவித்தல்.<br><br>அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:<br><br>அ) மீன்வள ஒதுக்குப்பிரதேசத்தில் குறிப்பிட்ட செயற்பாடுகள் அல்லது பணிகள் நடைபெறுவதைத் தடை செய்தல்.<br><br>ஆ) குறிப்பிட்ட ஆட்கள் அல்லது குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த ஆட்கள் மீன்வள ஒதுக்குப்பிரதேசத்திற்குள் நுழைவதைத் தடைசெய்தல்.<br><br>இ) மீன்வள ஒதுக்குப்பிரதேசத்தில் செயற்பாடுகள் அல்லது பணிகள் எந்தெந்த நிலைமைகளின் கீழ் இடம்பெறுதல் வேண்டும் என்பதைக் குறிப்பிடுதல்.<br>ஈ) (3)ஆம் உட்பிரிவிற்கு அமைவாக, உட்பிரிவு (2) (அ) முதல் (இ) வரை குறிப்பிடப்பட்டுள்ள தடைகள் அல்லது நிபந்தனைகளை மீறுவோருக்கு தண்டத்தின் அளவைத் தீர்மானித்தல்.<br><br>3. பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கையின் மூன்று நாளாந்தப் பத்திரிகைகளில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுவதன் மூலமோ அல்லது வேறு ஏதேனும் இலத்திரனியல் தொடர்பாடல் வழிமுறைகள் ஊடாகவோ வர்த்தமானியில் அறிவிக்கப்படுவதன்மேல் மீன்வள ஒதுக்குப்பிரதேசம் பற்றி உரிய பொது அறிவித்தலை வழங்குதல் வேண்டும்.<br>4. உட்பிரிவுகள் (2) (அ) முதல் (இ) வரை குறிப்பிடப்பட்டுள்ள தடை அல்லது நிபந்தனையை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |

| | |
|---|---|
| | |
| பாதுகாக்கப்பட்ட/தடை செய்யப்பட்ட மீன் இனங்கள்<br><br>பிரிவு 89 | இலங்கை நீர்ப்பரப்புகளில் பாதுகாக்கப்பட்ட∴தடை செய்யப்பட்ட இனங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட எந்தவொரு மீன் அல்லது நீரியல் வளம் அல்லது அதன் தயாரிப்புகளை பிடித்தல், எடுத்தல், கரையேறுதல், விற்பனைக்காக காட்சிப்படுத்துதல், விற்பனைசெய்தல், பேரம் பேசுதல், கொண்டுசெல்லுதல், பெறுதல், வாங்குதல் அல்லது உடைமையில்வைத்திருத்தல் ஆகாது.<br><br>(1)ஆம் உட்பிரின் நோக்கத்திற்காக, இச்சட்டத்திற்கு இணங்க பாதுகாக்கப்பட்ட/தடை செய்யப்பட்ட இனங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட இனங்கள் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படும்.<br><br>அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின்மூலம், இலங்கை திறத்தவராகவுள்ள பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பின் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைவாக, சர்வதேச உடன்படிக்கையினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் பரிந்துரையின் பேரில், இச்சட்டத்தின் நோக்கம் மற்றும் கோட்பாடுகளுக்கு இணங்க, மீன்கள் அல்லது நீரியல் வளங்களின் இனங்கள் பாதுகாக்கப்பட்ட/தடை செய்யப்பட்ட இனங்களாக பிரகடனப்படுத்தலாம்.<br><br>பாதுகாக்கப்பட்ட∴தடை செய்யப்பட்ட உயிரினங்கள் தொடர்பான பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகள் பின்வருமாறு எடுக்கப்படலாம்:<br>அ) கடற்றொழில் முகாமைத்துவத் திட்டம் ;<br>ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகள் ; அத்துடன்<br>இ) அன்றேல், இச்சட்டத்திற்கிணங்க.<br><br>(3)ஆம் உட்பிரிவை அனுசரித்து எந்தவொரு பொருளும், பறிமுதல் செய்யப்பட்டாலோ அல்லது தடை செய்யப்பட்டாலோ, பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கும் தொகை வைப்புச் செய்யப்படும் வரை சம்பந்தப்பட்ட நடவடிக்கையின் காலத்திற்கு எந்தவொரு நீதிமன்றத்தாலும் அந்தப் பொருள் விடுவிக்கப்படுதலாகாது. இது பறிமுதல் செய்யப்பட்ட அல்லது தடை வெய்யப்பட்ட பொருளின் பதிலீட்டு மதிப்பை விட மூன்று மடங்குக்கு குறையாதிருத்தல் வேண்டும் அல்லது 151,152 ஆம் பிரிவுகளின்படி நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான தொகை.<br><br>6. உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளை மீறுகின்ற எந்தவொரு ஆளும் எந்தவொரு ஆளும் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன் |

| | |
|---|---|
| | குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| | **பாகம் VII**<br>**அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தரவு சேகரிப்பு** |
| **மீனபிடிக் கப்பல்கள் மூலம் அறிவியல் ஆராய்ச்சி**<br><br>**பிரிவு 90** | பணிப்பாளர் தலைமையதிபதி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் உசாவுகை செய்து மீன்பிடிக் கலங்கள் உள்ளடங்கலாக மீன்பிடிக் கலங்கள் மூலம் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக மீன் பிடிப்பதை அறிவியல் ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் அல்லது தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மை(நாரா) சரிபார்க்கப்பட்ட பரிசோதனை மீன்பிடிப்பு ஆகிய நோக்கங்களுக்காக *ஏனையவற்றுடன்* நடத்துவதற்கு அதிகாரமளிக்கலாம்:<br>அ) மீன்பிடி உபகரணங்கள் மற்றும் தவிர்க்கும் முறைகள், குஞ்சுகள் உள்ளடங்கலாக தேவையற்ற பிடிப்புகளை குறைத்தல் மற்றும் அகற்றுதல்<br>ஆ) சுற்றுச்சூழல் முறைமை மற்றும் உணர்திறன் வாய்ந்த வாழ்விடங்களில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் முறைகளை மதிப்பிடுதல்.<br>இ) வணிக நோக்கங்களுக்காக ஆழ்கடலில் கட்டுப்பாடற்ற உயிரினங்களைப் பிடித்தல், அல்லது<br>ஈ) சிறந்த மீன்வள முகாமைத்துவம், முறைப்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மற்றும் நிலைடீகண்தகு தன்மை என்பவற்றிற்கு பங்களிக்கும் நோக்கத்துடன் விங்ஞான தரவுகளைச் சேகரிப்பது அல்லது புதிய முறைகளை சோதிப்பதை நோக்கமாகக் கொண்ட பிற வேறு விஞ்ஞானத் திட்டம்.<br>உ. கருத்திட்டத்தின் காலப்பகுதியில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக மீன்பிடிக்கும் மீன்பிடி படகுகளுக்கு இச்சட்டத்தின் கீழ் பின்வரும் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துவதிலிருந்து பணிப்பாளர் தலைமையதிபதி விலக்களிக்கலாம்:<br>i. 40 ஆம் பிரிவின் கீழ் மீன்பிடிஉரிமங்கள்<br>ii. 75 ஆம் பிரிவின் கீழ் மீன்வள முகாமைத்துவத் திட்டங்கள் ,<br>iii. 80, 82 மற்றும் 84 ஆம் பிரிவுகளின் கீழ் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் முறைகள் ,<br>iv. 87 ஆம் பிரிவின் கீழ் இடஞ்சார்ந்த அல்லது தற்காலிக மூடல்கள் ,<br>v. 88 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் ஒதுக்கங்கள், அல்லது,<br>vi. 90 இன் ஆம் பிரிவின் கீழ் பாதுகாக்கப்பட்ட∴தடை செய்யப்பட்ட மீன் இனங்கள். |

| | |
|---|---|
| | 2. விஞ்ஞான ஆராய்ச்சிக்காக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு வசதியளிப்பதற்கு, அத்தகைய ஆராய்ச்சித் திட்டத்தின் முடிவுகள் மீன்வள முகாமைத்துவம்,முறைப்படுத்துதல், பாதுகாப்பு,அபிவிருத்தி மற்றும் நிலைபேண்தகு பயன்பாடு அல்லது இச்சட்டத்தின் 107ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்தின் கீழ் அத்தகைய நிதியளிப்பு அனுமதிக்கப்படாத கரையோர சமூகங்களுக்கு குறிப்பிடத்தக்க நன்மை பயக்குமென்று நிரூபிக்கப்பட்டால், பணிப்பாளர் தலைமையதிபதி அறிவியல் ஆராய்ச்சிக்காக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு நிதி உதவியை வழங்கலாம்.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்றதன் முலம் எந்தவொரு ஆளும் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| வெளிநாட்டு ஆராய்சிசி அமைப்பு அல்லது பிறிதொரு அரசு மூலமான அறிவியல் ஆராய்ச்சி<br><br>பிரிவு 91 | இலங்கை நீர்ப்பரப்புகளில் அறிவியல் ஆராய்ச்சியை நடாத்துவதற்கு உத்தேசிக்கும் வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பின் அல்லது பிறிதொரு அரசின் தலைவர், கடல்சார் அறிவியல் ஆராய்ச்சியை தொடங்குவதற்கு எதிர்பார்க்கும் தேதிக்கு முன் மூன்று மாதங்களுக்கு குறையாதவாறு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல், பின்வருவனவற்றின் முழு விபரங்களுடன் ஆராய்ச்சித் திட்டமொன்றினை உள்ளடக்குதல் வேண்டும்:<br><br>அ)கருத்திட்டத்தின் தன்மையும் குறிக்கோள்களும்<br><br>ஆ)கலத்தின் பெயர், தொன்னளவு, வகை, வகுப்பு மற்றும் அறிவியல் உபகரண விபரம் அடங்கலாக பயன்படுத்தப்படவுள்ள முறைகளும் விதங்களும்<br><br>இ) கருத்திட்டம் நடாத்தப்படவுள்ள சரிநுட்பமான புவியில்சார் பிரதேசங்கள்<br><br>ஈ) கலம்(ங்கள்) வருவதற்கு இறுதியாக புறப்படுவதற்கு எதிர்பார்க்கும் திகதி அல்லது தோதானவாறு உபகரணங்களை இடுவதற்கு அகற்றுவதற்கு எதிர்பார்க்கும் திகதி<br><br>உ)அனுசரணை நிறுவனத்தின் பெயர், அதன் பணிப்பாளர் நாயகம் மற்றும் கருத்திட்டத்திற்கு பொறுப்பான ஆள் அத்துடன்<br><br>ஊ) இலங்கை இத்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு அல்லது பிரதிநிதித்தப்படுவதற்கு கருதும் அளவு.<br><br>(1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன்மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, உத்தேச அறிவியல் ஆராய்ச்சி திட்டத்தின் மதிப்பீடு பொருட்டு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி முகவரான்மை(நாரா) இனைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதுடன், ஏற்புடையதானவிடத்து அதன் மதியுரை சபைக்கும் ஒருங்கிணைப்புக் குழு(க்களு)க்கும் அறிவித்தலும் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பாதுகாப்புஅமைச்சுடன் நடாத்திய உசாவுகையின் பிற்பாடு வழங்கும் பரிந்துரையின் அடிப்படையில் அமைச்சரினால் பின்வரும் நிபந்தனைகளை புர்த்தி செய்தல் வேண்டும்.<br><br>கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி கருத்திட்டத்தில் இலங்கை விஞ்ஞானிகளுக்கு |

| | |
|---|---|
| | ஏதேனும் ஊதியக் கொடுப்பனவு இன்றி மற்றும் அக்கருத்திட்டத்தின் செலவு நோக்கிய பங்களிப்புக்கான கடப்பாடு இன்றி அத்தகைய கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி கருத்திட்டத்திற்கு குறிப்பாக ஆராய்ச்சி கலங்களில் அல்லது அறிவியல் ஆராய்ச்சி நிறுவல்களில் பிரயோகரீதியாக பங்குபற்றுவதற்கு அல்லது பிரதிநிதித்தப்படுவதற்கு, அவ்வாறு விரும்புவதாயின் இலங்கையின் உரிமை<br><br>ஆ) தோதான தேசிய அல்லது சருவதேச வழிகளினூடாக பிரயோகரீதியானவுடனே ஆராய்ச்சி பெறுபேறுகளை சருவதேசரீதியாக கிடைக்கச் செய்தல் வேண்டும்.<br><br>இ) ஆராய்ச்சியின் ஆரம்ப அறிக்கைகளை பிரயோகரீதியாக அத்துடன் ஆராய்ச்சி முடிந்த பின் இறுதி பெறுபேறுகள் மற்றும் முடிபுகளை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குவதற்கான வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பு அல்லது பிறிதொரு அரசு பொருட்டான கடப்பாடு<br>இ)கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி கருத்திட்டத்திலிருந்து பெறப்பட்ட எல்லா தரவுகளுக்கும் மாதிரிகளுக்கும் அணுகுவதற்கு, அத்தகைய தரவுகளின் மதிப்பீட்டுடன் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குவதற்கான வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பு அல்லது பிறிதொரு அரசு பொருட்டான கடப்பாடு<br>ஈ) தோதான தேசிய அல்லது சருவதேச வழிகளினூடாக பிரயோகரீதியானவுடனே ஆராய்ச்சி பெறுபேறுகளை சருவதேசரீதியாக கிடைக்கச் செய்தல் வேண்டும்.<br><br>உ)ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஏதேனும் முக்கியமான மாற்றம் பற்றி, பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவிப்பதற்கான வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பு அல்லது பிறிதொரு அரசு பொருட்டான கடப்பாடு அத்துடன்<br>வேறுவகையால் உடன்பட்டாலொழிய, ஆராய்ச்சி முடிந்தவுடனே அறிவியல் ஆராய்ச்சி நிறுவல்களை அல்லது உபகரணங்களை அகற்றுதல்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (3)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிக்குமிடத்து அவர், அத்தகைய நிராகரிப்புக்கான காரணத்தை விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஆகக்கூடிய நான்கு(4) மாதங்களினுள் வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பின் பிரதிநிதிக்கு அல்லது அரசுக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கை நீர்ப்பரப்புகளில் நடைமுறையிலுள்ள கடல்சார் நீா அறிவியல் ஆராய்ச்சி செயற்பாடுகள் (1) அல்லது (4) அல்லது அவையிரண்டும் ஆகிய உட்பிரிவுகளுக்கிணங்க நடாத்தப்படாதவிடத்து அவற்றை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கலாம் என்பதுடன் அதுபற்றி வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பிற்கு அல்லது பிறிதொரு அரசுக்கு எழுத்தில் அறிவித்தலும் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, (5)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய செயற்பாடுகளின் இடைநிறுத்தலுக்கு வழிவகுத்த நிலமையானது விதித்துரைத்த காலப்பகுதியில் சரிசெய்யப்படாதவிடத்து, கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி செயற்பாடுகளின் நிராகரிப்பினை எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.<br><br>கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின்போது பிடிக்கப்பட்ட மீன் மற்றும் கடல்சார் வளங்களை விற்றல் அல்லது விற்பதற்காக வழங்குதல் தடைசெய்யப்படுதல் வேண்டும்.<br><br>7(1), (3) மற்றும் (5) ஆகிய உட்பிரிவுகளை<br>மீறுகின்றதன் முலம் எந்தவொரு ஆளும் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>அமைச்சர், தேசிய நீரியல் வள ஆராய்ச்சி முகவரான்மை (நாரா) வின் மதியுரையின்பேரில், இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் இணங்கி கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |

| | |
|---|---|
| கடற்றொழில் தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்<br><br>பிரிவு **92** | பணிப்பாளர் தலைமையதிபதி, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரான்மை (‘நாரா’) வுடன் கலந்தாலோசித்து, இச்சட்டத்தின் (அ) பகுதியில் (1) ஆம் உட்பிரிவின் (3) ஆம் பிரிவில் தரப்பட்ட குறிக்கோளுக்கு பங்களிப்பதற்குத் தேவையான தகவல்களை கருத்திற்கொண்டு கடற்றொழில் துறையில் (‘தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்’) உயிரியல், சுற்றாடல்சார், தொழில்நுட்ப மற்றும் சமூகபொருளாதார தரவுகளின் சேகரிப்பு பொருட்டான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.<br><br>தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், அத்தகைய தரவுகளையும் வேறு ஏதேனும் இயைபான தகவல்களையும் அறிக்கையிடும் முகமாக சேகரிக்கப்படவுள்ள தரவுகளை, முறைகளை, நியம வடிவங்களை குறித்துரைத்தல் வேண்டும்.<br><br>தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், ஏனையவற்றுடன் பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கலாம்<br>அ) கடலில் அளவீடுகள்<br>ஆ) பரிசோதனைசார் கடற்றொழில்<br>இ) கப்பலில் அறிவியல் அவதானிகள்<br>ஈ) கரையேறும் இடங்களில்மீன்பிடிப்புகளின் மாதிரியெடுப்பு அத்துடன்<br>உ)கடற்றொழில் சார்புத் தரவுகள்.<br><br>அறிவியல் அவதானிகளைமீன்பிடிக் கலங்களில் கொண்டுசெல்லுமிடத்து கப்பற் தலைவன் அல்லது இயக்குபவர், நிகழ்ச்சித்திட்டம் முடிவடையும் வரையில் அத்துடன் (54) மற்றும் (114) ஆம் பிரிவுகளில் தரப்பட்ட வேறு ஏதேனும் நிபந்தனைகளின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவரை அனுமதிப்பதற்கு அவதானியுடன் ஒத்துழைப்பதை உறுதிசெய்தல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்கு நன்கொடை முகவரான்மைகளிகளிலிருந்து நிதியுதவியைப் பெறலாம்.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்றதன் முலம் எந்தவொரு ஆளும் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| தரவுகளை சேகரித்தல், ஊடுகடத்தல் மற்றும் அவற்றினைச் சரிபார்த்தல்<br><br>பிரிவு **93** | பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அவர் குறித்துரைக்கப்படற்பாலான அத்தயை விதத்தில் வடிவத்தில் பதிவதற்கு, பேணுவதற்கு மற்றும் ஊடுகடத்தல் (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைத்தவை அடங்கலாக இச்சட்டத்தின் நோக்கெல்லையின் கீழான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எவரேனும் ஆளுக்கு தேவைப்படுத்தலாம்:<br>மீன்பிடித்தல், கரையேறுதல் தொடர்புற்ற தரவுகள் மற்றும் தகவல்கள் அடங்கலாக அனைத்து இயைபான தரவுகள் மற்றும் தகவல்கள்<br>களஞ்சியப்படுத்தல், உணவு பாதுகாப்பு, பதனிடல், வாங்குதல், விற்றல், ஏற்றுமதி, இறக்குமதி, மீள் ஏற்றுமதி மற்றும் தொடர்புற்ற கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்ட தரவு மற்றும் தகவல் அடங்கலாக எல்லா இயைபான தரவுகள் மற்றும் தகவல்கள்<br><br>இ) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் அடங்கும் செயற்பாடுகளைுடன் தொடர்புற்ற எல்லா ஆவணங்கள், பதிவேடுகள், கணக்கீட்டு பதிவேடுகள், திரட்டுக்கள் மற்றும் வேறு தகவல்கள் அத்துடன்<br><br>ஈ) விதித்துரைக்கப்படற்பாலான அத்தகைய வேறு தரவுகள், தகவல்கள் மற்றும் |

ஆவணங்கள்.

பின்வரும் ஆட்கள் பிடித்த தரவு அறிக்கையிடும் தரவுப்புத்தகம், அத்தகைய வேறு கணக்கீட்டு பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை பேணுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் அல்லது அதன் செயற்படுத்தும் ஒழுங்குவிதிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய தரவுகளையும், தகவல்களையும் அனுப்புதலும் வேண்டும்:
இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட உரிமங்களையும் வேறு அதிகாரங்களையும் கொண்டிருப்போர்
இச்சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கலங்களின் உரிமையாளர் அல்லது இயக்குபவர்கள்
இ) மீன் அல்லது மீன் விளைபொருட்கள் பெறப்படும், வாங்கப்படும், களஞ்சியப்படுத்தப்படும்,கொண்டுசெல்லப்படும், பதனிடப்படும், விற்கப்படும் அல்லது வேறு வகையால் கைதியுதிர்க்கப்படும் ஏதேனும் வளாகங்களுக்குப் பொறுப்பான உரிமையாளர்கள் அல்லது இயக்குபவர்கள்

ஈ)மீன் அல்லது கடற்றொழில் விளைபொருட்களை பெறுதல், வாங்குதல், கொண்டுசெல்லுதல், பதனிடும், களஞ்சியப்படுத்தல், விற்றல், அல்லது கைதியுதிர்த்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஆட்கள்
மீன்களை எடுத்துச்செல்வதற்கு ஆட்களுக்கு வசதியளிக்கும் நோக்கத்திற்காக வாடகைக்கு கலங்களை வழங்கும் ஆட்கள்
விற்பனை நோக்கத்திற்காகவன்றி மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள்
இச்சட்டத்தின் கீழ் செற்பாட்டை, கலத்தினை அல்லது வேறு விடயங்களை பதிவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஆட்கள் அத்துடன்
இச்சட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் செயற்பாடுகளை மேற்கொள்ளும், இச்சட்டத்தின் கீழ் அவ்வாறு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய வேறு ஆட்கள்.

பணிப்பாளர் தலைமையதிபதி, (1) அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுத் தரவுகள், ஆவணங்கள், அல்லது தகவல்களின் செம்மைப்படுத்தல் நோக்கங்களுக்காக:
(1)ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்ட தகவல்களை கணக்காய்வுசெய்வதற்கு அல்லது பரீட்சிப்பதற்கு பணிக்கலாம்
இச்சட்டத்தின் கீழான ஏதேனும் கலம், பதப்படுத்தல் பொறித்தொகுதி அல்லது இயங்கும் வேறு வசதியை கணக்காய்வுசெய்வதற்கு அல்லது பரீட்சிப்பதற்கு பணிக்கலாம்.

இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்டு அனுப்பப்பட்ட ஏதேனும் தகவல்கள் உண்மையான, பூரணமான மற்றும் துல்லியமானதாக கருதப்படுதல் வேண்டும்.
எவரேனும் ஆளொருவர்:

அ) தகவல்களை பதிந்து அனுப்பவதற்கு (1)ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டு , அவ்வாறு செய்யாத, அல்லது
இச்சட்டத்தின் கீழ் அல்லது (2)ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய கணக்குகளையும் பதிவேடுகளையும் வைத்து தகவல்ளை அனுப்பவதற்கு தவறும் அல்லது

இ) (3)ஆம் உட்பிரிவின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட ஆய்வு அல்லது பரீட்சித்தல் பொருட்டான தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்காத, தெவாத அல்லது அவற்றுடன் அமைந்தொழுகாத,
ஆளெவரும்,

பாரதூரமான தவறொன்றைப் புரிகின்றார், ஆயின்ஒவ்வொரு உட்பிரிவும் பிரத்தியேக தவறொன்றை உருவாக்குகிறது என்பதுடன் குற்றவாளியாக்கப்பட்டதன்மேல் அட்டவணை ஐஐஐ இல் தரப்பட்ட தண்டனைக்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் கொண்டிருக்கும் இச்சட்டத்தை அனுசரித்து வழங்கப்பட்ட ஏதேனும் இயைபான உரிமம் அல்லது பதிவு, இடைநிறுத்தப்படல் வேண்டும் அல்லது இரத்துச்செய்யப்படல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் இயல்பான ஆளாக இருந்து

| | |
|---|---|
| | குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் குற்றப்பணத்துக்கு அல்லது சிறைப்படுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் கூட்டு அமைப்பு அல்லது ஆட்கள் குழுவாக இருந்து குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் குற்றப்பணத்தின் மட்டத்திற்கு (குற்றப்பணங்கள்) ஆளாதல் வேண்டும்.<br><br>(4)ஆம் உட்பிரிவை மீறுவதன்மூலம் பதியப்பட்டு அனுப்பப்பட்ட ஏதேனும் தகவல்கள் உண்மையற்ற, பூரணமற்ற மற்றும் துல்லியமற்ற தரவுகளை அல்லது தகவல்களை அனுப்பும் ஆளெவரும்இ பாரதூரமான தவறொன்றினைப் புரிகின்றார், என்பதுடன் அத்தகைய ஆள் கொண்டிருக்கும் இச்சட்டத்தை அனுசரித்து வழங்கப்பட்ட ஏதேனும் இயைபான உரிமம் அல்லது பதிவு, இடைநிறுத்தப்படல் அல்லது இரத்துச் செய்யப்படல் வேண்டும். |
| | **பகுதி VIII-<br>மீனின் தரம், உணவு பாதுகாப்பு, மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களின் வர்த்தகம்** |
| பொது குறிக்கோளும் விண்ணப்பமும்<br><br>பிரிவு **94** | இப்பிரிவில் தரப்பட்ட நடவடிக்கைகள் கடற்றொழில் விளைபொருட்களின் தரத்தையும் உணவு பாதுகாப்பையும் உறுதிசெய்யும் நோக்கத்தை செயற்படுத்துவதற்கு அத்துடன் இச்சட்டத்தின் 3(ங) ஆம் பிரிவில் தரப்பட்டவாறு அறுவடைக்கு பிந்திய இழப்புக்களை இழிவுபடுத்துவதற்கு பங்களித்தல் வேண்டும்.<br><br>இப்பிரிவிலுள்ள ஏற்பாடுகள், மனித நுகர்வு பொருட்டு அல்லது புதிய, உறைந்த அல்லது தகரத்திலடைக்கப்பட்டவடிவில் அல்லது வேறு ஏதேனும் பதனிடப்பட்ட அல்லது உயிர் வடிவில் இரையாக பயன்படுத்தப்படவுள்ள மீன்பிடித்தலில், மீன் பதனிடலில், ஏற்றுமதியில், இறக்குமதியில் மற்றும் மீள்ஏற்றுமதியில் ஈடுபடுகின்ற ஏதேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும். |
| மீனின் தரம், உணவு பாதுகாப்பு மற்றும் உணவு பாதுகாப்பு<br><br>பிரிவு **95** | மீன் பிடிக்கையில், அறுவடைசெய்கையில், மீன்பிடிக் கலங்களை கப்பலில் கையாளுகையில் மற்றும் களஞ்சியப்படுத்தல், கப்பலிலிருந்து பதனிடல், கடலிலும் தரையிலும் போக்குவரத்து, கரையிறங்குதல், ஏலவிற்பனை, தரையில் பதனிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக, சில்லறையாக விநியோகம் உள்ளிட்ட வழங்கல் சங்கிலி முழுவதும் உணவு பாதுகாப்பு மற்றும் அத்தகைய மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்கள் மனித நுகர்வுக்கு உகந்தன என உறுதிசெய்யும் முகமாக விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்கள் சுகாதாரரீதியாக கையாளப்படல் வேண்டும்.<br><br>மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களை உடைமையில் வைத்திருக்கையில், விற்பதற்காக காட்சிப்படுத்துகையில், விற்கையில் மற்றும் கொண்டுசெல்கையில் அத்தகைய பொருட்களின் கொள்வனவு, விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்தின் எல்லா கட்டங்களிலும் உணவு தரம் பற்றிய இழிவு சந்தைப்படுத்தல் நியமங்களுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்.<br><br>ஆள் எவரும், கலப்படம்செய்த, மாசுற்ற அல்லது ஏதேனும் நச்சுத்தன்மையான அல்லது தீங்குவிளைவிக்கக்கூடிய பதார்த்தம் கொண்ட அல்லது நோயாக்கிய நுண்ணுயிரியல் அடங்கிய மற்றும் சட்டரீதியான சோதனை நியமங்களை பூர்த்திசெய்யாத அல்லது வேறு வகையில் மனித ஆரோக்கியத்துக்கு ஊறுசெய்யும் மனித நுகர்வு பொருட்டு உத்தேசிக்கும் மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களை விற்றலோ அல்லது ஏற்றுமதிசெய்தலோ ஆகாது.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்றதன் முலம் எந்தவொரு ஆளும் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>அமைச்சர், மீன்பிடிப்பிலிருந்து சில்லறை கட்டம் வரை சோதனை நடாத்துதல் அடங்கலாக கடற்றொழில் விளைபொருட்கள் பொருட்டு தரத்தையும் உணவு |

| | |
|---|---|
| | பாதுகாப்பையும் உறுதிசெய்வதற்குத் தேவையான எல்லா நிபந்தனைகளை தீர்மானிப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| சட்டத்திற்கு முரணாகப் பெறப்பட்ட கடற்றொழில் விளை பொருட்களை வைத்திருப்பதற்கான மற்றும் விற்பதற்கான தடை<br><br>பிரிவு **96** | ஆள் எவரும், இச்சட்டத்தை அல்லது அதன் ஏதேனும் செயற்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறி பெற்றுக்கொண்ட மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களை அல்லது நீரியல் வளங்களை வாங்குதல், விற்றல், ஏற்றுமதிசெய்தல் அல்லது வேறு வகையில் வர்த்தகம் செய்தல் ஆகாது.<br><br>ஆள் எவரும், சட்டவிரோத, அறிக்கையிடப்படாத அல்லது முறைசாரா மீன்பிடித்தலை ஆரம்பித்தாக ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவத்தினால் பிரிக்கப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்பட்ட ஏதேனும் மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள்ஏற்றுமதி செய்தலாகாது.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்றதன் மூலம் எந்தவொரு ஆளும் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| குறிப்பிட்டசில மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள்ஏற்றுமதி<br><br>பிரிவு **97** | அமைச்சர், இலங்கை நீர்ப்பரப்புகளில் கடற்றொழில் வளங்களை பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தலுக்கான தேவையினைக் கருத்திற்கொண்டு வர்த்தகம் எனும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அவருக்கு அக்கட்டளையில் குறித்துரைக்கப்படற்பாலான அத்தகைய காலப்பகுதி பொருட்டு உயிர் மீன் அல்லது முட்டை, சினை அல்லது மீன்முட்டை அல்லது அதிலிருந்து தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொருட்கள் உள்ளிட்ட ஏதேனும் மீன் இனம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதி செய்தல் அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்தலை ஒழுங்குபடுத்தலாம்.<br><br>இப்பிரிவு, சுங்க கட்டளைச்சட்டம், விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டம், அல்லது வேறு ஏதேனும் இயைபான சட்டத்தின் ஏற்பாடுகளின் ஒரு பகுதியை உருவாக்குவதுபோல் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க பிரயோகித்தலும் வேண்டும். |
| கண்டறிதல் மற்றும் மீன்பிடிப்பு சான்றிதழ்<br><br>பிரிவு **98** | விற்பனைக்கு வழங்கப்படும், சந்தையில் விற்கப்படும் அல்லது சந்தைப்படுத்தப்படும் எல்லா கடற்றொழில் விளைபொருட்களும், பிடிப்பது முதல் சில்லறை விற்பனை கட்டம் வரை உற்பத்தி, செயலாக்கம் மற்றும் விநியோகம் ஆகிய எல்லா கட்டங்களிலும் விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க லேபலிடல் அல்லது இணைந்த ஆவணங்கள் ஊடாக தெளிவாகக் கண்டறியப்படல் வேண்டும்.<br><br>ஆள் எவரும், இச்சட்டத்தை அனுசரித்து விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க பிடித்த மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களை சட்டபூர்வமானத்தன்மையை செல்லலுபடியாக்கும் ஆவணம் அல்லது ஏற்புடையவிடத்து, செல்லுபடியான பிடிப்புச் சான்றிதழ் இல்லாமல் ஏதேனும் கடற்றொழில் விளைபொருட்களை ஏற்றுமதிசெய்யவோ, இறக்குமதிசெய்யவோ அல்லது மீள்ஏற்றுமதிசெய்யவோ கூடாது.<br><br>எல்லா மீன் இனங்களின் விவரங்களும், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைத்தவாறு இயைபான பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புகளின் புள்ளிவிவர ஆவணத் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்றதன் மூலம் எந்தவொரு ஆளும் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |

| | |
|---|---|
| | அமைச்சர், இச்சட்டத்தை அனுசரித்து கடற்றொழில் விளைபொருட்கள் பொருட்டு கண்டறிதல் தேவைப்பாடு பற்றிய ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| மீன் பதப்படுத்தல் தாபனங்களினைப் பதிவுசெய்தல்<br><br>பிரிவு **99** | ஆளெவரும் பணிப்பாளர் தலமையதிபதியினால் வழங்கப்படும் செல்லுபடியான உரிமம் இன்றி மீன் பதனிடல் தாபனம் ஒன்றினை தொழிற்படுத்தலாகாது.<br>பணிப்பாளர் தலைமையதிபதி உட்பிரிவு (1) இன் கீழ் உரிமம் வழங்குவதற்கு முன்னர்<br>அ. உத்தேசிக்கப்பட்ட பதனிடல் தாபனத்தின் திட்டங்கள் மற்றும் கட்டமைப்புக்களினை மதிப்பிடுதல் மறறும் அங்கீகரித்தல் வேண்டும்<br><br>ஆ.இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் உணவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் அமைந்தொழுகுவதனை கண்டறிவதற்காக குறித்த பதனிடல் தாபனங்களை பரீட்சித்தல் வேண்டும்.<br><br>இ.அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட ஏற்புடையதான தேவைப்படுத்தலகளை அந்த பதனிடல் தாபனங்கள் நிறைவுசெய்திருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.<br><br>அமைச்சர் , பணிப்பாளர் தலைமையதிபதியின் மதியுரையின் மேல் விதித்துரைப்பதற்கு பின்வரும் ஒழுங்குவிதிகளினை ஆக்கலாம்.<br>அ. மீன் பதனிடல் தாபனங்களின் தொழிற்பாட்டிற்கான தேவைப்பாடுகள்:<br><br>ஆ. கடற்றொழில் வளங்கள் பதனிடல் தாபனங்கள், குளிர் அறைகள், ஐஸ் தொழிற்சாலைகள், கடற்றொழில் வளங்கள் போக்குவரத்து வாகனங்கள், படகுகள் மற்றும் கரையிறங்கும் நிலையங்களிற்கான குறித்துரைப்புகள்:<br><br>இ. கடற்றொழில் வளங்கள் மற்றும் கடற்றொழில் விளை பொருள்களின் விற்பனையாளர்களின் செயற்பாடுகளிற்கான நிபந்தனைகள்:<br><br>ஈ. தர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தலை பதனிடும் தாபனங்களினால் மேற்கொள்வதற்கான தேவைப்பாடு:<br><br>உ கடற்றொழில் பதனிடல் தாபனங்களில் சேவையாற்றும் பணியாளர்களின் உடல்நல நிபந்தனைகள்:<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைத்தவாறு மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பற்றி அத்துடன் மீன் பதனிடல் தாபனங்கள் பற்றி இடாப்பு ஒன்றினைப் பேணுதல் வேண்டும்.ஏற்றுமதியாளர்கள்,இறக்குமதியாளர்கள் மற்றும் மீன் பதனிடும் நிறுவனங்கள் தமது ஏற்றுமதி,இறக்குமதி மற்றும் மீன் பதனிடல் தொடர்பான மாதாந்த தரவுகளை ஒரு மாத காலத்தினுள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| மீன் மற்றும் மீன்பிடி பொருட்களை பதனிடல், ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள்ஏற்றுமதி செய்வதற்கான உரிமமொன்றுக்கான விண்ணப்பம் | பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட உரிமத்தின் அனுமதியின் கீழ் தவிர, மற்றும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கிணங்க, சர்வதேசக் கடப்பாடுகளின்படி தாபிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, அழிவுக்குட்படும் உயிரினங்கள் மீதான சர்வதேச வர்த்தகம் பற்றிய சமவாயம் (CITES) மற்றும் சுங்க கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 235) மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டம் உள்ளடங்கலாக, ஆள் எவரும், மீன்களை பதனிடவோ, மீன் மற்றும் கடற்றொழில் விளைபொருட்களை ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ அல்லது மீள்ஏற்றுமதி செய்யவோ கூடாது. |

| | |
|---|---|
| பிரிவு **100** | உரிமம், முன்னமே இரத்துச்செய்ய அல்லது இடைநிறுத்தப்பட்டாலொழிய, வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்துக்கு செல்லுபடியாதல் வேண்டும். உரிமம், அதே காலப்பகுதிகளுக்காக புதுப்பிக்கப்படலாம்.<br><br>(1)ஆம் உட்பிரிவினை மீறுகின்ற எந்தவொரு ஆளும், தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>அமைச்சர், இச்சட்டத்தின் கீழ் மீன்களை பதனிடல், மீன் மற்றும் மீன்பிடி பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள்ஏற்றுமதி பொருட்டு புதுப்பித்தல், இரத்துச்செய்தல் மற்றும் இடைநிறுத்துதல் அடங்கலாக விண்ணப்ப வடிவம், விண்ணப்ப நடைமுறைகளை தீர்மானிப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| பதிவு மற்றும் உரிமங்களை இரத்துச்செய்தல் அல்லது இடைநிறுத்துதல்<br><br>பிரிவு **101** | பணிப்பாளர் தலைமையதிபதி, ஆளொருவர் உரிமத்தின் நியதிகளையும் ஏற்பாடுகளையும் அல்லது இப்பாகத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றவிடத்து, விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க மீறல்களின் தீவிரத்தன்மையை கருத்திற்கொண்டு விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க, முறையே 99 மற்றும் 100 ஆகிய பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவு மற்றும் உரிமத்தை இரத்துச்செய்யலாம் அல்லது இடைநிறுத்தலாம். |
| மேன்முறையீடுகள்<br><br>பிரிவு **102** | பதிவுச் சான்றிதழை அல்லது உரிமத்தை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு மறுக்கும் பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இடருறும் எவரேனும் ஆள், அம்முடிபு அவருக்கு தெரிவிக்கப்படும் தேதியிலிருந்து முப்பது(30) நாட்களுக்குள், விதித்துரைத்தவாறான அத்தகைய நடைமுறைகளின் கீழ், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.<br><br>செயலாளர், (2) ஆம் உட்பிரிவின் கீழான ஒரு மேன்முறையீட்டைக் கருத்திற்கொண்டு, விண்ணப்பதாரரால் மேன்முறையீடு பற்றிய அறிவிப்பைப் பெற்ற திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள், அதன் காரணங்களுடன் முடிவை மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.<br><br>செயலாளரின் முடிபினால் இடருறும் எவரேனும் ஆள், சட்டப் பிரச்சினை தொடர்பாகஇ அத்தகைய முடிபு தெரிவிக்கப்படும் தேதியிலிருந்து முப்பது(30) நாட்களுக்குள், சட்டம் தொடர்பான பிரச்சினையின் போது , மேன்முறையீடொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தலாம். |
| களஞ்சியங்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் நிறுவனங்களை பரிசோதித்தல்<br><br>பிரிவு **103** | 1. மீன், மீன் உற்பத்திப் பொருட்கள் அல்லது மீன் பதப்படுத்தும் நிலையங்களின் ஒவ்வொரு இறக்குமதியாளர்,ஏற்றுமதியாளர்,மீள் ஏற்றுமதியாளர், உரிமையாளர் அல்லது உரிமதாரர், எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும் குறிப்பிட்ட நிறுவனத்திற்குள்,களஞ்சியத்திற்குள் அல்லது இறக்குமதி செய்யும் இடத்திற்குள் முன்னறிவித்தலின்றி நுழைவதற்கும், மாதிரிகள், தரவுகள் மற்றும் ஆவணங்களை பரிசோதிப்பதற்கும், சேகரிப்பதற்கும் அனுமதித்தல் வேண்டும்.<br><br>2. (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசோதனையை மேற்கொள்ளும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், பரிசோதனையின் முடிபுகளுக்கு அமைவாக ஏழு (7) நாட்களுக்குள் பரிசோதனை அறிக்கையை பணிப்பாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>3. உட்பிரிவு (1) இன் விதிகளை மீறுகின்ற மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தும் நிறுவனத்தின் இறக்குமதியாளர்,மீள் ஏற்றுமதியாளர், உரிமையாளர் அல்லது உரிமதாரர் ஆகியோர் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| தகுதிவாய்ந்த அதிகாரி<br><br>பிரிவு **104** | பணிப்பாளர் தலைமையதிபதி, ஏற்றுமதி பொருட்டான சுகாதார சான்றிதழ்கள் மற்றும் மீன்பிடி சான்றிதழ்களை வழங்குதல் உள்ளடங்கலாக, மீன் மற்றும் கடற்றொழில் பொருட்களை சோதித்து சான்றளிக்கும் பொருட்டான தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பரிசோதிக்கப்பட்ட மீன் அல்லது கடற்றொழில் பொருட்களில் தலையிடுதல்<br><br>பிரிவு **105** | பணிப்பாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியைத் தவிர ஆளெவரும்:<br><br>அ) அந்நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் சோதிக்கப்பட்ட மீன் அல்லது கடற்றொழில் பொருட்களைக் கொண்ட கொள்கல னொன்றுக்கு அல்லது கொள்கலன் முறைமை அலகுக்கு பயன்படுத்தப்படும் வர்த்தக விவரணம், இலச்சினை, முத்திரை அல்லது பிற குறியை அகற்றுதல், மாற்றுதல் அல்லது தலையிடுதல் ஆகாது.<br><br>ஆ) அந்நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பரிசோதிக்கப்பட்டதாக சான்றளிக்கப்பட்ட ஏதேனும் மீன் ஒப்படையின் உள்ளடக்கத்துக்கு சேர்க்கவோ, அதிலிருந்து அகற்றவோ அல்லது வேறுமாற்றங்களை செய்தல் ஆகாது; அல்லது<br><br>இ) அந்நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பரிசோதிக்கப்பட்ட ஏதேனும் பெட்டிகள் பொறியிடாது இருத்தல் அல்லது பொறியிடாது வைத்தலோ ஆகாது.<br><br>(1)ஆம் உட்பிரிவை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பண மட்டத்தில் ஏதேனும் ஏற்புடைய தண்டப்பண அளவு ஏற்புடையதாதல் வேண்டும், இதற்கு மேலதிகமாக, ஏதேனும் மீன் அல்லது கடற்றொழில் பொருட்களை அரசுக்கு உடமையாக்கப்படுதல் வேண்டும். |
| இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படுகின்ற மீன் மற்றும் மீன்பிடி பொருட்களுக்கு செஸ் வரியை விதித்தல்<br><br>பிரிவு **106** | இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் மீன் அல்லது கடற்றொழில் பொருட்களுக்கு பாராளுமன்றத்தால் தீர்மானத்தின் மூலம் அவ்வப்போது ஏற்றுக்கொள்ளப்படற்பாலான அத்தகைய வீதத்தில் வேறேதும் எழுத்திலான சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் ஏதேனும் தீர்வைக்கு மேலதிகமாக, செஸ் வரியொன்று விதிக்கப்படுதல், அறவிடப்படுதல் மற்றும் மீளஅறவிடப்படுதல் வேண்டும்.<br><br>செஸ் வரியானது, சுங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்பட்டு, 107 ஆம் பிரிவை அனுசரித்து உருவாக்கப்பட்ட நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.<br><br>இப்பிரிவு, சுங்க கட்டளைச்சட்டத்தின் ஒரு பகுதியை உருவாக்குவது போல் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளைச்சட்டத்தின ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையதாதலும் வேண்டும். |
| | **பாகம் IX – கடற்றொழில் நிதியம் மற்றும் கடற்றொழில் மானியங்கள்** |
| கடற்றொழில் நிதியம்<br><br>பிரிவு **107** | கடற்றொழில் நிதியம் (“.........நிதியம்”) இத்தால் உருவாக்கப்படுகிறது.<br><br>நிதியத்திற்கு பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும் :<br><br>அ) நிதி எனும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் உடன்பாட்டிற்கு உட்பட்டு இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்படும் எல்லா குற்றப்பணங்கள் மற்றும் தண்டப்பணங்களின் ஐம்பது சதவீதம் 50%:<br>ஆ) (133) ஆம் பிரிவிற்கிணங்க தவறொன்றை சமரசமாக தீப்பதன்மூலம் பெறுகின்ற எல்லா பணங்கள்;<br>இ) இச்சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை கையுதிர்ப்பதன்மூலம் பெறுகின்ற எல்லா பணங்கள்;<br>ஈ) இச்சட்டத்தின் (106)ஆம் பிரிவிற்கிணங்க அனுகலாக சுங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்படும் எல்லா பணங்கள்.<br>உ) (72)ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் குழு வொன்றை ஒழித்து முடித்ததன் பின்னர் எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகை;<br>ஊ) கடற்றொழில் அபிவிருத்திக்காக நன்கொடையாக பெறுகின்ற எல்லா பணங்கள் மற்றும் சேகரிக்கப்படுகின்ற கொடுப்பனவுகள்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, நிதியத்தின் நிர்வாகத்துக்கு பொறுப்பாதல் வேண்டும். |

| | |
|---|---|
| | பணிப்பாளர் தலைமையதிபதி அவ்வப்போது நிதியத்திலிருந்து :<br><br>அ) (5)ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு வெகுமதி வழங்குவதற்கு;<br>ஆ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைத்த உச்சளவை விஞ்சாத அத்தகைய பணத்தொகையை எவரேனும் தகவலாளருக்கு வழங்குவதற்கு;<br>இ) (90)ஆம் பிரிவின் கீழ் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடும் மீனவர்களுக்கு தவணைப் பணம் கொடுப்பதற்கு;<br>ஈ) (92)ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் தரவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்வதற்கு கடற்றொழில் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு;<br>உ) (86)ஆம் பிரிவின் கீழ் கைவிடப்பட்ட, தொலைந்த அல்லது அகற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்களை மீளப்பெறுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் செயல்களையும் விருத்திசெய்வதற்கு கடற்றொழில் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு, அல்லது;<br>ஊ)இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வரும் வேறு ஏதேனும் விடயம்.<br><br>கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவர் நியமிக்கும் அத்தகைய கணக்காய்வாளர், அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரைக்கிணங்க நிதியத்தின் கணக்குகளை ஆண்டுதோறும் கணக்காய்வு செய்தல் வேண்டும் என்பதுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை, (9) ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியின் வருடாந்த நிருவாக அறிக்கையில் காணப்படுதலும் வேண்டும்.<br><br>(2) ஆம் உட்பிரிவின் கீழ், நிதியத்துக்கு செலுத்தப்படவுள்ள சதவீதத்தை மற்றும் இச்சட்டத்தின் நோக்கெல்லையின் கீழான ஏற்பாடுகளின் செயற்படுத்தலுக்கு தேவையான வேறு ஏதேனும் நடவடிக்கைகளை தீர்மானிக்கும் முகமாக நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| கடற்றொழில் மானியங்கள் மற்றும் உதவிகள்<br><br>பிரிவு **108** | நிதியத்தின் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க வளத்தின் கீழ் பின்வரும் ஆளுக்கு அல்லது கப்பற்தலைவர்,உரிமையாளர், இயக்குபவர்,வாடகைக்கு பெற்றவர்,படகில் பயணிக்கும் அல்லது பயணித்ததாக சந்தேகிக்கும் ஒரு ஆளுக்கு நிதியுதவி அளித்தல் தடைசெய்யப்படுதல் வேண்டும்:<br><br>அ) இச்சட்டத்தின் கீழ் கடுமையான மீறுதல்களை புரிந்துள்ளவர்; அல்லது<br>ஆ) இலங்கை அங்கத்துவம் வகிக்கும் எந்தவொரு பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பின் சட்ட விரோதமான, ஒழுங்குபடுத்தப்படாத, அறிக்கையிடப்படாத கப்பல் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மீன்பிடிக் கப்பலின் இயக்கம், முகாமைத்துவம் அல்லது உரிமையில் ஈடுபட்டுள்ளார்.<br>இ) அறிவியல் அறிக்கைகளின் அடிப்படையில் இனங்கண்ட மீன்பெருக்க அடர்த்தியை விட அதிகமாக மீன் வளங்களை பிடிக்கும் ஆளொருவருக்கு<br><br>2.நிதி உதவி (1)ஆம் உட்பிரிவின் கீழ், ஆளொருவருக்கு அல்லது நடவடிக்கைக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அத்தகைய உதவித்தொகை குறித்த கப்பற்தலைவர்,உரிமையாளர்,இயக்குபவர்,வாடகைக்கு பெற்றவர்,படகில் பயணிக்கும் அல்லது பயணித்ததாக சந்தேகிக்கும் ஆளிடமிருந்து மீள அறவிடப்படுதல் வேண்டும். |
| | **பாகம் X - கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் அவதானிப்பு. அமுலாக்கம்.** |
| | **அத்தியாயம் 1 – கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் அவதானிப்பு** |
| துறைமுக பிரவேசம்<br><br>பிரிவு **109** | இலங்கையில் தங்கள் பிடிகளை தரையிறக்கவோ, கப்பல்மாற்றவோ அல்லது பிற துறைமுக சேவைகளைப் பயன்படுத்தவோ விரும்பும் அனைத்து கப்பல்களும், பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து விதித்துரைத்த அங்கீகாரத்தைப் பெற்று, அதற்கான அனைத்து கட்டணங்களையும் செலுத்தியதன்மேல் கடற்றொழில் குறித்தளிக்கப்பட்ட துறைமுகத்திற்குள் நுழைதல் வேண்டும்.<br><br>(1)ஆம் உட்பிரிவின் கீழ் குறித்தளிக்கப்பட்ட துறைமுகங்களில் கரையேறாத எல்லா சிறிய அளவு மீன்பிடிக்கலன்கள், கடற்றொழில் குறித்தளிக்கப்பட்ட கரையிறங்கும் |

| | |
|---|---|
| | ஸ்தலங்களில் அல்லது நங்கூரமிடும் இடங்களில் அவர்களது பிடித்தவற்றை கரையிறக்குதல் வேண்டும்.<br><br>கடற்றொழில் பொருட்களைக் கொண்ட இலங்கையில் மீன்பிடி அல்லாத துறை முகங்களில் கரையிறங்கும் அனைத்து கொள்கலன் சரக்குக் கப்பல்களும், குறிப்பிட்ட கப்பலில் உள்ள அளவுகளை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் 96 மற்றும் 98 ஆகிய பிரிவுகளுக்கு அமைந்தொழுகுவதாக இருத்தலும் வேண்டும்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற மீன்பிடிக் கலனின் அல்லது துணைக் கலனின் கப்பற்தலைவர், உரிமையாளர், இயக்குபவர்,அல்லது வாடகைக்கு பெற்றவர் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும். |
| கலன் கண்காணித்தல் முறைமை (VMS)<br><br>பிரிவு **110** | எந்தவொரு இலங்கைக் கப்பலும் தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மற்ற சூழ்நிலைகளில், முழுமையாக செயற்படும் செயற்கைக்கோள் அடிப்படையிலான கலன் கண்காணிப்பு அமைப்பு (VMS) கப்பலில் நிறுவப்படாவிட்டால், அந்த கப்பலை தானாகவே கண்டறிந்து அடையாளங்காணவும், நிலையான தரவுகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்திற்கு (FMC) அனுப்பவும் அனுமதிக்கப்படுதலாகாது.<br><br>இலங்கையின் தேசிய நியாயாதிக்கத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் மற்றும் விடயத்திற்கேற்ப வேறு எந்த சூழ்நிலையில் மீன்பிடித்தலை நடத்தும் மீன்பிடிக் கலமொன்றின் உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் உரிமத்தின் நிபந்தனையொன்றாக, இச்சடட்த்திற்கிணங்க அல்லது விதித்துரைத்த ஒழுங்குவிதிகளுக்கிணங்க கலன் கண்காணிப்பு முறைமை (VMS) ஒன்றை நிறுவி, பராமரித்து இயக்குதல் வேண்டும்.<br><br>கப்பலில் பொருத்தப்பட்டுள்ள கலன் கண்காணிப்பு முறைமை (VMS) பின்வருமாறு காணப்படுதல் வேண்டுமென்பதை இயக்குபவரின் உரிமையாளர் உறுதிசெய்தல் வேண்டும்:<br><br>அ) எல்லா நேரங்களிலும் முழுமையாக செயல்படும்;<br><br>ஆ) சேதப்படுத்துதல், தவறான நிலைகளின் உள்ளீட்டைத் தடுத்தல், கைமுறையாகவோ, இலத்திரனியல்ரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ அதிகப்படியான செயல்திறனைக் கொண்டிருத்தலாகாது, அத்துடன் பின்வருமாறு:<br><br>i.சீல் வைக்கப்பட்ட அலகிற்குள் அமைந் துள்ளது; அத்துடன்<br><br>ii. அலகு அணுகப்பட்டுள்ளதா அல்லது சிதைக்கப்பட்டுள்ளதா என்பதைக் குறிக்கும் வகையிலான அதிகாரப்பூர்வ முத்திரைகளால் பாதுகாக்கப்பட்டுள்ளதாக கப்பற்தலைவர்,பணியாளர்கள் அல்லது இயக்குபவர் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.<br><br>இ) பின்வரும் தகவல்களை குறைந்தது நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை அல்லது பரிந்துரைக்கப்பட்டவாறு கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்திற்கு அனுப்புதல்:<br><br>i. கப்பல் அடையாளம்<br>ii. கப்பலின் தற்போதைய புவியியல் நிலை (நெட்டாங்கு, அகலாங்கு) 500 மீட்டருக்கும் குறைவாக 99% நம்பிக்கை மட்டத்தில் இருக்க வேண்டும்<br>iii. கப்பலின் குறிப்பிட்ட நிலையை நிர்ணயிப்பதற்கான திகதி மற்றும் நேரம் (UTC இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது); அத்துடன், |

| | |
|---|---|
| | iv. மீன்பிடிக் கலத்தின் வேகம் மற்றும் போக்கு.<br><br>கடற்றொழில் கலனின் கப்பற்தலைவர்,உரிமையாளர்,இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய வேறு நிபந்தனைகள் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தும் பின்வரும் நிபந்தனைகளுடன் அமைந்தொழுகுதல் வேண்டும்:<br><br>அ) பயன்படுத்தப்படவுள்ள கலன் கண்காணித்தல் முறைமையின் வகை ;<br>ஆ) நிறுவுதல் நடைமுறைகள்;<br>இ) செயல்பாட்டு தேவைப்பாடுகள்;<br>ஈ) தகவல் தேவைப்பாடுகள்;<br>உ) அந்தரங்கத்தன்மை; அத்துடன்<br>ஊ) பிரகடன அறிக்கைகள்.<br><br>MTU அல்லது பிற சாதனம் விதித்துரைத்த தேவைப்பாடுகளுக்கு இணங்க செயல்படுவதை நிறுத்தும்போது கடற்றொழில் கலனின் கப்பற்தலைவர்,உரிமையாளர்,இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் உடனடியாக பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேறு வகையால் அதிகாரமளிக்கப்பட்டால் தவிர, கலன் மீன்பிடிப்பதை நிறுத்தச் செய்வித்தலும் வேண்டும்.<br><br>இந்தப் பிரிவின் விதிகளை மீறும் கடற்றொழில் கலனின் கப்பற்தலைவர், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் கடுமையான குற்றத்தைச் செய்கின்றார், என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் பொருத்தமானதாகக் கருதும் காலத்திற்கு உரிமத்தை இடைநீக்கம் செயதல் வேண்டும். குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும் என்பதுடன், ஒரு வருடத்திற்கு விஞ்சாத காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். மேலும், மீன்பிடித் துறைமுகத்தின் வருகையில் கப்பல்கல கண்காணிப்பு முறைமை (VMS) கப்பல் தடத் தரவை வழங்கத் தவறும் கடற்றொழில் கலனின் கப்பற்தலைவர், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் அத்தகைய மீன் பொருட்களை விற்கவோ அல்லது ஏற்றுமதி செய்யவோ அனுமதி வழங்கப்படுதலாகாது.<br><br>இச்சட்டத்தின் கீழ் மீன்பிடிக் கப்பல்களின் செயற்பாடுகளை கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய நோக்கங்களுக்காக கப்பல்கள் கண்காணிப்பு முறைமையின (VMS) பணிப்பாளர் தலைமையதிபதி நிறுவி, இயக்குதல் வேண்டும்.<br><br>இந்த சட்டத்தின் எல்லைக்குள் தேவைப்படும் கப்பல்கல கண்காணிப்பு முறைமையின் (VMS) செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான நிபந்தனைகளை அமுல்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை அமைச்சர் உருவாக்க முடியும். |
| **கலம் மாற்றி ஏற்றுதல்**<br><br>பிரிவு **111** | கடலில் கலம் மாற்றி ஏற்றுதல், இச்சட்டத்தினால் அல்லது அதன் ஏதேனும் ஒழுங்குவிதியினால் அனுமதிக்கப்பட்டாலேயொழிய, தடை செய்யப்படுதல் வேண்டும்.<br><br>கலம் மாற்றி ஏற்றுதலானது, குறித்தளிக்கப்பட்ட நிலையங்கள் அல்லது மீன்பிடித் துறைமுகத்தில், அந்த நேரத்தில், இடத்தில் மற்றும் இச்சட்டத்திற்கிணங்கத் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்ற அத்தகையவற்றின் அடிப்படையில், அதன் ஏதேனும் நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதிக்கு மட்டுமே அதிகாரமளிக்கப்படுதலும் மேற்கொள்ளப்படுதலும் வேண்டும்.<br><br>மேலே கூறப்பட்ட உட்பிரிவு (2) இற்கு அமைய கலமேற்றலில் ஈடுபடுவதற்கு உத்தேசிக்கும் இலங்கை மீன்பிடிக் கலம் அல்லது துணைக் கலம் ஒன்றின் |

தலைவர்,உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர்:

அ)விதித்துரைத்த படிவம் மற்றும் நிபந்தனைக்கு இணங்க அத்துடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின்பேரிலும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட கலமேற்றல் உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் மாத்திரம் கலம் மாற்றி ஏற்றல் வேண்டும்;

ஆ) கலம் மாற்றி ஏற்றுவதற்கான நேரம் மற்றும் இடத்தில் அத்துடன் இச்சட்டத்திற்கு இணங்க தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள், அதன் ஏதேனும் நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு விதியில், அல்லது ஓர் ஏற்புடைதான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் மாத்திரம் கலம் மாற்றி ஏற்றல் வேண்டும்;

இ)நாற்பத்தியெட்டு (48) மணித்தியால முன்னறிவித்தல், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவான அத்தகைய ஏனைய முன்னறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும். தலைவர்,உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் கலத்தில் உள்ள கடற்றொழில் பொருள்களில் எவையேனும் அல்லது முழுவதும் கலம் மாற்றி ஏற்றுவதற்குக் கோரலாம் என்பதுடன் கலமேற்றுவதற்கு முன்னர் மீன்பிடிக் கலத்தில் உள்ள மீனின் அளவுகள், கலமேற்றப்படவுள்ள அளவுகள் மற்றும் தோதானவாறாக கலமேற்றுவதற்கு முன்னர் கலத்தில் கொண்டு செல்லும் அளவினையும் அறிக்கை செய்தல் வேண்டும் ; அத்துடன்,

ஈ)அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி யினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, கலம் மாற்றி ஏற்றுவதற்கு முன்னர் மற்றும் கலம் மாற்றி ஏற்றும்பொழுது கடற்றொழில் பரிசோதகர் அல்லது அவதானி இட வைப்பு உள்ளடங்கலாக, அத்தகைய விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுடன் அமைந்தொழுகுதல்
கலம் மாற்றி ஏற்றப்பட்ட அளவு மற்றும் இனங்கள் உள்ளடங்கலாக தரவுகளினைப் பெற்றுக் கொள்வதற்கும் சரிபார்ப்பதற்கும் ; அத்துடன்,

கலம் மாற்றி ஏற்றல் பூர்த்தியான பொழுது, விதித்துரைக்கப்பட்ட அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேறு வகையினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறாக தீர்மானிப்பதற்கு:

கலம் மாற்றி ஏற்றல் நடாத்தப்பட்ட இலங்கை கலம் ஒன்றின் தலைவர்,உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் அட்டவணை III இன் கீழ் கலம் மாற்றி ஏற்றல் பிரகடனத்திற்கு அமைய நிகழ்வினை ஆவணமாக்கல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு கலம் மாற்றி ஏற்றல் பிரகடனத்தினை உள்ளடக்கும் பதிவேட்டினைக் கலத்தில் கொண்டு செல்லலும் வேுண்டும், அத்துடன் கலம் மாற்றி ஏற்றல் பிரகடனத்தின் பிரதி ஒன்று கொண்டு செல்லும் கலத்தில் கலம் மாற்றி ஏற்றப்பட்ட மீன் பற்றிய பதிவேட்டினையும் சேர்த்துக் கொண்டு செல்லல் வேண்டும்.

வெளிநாட்டு கொடியுடைய கலங்கள் மூலம் கலம் மாற்றி ஏற்றல் நடவடிக்கைகள் பிரிவு 113 மற்றும் ஏதேனும் நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதியின் கீழ் துறைமுக அரசின் நடவடிக்கைகளுக்கு உட்படல் வேண்டும்.

இப்பிரிவின் ஏற்பாடுகளினை மீறும் ஏவரேனும் தலைவர,உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

அமைச்சர், இச்சட்டத்தின் நோக்கெல்லை அல்லது இலங்கை மீது பிணிக்கும் ஏதேனும் சர்வதேச கடப்பாட்டின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு கலம் மாற்றி ஏற்றுதல் தொடர்பாக நடவடிக்கைகளினை நடைமுறைப்படுத்துவதற்கு

| | |
|---|---|
| | ஒழுங்குவிதிகளினை ஆக்கலாம். |
| **கரையிறங்கல்கள்**<br><br>பிரிவு **112** | இலங்கை நீர்ப்பரப்பிற்கு வெளியே பிடிக்கப்பட்ட மீனைக் கொண்டுசெல்லும் கலம் ஒன்றின் தலைவர்,உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் பெயரிடப்பட்ட துறைமுகங்களில் அல்லது மீன்பிடித் துறைமுகங்களில் மற்றும் இலங்கையில் நங்கூரமிடப்பட்டவற்றிலும் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரால் வழங்கப்பட்ட இறங்கல் அதிகாரமளித்தல் அதிகாரியின் கீழும் மாத்திரம் மீனை தரையிறக்குதல் வேண்டும்.<br><br>தரையிறக்கங்கள், வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் தரையிறங்கும் பிரகடனத்திற்கு ஏற்ப ஆவணப்படுத்தப்படுதல் வேண்டும்.<br><br>இலங்கை நீர்ப்பரப்பிற்கு வெளியே பிடிக்கப்பட்ட மீனைக் கொண்டு செல்லும் கலம் ஒன்றின் தலைவர், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் குறித்தளிக்கப்பட்ட துறைமுகங்களில் அல்லது மீன்பிடித் துறைமுகங்களில், இறங்கு தளங்கள் அல்லது நங்கூரமிடப்பட்டவற்றில் மாத்திரம் மீனை இறக்குதல் வேண்டும்.<br><br>அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் அத்தகைய இறங்கல்களினைக் கட்டுப்படுத்தும் முகமாக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்க மாதிரியெடுப்புகளை நடத்துதல் வேண்டும்.<br><br>வெளிநாட்டு மீன்பிடி கலன்களினால் மீன்களை இறக்குதலானது, 113 ஆம் பிரிவு மற்றும் இதன் ஏதேனும் செயற்படுத்தல் ஒழுங்குவிதியின் கீழ் துறைமுக அரசு வழிமுறைகளுக்கு அமைவாதல் வேண்டும்<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் கப்பலின் தலைவர்,உரிமையாளர், இயக்குபவர்,வாடகைக்கு பெற்றவர் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>அமைச்சர், இச்சட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் அல்லது இலங்கைமீது பிணிக்கப்படும் ஏதேனும் சர்வதேச கடப்பாட்டின் கீழ் தேவைப்படும் கரையிறக்கங்கள் குறித்த விதிகளை செயல்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். |
| **வெளிநாட்டுக் கொடியுடைய கலன்களுக்கான துறைமுக அரசு நடவடிக்கைகள்**<br><br>**பிரிவு 113** | பணிப்பாளர் தலைமையதிபதி வர்த்தமானியில் பகிரங்க அறிவித்தல் மூலம் துறைமுகங்களினை பெயரிட்டு வெளியிடல் வேண்டும் என்பதுடன் அவர் இயைபான பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புக்கள் (RFMO) மற்றும் உணவு, விவசாய அமைப்புக்கு (FAO) உடனடியாக அனுப்பப்பட வேண்டிய அத்தகைய குறித்தளித்தலினை செய்வித்தல் வேண்டும் அத்தகைய துறைமுகங்களின் குறித்தளித்தலில் ஏதேனும் மாற்றங்களினை அறிவித்தல் வேண்டும்.<br><br>வெளிநாட்டுக் கலங்கள் தரையிறங்குகை, கலமேற்றல், முன்னர் தரையிறக்கப்படாத மீன் பொதியிடல், அல்லது பதப்படுத்தல் அல்லது மீள் எரிபொருள் நிரப்பல் மற்றும் மீள் வழங்கல், பராமரிப்பு மற்றும் கரையில் பழுதுபார்த்தல் அடங்கலாக ஏனைய துறைமுக சேவைகளுக்கான நோக்கத்திற்காக இலங்கையில் பெயரிடப்பட்ட துறைமுகங்களில் மாத்திரம் உட்பிரவேசித்தில் வேண்டும்.<br><br>இலங்கையில் பெயரிடப்பட்ட துறைமுகம் ஒன்றிற்கு பிரவேசிக்கும் ஏதேனும் வெளிநாட்டுக் கலம் இதன் பகுதி மற்றும் அதன் ஏதேனும் நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதிக்கு உட்படல் வேண்டும்.<br><br>அட்டவவணை (3) உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடு எது எப்படியிருப்பினும், வெளிநாட்டு கொள்கலன் கலங்கள் அவை உள்ள இடத்தில் உள்ள துறைமுக அரசு நடவடிக்கைள் விலக்களிக்கப்படல் வேண்டும்:<br><br>**அ**)கடற்றொழில் விளைபொருள்களினைக் கொண்டு செல்லாத, அல்லது:<br>**ஆ**) முன்னர் இறக்கப்பட்டிருக்காத கடற்றொழில் விளை பொருள்களினைக் |

| | |
|---|---|
| | கொண்டுசெல்லும் பொழுது ஆயின் IAA மீன்பிடியில் ஈடுபட்டிருத்தலினை சந்தேகிக்காத அத்தகைய கொள்கலன்<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, ஓரளவு சாத்தியத்திற்கு, சருவதேச சட்டத்திற்கு அமைய துறைமுக அரசு நடவடிக்ககைளினை எடுப்பதன் மூலம் சருவதேச பேணல் மற்றும் முகாமைத்துவத்தின் செயல் வலுவினை ஊக்குவித்தல் வேண்டும். அவர் ஏதேனும் அரசின் கலங்களுக்கெதிராக வடிவில் அல்லது நிகழ்வில் பாகுபாடு காட்டலாகாது, அத்துடன் அவற்றிற்கிடையில்:<br>**அ**) அதன் துறைமுகங்களில் அல்லது அதன் கரையோர முனையங்களில் தன்னிச்சையாக மீன்பிடிக் கலங்களில் உள்ள ஆவணங்கள், மீன்பிடி உபகரணம் மற்றும் பிடித்தவற்றின் பரிசோதிப்பினைத் தேவைப்படுத்தலாம்.<br><br>**ஆ**) சருவதேச பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் அல்லது விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேவைப்பாடுகளுக்கு அமைய அல்லது அவையிரண்டின் செயல்வலுத் தன்மையினை வலிதற்றதாக்கும் விதத்தில் பிடித்தல் எடுக்கப்பட்டது என்று நிலைநாட்டுமிடத்து, தரையிறங்கல், கலம் மாற்றி ஏற்றல் மற்றும் துறைமுக சேவைகளின் உபயோகத்தினைத் தடைசெய்தல்.<br><br>இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற வெளிநாட்டு மீன்பிடிக் கலம் ஒன்றின் தலைவர், உரிமையாளர், இயக்குபவர் அல்லது வாடகைக்கு பெற்றவர் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன், அந்தக் கலத்தின் கொடி அரசுக்கு செயலுக்கு பங்கமின்றியும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் தரப்பட்டுள்ள குற்றப்பணத்தின் மட்டத்திற்கு ஆளாதலும் வேண்டும்.<br><br>அமைச்சர் இலங்கையில் பெயரிடப்பட்ட துறைமுகங்களுக்கு உட்பிரவேசிக்கும் வெளிநாட்டுக் கொடியுடைய கலங்களுக்கான துறைமுக அரசு நடவடிக்கைகளினை நடைமுறைப்படுத்தலின் நோக்கங்களிற்காக ஒழுங்குவிதிகளினை இச்சட்டம் மற்றும் இயைபன சர்வதேச சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஆக்கலாம். |
| **அவதானி நிகழ்ச்சித்திட்டம்**<br><br>**பிரிவு 114** | பணிப்பாளர் தலைமையதிபதி விஞ்ஞான, கண்காணிப்பு, முகாமைத்துவம் மற்றும் அமைந்தொழுகும் நோக்கங்களுக்காக நம்பகரமான மற்றும் துல்லியமான தகவல்களினை சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல் நோக்கத்திற்காக அவதானி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினைத் தாபித்தல் வேண்டும்:<br><br>அவதானிகள், இச்சட்டம் ஏதேனும் ஏற்புடையதான சருவதேச உடன்படிக்கை |

| | |
|---|---|
| | அல்லது ஒழுங்குகளிற்கு அமைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் பணிப்புரை செய்யப்பட்டவாறு மீன் பிடித்தலுக்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் கலம் அல்லது இலங்கை நீர்ப்பரப்புகள் மற்றும் துறை முகங்கள், தேசிய நியாயாதிக்கத்திற்கு அப்பாலுள்ள பிரதேசங்கள் மற்றும் இச் சட்டத்தின் நோக்கெல்லையினுள் வரக்கூடியவாறான அத்தகைய வேறு உபயோகங்களில் மீனினை ஏற்றியிறக்கல் அல்லது இறக்குதல் அல்லது அவையிரண்டினையும் செய்தலுக்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் கலத்தில், மற்றுமொரு அரசுடன் அல்லது சருவதேச பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் கூட்டாக அல்லது ஒத்துழைப்பாக கடற்றொழில்களினைக் கண்காணித்தல், கட்டுப்பாடு மற்றும் நுண்கணிப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் ஈடுபடுத்தப்படலாம். |
| **அவதானிகளின் நியமனம் மற்றும் அடையாளப்படுத்தல்**<br><br>**பிரிவு 115** | 1. பணிப்பாளர் தலைமையதிபதி அவதானி ஒருவராக செயலாற்றும் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் அல்லது மீன்பிடிக் கலம் ஒன்றின் ஊழியர் ஒருவர் அல்லது ஒப்பந்தக்காரராக நேரடியாக அல்லது மறைமுகமாக இருக்கும் எவரேனும் ஆள் நீங்கலாக, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு சுயாதீன அவதானியாக இருப்பதற்கு ஆள் ஒருவரினை எழுத்தில் நியமிக்கலாம்.<br>2. அவதானி ஒருவர், வேண்டுகோளில், அவராகவே அடையாளம் காண்பித்தல் வேண்டும் என்பதுடன், அவர் ஓர் அவதானி என்ற சான்றினைச் சமர்ப்பித்தலும் வேண்டும். |
| **அவதானிகளின் கடமைகள்**<br><br>**பிரிவு 116** | அவதானியின் கடமைகள் விஞ்ஞானம், முகாமைத்துவம் அத்துடன் பின்வருவனவற்றனையும் உள்ளடக்கி அமைந் தொழுகுதல் நோக்கங்களுக்காக தகவல்களினை சேகரித்தல் மற்றும் நம்பகரமாக அறிக்கையிடல் அத்துடன் துல்லியத்தினையும் உள்ளடக்குதல் வேண்டும்:<br>m. எடுக்கப்பட்ட மீன்களின் இனம், அளவு, வயது மற்றும் நிலை;<br><br>ஆ) மீன் எடுக்கப்படுகின்ற முறைகள், பிரதேசங்கள் மற்றும் ஆழங்கள்.<br><br>இ) மீன் தொடர்பான மீன்பிடி முறைகள், மற்றும் சுற்றாடலின் விளைவுகள்<br><br>ஈ) ஏதேனும் கலத்தின் இயக்கலின் அனைத்து விடயங்கள்;<br><br>உ) ஏதேனும் மீன் அல்லது கடற்றொழில் விளை பொருளினை பதப்படுத்தல், ஏற்றி இறக்கல், கலம் மாற்றி ஏற்றல், களஞ்சியப்படுத்தல், அல்லது கையுதிர்த்தல் ;<br><br>ஊ) முகாமைத்துவ நடவடிக்கைகள்,ஏற்புடையதான சர்வதேச பேணல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளினை நடைமுறைப்படுத்தலினைக் கண்காணித்தல்.<br><br>எ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பணிப்புரை செய்யப்பட்டவாறான அல்லது ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் பிற விடயம். |
| | **அத்தியாயம் 2 – அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்** |
| **எம். சி.எஸ் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்படட அலுவலர்கள் மற்றும் வேறு ஆளணியினரினை நியமித்தல்**<br><br>**பிரிவு 117** | 1. பணிப்பாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தல் மூலம் மற்றும் அவர் தேவைப் படுத்தக் கூடியவாறாக அல்லது விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியமங்கள் மற்றும் நடவடிக்கை முறைக்கு அமைய, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக பின்வரும் ஆள்களினை நியமிக்கலாம்.<br>அ) கடற்றொழில் பரிசோதகர்கள் அல்லது கடற் றொழில் அலுவலர்கள்;<br>ஆ)ஒழுங்குவிதிகளினால் பெயரிடப்படவேண்டிய வாறான அத்தகைய தரவரிசைக்கு மேலான கரையோர காவல் உறுப்பினர்கள்:<br>இ) இலங்கை இராணுவம், விமானப் படை அல்லது சார்ஜன்ட் அல்லது அதற்கு மேலான தர வரிசையின் பொலிசு உறுப்பினர்கள்<br>ஈ) சிறு தரவரிசை அலுவலர் அல்லது அதற்கு மேலான தரவரிசையுடைய இலங்கை கடற்படையின் உறுப்பினர்கள்<br>உ) நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்கள்<br><br>**2.**பிரிவு (1) இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 1979 இன் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையின் கருத்தினுள் சமாதான அலுவலராக இருப்பதற்கு கருதப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| | **3.**பணிப்பாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தல் மூலம், அவர் நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், கட்டுப்பாடு, நுண்கணிப்பு மற்றும் விஞ்ஞானப் பணிகள் நோக்கங்களுக்காக அவசியம் எனக் கருதப்படக்கூடியவாறாக அத்துடன் பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக அல்லது இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு ஆளணியினரினை நியமிக்கலாம்:<br>**அ**)நுண்கணிப்பு மற்றும் அறிவியல்சார் பணிகள் நோக்கங்களுக்கான அவதானிகள் ;<br>**ஆ**) துறைமுக மாதிரியாளர்கள் ;<br>**இ)** மீன் தரக் கட்டுப்பாடு நோக்கங்களுக்கான பரிசோதகர்கள் மற்றும் கணக்காய்வாளர்கள் ;<br>**ஈ)**பணிப்பாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அல்லது விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியமங்கள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கு இணங்க, விதித்துரைக்கப்படற்பாலான அத்தகைய வேறு ஆளணியினர்:<br>4. உட்பிரிவு (3) இன் கீழ் நியமிக்கப்பட்ட ஆளணியினர் இச் சட்டத்தில் அல்லது அதன்கண் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய அதிகாரம், உரிமைகள் மற்றும் கடமைகளினைக் கொண்டிருத்தல் வேணடும். |
| **அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களை இனங்காணுதல்**<br><br>**பிரிவு 118** | உட்பிரிவு 117 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஆதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மற்றும் வேறு ஆளணியினர், வேண்டுகோளின் பேரில், இச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தினைப் பிரயோகிக்கையில், அவர் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்று அவராகவே அவரினை அடையாளப்படுத்தி ஆதாரத்தினைக் காண்பித்தல் வேண்டும்.<br><br>அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அடையாள ஆவணத்தின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் முன் வைத்தல், முரண் எண்பிக்கப்படும் வரை, இச் சட்டத்தின் மூலம் செய்வதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்ட எவற்றையேனும் செய்வதற்கு எவரேனும் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கான அதிகாரம் போதுமானதாக இருத்தல் வேண்டும்.<br><br>அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது பதவியினை வெளிப்படுத்துவதற்கும் அவர் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்று காண்பிப்பதற்கு நியாயமான போதுமானதாக இருக்கக் கூடியவாறான அத்தகைய அடையாளத்தினை முன்வைப்பதற்கும் தவறினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செய்யப்படும் வேண்டுகோள், கோரிக்கை அல்லது உத்தரவுடன் அமைந்தொழுகுவதற்கு மறுப்பதற்கு எவரேனும் ஆளுக்கான தவறொன்றாக அமைதல் ஆகாது. |
| **அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பொதுவான தத்துவங்கள்**<br><br>**பிரிவு 119** | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய செயல்கள் மற்றும் விடயங்களினைச் செய்யலாம் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களின் ஏதேனும் பிரயோகித்தல் நோக்கங்களுக்காக நியாயமான அவசியமாக இருக்கின்றவாறான அத்தகைய பணிப்புரை களினைக் கொடுக்கலாம்.<br><br>அத்தகைய அலுவலர் இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களின் பிரயோகத்தினை இயலச் செய்வதற்கு நியாயமானதாக அவசியமக இருக்கக்கூடியவாறான அத்தகைய வலிமையினை உபயோகிக்கலாம்.<br><br>அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் தேசிய நியாயாதிக்கத்திற்கு அப்பால் உள்ள பிரதேசங்களில், சருவதேச உடன்படிக்கை அல்லது ஒழுங்கில் வேறு வகையில் வழங்கப்பட்டாலொழிய, கடமைகளினை மேற்கொள்வதற்கு தேவைப்படுத்துமிடத்து, கடமைகள் தேசிய நியாயாதிக்கத்தின் கீழ் உள்ள பிரதேசங்களினுள் ஆற்றப்பட்டன என்றாற் போன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன.<br><br>அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இலங்கை அரசுடன் கூட்டாகவும் ஒத்துழைப்பாகவும் கடற்றொழில்களினைக் கண்காணித்தல், கட்டுப்பாடு மற்றும் நுண்கணிப்பு |

| | |
|---|---|
| | நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் ஏற்புடையதான சருவதேச உடன்படிக்கை அல்லது ஒழுங்கு தரப்பினராக உள்ள அத்தகைய அரசு இருக்கின்ற மற்றுமொரு அரசின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது வேறு வகையில் சேவையாறுகின்றவிடத்து, அவர் அத்தகைய சருவதேச உடன்படிக்கை அல்லது ஒழுங்கு நியதிகளுக்கு இணங்க தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய அறிக்கையினைச் செய்தல் வேண்டும்.<br><br>அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் தேசிய நியாயாதிக்க பிரதேசங்களினுள்ளோ அல்லது அதற்கப்பாலோ இச்சட்டம் மற்றும் ஏதேனும் சர்வதேச உடன்படிக்கைக்கு செயல் வலுவினைக் கொடுப்பதற்கு விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களினைப் பிரயோகிக்கலாம். |
| பின்தொடர்கை தத்துவம்<br><br>பிரிவு 120 | அதிகாரம்பெற்ற அலுவலர் ,சருவதேசச் சட்டத்திற்கு அமைய இலங்கை நீர்ப் பரப்புகளினுள் ஆரம்பித்து இலங்கை நீர்ப் பரப்புகளுக்கு வெளியே பின் தொடர்கையினைத் தொடர்ந்து, இச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்று புரிதலில் உபயோகிக்கப்பட்டது என்று நம்புவதற்கு நியாயமான காரணங்களினைக் கொண்டுள்ள அவர் ஏதேனும் கலத்தினை இலங்கை நீர்ப்பரப்பிற்கு வெளியே நிறுத்தலாம், ஏற்றலாம் மற்றும் பரிசோதிக்கலாம், இச் சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தினைப் பிரயோகிக்கலாம் அத்துடன் இலங்கை நீர்ப்பரப்புகளினுள் மீண்டும் அத்தகைய கலம் மற்றும் கலத்தில் உள்ள ஆள்கள் அனைவரினையும் பொருள்களினையும் கொண்டு வரலாம். |
| ஏற்றுதல் மற்றும் பரிசோதித்தலின் வெளிப்படுத்தல்<br><br>பிரிவு 121 | அதிகாரம் பெற்ற அலுவலர்கள்,கடற்றொழில் பரிசோதகர்கள், கடற்றொழில் அலுவலர்கள் , அவதானிப்பாளர்கள் மற்றும் மீன்பிடிக் கலங்களின் ஏற்றுதல் மற்றும் பரிசோதிப்பினை நடாத்தும் வேறு ஆளணியினர் அத்தகைய ஏற்றுதல் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறு அல்லது தேவைப்படுத்தப்படக் கூடியவாறான பரிசோதித்தல் படிவத்தின் அத்தகைய வெளிப்படுத்தலுக்கு கையொப்பமிடுவதன் மூலம் அவர்களுடைய பிரசன்னத்தினை சான்றுபடுத்துதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிதுரைக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய ஏற்றுதல் மற்றும் பரிசோதித்தல் படிவம், துறைமுகத்தில் ஏற்றுதல் மற்றும் பரிசோதித்தல் தவிர, இச்சட்டத்திற்கு இணங்க ஒரு மீன்பிடிக் கலத்தின் ஏற்றுதல் மற்றும் பரிசோதித்தலில் பங்குபற்றிய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பதுடன்,அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், கடற்றொழில் பரிசோதகர்கள் ,கடற்றொழில் அலுவலர்கள் அதனை துரிதமாக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குதலும் வேண்டும். |
| உட்பிரவேசித்தல் மற்றும் பரிசோதித்தல் தத்துவங்கள்<br><br>பிரிவு 122 | அதிகாரம் பெற்ற அலுவலர்,எழுத்தாணை இன்றி,<br>இச்சட்டத்தின் கீழ் அவரது தத்துவங்களினைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக கலம் ஒன்றினை<br>i) அவர் உபயோகிக்கப்பட்டது என்று நம்புவதற்கு, மீன்பிடித்தல் அல்லது அதனுடன் தொடர்புற்ற செயற்பாட்டிற்கு அவர் உபயோகிக்கப்பட்டது, உபயோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது அல்லது உபயோகிக்கப்படுவதற்குஉத்தேசிக்கப்படுகின்றது என்று நம்புவதற்கு அவர் காரணத்தினைக் கொண்டிருக்கின்ற இலங்கை நீர்ப்பரப்புகளில் உள்ள ஏதேனும் கலம்<br>ii)ஆழ்கடல்களில் உள்ள ஏதேனும் இலங்கை கலம், அல்லது:<br>iii)இச் சட்டம் மற்றும் ஏதேனும் சருவதேச சட்டம் அல்லது உடன்படிக்கை பிரயோகிக்கும் வேறு ஏதேனும் கலத்தினை<br>**அ**) நிறுத்தலாம், ஏற்றலாம், தேடலாம் பரிசோதிக்கலாம் மற்றும் அப்படியே வைத்திருக்கலாம்.<br>**ஆ**),இச் சட்டத்தின் நோக்கெல்லையினுள் வரும் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படுகின்ற அவர் நியாயமாக சந்தேகிக்கின்ற வதியும் வீடு ஒன்றின் பகுதியாக அல்லது இணைக்கப்பட்ட வளவுகள் அல்லது இடத்திற்கு உட்பிரவேசிக்கலாம், சோதிக்கலாம் மற்றும் பரிசோதிக்கலாம்.இது இச்சட்டம் தொகுக்கப்படுகின்றதா அல்லது தொகுக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்வதற்கு அவசியமானது.<br>**இ)** இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வரம் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் ஏதேனும் கலம் அல்லது வளவுகளிலிருந்து இச்சட்டத்தின் |

| | |
|---|---|
| | நோக்கெல்லையினுள் வரும் செயற்பாட்டுடன் தொடர்புறும் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள், ஆவணங்கள், உரிமங்கள் மற்றும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பிரதிகளினைப் பரிசோதிக்கலாம் அத்துடன் எடுக்கலாம். ஆயின் இந்த உட்பிரிவின் கீழ் ஏதேனும் விடயம் எடுக்கப்படும் நேரத்தில் ரசீது வழங்கப்படல் வேண்டும்.:<br>**ஈ)** இறங்கலினைக் கண்காணிக்கலாம் , நடவடிக்கைகளினைக் கலம் மாற்றி ஏற்றலாம் மற்றும் மாதிரிகள், புகைப்படங்கள் மற்றும் இயைபான ஆவணங்களினை எடுக்கலாம்.<br>**உ**)இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதனை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதிகள் சொல்லப்படும் மீறப்படுதல் தொடர்பாக விசாரணை ஒன்றின் நோக்கத்திற்காக தேவைப்படுத்துவதற்கு எவரேனும் ஆளினை அழைக்கலாம் அல்லது கோரலாம் அத்துடன் அவரிடமிருந்து வாக்குமூலங்களினை எடுக்கலாம் :<br>**ஊ**) கலத்தின் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் அவரால் திகதியிடப்பட்டு கையொப்பமிட்டு பதிவு ஒன்றினை ஆக்கலாம், அத்துடன் உட்பிரவேசித்தலுக்கு கையொப்பமிடுவதற்கு தலைவரினை தேவைப்படுத்தலாம், அல்லது அந்த நேரத்தில் கலத்தின் நிலையினை விளக்கப்படத்தில் அல்லது வேறு ஆவணத்தில் சுட்டிக்காட்டுவதற்கும் அதன்படி அத்தகைய விளக்கப்படம் அல்லது வேறு ஆவணம் ஒன்றில் சுருக்கக் கையெழுத்திடச் செய்யலாம்.<br>**எ**) இச்சட்டத்தின் நோக்கெல்லையினுள் வருகின்ற ஏதேனும் நோக்கத்திற்காக ஏதேனும் கலம் செல்கையில் தேவைப்படுத்தப்படவேண்டிய அல்லது உபயோகிக்கப்படவேண்டிய ஏதேனும் இலத்திரனியல் உபகரணத்தினை சோதிக்கலம் அல்லது பரிசோதிக்கலாம் அல்லது அவையிரண்டினையும் செய்யலாம் அல்லது பரிசோதிக்கப்பட அல்லது சோதிக்கப்பட அல்லது அவையிரண்டினையும் செய்விக்கலாம். மீன்பிடி தொடர்பில் அல்லது .இச் சட்டத்தின் கீழ் உரிமம் அல்லது அதிகாரமளித்தலினை தேவைப்படுத்தும் தொடர்புற்ற செயற்பாட்டில் உபயோகிக்கப்பட்டது, உபயோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது அல்லது உபயோகிக்கப்பட உத்தேசிக்கப்படுகின்றது என்று அவர் நம்புவதற்கு காரணத்தினைக் கொண்டுள்ள ஏதேனும் கலத்தில், வாகனத்தில், வளவுகளில் அல்லது இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் கியர், உபகரணம், பதிவு அல்லது வேறு ஆவணத்தினைச் சோதிக்கலாம்.<br><br>இப்பிரிவின் நோக்கங்களிற்காக, கலத்தின் உபகரணம், உபகரணம், தளபாடம், துணைக் கருவிகள், களஞ்சியங்கள் மற்றும் சரக்கு கலத்தின் பாகத்தினை உருவாக்குவதற்கு கருதப்படல் வேண்டும்.<br><br>ஆழ்கடல்களில் ஏதேனும் இலங்கை கலத்தின் தலைவர் அல்லது இயக்குபவர், இலங்கை தரப்பு உள்ள ஏதேனும் சருவதேச ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் கீழ், அடையாளத்தினை எண்பிப்பதன் மேல், ஒரு வெளிநாட்டு தேசத்தவரின் அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரினால் பரிசோதிப்பிற்காக அத்தகைய மீன்பிடிக் கலத்திற்கு அணுகல் வழியினை வழங்குதல் வேண்டும். |
| தகவல் மற்றும் சான்றினை எடுப்பதற்கும் பத்திரப்படுத்துவதற்கான தத்துவம்<br><br>பிரிவு 123 | அதிகாரம்பெற்ற அலுவலர், எழுத்தாணை இன்றி, இச் சட்டத்தின் கீழ் சட்ட வலியுறுத்தல் நோக்கங்களிற்காக தகவல் மற்றும் சான்றினை பத்திரப்படுத்துமுகமாக:<br>அ)இச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்றினைப் புரிதலுக்கு காண்பிக்க நம்புவவதற்கு அல்லது காண்பிப்பதற்கு முனைவதற்கு அவர்காரணத்தினைக் கொண்டுள்ள ஏதேனும் கலம்,வாகனம், வளவு அல்லது வேறு இடத்திலிருந்து மாதிரிகள், சம்பவத் திரட்டுப்புத்தகங்கள்,விளக்க வரைபடங்கள்,உரிமங்கள்,அதிகாரமளித்தல்கள் வேறு ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் தகவல்கள், அல்லது அவற்றின் பிரதிகளினைக் கைப்பற்றலாம், எடுக்கலாம், தடுத்து வைக்கலாம் , அகற்றலாம் மற்றும் பத்திரப்படுத்தலாம்:<br><br>ஆ)இச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்று புரிதலில் அல்லது புரிதல் தொடர்பில் எடுக்கப்பட்டது அல்லது உபயோகிக்கப்பட்டது, உபயோகிக்ப்பட்டுக் கொண்டிருக்கின்றது அல்லது உபயோகிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது |

| | |
|---|---|
| | என்று நம்புவதற்கு அவர் காரணத்தினைக் கொண்டுள்ள ஏதேனும் மீன், கடற்றொழில் விளை பொருள்,நீரியல் வளம், கலம்,வாகனம், கியர்,உபகரணம், தைனமோற்று, வெடிபொருள் அல்லது நச்சுப்பதார்த்தத்தினைக் கைப்பற்றலாம், எடுக்கலாம் ,தடுத்து வைக்கலாம் மற்றும் பத்திரப்படுத்தலாம்:<br>இ) இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கைகளில் சான்றில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்புவதற்கு அவர் காரணத்தினைக் கொண்டுள்ள எவற்றினையேனும்<br><br>உட்பிரிவு (1) இன் கீழ் கைப்பற்றப்படும் ஏதேனும் மீன் அல்லது வேறு நீரியல் வளங்கள் விரைவாக சிதைவடையுமிடத்து,அதிகாரம் பெற்ற அலுவலர் பின்வரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வெளிப்படையான நடைமுறைகள் அல்லது வழக்க முறைகளினை அவதானித்து அத்தகைய மீன் அல்லது வேறு நீரியல் வளங்களினை விற்பனை செய்யலாம் என்பதுடன் அத்தகைய விற்றுப் பெற்ற தொகைகளினை நீதவான் நீதிமன்றில் வைப்புச் செய்தலும் வேண்டும்.<br><br>கடற்றொழில் பரிசோதகர்.∴ கடற்றொழில் அலுவலர் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் இச்சட்டம் அல்லது ஏற்புடையதான சருவதேச உடன்படிக்கையின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற உரிமம், பதிவு அல்லது வேறு அனுமதிக்கு ஈடுபட்ட அல்லது வெளிப்படையாக ஈடுபட்ட ஆளுக்கு தேவைப்படுத்தப்படலாம்:<br>**அ**) செயற்பாட்டிற்காக அல்லது செயற்பாடு தொடர்பில் தேவைப்படும் பதிவு, உரிமம், அதிகாரமளித்தல், அல்லது வேறு அனுமதியினை முன்வைத்தல்:<br><br>**ஆ**) செயற்பாட்டுடன் தொடர்பில் வேறு ஏதேனும் ஆவணத்தினை முன்வைத்தல்:<br><br>**இ)** வேறு ஏதேனும் இயைபான தகவல்களினைக் கொடுத்தல்,<br>கடற்றொழில் பரிசோதகர் அல்லது கடற்றொழில் அலுவலர் ஏதேனும் ஆவணத்திலிருந்து பிரதிகள் அல்லது பிரித்தெடுப்புக்களினை எடுக்கலாம்.<br><br>எழுத்திலான ஏற்றுக் கொள்ளல் உரிமையாளர், வெளிப்படையான உரிமையாளர், முகவர் அல்லது எடுக்கப்பட்ட அல்லது இப்பிரிவிற்கு அமைய தடுத்து வைக்கப்பட்ட ஏதேனும்பொருள் அல்லது விடயத்தின் கட்டுப்பாட்டு அல்லது வெளிப்படையான கட்டுப்பாட்டு ஆளுக்குக் கொடுக்கப்படல் வேண்டும், என்பதுடன் எடுத்தல் அல்லது தடுத்து வைத்தலுக்கான காரணங்களினை எழுத்திலான ஏற்றுக் கொள்ளலில் தெரிவித்தலும் வேண்டும். |
| மீன்பிடிக் கலம் ஒன்றினை நிறுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்கு எடுத்தலுக்கான தத்துவம்<br><br>பிரிவு 124 | அதிகாரம்பெற்ற அலுவலர், பிரிவு (124) இற்கு இணங்கச் செய்யப்பட்ட வேண்டுகோளினைத் தொடர்ந்து நியாயமான காலப்பகுதியினுள் நிறுத்தாத கலம் ஒன்றின் தலைவர், பிரிவு (122) இற்கு அமைய பின்தொடர்கை விடயம் அடங்கலாக, நியாயமாக அவசியமான சந்தர்ப்ப சூழ் நிலைகளில் இருக்கின்றவாறும் கைது செய்தலுக்கு செயல் வலுவினைக் கொடுப்பதற்கு சருவதேசச் சட்டத்திற்கு இணங்கிச் செல்லும் ஏதேனும் நியாயமான வழிகளில் இருக்கின்றவாறாதுமான அத்தகைய வலிமையினை உபயோகிக்கலாம்.<br><br>அதிகாரம் பெற்ற அலுவலர் இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றின் புரிதலுக்கு அல்லது புரிதல் தொடர்பில் கலம் உபயோகிக்கப்பட்டது, உபயோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது உபயோகிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது என்று நம்புவதற்கு காரணத்தினைக் கொண்டுள்ளவிடத்து, அல்லது கலம் ஒன்று இச் சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்டிருக்குமிடத்து,அவர் பின்தொடர்கை விடயம் அடங்கலாக :<br><br>**அ**) இலங்கையில் ஏதேனும் துறைமுகத்திற்கு கலத்தினைக் கொண்டுவரலாம் அல்லது அவர் பணிப்புரை செய்கின்றவாறு கொண்டு வருவதற்கு தலைவரினை தேவைப்படுத்தலாம்.<br><br>**ஆ**) தவறு ஒன்றிற்கான நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் தீர்மானித்தல் முடிவுறாத கலத்தின் கட்டுப்பாட்டில் அப்படியே வைத்திருக்கலாம் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அந்த இடத்திலிருந்து தலைவரினை புறப்படுவதற்கு அனுமதிக்கும் வரை அந்த இடத்தில் கலத்தின் கட்டுப்பாட்டில் அப்படியே வைத்திருப்பதற்கு அவரினைத் தேவைப்படுத்தலாம்.<br><br>உட்பிரிவுகள் (2) மற்றும் (4) இற்கு அமைய இலங்கையில் இடம் ஒன்றிற்கு கலம் ஒன்றினைக் கொண்டு வரும் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது இச் சட்டத்தினை வலியுறுத்துவதில் உதவிக்காக அவசியப்படும் வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் |

| | |
|---|---|
| | உடனடியானதாகும் அத்துடன் கைது செய்தலினைச் செய்தல் அடங்கலாக, பெரும்பாலும், அவருக்கு உதவுதற்கு எவரேனும் ஆளினை தேவைப்படுத்தலாம் என்பதுடன் அந்த ஆள்,<br><br>**அ**) அவர் செயலாற்றுவதற்கான நோக்கங்களுக்காக மற்றும் அந்த நேரத்தின் பொழுது அதிகாரம் பெற்ற அலுவலராக இருப்பதற்கு கருதப்படல் வேண்டும்.<br><br>இச் சட்டத்தினை வலியுறுத்தும் நோக்கங்களுக்காக அதிகாரம் பெற்ற அலுவலரின் அறிவுறுத்தல்களினை மேற்கொள்ளல் வேண்டும்.<br><br>இந்தப் பிரிவு மற்றும்உட்பிரிவு (120) இற்கு அமைய நாட்டில் உள்ள ஓர் இடத்திற்கு கலம் ஒன்று கொண்டுவரப்படுமிடத்து கோரிக்கை அதிகாரம் பெற்ற அலுவலருக்கு மரணம் அல்லது காயம் தொடர்பாக செய்தலினைத் தவிர கோரிக்கை எதுவும் எவரேனும் அதிகாரம் பெற்ற அலுவலருக்கு அல்லது பிரிவு (117) இன் கீழ் நியமிக்கப்பட்ட வேறு ஆளுக்கு எதிராக கலம் அவ்வாறு கொண்டுவரப்படும் பொழுது ஏற்படும் ஏதேனும் மரணம்,காயம், இழப்பு, அல்லது சேதம் தொடர்பாக செய்யப்படலாகாது.<br><br>உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள கலத்தின் தலைவர் கட்டுப்பாட்டில் அப்படியே வைத்திருப்பதற்கு தேவைப்படுமிடத்து, அவர் அக் கலம் மற்றும் அந்தக்கலத்தில் உள்ள ஒவ்வொரு ஆளுக்கும் அது பெயிடப்பட்டுள்ள துறைமுகத்திற்கு வந்து சேரும் வரை பொறுப்பாக இருத்தல் வேண்டும்.<br><br>எழுத்திலான ஏற்றுக்கொள்ளல் இப்பிரிவுக்கு அமைய கைப்பற்றப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது விடயத்திற்கான உரிமையாளர், வெளிப்படையான உரிமையாளர் அல்லது பதில் ஆளுக்குக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கைப்பற்றலுக்கான காரணங்களினை ரசீதில் தெரிவித்தலும் வேண்டும். |
| மீன்பிடிக் கலம் ஒன்றினை நகரவிடாமைக்கான தத்துவம்<br><br>பிரிவு 125 | பிரிவு 124 இற்கு இணங்க கலன் ஒன்று கைப்பற்றப்படல் அல்லது தடுத்துவைக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது பிரிவு 122 இற்கு இணங்க நாட்டில் உள்ள ஓர் இடத்திற்கு கொணடுவரப்பட்டிருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா், ஏதேனும் அதன் பகுதி அல்லது பகுதிகளை அகற்றலாம் அல்லது வேறு வகையில் அதனை நகரவிடாமல் செய்யும் நோக்கத்திற்காக அந்த மீன்பிடிக் கலத்தினை பத்திரப்படுத்தலாம்.<br><br>உட்பிரிவு (1)இற்கு இணங்க கலம் ஒன்றின் பாகம் அல்லது பாகங்கள் அகற்றப்பட்டவிடத்து அத்தகைய பாகம் அல்லது பாகங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு கட்டுக்காவலிலிருந்து அதன் சட்டரீதியான விடுவிப்பின் மீது, உடனடியாக கலத்திற்கு திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.<br><br>ஆள் எவரும், அத்தகைய பாகம் அல்லது பாகங்களினை உடமையில் வைத்திருக்கவோ அல்லது அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்கு செய்தலோ அல்லது பாகம் அல்லது பாகங்களை ஏதேனும் மாற்றியமைத்தலோ அல்லது பதிலீடு செய்தலோ ஆகாது. |
| கடவுச் சீட்டு, முதன்மை உரிமம் மற்றும் மாலுமியின் புத்தகங்களினை பறிமுதல் செய்வதற்கான தத்துவம்<br><br>பிரிவு 126 | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், உட்பிரிவு (2) இற்கு அமைய, இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றின் புலனாய்வு செய்தல் நோக்கத்திற்காக நியாயமான காலம் ஒன்றிற்காக கலம் ஒன்றின் தலைவர் மற்றும் எவரேனும் கப்பற்றொகுதியினரின் ஏதேனும் கடவுச் சீட்டு, முதன்மை உரிமம், மாலுமி புத்தகம் அத்தகைய புலனாய்வு பூர்த்தியாகும் வரை அல்லது கடவுச்சீட்டுக்களினை பெற்றுக் கொள்ளப்பட்டு பிடித்து வைத்திருத்தல் குறித்த நீதிமன்றத்தின் உத்தரவு அவற்றில் எது முந்தியதோ அது வரை கைப்பற்றி பிடித்து வைத்திருக்கலாம்:<br><br>அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் அவருக்கு கொடுக்கப்பட்ட வேறு ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் தேசிய நியாயாதிக்க பிரதேசங்களினுள்ளேயாயினும்சரி அல்லது அதற்கு அப்பாலோ உள்ள பிரதேசங்களாயினும்சரி இச்சட்டத்துக்கு, சர்வதேச உடன்படிக்கை பயன்கொடுக்கும் விதித்துரைக்கப்படற்பாலான அத்தகைய வேறு தத்துவங்களையும் பிரயோகிக்கலாம். |

| | |
|---|---|
| | பணிப்பாளர் தலைமையதிபதி, கடவுச் சீட்டு மற்றும் மாலுமியின் புத்தகங்கள் புலனாய்வு முடிவதற்கு முன்னர் நாட்டிற்கு வெளியே பயணத்தினை வகதியேற்படுத்தும் என்று வெளிப்படையாக இருந்தால் அத்தகைய தலைவர் மற்றும் கப்பற்றொகுதியினரால் இச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்றின் புலனாய்வின்பொழுது ஒரு வாரம் வரைக்கும் கலம் ஒன்றின் தலைவர் மற்றும் கப்பற்றொகுதியினரின் கடவுச் சீட்டுகள், முதன்மை உரிமம் மற்றும் மாலுமிகளின் புத்தகங்கள் பறிமுதல் செய்தலினை எழுத்தில் அங்கீகரிக்கலாம். |
| தடுத்து வைத்திருக்கும் தத்துவம்<br><br>பிரிவு 127 | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆள் ஒருவர் தவறு புரிகின்றார் அல்லது தவறு புரிந்துள்ளார் என்று நம்புவதற்கு அவர் நியாயமான காரணங்களினைக் கொண்டிருந்தால்:<br>அந்த ஆளினை உடனடியாக நிறுத்தி விலக்குவதற்கு உத்தரவிடலாம்.<br><br>அந்த ஆளின் பெயர், பிறந்த திகதி, அடையாள எண்பிப்பு, வதிவிட முகவரி மற்றும் தொழிலினை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரக்குக் கோரலாம் அத்துடன் அளிப்பதற்கு அந்த ஆளினை தேவைப்படுத்துவதற்கு சந்தர்ப்ப சூழ்நிலையில் இது நியாயமானதாக இருக்கின்றபடியினால் அந்த விபரங்களின் அத்தகைய சரிபார்த்தலினை வழங்குவதற்கு அந்த ஆளினைக் கோரலாம்.<br>**இ)** அந்த ஆளினை, எழுத்தாணை இன்றி, தடுத்து வைக்கலாம்.<br><br>அதிகாரமளிக்கும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆள் ஒருவரினை எழுத்தாணையின்றி தடுத்து வைத்தால், அவர் பிணைமுறியில் அல்லது பிணையில் அல்லது நீதவானின் விசேட எழுத்திலான உத்தரவில் அல்லாது விடுவித்தல் கூடாது.<br>(1) (அ) இச்சட்டத்தின் கீழ் ஏதேனுமொரு வெளிநாட்டுப் படகை தடுத்து வைத்துக் கொண்ட சந்தர்ப்பத்தில்,மற்றும்<br>(ஆ) ஏதேனுமொரு வெளிநாட்டு கடற்றொழில் படகின் தலைவர்,உரிமையாளர்,வாடகைக்கு பெற்றவர் அல்லது படகில் பயணிக்கும் எவரேனும் ஆள் ஆகியோருக்கு எதிராக இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போது,<br>வேளிநாட்டு அலுவல்கள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் மூலம் கடற்றொழில் படகு உரித்தான நாட்டின் தூதரக அதிகாரிக்கு தாமதிக்காது அறிவித்தல் வழங்கப்படுதல் வேண்டும்.<br><br>(2) படகை தடுத்து வைத்திருப்பது அல்லது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன என்பது (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்படுதல் வேண்டும். |
| கைவிடப்பட்ட மீன்பிடிக் கலன்கள், உபகரணம், மீன் அல்லது கடற்றொழில் விளை பொருள்கள் தொடர்பிலான தத்துவம்<br><br>பிரிவு 128 | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், ஏதேனும் மீன்பிடிக் கலம், மீன்பிடி உபகரணம், மீன் அல்லது கடற்றொழில் விளைபொருள்கள் வழக்குத் தொடுத்தலினைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக கைவிடப்பட்டுளளது என்று நம்புவதற்கு காரணத்தினைக் கொண்டிருக்குமிடத்து, அவர் அதனை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி முப்பது(30) நாட்களுக்குள் மீன்பிடிக் கலம், மீன்பிடி உபகரணம், மீன் அல்லது கடற்றொழில் விளைபொருள்களை அகற்றுவதற்கு கலத்தின் உரிமையாளரினைத் தேவைப்படுத்தல் வேண்டும்.<br>ஆத்தகைய உரிமையாளர் (1) ஆம் உட்பிரிவின் காலக்கெடுவினுள் பணிப்பாளர தலைமையதிபதியின் உத்தரவுடன் அமைந்தொழுகுவதற்கு தவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி பொருத்தமான நடவடிக்கை எடுக்கலாம் அல்லது அத்தகைய மின்பிடிக் கலம், மீன்பிடி உபகரணம், மீன் அல்லது கடற்றொழில் விளைபொருள்களினை அகற்றுவதற்கு உத்தரவிடுவதற்காக தகுதிவாய்ந்த நியாயதிக்க நீதிமன்றத்திற்கு விண்ணப்பிகடகலாம்.<br><br>அத்தகைய உரிமையாளர் தலைமறைவாகியுள்ளவிடத்து அல்லது காணமுடியாதவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய உரிமையாளரின் உடமையில் தொழிலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசம் அல்லது வளவுகள் மற்றும் ஆதனம் தொடர்பில் எடுக்கப்படவுள்ள புலனாய்வு நடவடிக்கைகளை செய்விக்கலாம். |

| | |
|---|---|
| அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் கடமைகள்<br><br>பிரிவு 129 | கலன் இயக்குபவர் அல்லது கப்பற் தொகுதியினர் அடங்கலாக எவரேனும் ஆள்<br><br>அ) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு<br>i) கலம் ஒன்றிற்கு பாதுகாப்பாக ஏறுவதற்கு<br><br>ii) மீனினை வைத்திருப்பதற்கு , பதப்படுத்துவதற்கு, நிறுப்பதற்கு அல்லது களஞ்சியப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படக்கூடிய பாலம், கலத்தில் உள்ள மீன் மற்றும் கடற்றொழில் பொருள்கள், மீன்பிடி உபகரணம் மற்றும் பிரதேசங்களிற்கு முழு அணுகுவழி அடங்கலாக, அவரது கடமைகளினை மேற்கொள்வதற்கு அவசியம் என தீர்மானிக்கக்கூடிய அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் முழு அணுகுவழி மற்றும் கலத்தில் உள்ள அனைத்து வசதிகள், உபகரணம் மற்றும் உபகரணத்தின் உபயோகத்தினைக் கொண்டிருப்பதற்கு<br><br>iii) பதிவேடுகள் பரிசோதித்தல்,நகலெடுத்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல் அடங்கலாக இச் சட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளல் மற்றும் தத்துவங்கள் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக, இச்சட்டம் அல்லது வேறு வகையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு தேவைப்படுத்தபடும் மற்றும் பேணப்பட வேண்டிய கப்பலோட்டல், தொடர்பாடல் உபகரணம் அடங்கலாக பிரதேசங்கள், உபகரணம் மற்றும் சாதனம் போன்ற மீன்பிடித்தலுடன் தொடர்புறும் அதன் சம்பவத் திரட்டுக்கள், விளக்கப்படங்கள் மற்றும் ஆவணமாக்கல் அத்துடன் தகவல்கள் அடங்கலாக கலத்தின் பதிவேடுகளினை முழுமையாக அணுகுவழி கொண்டிருப்பதற்கு;<br>iv) அறிவியல் நோக்கங்களுக்காக தேவைப்படுத்தப்படக் கூடியவாறான ஏதேனும் மீனின் அத்தகைய நியாயமான மாதிரிகள் அல்லது முழு மாதிரியுருக்களினை எடுப்பதற்கு, அளவிடுவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது அகற்றுதல் ஆகாது என்பதுடன் பிடித்து வைத்திருத்தலும் ஆகாது.<br>v) கலத்திலிருந்து பாதுகாப்பான இறங்கலுக்கு தவறுதல் அல்லது மறுத்தல் ஆகாது.<br><br>**ஆ**) இச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்படுகின்ற ஆய்வு, பரிசோதித்தல், பரீட்சித்தல் அல்லது தேடுதலினை அனுமதிப்பதற்கு தவறுதுல், தடைசெய்தல் அல்லது மறுத்தல் ஆகாது:<br><br>**இ)** குளிர் சேமிப்பகம், ஏற்றுமதி மற்றும் பதப்படுத்தல், தரையிறங்கும் தளம் அல்லது இச் சட்டத்தின் நோக்கெல்லையினுள் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆள்கள் உள்ள வேறு இடத்திற்கு உபயோகிக்கப்படுபவை அடங்கலாக ஏதேனும் வளவுகள், வசதி தொடர்பில் இச்சட்டத்திற்கு இணங்க அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உட்பிரவேசித்தல் மற்றும் பரிசோதித்தலுக்கு அனைத்து நியாயமான வழிகள் மூலம் வசதிப்படுத்துவதற்கு மறுத்தல் அல்லது தவறுதல் ஆகாது:<br><br>**ஈ)** ஏதேனும் மீன் அல்லது வேறு நீரியல் வளங்களினை ஏற்றியிறக்கும் ஏதேனும் வாகனத்தினை அனுமதிப்பதற்கு ,நிறுத்துவதற்கு மற்றும் தேடுவதற்கு தவறுதல் அல்லது மறுத்தல் ஆகாது:<br><br>**உ**) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கொடுக்கப்படும் ஒவ்வொரு சட்டரீதியான அறிவுறுத்தல் அல்லது பணிப்புரையுடன் உடனடியாகவும் முழுமையாகவும் அமைந்தொழுகுவதற்கு தவறுதல், மறுத்தல் அல்லது புறக்கணித்தல் ஆகாது:<br>**ஊ**) அவரது பெயர்,பிறந்த திகதி மற்றும் வதியும் இடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு வேறு ஏதேனும் தகவலினை சட்டபூர்வமாக தெரிப்பதற்கு தேவைப்படுத்தப்படும்பொழுது, அவ்வாறு கொடுப்பதற்குத் தவறுதல் அல்லது மறுத்தல் அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில் பொய்யாக, பிழையாக அல்லது தவறாக இட்டுச் செல்லும் தகவல்களினைக் கொடுத்தல் ஆகாது:<br>**எ**)இச்சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக சட்டபூர்வமான கைதுசெய்தலினை எதிர்த்தல் ஆகாது:<br>**ஏ)** இச்சட்டத்தின் கீழ் தனது கடமைகளினை மேற்கொள்ளும் அல்லது தனது |

| | |
|---|---|
| | தத்துவங்களினைப் பிரயோகிக்கும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது கடற்றொழில் பரிசோதகர் அறிவுறுத்தல்கள் அல்லது அவரது உதவியில் அல்லது உதவி, துாண்டல் அல்லது இந்தச் செயல்களில் மற்றுமொரு ஆளினை ஊக்குவித்தலின் கீழ் சட்டபூர்வமாக செயலாற்றும் எவரேனும் ஆளினைத் தாக்குதல், இடையூறு ஏற்படுத்தல்,விலக்குதல், கலத்திற்கு ஏற்றுதல்,மிரட்டுதல் அல்லது கடத்தல் ஆகாது:<br><br>**ஐ**)இச்சட்டத்தின் முரணான செயல் ஒன்றினை அத்தகைய ஆள் புரிந்துள்ளார் என்று நம்புவதற்கு நியாயமாக காரணங்களினைக் கொண்டிருக்கும் மற்றுமொரு ஆளினைப் துரத்திப்பிடித்தல் அல்லது கைது செய்தலினை ஏதேனும் வழிகள் மூலம் தலையிடல், தாமதப்படுத்தல் அல்லது தடுத்தல் ஆகாது:<br>**ஒ**)அதிகாரமளிக்கப்பட்ட ஆளினை அனைத்துக் கடமைகளினையும் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு அல்லது அவரது கடமைகளினை ஆற்றுகையில் தோதானவாறாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பாதகாப்பினை உறுதி செய்வதற்கு அனைத்து நியாயமான நடவடிக்கைகளினை எடுப்பதற்கு அனுமதிப்பதற்கு தவறுதல் அல்லது மறுத்தல் ஆகாது:<br>**ஓ**)அதிகாரமளிக்கப்பட்ட ஆளாக இருப்பதற்கு அல்லது பணிப்பாளரின் தலைமையதிபதியின் கீழ் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அறிவுறுத்தல்கள் அல்லது அவரது உதவியில சட்டபூர்வமாக செயலாற்றும் ஆளாக இருப்பதற்கு ஆள்மாறாட்டம் செய்தல் அல்லது அவராக பிழையாக பிரதிநிதித்துவம் செய்தல் ஆகாது:<br>**ஔ**)மீன்பிடிக் கலம் ஒன்றின் தலைவராக அல்லது அலுவலராக அல்லது தலைவர் அல்லாமல் அலுவலராக இருப்பதற்கு ஆள்மாறாட்டம் செய்தல் அல்லது அவராகவே பிழையாக பிரதிநிதித்துவம் செய்தல் ஆகாது:<br>**க**)அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு இலஞ்சம் கொடுத்தல் அல்லது இலஞ்சம் கொடுப்பதற்கு எத்தனித்தல் ஆகாது:<br><br>**ங**)அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பெயரிடப்பட்ட இலங்கையில் உள்ள இடம் ஒன்றிற்கு கைப்பற்றப்பட்ட கலத்தினை கடலில் செலுத்துவதற்கு தவறுதல் ஆகாது அத்துடன் கலத்தில் உள்ள அனைத்தினதும் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு தவறுதல் ஆகாது:<br>**ச**)அவரது கடமைகளின் ஆற்றுகையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுடன் அல்லு ஏதேனும் வேறு வழியில் தலையிடலாகாது.<br><br>2.இப்பிரிவின் ஏற்பாடுகளினை மீறும் ஆள் ஒருவர் தவறொன்றினைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட குற்றப்பண மட்டத்திற்கு ஆளாதல் வேண்டும். |
| | **பாகம் XI -<br>மத்தியஸ்த, நிருவாக மற்றும் நீதிமுறை நடவடிக்கைகள்** |
| | **அத்தியாயம் 1 – மத்தியஸ்தம்** |
| மீன்பிடி பிணக்கு தீர்த்தல் குழாம்<br><br>பிரிவு 130 | அமைச்சர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பரிந்துரையின்பேரில், ஒவ்வொரு கடற்றொழில் மாவட்டத்திற்கென ஒரு மீன்பிடி பிணக்கு தீர்த்தல் குழாம் (தீர்த்தல் குழாம்) ஒன்றினைத் தாபிக்கலாம் என்பதுடன் அந்த தீர்த்தல் குழாத்தினரின் உறுப்பினர்களாக இருப்பதற்கு ஒன்பதற்கு(9) மேற்படாத ஆள்களினையும் நியமிக்கலாம்.<br><br>தீர்த்தல் குழாமிற்கு நியமிக்கப்பட வேண்டிய ஆள்கள்<br><br>மூன்று கடற்றொழில் அலுவலர்கள்;<br><br>ஆ) குறிப்பிட்ட பிணக்கு விடயத்தில் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் எண்பிக்கப்பட்டவர்கள் ; அத்துடன்<br><br>இ) ஒரு சமூகத் தலைவர்.<br><br>ஆக இருத்தல் வேண்டும். |

தீர்த்தல் குழாத்திற்கு நியமிப்பதற்காக உறுப்பினர்களினை பரிந்துரை செய்கையில், பணிப்பாளர் தலைமையதிபதி, கடற்றொழில் துறையில் இயைபான தொழில்நுட்ப ஆற்றல்கள்,அறிவு அல்லது நிபுணத்துவம் ஆகியவற்றை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

தீர்த்தல் குழாத்தின் பணி, 131 ஆம் பிரிவிற்கு இணங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறிப்பீடுசெய்யப்பட்ட மீன்பிடி பிணக்குகளின் தீர்வுக்கான சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அரங்கு ஒன்றினை வழங்குவதற்கு இருத்தல் வேண்டும்.

தீர்த்தல் குழாத்தின் உறுப்பினர்கள், மூன்று வருட (3) காலப்பகுதிக்கு பதவியினை வகித்தல் வேண்டும் என்பதுடன், (6)ஆம் உடபிரிவின் கீழ் முன்னரே அகற்றப்பட்டாலேயொழிய, மற்றுமொரு மூன்று (3) வருட காலப்பகுதிக்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

பின்வரும் ஆள்களில் எவரினையும் தீர்த்தல் குழாத்தின் உறுப்பினர் ஒருவராக நியமித்தலுக்காக அல்லது தொடர்தலுக்காக தகைமை நீக்கம் செய்யப்படல் வேண்டும்:
**அ**) பாராளுமன்ற, மாகாண சபை அல்லது ஏதேனும் உள்;ராட்சி மன்ற உறுப்பினர் ;
**ஆ**)மன ஆரோக்கியம் குன்றியவர் என்று பிரகடனப்படுத்தப்பட்ட ஆள் ;
**இ)** இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்கவகையற்றவர் அல்லது வங்குறோத்து நிலையில் உள்ளவர் என்று பிரகடனப்படுத்தப்பட்ட ஆள் ;
**ஈ)** இலங்கையில் அல்லது வேறு ஏதும் நாட்டில் ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை அனுபவித்த ஆள் ; அல்லது
**உ**)இச்சட்டம் அல்லது அதன் ஏதேனும் நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள்:

தீர்த்தல் குழாம் அதன் கூட்டங்களினை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறையின் அதன் சொந்த விதிகளை கடைப்பிடிக்கலாம்.

தீர்த்தல் குழாத்தினைத் தாபித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| | |
| மீன்பிடிப் பிணக்குகளை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல்<br><br>பிரிவு 131 | 1. மீன்பிடி பிணக்குடன் தொடர்பான தரப்பினர்கள் அத்தகைய பிணக்கினை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க முன்னர் மாவட்ட மட்டத்தில் அந்தப் பிணக்கினைத் தீர்ப்பதற்கு எத்தனித்தல் வேண்டும்.<br><br>2. ஏதேனும் பிணக்கு எழுந்தவிடத்து பணிப்பாளர் தலைமையதிபதி:<br>அ).அத்தகைய பிணக்கை, மேலதிக விசாரணை தேவைப்படாத விடத்து அதை தீர்ப்பதற்காக பிணக்கு தீர்க்கும் அலுவலர் ஒருவரிடம் அனுப்ப முடியும, அல்லது:<br>ஆ)மேலும் விசாரணை தேவைப்படுத்துமிடத்து, அத்தகைய பிணக்கு ஒன்றினைத் தீர்ப்பதற்கு தீர்த்தல் குழாத்தின் மூன்று(3) உறுப்பினர்களின் பெயரிடலுக்கு முன்னர் அத்தகைய விசாரணைக்கு உத்தரவிடலாம்.<br>இ) பணிப்பாளர் தலைமையதிபதி உட்பிரிவு(2) (அ) இன் கீழ் மீன்பிடிப் பிணக்கு ஒன்றினை வழிப்படுத்தியவிடத்து, பிணக்குத் தீர்த்தல் அலுவலர் அந்தப் பிணக்குடன் தொடர்பான தரப்பினருக்கு அழைப்பாணை அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அந்தப் பிணக்கினை வழிப்படுத்தியதிலிருந்து முப்பது(30) நாட்களினுள் இணக்கமாகத் தீர்ப்பதற்கு பெருமுயற்சி செய்தல் வேண்டும்.<br><br>3. பிணக்குத் தீர்த்தல் அலுவலர் அந்த பிணக்கினை தீர்க்குமிடத்து:<br>**அ**)அவர் அந்தப் பிணக்கினை பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் அதனை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும். தீர்த்தல் நியதிகளுக்கு சம்மதித்து சான்றுபடுத்தல் ஒன்றில் கையொப்பமிடுதல் அத்தகைய பிணக்கின் ஒவ்வொரு தரப்பினரதும் கடமையாக இருத்தல் வேண்டும்.<br>**ஆ)** உட்பிரிவு (3)(அ) இற்கு அமைய சான்றுபடுத்தல் ஒன்றிற்கு கையொப்பமிட்ட ஒருதரப்பினர் தீர்த்தல் நியதிகளினால் கட்டுப்படல் வேண்டும்.<br><br>பிணக்கு தீர்த்தல் அலுவலர் ஒருவர் பிணக்கினை வழிப்படுத்தி முப்பது (30) நாள்களினுள் அதனைத் தீர்க்காதவிடத்து, அவர் அது தொடர்பாக பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.அதற்கமைவாக பணிப்பாளர் தலைமையதிபதி (133) ஆம் பிரிவின் இன் கீழ் தீர்த்தல் குழாமின் 3 உறுப்பினர்களினைப் பெயரிட்டு அது பற்றி பின்வருமாறு<br>**அ**) பிணக்கின் விடய அம்சத்தினைக் குறிப்பிட்டு:<br>**ஆ**)பிணக்கினைத் தீர்ப்பதற்கு பெயரிடப்பட்ட ஆளின்(ஆள்களின்):பெயர்(கள்) குறிப்பிட்டு:<br><br>**இ)** குறித்துரைக்கப்பட்ட திகதிக்கு முன்னர் பிணக்குத் தீர்த்தல் குழாம் உறுப்பினர்களுக்கு எழுத்தில் சமர்ப்பிக்குமாறு அத்தகைய பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு விரும்பும் அனைத்து ஆள்களினையும் வேண்டிக் கொண்டு:<br>**ஈ)** தீர்த்தல் குழாம் நடவடிக்கைகளினை ஆரம்பிக்கும் திகதி,நேரம் மற்றும் இடத்தினை அறிவித்து<br>அரச வர்த்தமானியிலும் தினசரிப் பத்திரிகைகளிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அறிவித்தல் மூலம் வெளியிடப்படல் வேண்டும்:<br><br>நடவடிக்கைகளின் இறுதியில், தீர்த்தல் குழாம் அதன் தீர்மானம் மற்றும் அதற்கான காரணங்களினை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.<br>அத்தகைய தீர்மானத்தின் முப்பது (30) நாள்களினுள் தீர்த்தல் குழாத்தின் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடுகள் இல்லாதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி<br><br>அ)தீர்த்தல் குழாத்தின் தீர்மானத்தினை வர்த்தமானியில் வெளியிடப்பட ஆவண செய்தல் வேண்டும்.<br>ஆ)மீன்பிடி பிணக்குடன் தொடர்பான தரப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தீர்த்தல் குழாத்தின் தீர்மானத்தின் பிரதியினை அனுப்புதல் வேண்டும்:<br>இ) திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களிற்கு தீர்த்தல் குழாத்தின் தீர்மானத்தின் பிரதி ஒன்றினை கிடைக்கச் செய்தல் வேண்டும்:<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, தீர்த்தல் குழாமினால் மேற்கொள்ளப்பட்ட |

| | |
|---|---|
| | தீர்மானத்திற்கு செயல் வலுவினைக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தீர்மானம் மீன்பிடி பிணக்குடன் தொடர்பான தரப்பினர்களை பிணைத்தல் வேண்டும்.<br><br>8. தீர்த்தல் குழாமின் தீர்மானத்தில் திருப்தியுறாத ஒரு தரப்பினர், அந்தத் தீர்மானத் திகதியிலிருந்து முப்பது(30) நாள்களினுள் மேல் நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்யலாம்.<br>9. உட்பிரிவு (3) (அ) மற்றும் உட்பிரிவு (7) இன் கீழ் உள்ள தீர்மானம் இறுதியானதாகும் என்பதுடன் ஏதேனும் சிவில் நீதிமன்றில் விளக்கத்திற்கு அழைக்கப்படலாகாது என்பதுடன் , அதன் சிவில் நியாயதிக்க பிரயோகித்தலில் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றின் விதத்தில் அமுல்படுத்தல் வேண்டும்.<br>10. உட்பிரிவு (7) இன் கீழ் எதிர்பொன்று இல்லாத போது தீர்த்தல் குழாத்தினரின் தீர்மானத்துடன் அல்லது உட்பிரிவு (3) (அ) இன் கீழ் பிணக்குத் தீர்த்தல் அலுவலரின் தீர்மானத்திற்கு அமைந்தொழுகுவதை மறுப்பதற்கு அல்லது தவறுகைக்கு எவரேனும் தரப்பினரின் விடயத்தில் தவறாக இருத்தல் வேண்டும்.<br>11. ஏதேனும் அத்தகைய தீர்மானத்துடன் அமைந்தொழுகுவதற்கு தவறும் எவரேனும் ஆள் தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிப்பின் மீது தண்டனையொன்றிற்கு மற்றும் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான வேறு ஏதேனும் கட்டளைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும். |
| | **அத்தியாயம் - 2 நிருவாக செயன்முறைகள்** |
| நிபுணர்கள் குழாம்<br><br>பிரிவு 132 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள், சட்டம் மற்றும் கணக்கியல் துறைகளில் அறிவினையும், அனுபவத்தினையும் கொண்டுள்ள மூன்று ஆட்களைக் கொண்ட நிபுணர்கள் குழாமொன்று அமைச்சுச் செயலாளரின் ஆலோசனையுடன் பணிப்பாளர் தலைமையதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் தலைமையதிபதி, எந்தவொரு ஆளின்பேரிலும் பண அபராதம் விதிக்கப்படவேண்டிய சந்தர்ப்பங்களின் கீழ் அவருக்கு பரிந்துரைகளை வழங்குவது இந்தக் குழாத்தின் பணியாக இருத்தல் வேண்டும். |
| சமரசமாக தீர்த்துக் கொள்ளுதல்<br><br>பிரிவு 133 | பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் சந்தர்ப்பத்தின்போதான குற்றமொன்றினை 132 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் பரிந்துரையின் பேரில் சட்டப்படி சமரசமாக தீர்த்துக்கொள்ளலாம் :<br><br>அ) எச்சூழ்நிலைகளின் கீழ் குற்றம் புரியப்பட்டுள்ளதென்று கவனத்தில் கொள்ளப்படுகின்றவிடத்து;<br><br>ஆ) இச்சட்டத்தின் அல்லது அதனை அமுல்படுத்தும் ஒழுங்குவிதிகளின் பிரிவுகளின் எந்தவொரு ஏற்பாடுகளுக்கும் முரணான வகையில் ஆளொருவர் அல்லது செயற்படுத்துநர் குற்றம் புரிந்துள்ளார் என்று நம்புவதற்கு போதுமான ஆதாரங்கள் அவரிடம் காணப்படுகின்றவிடத்து;<br><br>இ) அந்த ஆள் அல்லது செயற்படுத்துநர் முதல்தடவையாக குற்றம் புரிந்தவராகவிருக்கின்ற விடத்து, அல்லது அது முதல் குற்றமாகவிருக்கின்றவிடத்து;<br><br>ஈ) இச்சட்டத்தின் கீழ் அக்குற்றம் தீவிரமான குற்றமொன்றல்லாத விடத்து; அத்துடன்<br><br>உ) இந்த நடவடிக்கைகள் பற்றி முழுமையாகத் அறிவிக்கப்பட்டதன் பின்னர், அத்தகைய ஆள் அல்லது செயற்படுத்துநர், அத்தகைய குற்றத்தைச் செய்ததாக எழுத்துமூலம் ஏற்றுக்கொண்டு, பத்து நாட்களினுள் சமரச நடவடிக்கைக்கு சம்மதித்திருக்கின்றவிடத்து ;<br><br>இச்சட்டத்தின் கீழ் சமரச நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, குற்றம் புரிந்ததாக ஏற்றுக்கொண்டுள்ள ஆள் அல்லது செயற்படுத்துநர்,<br><br>அ) தண்டப்பணம் முழுமையாக செலுத்தப்படும் வரை மீன்பிடித்தல் அல்லது ஏதேனும் தொடர்புடைய செயற்பாடுகள் அல்லது மீறுதலுடன் தொடர்புபட்டுள்ள ஏதேனும் செயற்பாடுகளிலும் ஈடுபடுதலாகாது ; அத்துடன் |

| | |
|---|---|
| | ஆ) சமரசத்திற்கு அமைவான குற்றம் தொடர்பில், இச்சட்டத்தின்படி நடந்த ஏதேனும் பறிமுதலுக்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.<br><br>மீன்பிடித்தல் அல்லது ஏனைய தொடர்புபட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வது (2)(அ) உட்பிரிவினால் தடைசெய்யப்பட்டிருக்கையில், அவ்வாறு ஈடுபடுகின்ற ஆளொருவர், அல்லது இப்பிரிவின் நியதிகளின்படி செல்லுபடியாகும் கட்டளையை மீறுகின்ற ஒருவர், பிறிதொரு குற்றத்தைப் புரிகின்றார் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக நடவடிக்கைகளுக்கு அமைவாகக்கூடிய குற்றப்பணத்திற்கு மேலதிகமாக பொறுப்புடையவராதலும் வேண்டும்.<br><br>குற்றத்துடன் சமரசமாவதற்கு குழாத்தின் பரிந்துரையின் பேரில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட பணரீதியிலான தண்டமானது அதிகபட்ச தண்டப்பணத்தின் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாகவோ அல்லது தொடர்புடைய மீன் பிடிப்பின் பெறுமதியில் ஐந்து மடங்கிற்கு அல்லது எது அதிகமானதோ அதற்கு குறைவாக இருத்தலாகாது.<br><br>உட்பிரிவு (4) இன் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட தண்டப்பணத்தின் மொத்தத் தொகையும், சமரசத்திற்கு அமைவாக அந்த ஆளுக்கான அத்தகைய தண்டப்பணம் பற்றி அறிவிக்கப்பட்டு அறுபது (60) நாட்களுக்குள் செலுத்தப்படவில்லையெனில், அந்த விடயம் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.<br><br>இப்பிரிவின் கீழ் தண்டப்பணம் முழுமையாகச் செலுத்தப்படுவதன் பேரில், சமரச இணக்கப்பாட்டில் உருவாக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக, இச்சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட எதேனும் பண்டங்கள், பொருட்கள், மீன் அல்லது மீன்பிடி பொருட்களை விடுவிக்குமாறு பணிப்பாளர் தலைமையதிபதி கட்டளையிடலாம்.<br><br>இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்குமிடத்து, குற்றம் புரிந்ததுடன் தொடர்புடைய வழக்கு உள்ள நீதவான் நீதிமன்றத்திற்கு பணிப்பாளர் தலைமையதிபதி அறிவித்தல் வேண்டும் என்பதுடன், இச்சந்தர்ப்பத்தில் வழக்கு தாக்கல் செய்தல் கூடாது.<br><br>புரியப்பட்டுள்ள குற்றம், உயர் தண்டம் விதிக்கப்படக்கூடிய குற்றமாக இருப்பின், சட்டமா அதிபரின் எழுத்துமூல ஒப்புதலின்றி, பணிப்பாளர் தலைமையதிபதி உட்பிரிவு (1) இன் கீழ் செயற்படுதலாகாது.<br><br>இச்சட்டத்திற்கு அல்லது ஒழுங்குவிதித் தொடரிற்கு எதிரான குற்றமொன்று தொடர்பாக எவரேனும் ஆள் ஒருவருக்கு அல்லது செயற்படுத்துநருக்கு எதிராக கொண்டு வரப்படும் எத்தகைய சட்ட நடவடிக்கையிலும், அந்த ஆள் தன் மீது சாட்டப்பட்ட குற்றத்தை இச்சட்டத்தின் கீழ் தீர்த்துள்ளதாக நிரூபிப்பின்,அது அவருக்கான எதிர்காப்பாக அமைதல் வேண்டும்.<br><br>இச்சட்டத்தின் கீழான பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானம் எந்தவொரு நீதிமன்றின் எவ்வித விசாரணைக்கோ மேன்முறையீட்டிற்கோ கீழ்ப்படிதலாகாது. |
| | **அத்தியாயம் - 3 நீதித்துறை நடவடிக்கை முறை** |
| நியாயாதிக்கம் மற்றும் வழக்கு தொடர்வதற்கான உரிமை<br>பிரிவு 134 | 1.இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணான எந்தவொரு செயல் அல்லது தவிர்ப்பு, இச்சட்டத்தைப் பிரயோகிக்கக்கூடிய அத்தகைய இடங்களில் மற்றும் அத்தகைய ஆட்களுக்கு, அத்தகைய செயல் அல்லது தவிர்ப்பு இலங்கையில்,<br>அ) உயர் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற அனைத்து |

| | |
|---|---|
| | குற்றங்களுக்குமான உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் இடம்பெற்றிருந்தால் அல்லது<br><br>ஆ) இச்சட்டத்தின் கீழ், ஆழ்கடல் உள்ளடங்கலாக தேசிய நியாயாதிக்கப் பரப்பெல்லைக்கு அப்பால் புரியப்பட்டுள்ள எந்த வொரு குற்றத்தையும் விசாரிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு முழுமையான மற்றும் பிரத்தியேகமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருப்பதைத் தவிர்த்து, நீதவான் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் அனைத்து குற்றங்களுக்கு மான எந்தவொரு நீதவான் நீதிமன்றத்தினதும் நியாயாதிக்கத் திற்குள் இடம் பெற்றிருந்தால்<br>நீதித்துறை நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>இலங்கையின் நிலப்பரப்பிற்கு வெளியே நீதவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் குற்றமொன்று வருமிடத்து, ஆனால் (1) (ஆ) ஆம் உட்பிரிவிற்கமைவாக, குற்றம் புரியப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது வழக்குத் தரப்பால் தீர்மானிக்கப்பட்டவாறு குற்றம் சாட்டப்பட்டவர் கரைக்கு வந்த அந்த இடத்திற்கு அருகிலுள்ள நீதவான் நீதிமன்றத்தில் முடிந்தவரை விசாரிக்கப்படுதல் வேண்டும்.<br>புணிப்பாளர் தலைமையதிபதி அல்லது குறித்த பணிக்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்கத்தினுள் மேற்கொள்ளப்படகின்ற ஏதேனும் செய்கைகள் அல்லது தவறுகைகள் தொடர்பாக எந்தவொரு ஆளுக்கு எதிராகவும் அல்லது கலனிற்கு எதிராகவும் 1979 ஆம் ஆண்டின 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(ஆ) பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இச்சட்டத்தின் கீழ் அதிகாரம் காணப்படுகின்றது.<br><br>எந்தவொரு உயர் நீதிமன்றத்திலும் இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைமுறைகளும் சட்டமா அதிபரின் கீழ் குற்றப் பத்திரிகை மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது கடமைகளை புரிகின்ற அல்லது உரிய சந்திப்பு உடன்படிக்கை அல்லது மீன்பிடி முகாமைத்துவ உடன்படிக்கை அல்லது சர்வதேச பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளின் கீழ் நியமிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட ஆளும், எவரேனும் ஆள் அல்லது கப்பல் மீது சேதங்களாக, தண்டப்பணமாக, தண்டமாக அல்லது வேறுவகையில் பின்வரும் ஏதேனும் செயல் அல்லது தவிர்ப்பிற்காக ஏதேனும் தொகையை அறவிடுவதற்கு நீதவான் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கலாம்:<br><br>அ) உட்பிரிவு (1) இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் உறப்பட்டுள்ளது.<br><br>ஆ) இச்சட்டம் அல்லது இலங்கையின் ஏனைய சட்டம் அல்லது சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடியது, அல்லது<br><br>இ) அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிடத்தைப் பொருட்படுத்தாமல் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு பின்தொடருதல் உரிய சந்திப்பு உடன்படிக்கை அல்லது கடற்றொழில் முகாமைத்துவ உடன்படிக்கை அல்லது சர்வதேச பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மீறுதல்.<br><br>உட்பிரிவு (5) இன் கீழ் வருகின்ற ஒவ்வொரு செயலும், பணிப்பாளர் நாயகத்தின் பெயரின் கீழ் அல்லது அவர் சார்பாக செயற்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு ஆளினாலும் உருவாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், கடன் மீட்பு (சிறப்பு விதிகள்) 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடன் அறவீட்டு (விசேட |

| | |
|---|---|
| | எற்பாடுகள்) சட்டத்தின் பிரிவுகள் (3) முதல்<br><br>அ) உயர் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற அனைத்து குற்றங்களுக்குமான உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் இடம்பெற்றிருந்தால் அல்லது<br><br>ஆ) இச்சட்டத்தின் கீழ், ஆழ்கடல் உள்ளடங்கலாக தேசிய நியாயாதிக்கப் பரப்பெல்லைக்கு அப்பால் புரியப்பட்டுள்ள எந்த வொரு குற்றத்தையும் விசாரிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு முழுமையான மற்றும் பிரத்தியேகமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருப்பதைத் தவிர்த்து, நீதவான் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் அனைத்து குற்றங்களுக்குமான எந்தவொரு நீதவான் நீதிமன்றத்தினதும் நியாயாதிக்கத் திற்குள் இடம் பெற்றிருந்தால்<br>நீதித்துறை நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| செயல்முறை<br><br>பிரிவு 135 | 1. இச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குற்றமொன்று, நீதவான் முன்னிலையில் சுருக்கமாக அல்லது பிரிவு (133) இற்கமைவாக எடுக்கப்படுகின்ற சமரச நடவடிக்கைமுறைகள் தோல்வியடைந்தால் மாத்திரமே உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்படுதல் வேண்டும்.<br><br>2. பிரிவு (139)இன் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் இச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட கடற்றொழில் குற்றங்கள் தொடர்பான உண்மைகளை அறிக்கையிடலாம் என்பதுடன், நீதவான் நீதிமன்றமொன்றில் வழக்கும் தொடரலாம்.<br><br>3.பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் கீழ் நிலுவையிலுள்ள, செலுத்த வேண்டிய கட்டணங்கள், வரிகள் மற்றும் அறவீடுகளுக்காக வழக்குத் தொடரலாம் மற்றும் வசூலிக்கலாம்.<br><br>கப்பல் முதன்முதலில் கைது செய்யப்பட்டபோது அந்த நேரத்தில் அல்லது அத்தகைய கைதின் பின்னர் எந்த நேரத்திலும், இச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட மீன்பிடிக் கப்பலின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர், இயக்குபவர் அல்லது அதிலுள்ள எந்தவொரு ஆளும் இலங்கையில் வசிப்பவராகவில்லாதவிடத்து அல்லது சமுகமளித்திருக்காதவிடத்து, இலங்கை சட்டங்களின் கீழ் இயங்குகின்ற எந்தவொரு கூட்டாண்மை அமைப்பும், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், இயக்குபவர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர், பணிப்பாளரொருவர், அலுவலரொருவர், பணியாளரொருவர் அல்லது வேறு எந்த வகையிலும் தொடர்புடைய எந்தவொரு அத்தகைய ஆளும் அத்தகைய கப்பலின் இயக்குபவராகக் கருதப்படுவார் என்பதுடன், முரண்பாடு நிரூபிக்கப்பட்டாலன்றி, அத்தகைய கூட்டாண்மை அமைப்பின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.<br>இலங்கை நீர்ப்பரப்பில் ஏதேனுமொரு வெளிநாட்டு கப்பலின் மூலம் புரியப்படுகின்ற குற்றமொன்றின் மீதான வழக்கு நடவடிக்கையானது நீதவான் நீதிமன்றில் அவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களினுள் முடிவுறுத்தப்படல் வேண்டும். |
| பொதுவான தவறுகள்<br><br>பிரிவு 136 | இச் சட்டத்தின் கீழ் குறிப்பாக வேறு எந்தத் தண்டனையும் வழங்கப்படாத குற்றத்திற்காக, நீதிமன்றம்மொன்று, இச்சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றத்திற்கும் குற்றவாளியாக இருக்கும் ஆளொருவர், பின்வரும் தண்டனைகளுக்கு அமைவாகலாம்:<br><br>அ) குற்றப்பணம் அல்லது விதிமீறலின் மூலம் அந்த ஆள் பெற்றுக்கொண்ட மீன் அறுவடையின் மதிப்பிலிருந்து பெறப்பட்ட பொருளாதார அனுகூலங்களின் இரண்டு மடங்கு, எது அதிகமானதோ அந்தத் தண்டப்பணம். |

| | |
|---|---|
| | ஆ)வேண்டுமென்றே விதிமீறல்கள் அல்லது அதிக அலட்சியத்தால் ஏற்படும் மீறல்களுக்கு, பின்வருவனவற்றில் ஒன்று அல்லது இரண்டும்:<br><br>குற்றப்பணமொன்று அல்லது விதிமீறலின் மூலம் அந்த ஆள் பெற்றுக்கொண்ட மீன் அறுவடையின் மதிப்பில் இருந்து பெறப்பட்ட பொருளாதார அனுகூலங்களின் மூன்று மடங்கு தண்டப்பணம், எது அதிகமானதோ மற்றும் / அல்லது<br><br>ii) இரண்டு ஆண்டு காலத்திற்கு விஞ்சாத சிறைத்தண்டனை.<br><br>இ) மீன்வளம் அல்லது கடல் அல்லது நீர்வாழ் சுற்றுச்சூழலுக்கு பொதுவாக சேதம் விளைவிக்கும் விதிமீறல்களுக்கு, விதி மீறலால் சந்தையில் ஏற்பட்ட பெறுமதிக் குறைப்பின் இரண்டு மடங்கிற்கு சமமான, மீன்வளத்தை மீட்டெடுப்பதற்கான மொத்த செலவின் இரண்டு மடங்கு அல்லது சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதற்கான மொத்த செலவின் இரண்டு மடங்கு, எது அதிகமானதோ அந்த மேலதிக தண்டப்பணமொன்று. |
| குற்றப்பண மட்டங்கள்<br><br>பிரிவு 137 | 1. இச்சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட தண்டப்பணங்களின் மட்டம் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ள தொகைக்கு ஒத்திருக்கின்றது.<br><br>2. அட்டவணை III ஒழுங்குவிதி மூலம் திருத்தப்படலாம்.<br><br>3. இச் சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நீதித்துறை அல்லது நிருவாக நடவடிக்கைகளில் தண்டப்பணம் அல்லது தீர்மானம், இணக்கத்தைப் பாதுகாப் பதற்கும், மீறல்கள் எங்கு நடந்தாலும் அவற்றை தளர்வடையச் செய்வதற்கும் தீவிரத்தன்மையில் போதுமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், குற்றவாளிகளிடமிருந்து அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் நன்மைகளைப் பறித்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக, தொடர்புடைய நீதித்துறை அல்லது நிருவாக நடவடிக்கைகள் பின்வரும் அளவுகோல்களுக்கு இடையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்:<br><br>அ) குற்றத்தின் தீவிரத்தன்மை.<br><br>ஆ) குற்றவாளியின் நிலைமை, அந்த ஆள், மீண்டும் மீண்டும் குற்றவாளியாகக் காணப்படுகின்றாரா, அவர் தனியாக அல்லது கூட்டாகச் செயற்பட்டாரா, மற்றும் பெறப்பட்ட நன்மைகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.<br><br>இ) இச்சட்டத்தின் கீழ் அதிகாரத்தை அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது ஆள் தாக்குதல், தடை அல்லது இலஞ்சம், கியர் அல்லது கப்பல்களுக்கு சேதம் விளைவிக்கின்ற, தனிப்பட்ட காயம், உயிர் இழப்பு, சட்டவிரோத மீன்பிடி அல்லது சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவிக்கின்ற குற்றங்களுக்கு கடுமையான தண்டப்பணத்தை அல்லது குற்றப்பணத்தை தேவைப்படுத்துதல் வேண்டும்.<br><br>ஈ) இச்சட்டத்திற்கு எதிராக எதேனும் குற்றமுள்ளதாக தோன்று கின்றவிடத்து. நாடுகடந்த குற்றச் செயலில் ஈடுபட்டதாகவோ அல்லது பிற நாடுகடந்த குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தாகவோ காணப்படுகின்றவிடத்து, கடுமையான தண்டப்பணம் அல்லது குற்றப்பணம் விதிக்கப்படும். |
| தொடர்ச்சியான தவறுகள்<br><br>பிரிவு 138 | தவறு தொடரும் ஒவ்வொரு நாளும் தனித் தனியான தவறாகக் கருதப்படல் வேண்டும். |
| மீண்டும் தவறிழைப்பவர்கள் | 1. அதே தவறு ஒன்றிற்கு மேற்பட்ட அதே தவறுக்கு குற்றத் தீர்பளிக்கப்பட்ட எவரேனும்ஆள் ஒருவருக்கு தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் அபராதம் அல்லது தண்டம் அல்லது அல்லது அவையிரண்டும் முதல் தடவை விதிக்கப்பட்டதிலும் பார்க்க கணிசமான அளவு உயர் மட்டத்தில் இருத்தல் வேணிடும். |

| | |
|---|---|
| பிரிவு 139 | 2. (1) ஆம் உட்பிரிவில் குறிக்கிடப்பட்டுள்ள தண்டத்திற்கு மேலதிகமாக,குறைந்தது மூன்று(3) மாத காலத்திற்கு உரிமம் இடைநிறுத்தப்பட முடியும். |
| அரசினால் ஏற்கப்படுகின்ற செலவுகள்<br><br>பிரிவு 140 | ஒரு வெளிநாட்டு மீன்பிடிக் கலனொன்றின் உரிமையாளர் அல்லது வாடகைதாரர் ,குற்றத் தீர்ப்பளிப்பின் பேரில், அரசினால் அதன்சார்பாக விண்ணப்பம் செய்யப்பட்ட நீதிமன்றினால் தீர்மானிக்கப்பட்டவாறாக உறப்பட்ட ஏதேனும் செலவு அல்லது செலவினத்தின் அனைத்தையும் அல்லது பின்வரும் சந்தர்ப்பங்களில் எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.<br><br>அ) கலன் ஒன்றின் பின்தொடரலின் ஏதாவது இயைபான கிரயங்கள் அடங்கலாக இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றிற்கு வெளிநாட்டுக் கலத்தினைக் கைப்பற்றல்<br><br>ஆ) இச்சட்டத்திற்கு அமைய தவறுக்காக வழக்குத் தொடரல்;<br><br>இ) இந்தச் சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் கலன் ஒன்றின் தலைவர் அல்லது பணியாளரினை நாடுகடத்தல்<br><br>**2.** உபபிரிவு (1) இன் கீழ் நீதிமன்றினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கிரயம் அல்லது செலவினம் அல்லது அவையிரண்டும் அபராதமாக அறவிடப்படலாம் என்பதுடன் நீதிமன்றினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பிற அபராதம் அல்லது தண்டப்பணத்திற்கு மேலதிகமாக விதிக்கவும்படலாம்.<br><br>**3.**(1) ஆம் உப பிரிவில் உள்ள எதுவும் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட வேறு ஏதும் உத்தரவினை அறிவுறுத்தி ஏற்கனவே அறவிடப்பட்ட ஏதேனும் கிரயம் அல்லது செலவினம் அல்லது அவையிரண்டினையும் அறவிடுவதற்கு கருதப்படலாகாது.<br><br>4. இது உப பிரிவு (1) (அ)இற்கு அமைய கிரயங்களினைத் தொடர்வதற்காக பிரயோகிப்பதற்கு உத்தேசித்தால், அரசு அந்தத் தவறின் விளக்கத்திற்கு பதினான்கு (14) நாட்களுக்கு முன்னர் அத்தகைய கிரயங்களின் எழுத்திலான விவரங்களினை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டும். |
| தடை உத்தரவு<br><br>பிரிவு 141 | 1. இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் அபராதம் அல்லது தண்டத்திற்கு மேலதிகமாக , ஒரு நீதிமன்றம் அல்லது நிர்வாகக் குழு ,விடயத்திற்கு ஏற்றவாறு, இயல்பான ஆள் எவரினையும் அந்த ஆள் குற்றம் புரிந்திருந்தால் இலங்கை நீர்ப்பரப்பில் இரண்டு ஆண்டுகள் வரை மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கலாம்.<br><br>இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் அபராதம் அல்லது தண்டத்திற்கு மேலதிகமாக, ஒரு நீதிமன்றம் அல்லது நிர்வாகக் குழு, விடயத்திற்கு ஏற்றவாறு, இயல்பான ஆள் எவரினையும் அந்த ஆள் குற்றம் புரிந்திருந்தால் இலங்கைக் நீர்ப்பரப்பில் இரண்டு ஆண்டுகள் வரை மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கலாம்:<br>அ),இச்சட்டத்தின் கீழ் III ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாரதூரமான தவறொன்றை புரிந்திருப்பின்<br>ஆ) இச்சட்டத்தின் கீழான பல தவறுகள்<br>இ)இச் சட்டத்தின் கீழ் அந்த ஆள் ஏதேனும் தவறு அல்லது தவறுகளுக்காக சட்ட நீதிமன்றம் ஒன்றினால் மூன்று தனித் தனி சந்தர்ப்பங்களில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்குமிடத்து. |

| | |
|---|---|
| | 2. பிரிவு (1) இன் கீழ் தடைசெய்யப்பட்ட ஆள் ஒருவரினை தெரிந்துகொண்டே அனுமதிக்கின்ற மீன்பிடி கலம் ஒன்றின் இயக்குபவர் இல்லது தலைவர் தவறு ஒன்றினைப் புரிந்து குற்றத் தீர்ப்பளிப்பின்பேரில் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ள தண்டனைக்கு ஆளாதல் வேண்டும். |
| கொடுப்பனவுகளை செலுத்தாமை<br><br>பிரிவு 142 | 1. இந்தச் சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் அபராதம் அல்லது தண்டத்திற்கு மேலதிகமாக, நீதிமன்றம் அபராதம் அல்லது தீர்மானித்ததன் மொத்தத் தொகையின் நாள் ஒன்றிற்கு வீதம்(1%) ஒன்றிற்கு விஞ்சாதவாறு, அபராதங்களினை செலுத்தாமைக்கு தவணை தவறுகை தண்டம் ஒன்றிற்கு உத்தரவிடலாம்.<br>2. (அ)ஏதேனும் கடற்றொழில் கலன்,இயந்திரம்,மீன்பிடி வலை அல்லது மீன்பிடி உபகரணங்கள் அல்லது கருவிகள் தொடர்பாக அரசாங்கம் மற்றும் எவரேனும் ஆளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் மீது அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகையை செலுத்துவதற்கு அந்நபர் தவறுமிடத்து, அக்கடற்றொழில் கலன்,இயந்திரம்,மீன்பிடி வலை அல்லது வேறு மீன்பிடி உபகரணங்களை கைப்பற்றி அகற்றுவதற்கான எழுத்திலான அதிகாரத்தை, பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு வழங்கலாம்.<br>(ஆ)ஏதேனும் கடற்றொழில் கலன்,இயந்திரம்,மீன்பிடி வலை அல்லது வேறு மீன்பிடி உபகரணம் அல்லது கருவியை 2(அ) உட்பிரிவின் கீழ் கைப்பற்றும் நடவடிக்கைக்காக, கடற்றொழில் கலன்,இயந்திரம்,மீன்பிடி வலை அல்லது மீன்பிடிக் கருவி அல்லது உபகரணம் வைக்கப்பட்டிருப்பதாக நம்பத்தகுந்த காரணமுள்ள ஏதேனும் இடத்திற்குள் நுழைந்து அதிகாரமுள்ள அலுவலர் சோதனையிடலாம்.<br>(இ)2(அ) உட்பிரிவில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒப்பந்தத்தின் மீது அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய ஏதெனும் தொகையை, தற்காலத்தில் வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அறவிட்டுக் கொள்வதை இச்சட்டத்தில் உள்ளடங்கும் எதுவொன்றினாலும் தடுக்கப்படுவதாக கருதுதல் கூடாது. |
| அபராதங்களினை செலுத்தாமைக்கான பொறுப்பு<br><br>பிரிவு 143 | 1. சிறிய கோரிக்கைகள் நீதிமன்று அல்லது தகுதிவாய்ந்த நியாயதிக்க மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றின் மூலம் அல்லது ஏனைய தோதான சிவில் வழக்கு நடவடிக்கைகள் மூலம் பின்வரும் விடயங்களில் வழக்கு தாக்கல் செய்தல்,அது தொடர்பாக தீர்மானித்தல்,அமுல்படுத்தல் மற்றும் அறவிடப்படல் முடியும்<br>அ)அபராதத்தொகையாக குறிப்பாக பெயரிடப்படாத நிதிசார் தண்டனைகள்<br>ஆ)அனைத்து வாடகைகள், கட்டணங்கள், செலவுகள் மற்றும் தீர்வைகள்<br>இ)இந்தச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வேறு அனைத்து பணத்தின் கூட்டுத் தொகைகள்<br><br>2.உப பிரிவு (1) இன் கீழ் ஒவ்வொரு நடவடிக்கையும் பணிப்பாளர் தலைமை அதிபதியின் பெயரின் கீழும் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடன் அறவிடல் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் (3)(4),(5),(6),(7),(8),(12)(13),(14),(15) மற்றும் (23) ஆம் பிரிவுகளின் கீழும் நிறுவப்படல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு அத்தகைய நடவடிக்கையின் நிறுவுதல் மற்றும் வழக்குக் கேட்டலுக்கும் *ஏற்றமாற்றங்களுடன்* பிரயோகித்தலும் வேண்டும். |
| இழப்பு அல்லது நட்டத்திற்கான பொறுப்பு<br><br>பிரிவு 144 | இந்தச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்றினைப் புரிகின்ற ஆள் ஒருவர், அந்தத் தவறினால் ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு பொறுப்பாகலாம் என்பதுடன் குற்றத் தீர்ப்பின் மீது, அத்தகைய சேதத்தின் இழப்பின் தொகை மேலதிகமாக மீட்டளிப்பாக, அதே வகையில் அபராதமாக நீதிமன்றத்தினால் அளிக்கப்படலாம்.<br><br>2. உப பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தவறினால் ஏற்படும் இழப்பு |

| | |
|---|---|
| | அல்லது சேதம் ஏற்புடையதாகக் கூடியவாறாக உள்ளடங்குதல் வேண்டும்.<br>அ) தவறினைக் கண்டறிதல், கைது செய்தல், விசாரணை செய்தல் அல்லது வழக்காடுதலுடன் இணைந்த அல்லது உறப்பட்ட ஏதேனும் செலவுகள்<br><br>ஆ) அந்தத் தவறு தொடர்பில் ஏதேனும் ஆதனம், மீன்,உபகரணம் அல்லது பொருளினை தடுத்து வைத்தல், கைப்பற்றலுடன் இணைந்த அல்லது உறப்பட்ட ஏதேனும் செலவுகள் |
| கம்பனிகளின் அலுவலர்கள் மற்றும் கலங்களின் தலைவர்களின் பொறுப்பு<br><br>பிரிவு 145 | இந்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் தவிர, பங்குடைமை ஒன்றின் ஒவ்வொரு பங்காளர் ,ஏதேனும் கூட்டுத்தாபனம்,நிறுவனம், கம்பனி அல்லது இச் சட்டத்தில் ஆளுகை செய்யப்படும் செயற்பாடுகளில் ஈடுபடும் வேறு ஏதேனும் தொழில் முயற்சியின் ஒவ்வொரு பணிப்பாளர் அல்லது செயலாளர் எவரேனும் உறுப்பினர் அல்லது எவரேனும் ஊழியர் இந்தச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறின் ஏதேனும் மீறுகைக்காக தனிப்பட்டரீதியல் பொறுப்பாதல் வேண்டும்.<br><br>இச்சட்டத்தின் பணிகளுக்காக:<br><br>அ) கம்பனி ஒன்றின் அல்லது வேறு ஆளொருவரின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இனால்<br>ஆ) மீன்பிடி அல்லது மீன்பிடித் தொழிலுடன் தொடர்புபட்ட செயற்பாடுளின் நோக்கத்திற்காக கம்பனி ஒன்றினால் உரிமைகொள்ளப்பட்ட அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்ட அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட கலம் ஒன்றின் தலைவர் அல்லது கலப் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினரினால்<br>நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு செயல் அல்லது விடுபாடு அத்தகைய கூட்டுத்தாபனம் அல்லது வேறு ஆளின் செயல் அல்லது விடுபாடாக இருப்பதற்கு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கருதப்படல் வேண்டும்.<br><br>கம்பனி ஒன்றின் அலுவலர் கலன் ஒன்றின் தலைவருக்கு இச்சட்டத்தின் கீழ் அவர் இச் சட்டத்துடன் அமைந்தொழுகுவதனை நிர்ணயிப்பதற்கு உரிய விசுவாசத்தினை உபயோகித்தார் என்று அல்லது அந்த மீறுகை அல்லது தவறு அலுவலரின் அல்லது தலைவரின் அறிவு, சம்மதம், கூட்டு அல்லது ஒத்துழைப்பு இன்றி புரியப்பட்டது என்று நிரூபிப்பதற்கு இச் சட்டத்தின் கீழ் ஆளாவதற்கு பாதுகாப்பு ஒன்று இருத்தல் வேண்டும். |
| **இயக்குபவர்களின் பொறுப்பு**<br>**பிரிவு 146** | இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கைகளில், மீன்பிடிக் கலம் ஒன்றின் பணியாட்டொகுதி உறுப்பினர் அல்லது மீன்பிடிக் கலன் ஒன்றுடன் இணைந்த செயல் அல்லது விடுபாடு, வேறு வகையில் வெளிப்படையாக வழங்கப்பட்டாலொழிய, அந்தக் கலத்தின் இயக்குபவரின் செயல் அல்லது விடுபாடாக இருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.<br><br>**2** கலம் ஒன்று இச்சட்டத்தின் கீழ் கடப்பாடுகளுக்கு உட்படுமிடத்து, அத்தகைய கடப்பாடு கலத்தின் இயக்குபவரின் கடப்பாடாக இருப்பதாகக் கருதப்படல் வேண்டும். |
| **பிரசைகளின் வழக்கு மற்றும் குடிசார் வலியுறுத்தல்**<br><br>**பிரிவு 147** | இச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது அதன் நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதிகளின் மீறுகையின் விளைவாக தீங்கிழைத்த எவரேனும் ஆள் எவரேனும் பொறுப்பான ஆளுக்கு எதிராக நடவடிக்கை ஒன்றினைக் கொண்டுவரலாம்.பதில் நடவடிக்கையாக, நீதிமன்றம் சிவில் சேதங்கள் மற்றும் தடை நிவாரணம், அந்த நீதிமன்றம் தோதாகக் கருதினால், **ஆயின்,** அத்தகைய நடவடிக்கை அரசு அல்லது அரசின் எவரேனும் அலுவலருக்கு எதிராக கொண்டுவரப்படலாகாது. |

| | |
|---|---|
| **தடைக் கட்டளை**<br><br>**பிரிவு 148** | நீதிமன்றம் ஒன்று பிரிவு (147) இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்வாறு எவரேனும் ஆள் ஒருவருக்கு எதிராக இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினை அமுலாக்குவதற்கு தடைக் கட்டளை ஒன்றினை வழங்கலாம். |
| **துரித விடுவிப்பு**<br><br>**பிரிவு 149** | **1** வெளிநாட்டு மீன்பிடி கலங்களினைக் கைது செய்தல் அல்லது தடுத்து வைக்கும் சந்தர்ப்பங்களில், அதிகாரி துரிதமாக, எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் அதனைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டங்களினை தோதான வழிமுறைகள் ஊடாக கொடிக்குரிய அரசுக்கு அறிவிக்க வேண்டும்.<br><br>**2**.இச்சட்டத்திற்கு இணங்க கைது செய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி கலம் மற்றும் அதன் பணியாள் நியாயமான பிணை முறி அல்லது வேறு பிணைப் பணம் இடுகையின் பேரில் துரிதமாக விடுவிக்கப்படல் வேண்டும்.<br><br>**3** ஆள் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் கலன் ஒன்றினை அல்லது வேறு ஆதனம் கைப்பற்றி அறுபது (60) நாட்களினுள் அந்தக் கலன் அல்லது ஆதனத்தினை விடுவிப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.<br><br>உப பிரிவு (3) இன் கீழ் விண்ணப்பம் ஒன்றினைப் பெறுவதன பேரில், அத்துடன் வெளிநாட்டுக் கலனுடையதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் உத்தரவிடல் வேண்டும்.<br><br>**அ)**பிணை முறி ஒன்றினைச் செய்து கொள்ளல் அல்லது கலன் ஒன்றின் நடைமுறை சந்தைப் பெறுமதியின் மொத்தத் தொகையில் உத்தரவாத மற்றுமொரு படிவத்தினை வழங்குவதற்கு ஆதனத்தின் மூன்று மடங்கு பெறுமதி அல்லது கலத்தில் பிடித்தல் அல்லது அவையிரண்டும் , வளவில் மீன் அல்லது கடற்றொழில் விளைபொருள்கள் அல்லது அவையிரண்டும் வழங்குதல், அல்லது:<br><br>**ஆ**) பின்வருவனவற்றின் ஏதேனும்<br>i)கலன் அல்லது ஆதனம் மற்றும் கலத்தில் பிடித்தல் அல்லது வளவுகளில் உள்ள மீன் அல்லது கடற்றொழில் விளைபொருள்களின் பெறுமதி:<br>ii)விதிக்கப்பட்ட அல்லது பெரும்பாலும் விதிக்கப்படவேண்டிய தவறுகளுக்கான ஆகக் கூடிய அபராதம் அல்லது அபராதங்கள்:<br><br>iii)வழக்குத் தீர்ப்பளிப்பு பதியப்பட்டால் வழக்குத் தொடர்பவர்கள் மூலம் பெரும்பாலும் அறவிடப்படவேண்டிய கிரயங்கள்<br>**இ) 4**(அ) உப பிரிவில்குறிப்பீடு செய்யப்பட்ட பிணை முறியினை பெற்றுக் கொள்வதன்பேரில் கலம்அல்லது ஆதனம் விடுவிப்பு<br><br>5. பறிமுதல் உத்தரவு ஒன்றிலிருந்து மேன்முறையீடு செய்யும் பட்சத்தில், நீதிமன்றம் மேன் முறையீடு மற்றும் மீள் விளக்கம் மீள் விசாரணை முடிவுறா நிலையின்போது உபபிரிவு (2) இற்கு அமைய ஏதேனும் அத்தகைய பிணை முறி, பிணை அல்லது வைப்புச் செய்யப்பட்ட வேறு பிணைப்பணத்தினைத் தொடரலாம் அல்லது நீதிமன்றத்துடன் வைப்புச் செய்யப்படவேண்டிய மேலதிக பிணைப் பணத்தினைக் கோரலாம்.<br><br>6. அத்தகைய பிணை முறி பிணை அல்லது வேறு பிணைப்பணம் அதன் பெறுமதிக்கு ஏதும் குறைபாடின்றி நீதிமன்றத்திற்கு விடுவிக்கப்பட்ட ஆதனத்தின் மீளக் கொடுத்தல் மீது, அல்லது இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் வழக்கு நடவடிக்கைகள் கையுதிர்க்கப்படும் அல்லது துண்டிக்கப்படும், அத்துடன் ஏதேனும் அபராதங்கள், தண்டங்கள் அல்லது விதிக்கப்பட்ட வேறு |

| | |
|---|---|
| | தீர்மானிப்புக்கள் செலுத்தப்படும் வரைக்கும் நிபந்தனையாக வைத்திருக்கப்படல் வேண்டும்.<br><br>**7**. இச்சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட ஓர் கலன் அல்லது ஆதனம் தொடர்பில் பிணைப்பணம் உப பிரிவு (2) இன் கீழ் செலுத்தப்பட்டிருக்குமிடத்து,பிணைப் பணம் இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் வழக்கு நடவடிக்கைகள் கையுதிர்க்கப்படும் அல்லது துண்டிக்கப்படும் வரை, அத்துடன் ஏதேனும் அபராதங்கள், தண்டங்கள் அல்லது விதிக்கப்பட்ட வேறு தீர்மானிப்புக்கள் செலுத்தப்படும் வரைக்கும் நீதிமன்றின் பொறுப்பில் வகிக்கப்படல் வேண்டும்.<br><br>**8**. உப பிரிவு (2)இன் கீழ்பிணை முறி ஒன்று செலுத்தப்பட்டு அத்துடன் கலம் அல்லது ஆதனம் விடுவிக்கப்பட்டடிருக்குமிடத்து<br><br>**அ**) இச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்வதற்கான உத்தரவு கலம் அல்லது ஆதனத்தின் பெறுமதி தொடர்பில் செலுத்தப்பட்ட கூட்டுத் தொகையினை பறிமுதல் செய்வதற்கான உத்தரவாக செயற்படல் வேண்டும்.<br>**ஆ**) குற்றத் தீர்ப்பளிப்பின் மீது உத்தரவிப்பட்ட ஏதேனும் அபராதம் அல்லது தண்டக் கொடுப்பனவு பிணைப்பணத்திலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.;<br>**இ)** கிரயங்களுக்கான ஏதேனும் கட்டளை பிணைப் பணத்திலிருந்து நிறைவு செய்யப்படல் வேண்டும். |
| **பிணை வழங்குதல்**<br><br>**பிரிவு 150** | இச் சட்டத்தின் பிரிவு (83)மற்றும் (38) இன் கீழ் தவறு ஒன்றிற்கு குற்றம் சாட்டப்பட்ட எவரேனும் ஆளுக்கு பிணை நீதவான் நீதிமன்றினால் அனுமதிக்கப்படலாகாது.<br>அவ்வாறிருப்பினும்,1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும் உள்நாட்டு நிர்ப்பரப்பினுள் வெளிநாட்டு மீன்பிடிப் படகொன்று 38 ஆம் பிரிவின் (1) ,(2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் தவறொன்றிற்கு சந்தேக நபரான அல்லது குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு ஆளையும் விடுவித்தல் கூடாது.<br>உபபிரிவு ஏற்பாடு (1) இன் ஏற்பாடு அரசியலமைப்பின் உறுப்புரை (154)(பீ) இன் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண மேல் நீதிமன்றம், நீதிமன்றத் திருப்திக்கு காண்பிக்கப்பட்ட விதிவிலக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்காக அனுமதிக்கலாம், இச் சட்டத்தின் பிரிவு (83) இன் கீழ் தவறுக்கு குற்றம் சாட்டப்படுகின்ற அத்தகைய ஆளுக்கு பிணையினை அனுமதிக்கலாம் என்ற நிகழ்வுக்கு பங்கமின்றி இருத்தல் வேண்டும். |
| **பறிமுதல்**<br><br>**பிரிவு 151** | 1. நீதிமன்றம் ஒன்று இச் சட்டத்திற்கு எதிராக தவறு ஒன்றின் அல்லது இப் பிரிவின் நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு தவறுகளின் ஆளுக்கு குற்றத் தீர்ப்பளிக்குமிடத்து அந்த நீதிமன்றம், அரசின் விண்ணப்பத்தின் மீது பின்வருவனவற்றின் எவற்றினையும் பறிமுதல் செய்வதற்கு உத்தரவிடலாம்.<br><br>**அ**) ஏதேனும் மீன், கடற்றொழில் விளைபொருள், கலன் (அதன் உபகரணம், தளபாட துணைப்பொருள்கள், களஞ்சியங்கள், சரக்கு மற்றும் வானூர்தி) வாகனம், வானூர்தி, மீன்பிடி உபகரணம், தவறு புரிதலில் எடுக்கப்பட்ட, உபயோகிக்கப்பட்ட அல்லது வேறு வகையில் தொடர்புபட்ட வெடிக்கத்தக்க அல்லது நச்சுப் பதார்த்தங்கள்.<br><br>**ஆ**) கலன்,வாகனம் அல்லது வானூர்தி தவறு புரிதலில் உபயோகிக்கப்பட்டிருக்குமிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் கலம், வாகனம் அல்லது வானூர்தியில் உள்ள ஏதேனும் மீன் ; |

| | |
|---|---|
| | **இ)**ஏற்றுமதி அல்லது இறக்குமதி வசதி தவறு புரிதலில் உபயோகிக்கப்பட்டிருக்குமிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் இறக்குமதி அல்லது ஏற்றுமதியில் ஏதேனும் மீன் அல்லது கடற்றொழில் விளைபொருள்கள்<br><br>**ஈ)**ஏதேனும் மீன் பிரிவு (159) இன் கீழ் விற்பனை செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்த மீன் விற்பனைத் தொகைகள் அல்லது<br>**உ**)அவசியமாகக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பொருள் அல்லது பொருள்கள்<br><br>**2.**இப் பிரிவிற்கு அமைய பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை செய்யப்படலாம் என்பதுடன் விற்பனைத் தொகையினை பிரிவு (109) இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிதியத்தில் வைப்புச் செய்தலும் வேண்டும். |
| **கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட ஆதனத்தின் கையுதிர்ப்பு**<br>**பிரிவு 152** | **1**..பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் கலம் அல்லது வேறு ஆதனம் அல்லது பிணைப்பணம் அரசின் ஆதனமாகின்றது.<br><br>**2.**இச்சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் கலன் அல்லது வேறு ஆதனம் ஏலதாரர் மூலம் அரசினால், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கை மூலம்<br>**அ**)பிடித்துவைத்திருக்கப்படலாம்<br>**ஆ**) குத்தகைக்கு விடப்படலாம்: அல்லது<br>**இ)** விற்கப்படலாம்<br>ஆயின் அத்தகைய பறிமுதல் செய்யப்பட்ட ஆதனம் அரசினால் விற்கப்பட்டால், பறிமுதலுக்கு முன்னர் உரிமையாளர் அல்லது வெளிப்படையான உரிமையாளருக்கு அத்தகைய ஆதனத்தினை ஏலத்தில் அல்லது கொள்வனவு செய்வதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினைக் கொடுக்க வேண்டும்.<br><br>**3.**இச்சட்டத்திற்கு இணங்க கைப்பற்றப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் பழுதடையக் கூடிய அல்லது கடற்றொழில் உற்பத்திப் பொருள்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் கையுதிர்த்தலுக்கு உட்படல் வேண்டும். அவர்<br>**அ**)அத்தகைய பழுதடையக் கூடிய அல்லது கடற்றொழில் விளைபொருள்களினை விற்பனை செய்யக் கூடாது அல்லது விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கக்கூடாது என்பதுடன் அத்தகைய தீர்மானம் காரணமாக உறப்பட்ட கிரயங்களுக்கு எந்த வழியிலும் ஆளாகக் கூடாது என்பதனையும் தீர்மானிக்கலாம்.<br><br>**ஆ**)அத்தகைய மீன் அல்லது மீன்பிடி விளைபொருள்களினை விற்றல் அல்லது அதிகாரமளித்தல் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி தகுதியானவை என்று கருதும் அவற்றின் கையுதிர்த்தலினை அத்துடன் விற்ற தொகைகள்,ஏதும் இருப்பின், இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கைகளின் இறுதி கையுதிர்த்தலினை எதிர்பார்த்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் நம்பிக்கையில் வைத்திருத்தல் வேண்டும்.<br><br>**4.**பணிப்பாளர் தலைமையதிபதி உபபிரிவு (3) இற்கு அமைய ஏதேனும் விற்பனையின் கைப்பற்றப்பட்ட பழுதடையக் கூடிய பொருள்களின் உரிமையாளர் அல்லது வெளிப்படையான உரிமையாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உரிமையாளர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் விற்பனையில் பிரசன்னமாக இருக்கலாம். |

| | |
|---|---|
| | **5.**இச்சட்டத்திற்கு அமைய கைப்பற்றப்பட்ட ஏதேனும் கலன் அல்லது வேறு ஆதனம், அல்லது பிணை முறி, பிணை அல்லது அந்தக் கலன் தொடர்பில் செலுத்தப்பட்ட வேறு பிணைப்பணம் அல்லது பறிமுதல் செய்யப்படாத ஆவணமாக இருத்தல் வேண்டும்.<br><br>அ)இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அனைத்து அபராதங்கள், தண்டங்கள், கிரயங்களுக்கான உத்தரவுகள் மற்றும் வேறு தீர்மானிப்புக்கள் செலுத்தப்படும் வரை அத்துடன் அனுமதிக்கப்பட்ட நேரத்தினுள் கொடுப்பனவு செலுத்தத் தவறுகை, விற்கப்பட்டு விற்பனைத் தொகையின் மீதி உரிமையாளருக்கு அல்லது அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருக்கு அல்லது உரிமையாளர் அல்லது ஏதேனும் பெயர்குறித்த நியமனம் இல்லாத நிலையில் வெளிப்படையான உரிமையாளருக்கு இச்சட்டத்தின் கீழ் அனைத்து அபராதங்கள், தண்டங்கள், கிரயங்கள் மற்றும் வேறு தீர்மானிப்புக்களுக்கான, உத்தரவுகள் மற்றும் விற்பனைக்கான கிரயத்தினைக் கழித்த பின்னர் கொடுக்கப்படும்.<br><br>ஆ)அபராதங்கள், தண்டங்கள் அல்லது உபபிரிவு 5(அ) இல் விவரிக்கப்பட்ட கிரயங்களுக்கான உத்தரவுகள் இல்லாதவிடத்து, உரிமையாளர் அல்லது அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அல்லது உரிமையாளர் அல்லது ஏதேனும் பெயர் குறித்த நியமனம் இல்லாத நிலையில், அதற்கு சட்ட உரித்துடைய ஆளினால் கிடைக்கச் செய்யப்படும். |
| | **அத்தியாயம் 4 – சான்று மற்றும் அனுமானங்கள்** |
| **சான்றுச் சான்றிதழ்**<br><br>**பிரிவு 153** | பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் எழுத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட கடற்றொழில் பரிசோதகர் தரத்திற்கு குறையாத எவரேனும் அலுவலர் அல்லது ஆள் பின்வருமாறு தெரிவித்து இச்சட்டத்திற்கு அமைய சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம்.<br><br>அ)ஒரு இலங்கை மீன்பிடி கலன் அல்லது ஒரு வெளிநாட்டு மீன்பிடிக் கலம் குறித்துரைக்கப்பட்ட திகதி அல்லது திகதிகளில் ஒரு குறித்துரைக்கப்பட்ட கலமாக இருந்தது அல்லது இருக்கவில்லை<br><br>ஆ) செல்லுபடியான உரிமம் அதிகாரமளித்தல் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றின் குறித்துரைக்கப்பட்ட திகதி அல்லது திகதிகளில் குறித்துரைக்கப்பட்ட கலன் அல்லது ஆள் இருந்தது அல்லது இருக்கவில்லை.<br><br>இ)திருத்தப்பட்ட ஆவணம் குறித்துரைக்கப்பட்ட கலன் அல்லது ஆளுக்கான உரிமம், அனுமதிப்பத்திரம் அல்லது பதிவுச் சான்றிதழின் உண்மைப் பிரதி ஆகும் என்பதுடன் அந்தக் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளும் அத்தகைய ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.<br><br>ஈ) நீரின் குறிப்பிட்ட அமைவிடம் அல்லது நீரின் பிரதேசம் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலங்கை நீர்ப்பரப்புகளின்ஒரு பிரதேசம் இலங்கை நீர்ப்பரப்புக்களின் நெருங்கிய, வரையறுக்கப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட அல்லது வேறு ஏதேனும் வழியில், இலங்கை நீர்ப் பரப்புக்களின் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலங்கை நீர்ப்பரப்புக்களின் ஒரு பிரதேசம்.<br><br>உ)இணைக்கப்பட்ட அட்டவணை இலங்கை நீர்ப்பரப்புகளில் குறித்துரைக்கப்பட்ட திகதி அல்லது திகதிகளில், ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக சட்டத்திற்கு அமைய நெருங்கிய அல்லது வரையறுக்கப்பட்ட பிரதேசங்கள் அல்லது எல்லை நிர்ணயிக்கப்பட்ட வலயங்கள், |

| | |
|---|---|
| | ஊ)குறிப்பிட்ட பொருள் அல்லது உபகரண பாகம் ஒரு மீன்பிடி உபகரணம்<br><br>எ) ஏதேனும் மீன் அல்லது நீரியல் வள உயிரினத்திற்கு இறப்பின் அல்லது காயத்தின் காரணமும் விதமும்<br><br>ஏ) ஒரு இணைக்கப்பட்ட ஆவணம் அங்கீகரிக்கப்பட்ட வாடகைதாரர் உடன்படிக்கை, அணுகுவழி உடன்படிக்கை அல்லது கடற்றொழில் முகாமைத்துவ உடன்படிக்கையின் உண்மைப் பிரதி<br><br>ஐ) அழைப்புக் குறி, பெயர் அல்லது அதன் இலக்கம், அல்லது கலங்கள், குறிப்பிட்ட கலத்திற்கு பெயரிடல் அல்லது இலக்கமிடலின் ஏதேனும் முறைமையின் கீழ் பிரித்துக் கொடுக்கப்பட்டவை<br><br>ஒ)குறித்துரைக்கப்பட்ட கலன் ஒன்றிற்காகஇணைக்கப்பட்ட நிலை அல்லது பிடித்தல் அறிக்கை தரப்பட்டது.<br><br>ஓ)குறித்துரைக்கப்பட்ட கலன், தன்னியக்க அமைவிட முறைமை அல்லது இச்சட்டத்தின் கீழ் பதிவு தேவைப்பாடுகளினை நிறைவு செய்கின்ற அல்லது நிறைவு செய்யாத வேறு விடயம், ஏற்புடையதான அணுகுகை முகாமைத்துவம் அல்லது சர்வதேச பேணல் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிட்ட கூற்று ஒன்றின் இணைக்கப்பட்ட பிரதி ஒன்றில் பிரகடனப்படுத்தப்பட்டவாறாக, பிரிவு (ஆ) இல் குறித்துரைக்கப்பட்டதைத் தவிர வேறு முகாமைத்துவ நடவடிக்கைகள்<br><br>ஔ)இணைக்கப்பட்ட ஆவணம் குறித்துரைக்கப்பட்ட அளவிடும் சாதனத்தின் உண்மைச் சான்றிதழ் ஆகும்.<br><br>க)இச் சட்டத்தின் கீழ் தரப்பட்ட மீன் நிலைமை குறித்த சான்றிதழ் இச் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்டது என்பதுடன் சான்றிதழுக்கு கையொப்பம் இடுகின்ற ஆளினால் ஆக்கப்பட்டது.<br>கா)இணைக்கப்பட்ட நிலை அல்லது பிடித்த அறிக்கை குறித்துரைக்கப்பட்ட கலன் ஒன்றிற்காகக் கொடுக்கப்பட்டது.<br><br>கி)புகைப்படம் எதைப் பிரதிநிதித்துவம் செய்யக் கருதுகின்றதோ அதன் உண்மை மற்றும் துல்லியத்தின் பிரதிநிதித்துவமாக இருக்கின்றது.<br><br>கீ)புகைப்படம் குறித்துரைக்கப்பட்ட நுண்கணிப்பு அலுவலர் ஒருவரினால் எடுக்கப்பட்டது.<br><br>கு)தவறு ஒன்று, கலன் அத்தகைய அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்ட கூற்றின் திருத்தப்பட்ட பிரதியில் பிரகடனப்படுத்தப்பட்டவாறு, மற்றுமொரு அரசின் சட்டங்களுக்கு எதிராக புரியப்பட்டது.<br><br>கூ)குறித்துரைக்கப்பட்ட மீன்பிடிக் கலன் சட்டவிரோத, அறிக்கை செய்யப்படாத, ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிக் கலன்கள் அல்லது பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பு அல்லது சர்வதேச உடன்படிக்கைக்கு இணங்கியவையினால் தாபிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட மீன்பிடிக் கலன்களின் பட்டியல் ஒன்றில் உள்ளடக்கப்படுகின்றது. |
| **சான்றிதழ்களுக்கான செல்லுபடியாகும் தன்மை மற்றும் நடவடிக்கை** | முரண் எண்பிக்கப்பட்டால் ஒழிய, பிரிவு(153) இன் கீழ் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழாக இருப்பதற்கு நோக்கமளிக்கும் ஒரு ஆவணம் அந்தப் பிரிவின் கீழ் முறையே வழங்கப்பட்ட சான்றிதழாகக் கருதப்படல் வேண்டும்.<br><br>**2.** பிரிவு (153) இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் |

| | |
|---|---|
| **முறைகள்**<br><br>**பிரிவு 154** | வழக்கு நடவடிக்கைகளில் நீதிமன்றத்தில் அதன் காண்பிப்பு பொருள் ஏழு(7) நாட்களுக்குப் பிந்தாமலும் முந்தாமலும் குற்றம் சாட்டப்பட்ட அல்லது எதிராளி மீது பிறப்பிக்கப்படுமிடத்து, அந்தச் சான்றிதழ், முரண் எண்பிக்கப்பட்டால் ஒழிய, அதில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து உண்மைகளின் ஆதாரமாக இருத்தல் வேண்டும்.<br><br>**3.**பிரிவு(153) இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று நீதிமன்றத்தில் அதன் காண்பிப்புக்கு முன்பு பதினான்கு நாட்களுக்கு (14) குறையாமல் குற்றம் சாட்டப்பட்ட அல்லது எதிராள் மீது சேர்ப்பிக்கப்படுமிடத்து அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட அல்லது எதிராள் அத்தகைய சேர்ப்பிப்புத் திகதியின் ஏழு(7) நாட்களினுள் அத்தகைய ஆட்சேபனைக்கான காரணங்களினை உள்ளடக்கி வழக்குத் தொடுநர் மீது எழுத்தில் ஆட்சேபனை அறிவித்தலினை சேர்ப்பிக்காவிடின், அப்பொழுது அந்தச் சான்றிதழ், நீதிமன்றம் ஆட்சேபிப்பதற்கு ஏதேனும் தவறுகை மூலம் முறையற்ற பங்கப்படுத்தல் என்று குற்றம் சாட்டப்பட்டவரினை அல்லது எதிராளினைக் கண்டுபிடிக்காவிடின், அதில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து நிகழ்வுகளின் முடிவான எண்பிப்பாக இருத்தல் வேண்டும்.<br><br>**4.**பிரிவு (153) இன் கீழ் வழங்கப்படும் எந்த சான்றிதழும் “ 2023 இன் [xx] ஆம் இலக்க கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்” என்று தலைப்பிடல் வேண்டும்.<br><br>**5.**பிரிவு (153) இன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் விடுபாடு அல்லது தவறிலிருந்து நீதிமன்றம் அத்தகைய விடுபாடு அல்லது தவறு தொடர்புபட்ட வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் சிக்கலுக்கு, அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது எதிராள் அதன்மூலம் முறையற்ற பங்கப்படுத்துவதற்கு முக்கியமான என்று கருதாவிடின் அது செல்லுபடியற்றதாக வழங்க முடியாது .<br><br>**6.**ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் பிரிவு (153) இன் கீழ் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்று நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்படுமிடத்து, அந்த வழக்குத் தொடரல் சான்றிதழ் வழங்கிய அலுவலரினை அழைப்பதற்கு கடப்பாட்டினைக் கொண்டிருத்தலாகாது என்பதுடன் அந்த நீதிமன்றம், அவசியமானவிடத்து, முரண் எண்பிக்கப்பட்டாலொழிய, அதில் உள்ள நிகழ்வுகளில் தங்கியிருத்தல் வேண்டும். |
| **கலம் ஒன்றின் அமைவிடம் குறித்த சான்றிதழ்**<br><br>**பிரிவு 155** | 1. இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கைகளில் குறிப்பிட்ட திகதி மற்றும் நேரம் அல்லது குறிப்பிட்ட காலப் பகுதியின் பொழுது விதிக்கப்பட்ட தவறு ஒன்றிற்கு முக்கியமாக இருக்குமிடத்து, அப்பொழுது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் கொடுக்கப்பட்ட சான்றிதழில் தெரிவிக்கப்பட்ட இடம் அல்லது பிரதேசம், முரண் எண்பிக்கப்பட்டாலொழிய, திகதி மற்றும் நேரம் அல்லது தெரிவிக்கப்பட்ட காலப்பகுதியின் பொழுது கலன் உள்ள இடம் அல்லது பிரதேசத்தின் முதல் தோற்றச் சான்றாக இருத்தல் வேண்டும்.<br><br>2.அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் உப பிரிவு (1) இல் ஆக்கப்பட்ட ஏதேனும் சான்றிதழில்<br>**அ**).அவர் பெயர், முகவரி, அலுவலக பதவி, அவர் நியமிக்கப்பட்ட நாடு மற்றும் அவர் எந்த ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்டாரோ அந்த ஏற்பாடு;<br><br>**ஆ**)பெயர் மற்றும், தெரிந்தால், தொடர்புபட்ட மீன்பிடிக் கலத்தின் அழைப்புக் குறி |

| | |
|---|---|
| | **இ)**கலன் இடத்தில் அல்லது பிரதேசத்தில் இருந்த திகதி அல்லது காலப்பகுதி<br><br>**ஈ)**கலம் அமைந்திருந்த என்று சார்த்தப் பெற்ற இடம் அல்லது பிரதேசம்; குறித்துரைக்கப்பட்ட எல்லைகளினுள் தெரிவித்த இடம் அல்லது பிரதேசம் மற்றும் அவற்றின் துல்லியத்தினை பொருத்துவதற்கு உபயோகிக்கப்படும் சாதனங்களினை பொருத்தும் நிலை<br><br>**உ**)அவர் நிலையினைப் பொருத்துவதற்கு அவற்றினை உபயோகிப்பதற்கு முன்னர் மற்றும் பின்னர் நியாயமான நேரத்தினுள் பொருத்தும் நிலையினைப் பரிசோதித்தார் என்றும் அவை சரியாக தொழிற்படுவதாகக் காண்பப்பட்டது என்றும்<br><br>**ஊ**)அவர் நிலை துல்லியமாக, அல்லது நீதியான முறையில் அங்கீகரிக்கப்படாத நிலை பொருத்தும் நிறுவுதல், அல்லது பெயரிடப்பட்ட பொறி உபயோகிக்கப்பட்டால் அத்தகைய சாதனத்திற்கு எதிராக தொடர்புபட்ட காலத்தின் பின்னர் இயன்றவரை அந்த சாதனத்தினைப் பரிசோதித்தார் என்றும் தெரிவித்தல் வேணடும்.<br><br>**3**. பிரிவு (155), பிரிவு (154) இன் கீழ் வழங்கப்பட்டிருந்த சான்றிதழ் என்றாற் போல இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழுக்கு பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் பிரிவு (154)இற்கு அதில் உள்ள ஏதேனும் குறிப்பு இப் பிரிவுக் குறிப்பாக வாசிக்கப்படல் வேண்டும்.<br><br>4. இப்பிரிவின் நோக்கங்களுக்காக ‘‘அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ‘‘ வேறு அரசுகளில் உள்ள அதேபொறுப்புக்களுடன் விதிக்கப்பட்ட ஆள்களினை உள்ளடக்குதல் வேண்டும். |
| **தன்னியக்க அமைவிட முறைமை. அனுமானம் மற்றும் சான்றிதழ்**<br><br>**பிரிவு 156** | **1**.முரண் எண்பிக்கப்பட்டாலொழிய இச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படக்கூடிய தன்னியக்க அமைவிட முறைமைமூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது உறுதி செய்யப்பட்ட தகவல்கள் அல்லது தரவுகள் அனைத்தும்<br><br>**அ**)அவ்வாறு அடையாளம் காணப்பட்ட கலத்திலிருந்து வந்தது என்றும்<br><br>**ஆ**)துல்லியமாக இடைமாற்றீடு செய்யப்பட்டது அல்லது மாற்றப்பட்டது என்றும்<br><br>**இ)**கலத்தின் தலைவர், உரிமையாளர் அல்லது வாடகைதாரர் மற்றும் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது உறுதி செய்யப்பட்ட தரவு கணனிப் பிரதியிலிருந்தா அல்லது கட்புலக் காட்சிப்படுத்தல் பிரிவிலிருந்தா கொடுக்கப்பட்டது என்றும் அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**2**.உபபிரிவு (1) இல் அனுமானம் ஏதேனும் ஊடுகடத்தல் அல்லது மாற்றலுக்கு முன்னரா அல்லது பின்னரா தகவல் சேகரிக்கப்பட்டது என்று பிரயோகிக்கப்படல் வேண்டும்.<br><br>3.இச் சட்டத்திற்கு அமைவாக நிறுவப்பட்டு இயக்கப்படும் தன்னியக்க அமைவிட முறைமை ஒன்று துல்லியமாக நீதியான முறையில் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.<br><br>**4**.எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்:<br>**அ**)அவரின் பெயர், முகவரி மற்றும் அலுவலக பதவி |

| | |
|---|---|
| | **ஆ**)அவர் கணினிப் பிரதியினை வாசிப்பதற்கு அல்லது தன்னியக்க அமைவிட முறைமையிலிருந்து தகவல்களினைப் பெற்றுக் கொள்ளல் அல்லது உறுதி செய்தலினை ஏதேனும் இயலுமை பொறியின் கட்புல காட்சிப்படுத்தலிற்கு தகுதியானவர் என்றும்<br><br>**இ)**தகவல் நேரம் மற்றும் திகதி தன்னியக்க அமைவிட முறைமை மற்றும் அதன் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது அல்லது உறுதி செய்யப்பட்டது.<br><br>**ஈ)**தன்னியக்க அமைவிட முறைமையில் கலத்தின் பெயர் மற்றும் அழைப்புக் குறி அவருக்குத் தெரிந்தவாறு அல்லது ஏதேனும் அலுவலக இடாப்பு, பதிவேடு அல்லது ஏனைய ஆவணத்திலிருந்து உறுதிசெய்யப்பட்டவாறு அமைகின்றது அல்லது அமைக்கப்பட்டது.<br><br>**உ**)தன்னியக்க அமைவிடம்காட்டி முறைமையில் அதன் ஊடுகடத்தல்கள், அல்லது தகவல்களினைப் பெற்றுக் கொள்வதில் அல்லது உறுதி செய்வதில் உபயோகிக்கப்படும் வேறு பொறிகளில் குறைபாடுகள் காணப்படவில்லை என்ற பிரகடனம்<br><br>**5**.பிரிவு(153),பிரிவு (154)இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ˙என்றாற்போல இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் சான்றிதழுக்கு பொருந்துதல் வேண்டும் என்பதுடன் பிரிவு (154)இற்கு அதில் உள்ள ஏதேனும் குறிப்பு இப் பிரிவுக் குறிப்பாக வாசிக்கப்படல் வேண்டும். |
| **புகைப்படச் சான்று**<br><br>**பிரிவு 157** | **1**.ஏதேனும் மீன்பிடி அல்லது கடற்றொழிலுடன் தொடர்புபட்ட செயற்பாட்டினை புகைப்படம் ஒன்று எடுக்கப்படுமிடத்து மற்றும் சம காலத்தில் திகதி மற்றும் நேரம் அத்துடன் புகைப்படம் எடுக்கப்பட்ட நிலை புகைப்படத்தின் மீது மிகைப்படுத்தப்பட்டிருக்கின்றதுஇஅப்பொழுது முரண் எண்பிக்கப்பட்டாலொழிய, அந்தப் புகைப்படம் அதே திகதி,அதே நேரம் மற்றும்அவ்வாறு தோன்றும் நிலையில் எடுக்கப்பட்டது என்று அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**2**. உப பிரிவு (1) இல் தரப்பட்ட அனுமானம்<br>**அ**. புகைப்படம் எடுக்கும் கமெரா தொடர்புபட்ட திகதி, நேரம், நிலையினை வழங்கும் சாதனங்களுக்கு நேரடியாக இணைக்கப்படுகின்றது.;<br>**ஆ**. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் மட்டுமே எழுதல் வேண்டும்.<br><br>**3**.உப பிரிவு (1) இல் விவரிக்கப்பட்ட வகையின் புகைப்படம் ஒன்றினை எடுக்கும் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பின்வருவனவற்றினைத் தெரிவித்து புகைப்படத்தினை இணைக்கும் சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம்.<br>**அ)**.அவர் பெயர், முகவரி, அலுவலக பதவி, நியமன நாடு மற்றும் எந்த அதிகார சபையின் கீழ் நியமிக்கப்பட்டாரோ அந்த அதிகாரசபை<br><br>**ஆ**)தெரிந்தால், புகைப்படத்தில் தோன்றும் ஏதேனும் மீன்பிடிக் கலத்தின் பெயர் மற்றும் அழைப்புக் குறி<br><br>**இ)**கமெராவின் பெயர்கள், மணிக்கூடு அல்லது கடிகாரம் அல்லது திகதி மற்றும் நேரம் அத்துடன் நிலையினைப் பொருத்தும் சாதனங்கள் அத்துடன்அவர் புகைப்படம் எடுக்க நியாயமான நேரத்திற்கு முன்பும் எடுத்த பின்பும் அந்த சாதனங்களினை பரிசோதித்தார் என்றும் அவை யாவும் சரியாக தொழிற்படும் நிலையில் காணப்பட்டன என்ற பிரகடனம் |

| | |
|---|---|
| | **ஈ)** உப பிரிவு (2) (அ) மற்றும் (ஆ) இல் தரப்படும் விடயங்கள்<br><br>**உ**)குறித்துரைக்கப்பட்டவரையறைகளினுள் உபயோகக்கப்படும் சாதனத்தினைப் பொருத்தும் நிலையின் துல்லியம்<br><br>**4**.இப்பிரிவின் நோக்கத்திற்காக, நிலையினைப் பொருத்தும் சாதனம் கலம் ஒன்றின் அமைவிடத்தினை சுட்டிக் காட்டுகின்ற ஏதேனும் செய்மதி வானோடல் முறைமை அல்லது உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமைக்கு உள்ளடக்கி ஆனால் வரையறுக்கப்படாத ஏதேனும் சாதனமாக இருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.<br><br>**5**.பிரிவு (154),பிரிவு (155)இன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழுக்குப் பிரயோகித்தல் வேண்டும் என்றாற் போல இப்பிரிவின் கீழ் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது என்றும் பிரிவு (155) இற்கு அதில் உள்ள ஏதேனும் குறிப்பு இப் பிரிவுக்கு ஒரு குறிப்பாக வாசிக்கப்படல் வேண்டும். |
| **நிபுணர் சான்றுகள்**<br><br>**பிரிவு158** | பணிப்பாளர் தலைமையதிபதி,சான்றுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடற்றொழில் பரிசோதகரின் தரத்திற்கு குறையாத ஆளொருவரை நிபுணராகப் பெயரிட முடியும். |
| **அனுமானங்கள்**<br><br>**பிரிவு 159** | 1.இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறினைப் புரிதலில் உபயோகிக்கப்பட்ட மீன்பிடிக் கலத்தில் அனைத்து மீன்களும் ,முரண்பாடு எண்பிக்கப்பட்டாலொழிய, தவறு புரியும் வேளையில் பிடிக்கப்பட்டது என்று அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**2**.இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் , சம்பவம் இடம்பெற்றதாக சார்த்தப்படும் இடம் சிக்கலில் இருக்குமிடத்து இசம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருக்கின்றவாறு கலம் அல்லது வானூர்தியினை சம்பவத் திரட்டு புத்தகத்தில் அல்லது ஏதேனும் வலியுறுத்தலின் வேறு அலுவலக பதிவேட்டில் இயைபான நுழைவில் தெரிவிக்கப்பட்ட இடம் சம்பவம் இடம்பெற்ற இடமாக இருப்பதற்கு அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**3**.எழுத்திலான பிரதி காண்பிப்பு அல்லது துல்லிய பிரித்தெடுப்பின் உண்மைப் பிரதியாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்ட நுழைவின் பிரித்தெடுப்பின் காண்பிப்பு கலம் அல்லது வானூர்தி வலியுறுத்தலின் சம்பவத் திரட்டு புத்தகம் அல்லது வேறு அலுவலகப் பதிவேட்டில் நுழைவு ஒன்றின் முதல் தோற்றச் சான்றாக இருத்தல் வேண்டும்.<br><br>**4**.இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றுடன் தொடர்புறுத்தும் ஏதேனும் சட்ட நடவடிக்கையில்<br>**அ**) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் இலங்கை நீர்ப்பரப்பில் குறித்துரைக்கப்பட்ட பிரதேசம் ஒன்றில் எடுக்கப்பட்ட விதிப்பு<br><br>**ஆ**)நீதிமன்றம், அந்த ஆதாரத்திற்கு காரணங்கள் நியாயமானவை என்று கருதியதை அடுத்து, அத்தகைய அனைத்து மீனும் ,முரண் எண்பிக்கப்பட்டாலொழிய, அவ்வாறு எடுக்கப்பட்டதாக அனுமானிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| | **5.**இச் சட்டத்தின் கீழ் மீன்பிடிக் கலம் ஒன்று தொடர்பில் ஏதேனும் தகவல் அல்லது மீன்பிடிக் கலம் ஓன்றின் ஏதேனும் தொடர்பில் அணுகுகை உடன்படிக்கை ஏதேனும் தகவல் வழங்கப்படுமிடத்து, அது தொடர்புபட்ட கலத்தின் தலைவர், உரிமையாளர் அல்லது வாடகைதாரரினால், அவர்களில் எவரேனும் கொடுக்கப்படவில்லை அல்லது அதிகாரமளிக்கப்படவில்லை என்று எண்பிக்காவிடின், கொடுக்கப்பட்டது என்று அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**6.**இச் சட்டத்தின் கீழ் பேணப்படவேண்டிய ஏதேனும் சம்பவத் திரட்டுப் புத்தகம், அட்டவணை, அல்லது மீன்பிடிக் கலம் ஒன்றின் செயற்பாடுகளினை பதிவதற்கு உபயோகிக்கப்பட்ட வேறு ஆவணத்தில் அல்லது அவற்றின் மீது எழுத்தில் அல்லது வேறு அடையாளத்தில் ஏதேனும் பதிவு அந்தக் கலத்தின் தலைவர், உரிமையாளர் அல்லது வாடகைதாரர் இருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.<br>**7.**இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் வலியுறுத்தலுக்காக உபயோகிக்கப்பட்ட கலம் அல்லது வானுார்தியில், ஏதேனும் செய்மதி வானோடல் முறைமை அல்லது உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமைகள் அடங்கலாக ஆனால் வரையறுக்கப்பட்ட, கலம் ஒன்றின் அமைவிடத்தினை சுட்டிக் காட்டும் ஏதேனும் சாதனம் துல்லியமாக இருப்பதற்கு அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**8.**.ஒரு மணித்தியால காலப்பகுதிக்கு அத்தகைய மீன்பிடிநடவடிக்கையின் பொழுது கடற்றொழில் கண்காணித்தல் முறைமை நிலையத்துடன் இணைப்பினை ஏற்படுத்தத் தவறுகின்ற அல்லது கலம் கண்காணித்தல் முறையினை இயக்குவதற்கு தவறுகின்ற மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட எவரேனும் ஆள், முரண் எண்பிக்கப்படும் வரை , அவர் (110) பிரிவின் ஏற்பாடுகளை மீறிவிட்டார் என்று அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**9.** முரண் எண்பிக்கப்பட்டாலொழிய, இலங்கை நீர்ப் பரப்புகளில் அல்லது அதன் அருகில் வெடிமருந்துகள், நச்சு அல்லது வெடித்தலினை உண்டுபண்ணக் கூடிய கம்பி தீப்பற்றல் போன்ற ஏதேனும் சாதனத்தினை உடைமையில் வைத்திருப்பதனைக் கண்டுபிடிக்கப்படும் எவரேனும் ஆளினை இச் சட்டத்தின் ஏற்பாடு மீறலில் சட்டரீதியற்ற செயற்பாடு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது என்று அனுமானிக்கப்படல் வேண்டும்.<br><br>**10** முரண் எண்பிக்கப்பட்டாலொழிய, இலங்கை நீர்ப்பரப்பில் அல்லது அருகில் ஏதேனும் சட்டவிரோத மீன்பிடி உபகரணம் உடைமையில் வைத்திருத்தலினைக் கண்டுபிடிக்கப்படும் ஆள் எவரும் இச்சட்டத்தின் (80), (82) மற்றும்(84) பிரிவுகளுக்கு முரணாக சட்டரீதியற்ற செயற்பாட்டினை மேற்கொள்கின்றார் என்று அனுமானிக்கப்படல் வேண்டும். |
| | |
| **எண்பித்தல் பொறுப்பு**<br><br>**பிரிவு 160** | இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கைகளில், உரிமம் அல்லது ஏனைய அனுமதி ஒன்று தேவைப்படுகின்ற செயல் ஒன்றுடன் தொடர்புறுத்தி தவறு ஒன்று புரியப்பட்டதுடன் ஆள் ஒருவருக்கு விதிக்கப்படுமிடத்து, பொறுப்பானது இயைபான நேரத்தில் தேவையான உரிமம் அல்லது அனுமதி வைத்திருக்கப்பட்டது என்று எண்பிப்பதற்கு அந்த ஆள் மீது இருத்தல் வேண்டும்.<br>ஆள் ஒருவர் பிரிவு(93) இனை மீறப்படுதலுடன் குற்றம் சாட்டப்படுமிடத்து, பொறுப்பு கொடுக்கப்பட்ட தகவல் உண்மையானது, பூரணமானது மற்றும் சரியானது என்று எண்பிப்பதற்கு அந்த ஆள் மீது இருத்தல் வேண்டும். |
| **தலையிடல் அல்லது சான்றினைத் திரிவுபடுத்துதல்** | 1. இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றுடன் தொடர்புபடுத்தக் கூடிய சான்றினை அழிக்கவோ, சேதப்படுத்தவோ, தெளிவற்றதாக்கவோ அல்லது வேறுவகையில் அதனுடன் தலையிடலோ ஆகாது. |

| | |
|---|---|
| **பிரிவு 161** | 2.குறிப்பாக, ஆனால் ஆள் எவரும் பிரிவு (1) இன் பொதுவாந்தன்மையினை வரையறுத்தல் ஆகாது, ஆள் எவரும்<br>அ) இலங்கை நீர்ப்பரப்பில் அல்லது பெருங்கடலில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஏதேனும் கலம் தொடர்ந்து சென்று கொண்டிருத்தல், இது பயணிக்கின்றது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் என்று அறிவிக்கப்பட்டதனைப் பற்றி ஏதேனும் மீன்,உபகரணங்கள், ஆவணம் , வெடிக்கத்தக்க, நச்சுப் பதார்த்தம் அல்லது அதன் கைப்பற்றலைத் தவிர்ப்பதற்கு உள்நோக்கத்துடன் வேறு ஏதேனும் பொருள் இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் ஏற்புடையதான தேசிய அல்லது சருவதேச சட்டத்தின் கீழ் புரியப்பட்ட தவறினைக் கண்டுபிடித்தலினைத் தவிர்ப்பதற்கு, கலத்திலிருந்து வெளியே வீசுதல் ஆகாது<br><br>**ஆ**) இந்தப் பகுதியின் கீழ் கட்டுக்காவலில் வைக்கப்பட்ட ஏதேனும் கலம், மீன், உபகரணம், அல்லது இந்தப் பகுதியின் கீழ் கட்டுக்காவலில் வைத்திருக்கப்பட்ட வேறு பொருளின் கட்டுக்காவலினை அலலது செயல்கள் அல்லது விடுபாடுகளினை செயலாற்றுவதற்கு நீக்குதல் அப்படி என்றால்தான் இச் சட்டத்தின் கீழ் கட்டுக் காவலில் வைத்திருக்கப்பட்ட ஒரு கலன், மீன், உபகரணம் அல்லது வேறு பொருள், கட்டுக்காவலில் வைத்திருக்கபபட்டது என்று அறிந்தாரோ இல்லையோ கட்டுக்காவலிலிருந்து அகற்றலாகாது.<br><br>**இ**)இச்சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் வளவுகள் அல்லது வசதிகளினை உள்நோக்கத்துடன் கவனமற்று அல்லது உள்நோக்கமற்று அழித்தல், சேதமாக்குதல், செயலற்றதாக்குதல் அல்லது தலையிடல் ஆகாது.<br><br>**ஈ**)இலங்கையில், இலங்கை நீர்ப்பரப்புக்களிலோ அல்லது தேசிய நியாயயாதிக்கத்திற்கு அப்பால் உள்ள பிரதேசங்களிலோ இச்சட்டத்தின் கீழ் தன்னியக்க அமைவிட முறைமை ஒன்று தேவைப்படுகின்றவிடத்து, பயணிக்கும் கலன் ஒன்றின் தன்னியக்க அமைவிட முறைமையின் ஒரு பகுதியினை உள்நோக்கத்துடன், கவனமற்று அல்லது உள்நோக்கமற்று அழித்தல், சேதமாக்குதல், செயலற்றதாக்குதல் அல்லது வேறு வகையில் தலையிடல் அல்லது தன்னியக்க அமைவிட முறைமை ஒன்றினுள் அல்லது ஏற்புடையதான கலன் கண்காணித்தல் முறைமை ஒன்றினுள் உத்தியோகபூர்வமாகத் தேவைப்படாத அல்லது அர்த்தமற்ற தகவல்கள் அல்லது தரவுகளினை இடுதல் அல்லது உள்ளீடு செய்தல் ஆகாது.<br><br>**உ**)தன்னியக்க அமைவிட முறைமை, கலம் கண்காணித்தல் முறைமை இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட அறிக்கையிடல் அல்லது பதிவுசெய்தல் முறைமையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் அல்லது தரவுகளினை, கடமை நேரத்தில் மற்றும் கடமையின்பொழுது அந்தத் தகவல்கள் அல்லது தரவுகள் பெறுவதற்கு உரித்துடைய ஆள் அல்லது ஆள்களினை விடுத்து, உள்நோக்கத்துடன், அசட்டையாக அல்லது உதாசீனமாக பகிரங்கப்படுத்தல் ஆகாது.<br><br>**ஊ**)கலன் கண்காணித்தல் முறைமை இயக்கப்படும் இடத்தில் உள் வளாகத்திற்கு அதிகாரமளிக்கப்படாத அணுகுகைகள் அல்லது இச் சட்டத்தின் கீழ் கலம் கண்காணித்தல் முறைமை இயக்குதலிருந்து தகவல்கள் அல்லது தரவுகளுக்கு அதிகாரமளிக்கப்படாத அணுகுகையினை அனுமதித்தல் ஆகாது.<br><br>3. தவறு ஒன்றினைப் புரிகின்ற மற்றும் குற்றத் தீர்ப்பளிப்பின் மீது இப்பிரிவின் |

| | |
|---|---|
| | உப பிரிவுகள் (1) அல்லது (2) இன் ஏற்பாடுகளினை மீறுகின்ற எவரேனும் ஆளுக்கு, III ஆம் அட்டவணையின் தடைகள் ஏற்புடையதாதல் வேண்டும். |
| | **பகுதி XII - பொது** |
| **மாகாண சபைகளுடன் ஆலோசனை**<br><br>**பிரிவு 162** | பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையானது, இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நிருவாகத்தில், கடற்றொழிலுக்குப் பொறுப்பான ஒவ்வொரு மாகாணத்தின் அமைச்சு சபையின் அமைச்சரின் அமைச்சு செயலாளர் அத்தகைய மாகாணத்தினுள் கடற்றொழிலை பாதிக்கும் விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்படுகின்றனர் என்று உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். |
| **அறிவித்தல்கள்**<br><br>**பிரிவு 163** | 1.இச் சட்டத்தில் வேறு வகையில் குறித்துரைக்கப்பட்டாலே தவிர, இச் சட்டத்தின் கீழ் ஏதேனும் அறிவித்தல் அல்லது வேறு ஆவணம் கொடுக்கப்பட, ஏதேனும் ஆளுக்கு சேர்ப்பிக்கப்பட அல்லது வழங்கப்பட வேண்டியிருப்பின், அந்த அறிவித்தல் அல்லது வேறு ஆவணம்<br>அ) அந்த ஆளுக்கு தனிப்பட்டரீதியில் கொடுக்கப்படலாம்.<br><br>**ஆ**)அந்த ஆள் சார்பாக செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு தனிப்பட்ட ரீதியல் கொடுக்கப்படலாம்.<br><br>**இ**)ஏதேனும் அறிவித்தல் விடயத்தில் அல்லது கொடுக்கப்பட வேண்டிய ஆவணம் அல்லது இச் சட்டத்தின் கீழ் தவறு ஒன்றிற்காக ஏதேனும் ஏதேனும் நடவடிக்கைகளின் காரணத்தில் அல்லது நோக்கத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணம் நீதிமன்றம் பணிப்புரை செய்தவாறு அந்த, ஆளுக்கு கொடுக்கப்படலாம்<br><br>**ஈ**)இச்சட்டத்திற்கு எதிராக தவறு ஒன்றிற்காக ஏதேனும் நடவடிக்கைகளின் பொழுது அல்லது நோக்கத்திற்காக கொடுக்கப்பட வேண்டிய அல்லது சேர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதேனும் அறிவித்தல் அல்லது ஆவணம் விடயம் தவிர, அந்த ஆளுக்கு அல்லது அந்த ஆள் சார்பாக செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு அந்த ஆள் அல்லது வேறு ஆளின் வழமையான அல்லது இறுதியாக அறிந்த வியாபார இடத்தில் அல்லது தங்குமிடத்தில் பதிவுத் தபால் ஊடாக தபால் மூலம் அனுப்பப்படலாம்.<br><br>உ)இச் சட்டத்திற்கு எதிராக தவறு ஒன்றிற்காக ஏதேனும் நடவடிக்கைகளின் பொழுது அல்லது நோக்கத்திற்காக கொடுக்கப்பட வேண்டிய அல்லது சேர்ப்பிக்கப்படவேண்டிய ஏதேனும் அறிவித்தல் அல்லது ஆவணம் விடயம் தவிர,அந்த ஆளுக்கு அல்லது அந்த ஆள் சார்பாக செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆள் எவருக்கும் , அந்த ஆளினுடைய அல்லது மற்றைய ஆளினுடைய தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரி அடங்கலாக வழமையான அல்லது இறுதியாக அறியப்பட்ட முகவரிக்கு இலத்திரனியல் ஊடுகடத்தல் மூலம் அனுப்பப்படலாம்.<br><br>**2.**வெளிநாட்டு மீன்பிடிக் கலம் ஒன்றின் கப்பற்தலைவர்,உரிமையாளர்? இயக்குபவர்,வாடகைக்கு பெற்றவர்,படகில் பயணிக்கும் அல்லது பயணித்ததாக சந்தேகிக்கின்ற எவரேனும் ஒருவர் இச் சட்டத்திற்கு எதிரான தவறு ஒன்றிற்காக ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் எதிராளாக இருக்குமிடத்து, அப்பொழுது , வேறு ஏதேனும் சட்டம் எப்படியிருப்பினும் ஏதேனும் அழைப்பாணைகள் அல்லது வேறு ஆவணங்களினை எதிராள் மீதான சேவை<br><br>**அ**)எதிராள் சார்பாக கலத்தின் முகவருக்கு தனிப்பட்டரீதியில் வழங்குதல் மூலம் அந்த முகவர் எதிராள் சார்பாக இதை ஏற்றுக்கொள்வதற்கு |

| | |
|---|---|
| | மறுத்தால் முகவரின் கவனத்திற்கு கொண்டுவரல் மூலம்<br><br>**ஆ**)எதிராள் சார்பாக அந்த முகவருக்கு முகவரின் இறுதியாக அறியப்பட்ட அல்லது வழமையான வதிவிடம் அல்லது அந்த முகவரின் வியாபாரத் தலத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் மூலம்<br><br>**இ**)ஏதேனும் வெளிநாட்டுக் கலம் தொடர்பில் முகவர் பெயர் குறித்து நியமிக்கபபட்டி ருக்காதவிடத்து ,அந்த முகவர் அந்தக் கலத்தின் தலைவராக கருதப்படல் வேண்டும். |
| **அந்தரங்கத் தகவல்களினைப் பெயரிடல்**<br><br>**பிரிவு 164** | 1.இச்சட்டத்தின் கீழ் கடமைகள் அல்லது பொறுப்புக்கள் மேற்கொள்ளும் எவரேனும் ஆள், பணிப்பாளர் தலைமையதிபதி, இச் சட்டத்திற்கு அமைய அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, இச் சட்டத்திற்கு அமைய தகவல் அல்லது அந்தரங்கமான இயல்புடைய வேறு தரவுகள் அல்லது அந்தரங்கமானதென பெயரிடப்பட்டவற்றினை,அத்தகைய அதிகாரம் அல்லது அத்தகைய கடமைகள் மற்றும் பொறுப்புக்களினைக் கொண்டிராத எவரேனும் ஆளுக்கு அவர்களினுடைய அதிகாரம்,கடமைகள் மற்றும் பொறுப்புக்களின் பயனைக் கொண்டு பெற்றவற்றினை வெளிப்படுத்தலாகாது.<br><br>**2**.பணிப்பாளர் தலைமையதிபதி ஏதேனும் தகவல்களினை அந்தரங்கமானதென வகைப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறு செய்கையில் அந்தரங்கமான தேவைப்பாடுகளிலிருந்து மொத்தமாகப் பெறப்பட்ட பொதுவான பொழிப்புக்களை விலக்களிப்பும் செய்யலாம்.<br><br>**3** பணிப்பாளர் தலைமையதிபதி எவரேனும் ஆளுக்கு எழுத்தில்<br>**அ**)அந்தரங்கமான தகவல்களினைப் பெறுவதற்கு அல்லது அணுகுவதற்கு<br><br>ஆ) அவர் பெயரிடக்கூடியவாறு அந்தரங்கத் தகவல்களினை வைத்திருக்கும் அத்தகைய வளவுகளுக்கு அணுகுவதற்கு அல்லது அணுகுவதனை மட்டுப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம்.<br><br>**4**.உப பிரிவு (2) எப்படி இருப்பினும், பின்வரும் தகவல்கள் அந்தரங்கமானதாக இருத்தல் வேண்டும்.<br>**அ**)இச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படும் பதிவேடுகள் ,திரட்டுக்கள் அல்லது வேறு ஆவணங்களில் வழங்கப்பட்ட வணிக இயல்பு ஒன்றின் ஏதேனும் தகவல் அல்லது தரவு;<br><br>**ஆ**)இச் சட்டத்திற்கு அமைய கலம் ஒன்றினைக் கண்காணிக்கும் முறைமை அல்லது அதன் பாகத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் அல்லது தரவு ;<br><br>**இ**)காலத்திற்குக் காலம் விதித்துரைக்கப்படக்கூடிய, அத்தகைய வேறு தகவல் அல்லது தரவு<br><br>**5**.தகவல்கள் பரவு எல்லைக்கு வெளிக் காட்டப்படலாம்.<br>**அ**)அந்த வெளிக் காட்டல்கள் இச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதும் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்படுகின்றது அல்லது தேவைப்படுத்தப் படுகின்றது.<br><br>**ஆ**) தகவல்களினை வழங்கும் அந்த ஆள் வெளிக் காட்டல்களினை ஆக்குவதற்கு அதிகார மளிக்கப்படுகின்றார்.<br>**இ**)கடற்றொழில் துறையுடன் தொடர்புற்ற புள்ளிவிபரவியல் தகவல்களினைப் பிரசுரிப்பதற்கு இயலச் செய்வதற்கு அவசியமானவை. |

| | |
|---|---|
| | ஈ)இலங்கை அரசாங்கத்தின் வேறு அமைச்சுக்கள் மற்றும் முகவரான்மைகள் இலங்கை சட்டங்களின் அமுல்படுத்தலுக்கு அவசியமானவை<br><br>**உ**)பிராந்திய அல்லது சருவதேச கடப்பாடுகளினை விடுவிப்பதற்கு அல்லது இயைபான செயற்பாடுகளினைக் கண்காணித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நுண்கணிப்புச் செய்தலுக்கு பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அல்லது கூட்டிணைப்பினை ஊக்குவிப்பதற்கு அவசியமானவை<br><br>**ஊ**)பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அமைச்சருக்கு கொடுக்கப்பட வேண்டிய ஆலோசனையினை இயலச் செய்வதற்கு அவசியமானவை.<br><br>**6**.:பணிப்பாளர் தலைமையதிபதி அந்தரங்கமானதாக பெயரிடப்பட்ட ஏதேனும் தகவல் விடுவிப்புக்கு அதிகாரமளிக்கலாம்.<br><br>**அ**)நுண்கணிப்பு, தேடுதல் மற்றும் மீட்பு மற்றும் வேறு அவசரநிலை உள்ளடங்கும் நோக்கத்திற்காக பொறுப்பான அதிகாரிக்கு ,வேண்டுகோளின் பேரில், ஏதேனும் கலம் ஒன்றின் உண்மையான நேரம் அல்லது வேறு நிலை தொடபுற்றவை:<br><br>**ஆ**)அவர் கருதும் நோக்கத்திற்காக தீர்மானம் எடுப்பதில் நியாயமான வெளிப்படைத் தன்மை அடங்கலாக, இச் சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் வலியுறுத்தலின் துணையாக இருக்கும்: அல்லது<br><br>**இ)**அத்தகைய நோக்கங்களுக்காக அமைச்சர் என்ற வகையில் எழுத்தில் அங்கீகரிக்கலாம் அல்லது விதித்துரைக்கப்படலாம்.<br><br>**7**.அந்தரங்கமானதாக வகைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவல் அத்தகைய பெயரிடலின் நேரத்திலிருந்து மூன்று(3) வருட காலப்பகுதிக்கு அத்தகைய வகைப்படுத்தலினை பேணுதல் வேண்டும் என்பதுடன் மூன்று(3) வருட முடிவில், பணிப்பாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் வலியுறுத்தலுடன் தொடர்புற்ற நோக்கங்களுக்காக அவசியம் என கருதக் கூடியவாறான மேலும் ஒரு மூன்று(3) வருடகாலப் பகுதி அல்லது அதற்கு கூடுதலாக காலப்பகுதி வரை அத்தகைய வகைப்படுத்தலினை நீடிப்புச் செய்யலாம்.<br><br>**8**.பிரிவு (1) இன் தேவைப்பாடுகளுடன் அமைந்தொழுகாத ஆள் ஒருவர், (3), (5) அல்லது(6) உப பிரிவுக்கு இணங்க வெளிக்காட்டல் அதிகாரமளிக்கப்படுமிடத்து தவிர, தவறு ஒன்றினைப் புரிகின்றார் என்பதுடன் III ஆம் அட்டவணையின் தடைகளுக்கு உள்ளாதல் வேண்டும். |
| **தகவல்களின் சொத்துவம்**<br><br>**பிரிவு 165** | 1.இச்சட்டத்தின் கீழ் அரசுக்கு அறிக்கையிட, அறிவிக்கப்பட அல்லது வேறு வகையில் தரப்படுவதற்கு தேவைப்படும் அனைத்து தகவல்களின் சொத்துவம் அரசுக்கு உடமையாக்கப்படுகின்றது.<br><br>2. இச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படும் தன்னியக்க அமைவிட முறைமைகள் மூலம் பிறப்பிக்கப்படும் தகவல் அனைத்தினதும் சொத்துவம் அரசுககு உடமையாக்கப்படுகின்றது. |
| **மீனவர்களுக்கு கல்விசார் நிகழ்ச்சிகள்** | பணிப்பாளர் தலைமையதிபதி, நிதி கிடைப்பனவுக்கு உட்பட்டு, நீண்டகால கல்விசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை இச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பாகவும் ஐஓரிசி இனால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் தொடர்பாகவும் மீனவர்களுக்கு அறிவூட்டுவதற்கும், மீன் இருப்புக்களினைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி |

| | |
|---|---|
| பிரிவு 166 | மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும் மாசடைதலினைக் குறைப்பதற்கும் நடாத்துதல் வேண்டும். |
| **ஒழுங்குவிதிகள்**<br><br>**பிரிவு 167** | அமைச்சர் பின்வரும் விடயங்கள் அனைத்தினையும் அல்லது ஏதாவது தொடர்பாக ஒழுங்குவிதிகளினை ஆக்கலாம்.<br>**அ**)பிரிவு (72) இன் கீழ் கடற்றொழில்கள் குழுக்களுக்கான விதிகளினை நடைமுறைப்படுத்துவதற்கும் கிராமிய மற்றும் மாவட்ட மட்டத்தில் கடற்றொழில் அமைப்புக்களை தாபிப்பதற்காகவும்,<br><br>**ஆ**)விண்ணப்ப நடவடிக்கைமுறை மற்றும் படிவம், செலுத்தத்தக்க கட்டணங்கள், மற்றும் மீன்பிடிக் கலன்களின் பதிவுசெய்தல் தொடர்புற்ற வேறு ஏதேனும் விடயங்கள் அத்துடன் பிரிவு(11) இன் கீழ் , கலன்களினை அடையாளமிடல் உள்ளடங்கலாக, பொழுதுபோக்குசார் கடற்றொழில்களுக்கான கலன்கள்<br>**இ)**பிரிவுகள்20,21,22,23,24,25, மற்றும் 26 வரையிலான பிரிவுகளின் கீழ் அடமான சாதனங்கள் தொர்புற்ற அவசியமான ஏற்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதற்கு<br><br>**ஈ)**பிரிவு (31) இன் கீழ் மீனவர்களின் பதிவினைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வுக்கான அடையாள அட்டை மற்றும் நடவடிக்கை முறையினைப் பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள் மற்றும் விண்ணப்ப நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்துவதற்கு:<br><br>**உ**)40,42,43,56,57,58 மற்றும் 59 ஆம் பிரிவுகளின் கீழ் வெளிநாட்டுக் கலன் ஒன்றில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு மீனவர்களுக்கான உரிமங்கள், மீன்பிடி நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு மீன்பிடிக் கலங்கள் மற்றும் மீனவர்களின் உரிமமாக்கல் தொடர்புற்ற விண்ணப்பப் படிவம், செலுத்தத்தக்க கட்டணங்கள் மற்றும் வேறு ஏதுேனும் விடயத்தினைத் தீர்மானிப்பதற்கு, அத்துடன் தலைவர்களுக்கான தகுதி மற்றும் உரிமச் சான்றிதழுக்கான நிபந்தனைகள், நடவடிக்கைமுறை மற்றும் விண்ணப்பப்படிவத்தினைத் தீர்மானிப்பதற்கும்:<br><br>**ஊ)**மீன்பிடி உபகரணங்கள் மற்றும் அவற்றின் உரிமையாளர்களினைப் பதிவுசெய்தல் மற்றம் அடையாளமிடல், பிரிவு (53) இன் கீழாக எந்த அலுவலர்களினால் பதிவு செய்யப்பட்டனரோ அந்த அலுவலர்கள் மற்றும் செலுத்தத்தக்க கட்டணங்கள் தொடர்பிலான நிபந்தனைகளினை நடைமுறைப்படுத்துவதற்கு:<br><br>**எ)**பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல்களினை நடாத்துவதற்கான நிபந்தனைகளினைத் தாபிப்பதற்கு, மற்றும் பிரிவு(59) பொழுதுபோக்கு மீன்பிடித்தல்களினை நடாத்துவதற்கு உரிமத்திற்கான நிபந்தனைகள், நடவடிக்கைமுறை மற்றும் விண்ணப்பப் படிவத்தினை விதித்துரைப்பதற்கு:<br><br>**ஏ)**பிரிவு (63) இன் கீழ் இலங்கை தரப்பு உள்ள பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புக்களினால் பின்பற்றப்படும் பாதுகாப்பு, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் இலங்கை கட்டுப்பட்டுள்ள மரபுகள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு:<br><br>**ஐ)**நாடு கடத்தலுக்கு உரித்துடைய பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கான நிபந்தனைகளினைத் தீர்மானிக்கும் தோதான ஏற்பாடுகளினை |

| | |
|---|---|
| | குறிதத்துரைப்பதற்கும் 188 ஆம் இலக்க மீன்பிடி சமவாயத்தின், பிரிவு (65) இன் கீழ் பணி தொடர்பான 2007 சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஏற்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதற்கும்:<br><br>**ஒ**)பிரிவு (76) இன் கீழ் கரையோர மீன்பிடி சமூகங்கள் மற்றும் கடற்றொழில்களின் பாதுகாப்புக்காக அவர்களின் வாழ்வாதாரங்களினைப் பத்திரப்படுத்துவதற்கு உதவிப்படிக்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளினை விதித்துரைப்பதற்கு:<br>**ஓ**)மீன்பிடி பங்கீடுகள், மீன்பிடி முயற்சி மாற்றல்களுக்கான நிபந்தனைகள் மற்றும் மீன்பிடி பங்கீடுகளின் பரிமாற்றங்கள் மற்றும் வைத்திருப்போர்கள் மத்தியில் மீன்பிடி முயற்சி, மிகையாகும் பங்கீடுகளிற்கான நெகிழ்வுத் தன்மையின் எல்லை,அதிகமாக மீன்பிடிக்கும் சந்தர்ப்பங்களில் குறைப்புக்கள்மற்றும் மீள்ஒதுக்கீடுகளுக்கான நடவடிக்கைமுறைகள் விதித்து குறித்துரைப்பதற்கு:<br><br>**ஔ**)பிரிவு 78 இன் கீழ் மீன்பிடி கலத் தொகுதிகளின் இயலளவினை முகாமை செய்வதற்கு நிபந்தனைகள், விதிகள் மற்றும் நடவடிக்கைமுறைகளினை நடைமுறைப்படுத்துவதற்கு<br><br>**க**)பிரிவு (79) இன் கீழ் கடல்சார் இனங்களின் ஆகக்குறைந்த அளவு, மற்றும் மீன்பிடி வலைகள், உபகரணங்கள் மற்றும் முறைகளினை உபயோகிப்பதற்கான விதிகள் மற்றும் மேலதிக அறுவடைகளின் ஆகக்கூடிய நூற்றுவீதம் மற்றும் பாதுகாப்பான இனங்களினைத் தாபிப்பதற்கு:<br><br>**ங**)பிரிவு (90) இன் கீழ் கடல்சார் விஞ்ஞான முறை ஆராய்ச்சியின் செயற்பாடுகளினை ஒழுங்கு படுத்துவதற்கு<br><br>**ச**)பிரிவு (95) இன் கீழ் பரிசோதனைகளினை நடத்துதல் அடங்கலாக சில்லறை கட்டத்திற்கு பிடித்தலிருந்து கடற்றொழில் கடற்றொழில் விளைபொருள்களுக்காக தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நிபந்தனைகளினைத் தீர்மானிப்பதற்கு<br><br>**ஞ**)உயிர் மீன் அல்லது ஏதேனும் முட்டைகள், மீன்சினைத் திரள் அல்லது மீன் சினை அல்லது பிரிவு(97) இன் கீழ் அதன்கண் தயாரிக்கப்பட்ட ஏதேனும் விளைபொருள்கள் அடங்கலாக ஏதாவது மீன் இனங்கள் ஏற்றுமதி மற்றும் இலங்கையிலிருந்து மீள் ஏற்றுமதி அல்லது இலங்கைக்குள் இறக்குமதிக்கான விதிகளினை விதித்துரைப்பதற்கு<br><br>**ட**)பிரிவு (98) இன் கீழ் கடற்றொழில் விளை பொருள்களுக்காக கண்டறியும் தேவைப்பாடுகள் தொடர்பான ஏற்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதற்கு<br><br>**ண**)பிரிவு (100)இன் கீழ் கடற்றொழில் விளைபொருள்களின் ஏற்றுமதி, இறக்குமதி, மீள் ஏற்றுமதிக்கு மீன் பதப்படுத்தலுக்காக உரிமையளித்தலுடன் தொடர்புற்ற புதுப்பித்தல், இரத்துச் செய்தல், செலுத்தத்தக்க கட்டணங்கள் விண்ணப்பத்திற்கான படிவம், விண்ணப்ப நடவடிக்கை முறைக்காக படிவத்தினைத் தீர்மானிப்பதற்கு:<br><br>**த**)பிரிவு (110)இன் கீழ் கலத் தொகுதியின முறையான கண்காணித்தலினை உறுதிப்படுத்துவதற்கு உலகலாவிய அமைவிடம் காட்டி(GPS), கலன் கண்காணிப்பு அமைப்பு (VMS) அல்லது வேறு ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட தன்னியக்க அமைவிடம் காட்டி தொடர்பாடல் முறைமையின் இயக்கம் தொடர்பில் நிபந்தனைகளினை |

| | |
|---|---|
| | நடைமுறைப்படுத்துவதற்கு:<br><br>**ந**)பிரிவு (111) இன் கீழ் கலம் மாற்றி சரக்கேற்றல் தொடர்பான ஒழுங்குவிதிகளினை நடைமுறைப்படுத்தலுக்கு:<br><br>**ப**)பிரிவு (112) இன் கீழ் தரை இறங்குகைகள் விதிகளினை விதித்துரைப்பதற்கு:<br><br>**ம**)பிரிவு (113) இன் கீழ் இலங்கையில் உள்ள பெயரிடப்பட்ட துறைமுகங்களுக்கு நுழையும் வெளிநாட்டுக் கொடியுடைய கலங்களுக்கான துறைமுக அரச நடவடிக்கைகளினை நடைமுறைப் படுத்தலுக்கு<br>**ய)** பிரிவு (114) இன் கீழ் கலனில் பயணிக்கும் அவதானிகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தலுக்கு<br>**ர**) மீன்பிடிப் படகுகளின் பாதுகாப்பு(திட்டம்,நிர்மாணம்,உபகரணங்கள்)பயணத்திற்கான ஆகக்குறைந்த தரம்,மக்களை கொண்டு செல்வதற்கான ஆகக்குறைந்த தரமும் பாதுகாப்பு உபகரணங்களும்:<br>**ல**)பிரிவு (8) இன் கீழ் தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் செயற்பாடுகள்,நிதியுதவி,கணக்காய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய துணை விடயங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்குதல்:<br><br>**வ**)இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படுவதற்கு தெரிவிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட தகவல்கள் அல்லது இச்சட்டத்தின் கீழ் எந்த ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஒழுங்குவிதிகள்: |
| **பொருள்கோடல்**<br><br>**பிரிவு 168** | இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி:<br><br>**-கைவிடப்பட்ட, தொலைந்த அல்லது அப்புறப்படுத்திய மீன்பிடி உபகரணம்':** என்பது<br>அ)கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணம் என்பது உரிமையாளர் அல்லது இயக்குபவர் கட்டுப்பாட்டிலுள்ள, உரிமையாளர் அல்லது இயக்குபவரினால் மீளப்பெறத்தக்க(RETIEVE) எனினும் பலவந்த இக்கட்டு அல்லது வேறு எதிர்பாரா சூழ்நிலைகள் காரணமாக வேணுமென்றே கடலில் விடப்பட்ட மீன்பிடி உபகரணம்;<br>ஆ)தொலைந்த மீன்பிடி உபகரணம் என்பது உரிமையாளர் அல்லது இயக்குபவர் திடீரென கட்டுப்பாட்டினை இழந்த உரிமையாளர் அல்லது இயக்குபவரினால் தேட முடியாத மற்றும்/அல்லது மீளப்பெற முடியாத மீன்பிடி உபகரணம்.<br>இ)அப்புறப்படுத்திய மீன்பிடி உபகரணம் என்பது உரிமையாளர் அல்லது இயக்குபவரினால் மேலும் கட்டுப்படுத்துவதற்கான அல்லது மீளப்பெறுவதற்கான முயற்சி எதுவும் எடுக்காமல் கடலில் விடப்பட்ட மீன்பிடி உபகரணம் என்று பொருள்படும்.<br><br>**-தேசிய நியாயாதிக்கத்துக்கு அப்பாலுள்ள பிரதேசங்கள்'**: என்பது சருவதேச சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வேறு அரசுகளின் தேசிய நியாயாதிக்கத்தின் கீழ் இலங்கை நீர்ப்பரப்புகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்கள் அல்லது அதற்குச் சமமான பிரதேசங்கள் என்று பொருள்படும்;<br><br>-**'அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்'**: என்பவர்கள் கண்காணித்தல், கட்டுப்பாடு, கடுங்கண்காணிப்பு மற்றும் வலுப்படுத்தல் செயற்பாடுகளின் நோக்கங்களுக்காக 117 (1)ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் அலுவலர்கள் என்று பொருள்படும்.<br><br>-**'தன்னியக்க இனங்காணல் முறைமை'** (AIS): என்பது மாற்றுரைப்போன்களை எடுத்துச்செல்லும் கலன்களினால் ஒலிபரப்பப்படும் செய்திகள் அடிப்படையில் இனங்காணல், அமைவிடநிலை, பயணமார்க்கம் மற்றும் வேகம் உள்ளிட்ட |

| | |
|---|---|
| | தரவுகளின் கப்பல் அறிக்கையிடல் முறைமை என்று பொருள்படும்;<br><br>-"**தன்னியக்க அமைவிட தொடர்பாடலி**" என்பது கலனின் அமைவிடநிலை, மீன்பிடித்தல் நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்கள், GPS மற்றும் VMS அடங்கிய தேவைப்பாடுடைய அக்கலனின் வேறு செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், சுயாதீனமாக அல்லது பிறிதொரு கருவியுடன் அல்லது கருவிகளுடன் இணைந்து செயற்படக்கூடிய அல்லது செயற்படாத அனுப்பும் வகையில் வடிவமைக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மீன் பிடிக்கலனில் வைக்கப்பட்டுள்ள ஒரு கருவி என்று பொருள்படும்;<br><br>-**'பயன்தரு உரிமையாளர்':** என்பவர் ஆதனத்தின் சட்ட உரித்து வேறொரு ஆளுக்கு சொந்தமான போதிலும் குறித்துரைத்த சில பகுதிகளின் ஆதன உரித்து சமத்துவத்தில் எந்த ஆளுக்கு சொந்தமோ அந்த ஆள் என்று பொருள்படும்.<br><br>-**'கீழ் இழுவை ட்ரோல் வலை '**: என்பது ஒரு கூம்பு வடிவ வலையுடன் கூடியதாக, ஒரு பை அல்லது மடி நுனியுடன் இணைக்கப்பட்டதாக இறக்கைகளுடன் அல்லது இரண்டு இறக்கைகள் இல்லாமல் மறுமுனையுடன் இணைக்கப்பட்டு, ஒன்று அல்லது இரண்டு என்ஜின் பொருத்தப்பட்ட மீன்பிடி கப்பல்களால் இழுக்கப்பட்டு மந்தை மற்றும் சல்லடை மூலம் மீன்பிடிக்கும் இழுவை வலை என்று பொருள்படும்.<br><br>-"**பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள்**" 1982 கடல் பற்றிய ஐக்கிய நாடுகள் சமுத்திர சட்டம் பற்றிய சமவாயம் மற்றும் 1995 ஐக்கிய நாடுகளின் மீன் பங்குகள் ஒப்பந்தம் உள்ளிட்ட சர்வதேச சட்டத்தின் இயைபான விதிகளுக்கு இணங்க பின்பற்றப்படுகின்ற மற்றும் தொடர்புடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயிரின கடல் வளங்களை பாதுகாத்து முகாமைசெய்யும் நடவடிக்கைகள் என்று பொருள்படும்;"<br><br>-**'நகர்வு செவுல்வலை':** என்பது கடல்படுகைக்கு பொருத்தப்படாது நகர்வுக்கு இடமளிக்கும் ஒரு வகையான செவுல்வலை என்று பொருள்படும்.<br><br>-**'கடற்றொழிலை முகாமைத்துவத்திற்கு சூழல்முறைமை அடிப்படையிலான அணுகுமுறை':** என்பது சூழல்முறைமையின் உயிருள்ள, உயிரற்ற மற்றும் மனித கூறுகள் பற்றிய அறிவு மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை கருத்திற்கொண்டு பாதிக்கப்பட்ட சூழல்முறைமையின் வாழ்விடங்களின் உள்ளடக்கம், கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளை பாதுகாப்பதற்கு உயிரியல் செல்வம் மற்றும் உயிரியல் செயன்முறைகள் இரண்டையும் பாதுகாக்கும் அதேவேளை, மீன்பிடித்தல் மற்றும் வேறு மனித செயற்பாடுகளை கருத்திற்கொண்டு, இயற்கை வளங்களின் பயன்பாட்டை முகாமைசெய்வதற்கு நாடும் சூழலியல்ரீதியாக அர்த்தமுள்ள எல்லைகளுக்குள் கடற்றொழிலை முகாமைசெய்வதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை என்று பொருள்படும்;<br><br>-**'மீன்பிடி முயற்சிகள் என்பது**" விதிக்கப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் வெளிப்படையான அளவுகோல்களுக்கமைய பல்வேறு மீன்பிடி முயற்சியாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் குறித்த காலப்பகுதியினுள் குறித்ததொரு மீன் தொகை அல்லது மீன் தொகைகளுக்காக அனுமதியளிக்கக்கூடிய மொத்த மீன் பிடி அளவு (TAC) என்று பொருள்படும்.<br><br>-**'இலத்திரனியல் தரவுப்புத்தக முறைமை(ERS)**" என்பது ஏதேனும் சர்வதேச பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை அனுசரித்து, மீன்பிடிக் கலனொன்றின் இயக்குபவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அனுப்பப்படும் தேவைப்படக்கூடியவாறான மீன்பிடித்தல் அல்லது தொடர்புற்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல் மற்றும் தரவுகளின் கணினிமயப்படுத்தப்பட்ட பதிவேடு என்று பொருள்படும்;<br><br>-**'பிரத்தியேக பொருளாதார வலயம்':** என்பது 1976 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க கடல்சார் வலயங்கள் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயமாக அறிவிக்கப்பட்ட பிரதேசம் என்று பொருள்படும்; |

-**'மீன்':** என்பது ஏதேனும் நீரில் வாழும் நீரியல் அல்லது கடல்சார் விலங்கு அல்லது தாவரம், உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மற்றும் அவற்றின் முட்டைகள், முட்டை, சிப்பிமுட்டை மற்றும் இளம்பருவ நிலைகள் மற்றும் அவற்றின் ஏதேனும் பாகங்களை உள்ளடக்குகிறது என்பதுடன் அங்கஅசைவிலா உயிரினங்களைச் சேர்ந்த அனைத்து உயிரினங்களையும் உள்ளடக்குகிறது ' என்று பொருள்படும்;

-**'மீன் திரள் கருவி (FAD)':** என்பது வேறு வகையிலான சாதனங்களை அல்லது உபகரணங்களைப் பயன்படுத்தி கட்டமைப்புகளின் கீழ் தங்கும் மீன்களை எடுத்துச் செல்ல வசதியளிக்கும் வகையில் நீரில் மிதக்கும் அல்லது தண்ணீருக்கு அடியில் அமைக்கப்படும் கட்டமைப்புகள் என்று பொருள்படும்;

**மீன் பதனிடல்** என்பது வெட்டுதல்,அவயவங்களை வெட்டி நீக்குதல், சுத்தம் செய்தல், வகைப்படுத்தல், ஐஸ் இடுதல், மிகை குளிரூட்டல், தகரத்திலடைத்தல், புகையூட்டுதல், உலர்த்துதல், துண்டங்களாக வேறாக்கல், உப்பிடுதல் மற்றும் நீண்ட நாள் பேணுதல் போன்ற ஏதேனும் முறையொன்றின் மூலம் மீன்வளங்களிலிருந்து பெறப்படும் ஏதேனும் ஒரு திரவத் தயாரிப்பு உள்ளடங்கும்.

-**'மீன் பதனிடல் வசதி**': என்பது வர்த்தக பயன்பாட்டுக்காக மீன் எங்கு கையாளப்பட்டு பதப்படுத்தப்படுகின்தோ அந்த கட்டடம் அல்லது கலன் அல்லது பிரதேசம் என்று பொருள்படும்;

-**'மீன் விளைபொருள்':** என்பது பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பதப்படுத்தப்பட்ட ஏதேனும் மீன் என்று பொருள்படும்;

-**'மீனவர்':** என்பவர், மீனவர்கள், கலன் உறுப்பினர்கள் மற்றும் கப்பற்தலைவன் உள்ளிட்ட எனினும் மட்டுப்படுத்தப்படாத, பிரிவு (31) இன் கீழ் மீனவர்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட நேரடியாக மீன்பிடித்தல் அல்லது கடற்றொழில் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் எவரேனும் ஆள் என்று பொருள்படும்;

-**'மீன்பிடித்தல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபரொருவர்:** என்பது, மீன்பிடித் தொழிலில் மறைமுகமாக ஈடுபடுகின்ற 31 ஆம் பிரிவின் கீழ் மீன்பிடி சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்களாக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஒரு நபர் என்றுபொருள்படும்.

-**'மீன்பிடித்தல் பிணக்கு':** என்பது இலங்கை நீர்ப்பரப்பின் ஏதேனும் பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை, நேரம், முறை அல்லது மீன்பிடிக்கும் இடம் தொடர்பாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆள்கள் அல்லது ஆள்களின் குழுக்களுக்கு இடையிலான ஏதேனும் பிணக்கு என்று பொருள்படும்;

-**'பிராந்திய மீன்பிடி அமைப்பு' (RFMO):** என்பது பிராந்திய மீன்பிடி அமைப்புக்களின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கை ஒரு தரப்பினராக ஒப்பந்தம் செய்துள்ள ஒப்பந்தங்கள் மற்றும் கடப்பாடுகள் என்று பொருள்படும்.

-**'மீன்பிடித்தல் நடவடிக்கை':** என்பது மீன்களைத் தேடுதல், கவர்தல், கண்டறிதல், பிடித்தல், சேகரித்தல், எடுத்தல் அல்லது அறுவடை செய்தல் அல்லது மீன்களை கவர்தல், கண்டறிதல், எடுத்துச்செல்லல் அல்லது அறுவடைசெய்தல் பெறுபேற்றினை நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய ஏதேனும் செயல் என்று பொருள்படும்;

-**'மீன்பிடி நடவடிக்கை பிரதேசம்':** என்பது மீன்பிடி நடவடிக்கை உரிமம் ஒன்றின் மூலம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக அனுமதியளிக்கப்பட்டுள்ள பிரதேசம் என்று பொருள்படும்.

-**'மீன்பிடித்தல் அதிகாரமளித்தல்':** என்பது இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அதிகாரமளித்தல், உரிமம், அனுமதி, அல்லது ஏற்பிசைவு என்று பொருள்படும்;

-**'மீன்பிடித்தல் முயற்சி':** என்பது குறித்துரைக்கப்பட்ட கால அலகினுள் மீன்பிடி

| | |
|---|---|
| | நிலப்பிரதேசத்துனுள் பயன்படுத்தப்படுகின்ற விசேட வகையான மீன்பிடி உபகரணங்களின் அளவு.<br><br>-**'மீன்பிடித்தல் உபகரணம்':** என்பது MARPOL இணைப்பு V க்கு இணங்க, கடல்சார் உயிரினங்களைப் பிடிக்க அல்லது அறுவடை செய்வதற்கான நோக்கத்துடன், நீர் அல்லது கடல் அடிப்பகுதியில் இடப்படற்பாலான விடயங்களின் ஒரு பகுதியின் ஏதேனும் பௌதிக சாதனம் அல்லது விடயங்களின் கலவை என்று பொருள்படும்;<br><br>-**'மீன்பிடித்தல் தொடர்புற்ற செயற்பாடுகள்':** என்பது துறைமுகத்தில் முன்பு கரையிறங்காத மீன் மற்றும்/அல்லது கடற்றொழில் விளைபொருட்களை கரையிறக்கம், பொதியிடல், பதனிடல், கப்பல்மாற்றல் அல்லது கொண்டுசெல்லல் அடங்கலாக, மீன்பிடித்தலுக்கு ஆதரவாக அல்லது தயார்படுத்துவதற்கான ஏதேனும் செயல்பாடு அதேபோன்று கடலில் ஆளணியினர், எரிபொருள், உபகரணம், உணவு மற்றும் வேறு வழங்கல் ஆகியவற்றை வழங்குதல் என்று பொருள்படும்;<br><br>-**'மீன்பிடித்தல் விஜயம்'**: என்பது மீன்பிடிக் கலன் ஒரு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு அத்துறைமுகத்தை வந்து முடிவடையும் தருணத்தில், கடற்றொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் காலத்தின்போது மீன்பிடிக் கலன் ஏதேனும் கடற்பயணம் என்று பொருள்படும்.<br><br>-"**இலக்கு வைக்கப்படும் மீன்இனம்**": என்பது மீன்பிடி நடவடிக்கை உரிமத்தின் மூலம் பிடிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள மீன் இனம் என்று பொருள் படும்.<br><br>-"**மீன்பிடிக் கலன்**": என்பது மீன்பிடி அல்லது கடற்றொழில் தொடர்புற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்துவதற்கு பொருத்தப்பட்ட அல்லது பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு வகையிலான ஏதேனும கலன் என்று பொருள்படும்;<br><br>-**'கடற்றொழில் கண்காணித்தல் நிலையம்**': என்பது கலன் கண்காணிப்பு முறைமையினால் உருவாக்கப்பட்ட செல்லிடல் அறிக்கைகளைப் பெறுவதற்காக, ஏனையவற்றுக்கிடையே பணிப்பாளர் தலைமையதிபதியினால் தாபிக்கப்படும் ஒரு செயல்பாட்டு நிலையம் என்று பொருள்படும்;<br><br>-'**வெளிநாட்டு மீன்பிடிக் கலன்'**: என்பது இலங்கை கொடிதாங்கிய கலனைத் தவிர ஏதேனும் கலன் என்று பொருள்படும்;<br><br>-**'செவுள்வலை':** என்பது செவுள்மூலம், ஆப்பிடல், முட்டுக்கட்டையிடல், சிக்கவைத்தல் அல்லது பொறிவைப்பதன்மூலம் மீன்களை பைகளினுள் பிடிக்கும் ஏதேனும் ஆழம், மேற்பரப்பு, நடு நீர் அல்லது நீரின் கீழ் அடுக்குகளில் மீன்களைப் பிடிக்கின்ற நீளமான செவ்வகச் சுவர் கொண்ட வலைத்தொகுதி என்று பொருள்படும்;<br><br>-**'ஆழ்கடல்'':** என்பது கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் 86ஆவது உறுப்புரையில் வரையறுக்கப்பட்டவாறு, ஏதேனும் அரசின் தேசிய நியாயாதிக்க பிரதேசங்களில் உள்ளடங்காத கடலின் அனைத்து பகுதிகளும் என்று பொருள்படும்;<br><br>-**'சட்டவிரோத,அறிக்கையிடப்படாத அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல் (**அல்லது **'IUU' மீன்பிடித்தல்)':** இச்சட்டத்தின் அட்டவணை IV யில் தரப்பட்டுள்ளன;<br><br>-"**உள்ளக என்ஜின் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்**": என்பது என்ஜின் உட்புறமாக பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன் என்று பொருள்படும்.<br><br>-**'இந்திய சமுத்திர சூரை ஆணைக்குழு (IOTC)':** என்பதுஇந்தியப் சமுத்திர சூரை ஆணைக்குழு, ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) பேரவையின் 105வது அமர்வில் FAO அரசியலமைப்பின் உறுப்புரை XIV இன் கீழ் 1993 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது என்று பொருள்படும்;<br><br>-**'உண்ணாட்டு நீர்ப்பரப்பு':** என்பது ஏதேனும் பொது ஆறு, வாவி, ஆற்றுவாய், |

களப்பு, ஓடை, குளம், தடாகம், கால்வாய் மற்றும் இலங்கையிலுள்ள வேறு ஏதேனும் பொது நன்னீர் அல்லது சவர் நீர்ப்பரப்பு என்று பொருள்படும்;

-**’கிலோவோற்று/குதிரை வலு’’:** (எஞ்சின் ஒன்றின்) என்பது எஞ்சின் வலு காட்டப்பட்டுள்ள அலகு என்று பொருள்படும்;

-‘**கரையிறங்குதல்**’: என்பது துறைமுக வசதி அல்லது பிற போக்குவரத்து வழிகள் ஊடாக மீன்களை துறைமுக வசதிக்கு இடமாற்றுதல், ஒரு கப்பலில் இருந்து மற்றொரு கப்பலுக்கு மீன்களை மாற்றுதல் அடங்கலாக கப்பலில் உள்ள ஏதேனும் அளவிலான மீன்களை ஆவணப்படுத்தப்பட்ட கைமாற்றம் அல்லது இறக்குதல அத்துடன் ஒரு கப்பலில் இருந்து ஒரு கொள்கலன், ட்ரக், புகையிரதம், வானூர்தி அல்லது வேறு ஏதேனும் போக்குவரத்து வழிமுறைகளுக்கு மாற்றுதல் என்று பொருள்படும்;

-**‘உரிமம்வழங்கும் அலுவலர்’:** என்பவர் நிர்வாக மாவட்டத்தில் மீன்பிடி செயல்பாட்டு உரிமங்களை வழங்குவதற்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட எவரேனும் கடற்றொழில் அலுவலர் அல்லது கடற்றொழில் பரிசோதகர் என்று பொருள்படும்;

-“**தரவுப் புத்தகம்**”: என்பது மீன்பிடித்தல் அல்லது தொடர்புற்ற நடவடிக்கைகள் சம்பந்தமான ஏதேனும் நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்பட்ட இலங்கையினால் வழங்கப்பட்ட, அகற்றமுடியாத பக்கங்களுடனான நிரந்தரமாக தரவுப்புத்தகம்; அது ஒவ்வொன்றும் தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டு பொருந்தமான தொடரிலக்கங்களுடன் அச்சிடப்படுகின்றது என்று பொருள்படும்;

- **‘நீள்வலை தூண்டில்’**: என்பது இரையுடன் அல்லது இரையில்லாமல் கொக்கியொன்றுடனான ஒழுங்கான இடைவெளியில் பிரதான தூண்டில் மற்றும் பல எண்ணிக்கையிலான தூண்டில்களையும் கொண்ட மீன்பிடி உபகரணம். ஒரு நீள்வலை தூண்டில் மேற்பரப்பில் சுதந்திரமாக மிதக்க அனுமதிக்கப்படும் போது, நடு நீர் அல்லது அடியில் இடும்போது அது “மிதக்கும் நீள்வலை தூண்டில்“, என அழைக்கப்படுவதுடன், அது அடிக்கு அருகே அல்லது அடியில் நங்கூரமிட்டால் அது அழைக்கப்படுகிறது் “கீழ் நீள்வலை தூண்டில்’ என்று அழைக்கப்படுகிறது;

-“**கடற் சூழற்தொகுதி**”: என்பது திறந் சமுத்திரம், ஆழ்கடல் சமுத்திரம் மற்றும் முகத்துவாரம், விரிகுடா, களப்பு, உப்பு சதுப்பு நிலம், கண்டல் காடுகள், பவளப் பாறைகள் போன்ற கரையோர சமுத்திர சூழற்தொகுதிகள் அடங்கிய உயர் உப்பு அளவுடைய நீர் சூழல் என்று பொருள்படும்.

-**’கப்பற்தலைவன்’:** என்பவர் ஒரு மீன்பிடிக் கப்பலில் எந்த நேரத்திலும் மிகவும் பொறுப்பான பதவியை வகிக்கும் எவரேனும் ஆள் என்பதுடன் தலைவர் உட்பட என்று பொருள்படும்.

- **‘வலைகண்ணின் அளவு’:** என்பது முழுமையாக நீட்டும் போது வலைகண்ணில் உள்ள எதிர் முடிச்சுகளிலிருந்து பொதுவாக அளவிடப்படும் வலைகண்ணின் அளவு என்று பொருள்படும். குறித்துரைக்கப்படாதபோது, இது பொதுவாக முடிச்சு மைய அளவீடு என குறிக்கப்படுகிறது;

-**‘இடம்பெயர் செலுத்தேந்தி அலகு’** (MTU)**:** என்பது ஒரு மீன்பிடிக் கப்பலில் வைக்கப்பட்டு, சுயாதீனமாக அல்லது மற்றொரு சாதனம் அல்லது சாதனங்களுடன் இணைக்கப்பட்டு, நிலை, மீன் பிடிப்பு மற்றும் தேவைப்படுத்தப்பட்டவாறான பிற நடவடிக்கைகள் சம்பந்தமான தகவல் அல்லது தரவுகளை அனுப்புகின்றதும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு சாதனம் என்று பொருள்படும்;

-“**பல்தின மீன்பிடிக் கலனகள்**”: என்பது இலங்கை நீர் பரப்பில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடித்தலில் ஈடுபடுகின்ற மீன்பிடிப் படகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதிவிலக்கத்துடன் IMUL குறியீட்டு எழுத்தை அடையாளமிட்டுள்ள மீன்பிடிக் கலன்கள் என்று பொருள்படும்.

| | |
|---|---|
| | -**'தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர்நிலையம்' (நாரா):** 1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர்நிலையச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ்வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர்நிலையம் என்று பொருள்படும்;<br><br>**'உரிமையாளர்':** என்பவர் கலனொன்றின் உரிமையாளராக பதிவுசெய்யப்பட்டுள்ள இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருள்படும்;<br><br>-**'இயக்குபவர்';** என்பவர் ஒரு கப்பலின் செயல்பாடுகளுக்குப் பொறுப்புவாய்ந்த, கப்பலை வழிநடத்தும் அல்லது கட்டுப்படுத்தும், உரிமையாளர், பட்டயதாரர், கப்பற்தலைவன் மற்றும் கப்பலின் செயல்பாடுகளின் பொருளாதார அல்லது நிதி நன்மையின் பயனாளி அடங்கலாக எவரேனும் இயற்கையான அல்லது சட்டப்பூர்வ ஆள் என்று பொருள்படும்;<br><br>-**'துறைமுக அரச நடவடிக்கை': என்பது,**2009 ஆம் ஆண்டில் ரோமில் நடைபெற்ற உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் 36 ஆவது அமர்வின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்ட விரோத,அறிக்கையிடப்படாத மற்றும் முறைசாரா மீன்பிடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு,நிறுத்துவதற்கு மற்றும் எதிர்ப்பதற்கு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் துறைமுகத்தின் உள்ளான அரசின் நடவடிக்கைகள் பற்றிய ஒப்பந்தத்தை டைமுறைப்படுத்தும் வழிமுறைகள் என்று பொருள்படும்.<br><br>-**'விதித்துரைத்த':** என்பது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைத்த என்று பொருள்படும் ;<br><br>-**'கடற்றொழில் முகாமைத்துவத்துக்கான முற்காப்பு அணுகுமுறை':** ஐ.நா. மீன் பங்குகள் ஒப்பந்தத்தின் உறுப்புரை 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, என்பது இலக்கு இனங்கள், தொடர்புடைய அல்லது சார்ந்த இனங்கள் மற்றும் இலக்கு அல்லாத இனங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளைத் தள்ளிப்போடுவதையோ அல்லது எடுக்கத் தவறுவதையோ நியாயப்படுத்தாத போதிய தகவல் இல்லாமைக்கு இணங்கியவாறான அணுகுமுறை என்று பொருள்படும்;<br><br>-**'பகிரங்க கூட்டுத்தாபனம்'**: என்பது கொடைமூலம், கடன்மூலம் அல்லது வேறுவிதமாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிதியங்களைக் கொண்டு அல்லது மூலதனத்தைக் கொண்டு, கம்பனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த, எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும்;<br><br>**'பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல் கலன்': என்பது** இச்சட்ட்தின் கீழ் பொழுதுபோக்கு சார் மீன்பிடித்தல் கலன் ஒன்றாக பதிவு செய்கின்ற பொழுது போக்கிற்காக மீன்பிடித்தலில் பயன்படுத்தப்படுகின்ற கலன் என்று பொருள்படும்.<br><br>-**'பொழுதுபோக்குசார் மீன்பிடித்தல்':** என்பது என்பது பொழுதுபோக்கு, சுற்றுலா அல்லது விளையாட்டுக்காக "பிடித்தல் மற்றும் விடுவித்தல்" உட்பட கடற்றொழில் மற்றும் கடல்சார் நீரியல் வளங்களை பயன்படுத்தி வணிகமல்லாத மீன்பிடி நடவடிக்கைகள் என்று பொருள்படும்;<br><br>-'**அமைச்சின் செயலாளர்**: என்பவர் அரசியலமைப்பின் 52 ஆம் உறுப்புரைக்கிணங்க அமைச்சிற்கு நியமிக்கப்பட்ட செயலாளர்;<br><br>-**'கரைவலை'** (அல்லது 'Madel' அல்லது Danish seine): என்பது என்பது ஒரு ஓரளவு நீர் பரப்பை உள்ளடக்கியதாக நடுவில் மடியுடனான அல்லது மடியில்லாத ஒரு வலை; இது இரு முனைகளில் இரு கயிறுகள் கட்டப்பட்டு கயிறுகளின் உதவியுடன் தரைக்கு இழுக்கப்படும் என்று பொருள்படும்; |

| | |
|---|---|
| | -**'இலங்கை மீன்பிடிக்கலன்'**: என்பது,<br>ஆ) இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது இலங்கையின் ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக சொந்தமான: அல்லது<br>ஆ)இலங்கையின் குடிமக்களான ஒரு நபருக்கு அல்லது பலருக்கு முழுமையாக சொந்தமான: அல்லது<br>இ)இலங்கை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வாக்குரிமை உரித்தான பெரும்பான்மை எண்ணிக்கையான இலங்கை பிரஜைகளுக்கு உரித்தானதும்,ஏதேனும் நிறுவனத்திற்கு,சங்கத்திற்கு அல்லது நபர்களின் ஏதேனும் சங்கத்திற்கு முழுமையாக சொந்தமான மீன்பிடிக் கலன் என்று பொருள்படும்.<br><br>-**'வளையிற வலை'**: என்பது நீரின் மேற்பரப்பைத் தவிர அனைத்துப் பக்கங்களையும் உள்ளடக்கிய மீன் தொகையைச் சுற்றி மீன் பிடிக்கிற நீரில் உள்ள வலைத்தொகுதி என்று பொருள்படும்.<br><br>- **'கட்டுவலை'**_(Kattu Del)_: என்பது, சட்டகத்துடன் அல்லது சட்டகமில்லாமல் மற்றும் மீன்களை வலைக்குள் இழுக்கிற ஒரு சாதனத்துடனானதும், ஒரு கூம்பு அல்லது உருளை பொறியைக் கொண்ட ஒரு வலை என்று பொருள்படும்;<br><br>-**'இலங்கை நீர்ப்பரப்புகள்'**: என்பது:<br><br>அ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கடல்சார் வலயங்கள் சட்டத்தின் இலங்கையின் ஆள்புல கடலாக, அடுத்துள்ள வலயமாக, பிரத்தியேக பொருளாதார வலயமாக, வரலாற்று சிறப்புமிக்க நீர்ப்பரப்புகளாக, அறிவிக்கப்பட்ட பிரதேசங்கள்;<br>ஆ) அனைத்து பொது விரிகுடாக்கள், ஆறுகள், ஏரிகள், களப்புகள், நீரோடைகள், குளங்கள், தடாகங்கள், கால்வாய்கள் மற்றும் பிற அனைத்து பொது உண்ணாட்டு அல்லது உள்ளக நீர்ப்பரப்புகள் என்று பொருள்படும்.<br><br>-**'வாழ்வாதார கடற்றொழில்':** என்பது, மீன்களை விற்றல் போன்ற வர்த்தக நோக்கங்களின்றி மீனவர்களின் குடும்பத்தினரின் நுகர்விற்காக மாத்திரம் மீன் பிடித்தல் என்று பொருள்படும்;<br><br>-**'தொன்னளவு':** (கலன் ஒன்றின்) என்பது கப்பலின் தொன்னளவு அளத்தல் பற்றிய சருவதேச சமவாயத்தின் இணைப்பு 1 இல் குறித்தரைத்தவாறு மொத்த தொன்னளவு என்று பொருள்படும்;<br><br>-'**மொத்த அனுமதித்த பிடிப்பு':** என்பது என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பிடிக்கக்கூடிய ஒவ்வொரு பங்கின் மொத்த அனுமதித்த பிடிப்பு என்று பொருள்படும்;<br>-பாரம்பரிய வெளிநாட்டு மீனவர்: என்பது,பருவ காலநிலைகளின் அடிப்படையில் தான் தனது முன்னோர்கள் கடந்த பத்து வருடங்களாக விசேட மீன்பிடி பிரதேசத்தினுள் குடிபெயர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக மற்றும் இச்சட்டத்தின் கீழ் அத்தகைய நடவடிக்கைகளுக்காக பதிவு செய்துள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு இயலுமான நபர் என்று பொருள்படும்:<br><br>-**'முக்கூட்டு வலை'**: என்பது ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ள மூன்று வலைகளால் ஆனதும், நடுவில் மிகவும் சிறிய வலைக்கண் மற்றும் மற்ற இரண்டு வலைகளும் ஒப்பீட்டளவில் பெரிய அளவிலான வலைகண் கொண்டவையுமான வலை என்று பொருள்படும்;<br><br>-'**கலன் மாற்றி ஏற்றல்**' என்பது மீன் கரையிறங்கியதாக பதிவு செய்யாமல் ஒரு கப்பலில் உள்ள ஏதேனும் அளவிலான மீன்களை அக்கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு நேரடியாக மாற்றுதல் என்று பொருள்படும்;<br><br>-**'கலன் கண்காணிப்பு முறைமை'** (VMS): என்பது கடற்றொழிலின் பயனுறு முகாமைத்துவ நோக்கங்களுக்காக மீன்பிடி கப்பல்களின் நிலை மற்றும் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான செயற்கைக்கோள் அடிப்படையிலான அறிக்கையிடல் முறைமை என்று பொருள்படும். |
| **இச்சட்டத்தை** | |

| | |
|---|---|
| **ஏற்புடையதாக்கல்**<br><br>**பிரிவு 169** | 1. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (469 அதிகாரமான) மிருக மற்றும் தாவரப் பாதுகாப்பு சட்டத்தினதும் (451 அதிகாரமான) வனக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன் பிடிப்பதற்கு அல்லது மீன்பிடி முறைகளிற்கு தொடர்பாக அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனுமொரு ஒழுங்குவிதி அல்லது விதி வலுவிழக்கக்கூடியவாறன்றி, அவற்றிற்கு மேலதிகமாக ஏற்புடையதாக்குதல் வேண்டும்.<br><br>2.உட்பிரிவு (1) இற்கு உட்பட்டு, இச்சட்த்தின் ஏற்பாடுகள் ஏதேனும் வேற எழுத்திலான சட்டத்தில் முரண்படுவதற்கு ஏதேனும் எப்படியிருப்பினும் செயல் வலுவினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்படி இச் சட்டத்திற்கும் அத்தகைய வேறு சட்டத்திற்குமான ஏற்பாடுகளிற்கு இடையில் ஏதேனும் நெருக்கடி அல்லது இணக்கமின்மை ஏற்படும் பட்சத்தில் இச் சட்டம் மேலோங்கி நிற்றல் வேண்டும். |
| **நீக்கங்கள்**<br><br>**பிரிவு 170** | 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் 1979 இன் 59 ஆம் இலக்க வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட திருத்தங்கள் இத்தால் நீக்கப்படுகின்றன[ |
| **சேமிப்புகள்**<br><br>**பிரிவு 171** | 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் 1979 இன் 59 ஆம் இலக்க வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் நீக்கம் எது எப்படியிருப்பினும் பிரிவு (169) இற்கு அமைவாக<br><br>அ)இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த திகதியில் வலுவில் உள்ள கூறப்பட்ட சட்டங்களின் கீழ் ஆக்கப்பட்ட அனைத்து ஒழுங்குவிதிகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுடன் அவை இணங்காதிருப்பின் அவை இச்சட்டத்தில் ஆக்கப்பட்டன என்றாற் போன்ற விதத்தில் தொடரல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்:<br>ஆ) இச்சட்டத்தின் தொடக்கத்தில் முடிவுறாத அல்லது பூர்த்தி செய்யாத அனைத்துக் கருமங்கள், வழக்குத் தொடரல்கள் மற்றும் நடவடிக்கைகளும் கூறப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகள் நீக்கப்பட்டிருக்கவில்லை என்றாற் போன்று இச்சட்டத்தின் தொடங்கும் திகதியின் பின்னர் சம்பாதிக்கப்படலாம் அல்லது பூர்த்தி செய்யப்படலாம்<br><br>இ) 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் இச் சட்டம் தொடங்கும் திகதி அன்று முடிவுறாத அல்லது பூர்த்தி செய்யாத மீன்பிடிப் பிணக்குகளின் ஏதேனும் குறிப்பு கூறப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகள் நீக்கப்பட்டிருக்கவில்லை என்றாற் போன்று இச் சட்டம் தொடங்கிய திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படலாம்.<br><br>ஈ)1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 59 ஆவது பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கடற்றொழில்கள் வெகுமதி நிதியத்தின் வரவுக்கு உள்ள அனைத்துப் பணங்களும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த திகதி அன்று இச்சட்டத்தின் கீழ் பிரிவு (107)இன் கீழ் தாபிக்கப்பட்ட கடற்றொழில் நிதியத்திற்கு மாற்றம் செய்யப்படல் வேண்டும்.<br>உ) கூறப்பட்ட மற்றும் வலுவில் உள்ள சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரங்கள், உரிமங்கள் அல்லது ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த திகதி அன்று இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள், உரிமங்கள் அல்லது பதிவு செய்தல்களாக இருப்பதற்குக் கருதப்படல் வேண்டும். |
| **சிங்களம் மேலோங்கி நிற்றல்** | இச்சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் இணக்கமின்மை ஏற்படும் படசத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். |

| பிரிவு 172 | |
|---|---|

**அட்டவணை 1- மதியுரைச் சபையின் உறுப்பினர்கள்**

**கீழ்வரும் ஆட்கள் நிரந்தர உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்**

(அ) கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் எனும் விடயம் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சின் செயலாளர், அவரே அச்சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்

(ஆ) தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் தவிசாளர்

(இ) அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனத்தின் தவிசாளர்

(ஈ) 1998ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாசபைச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர்

(உ) 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி.

(ஊ) 2009ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி

(எ) ஏற்புடைய மாகாண சபையின் / மாகாண சபைகளின் பிரதிநிதி அல்லது பிரதிநிதிகள்

(ஏ) இலங்கை கடற்படைத் தளபதியின் பிரதிநிதி ஒருவர்

(ஐ) சீ – நோர் அறக்கட்டளையின் தவிசாளர்

(ஒ) நோர்த் சீ லிமிடட்டின் தவிசாளர்

**கீழ்வரும் ஆட்கள் தற்போதைய உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்**

(அ) (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட காடு பேணுநர் தலைமையதிபதி

(ஆ) 2000ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் தலைமையதிபதி

(இ) நீர்பாசனம் எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர்

(ஈ) வனசீவராசிகள் பாதுகாப்பு எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர்

(உ) ஆற்று வடிநிலம் எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர்

(ஊ) காணி எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர்

(எ) சுற்றுலாப் பயணத்துறை எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமித்தர்

(ஏ) 1972ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட அகில இலங்கை மாடெல் செந்தக்காரர்கள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்

(ஐ) தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் செயலாளர்

(ஒ) கடற்றொழில் ஒழுங்கமைப்புக்களின் தேசிய கடற்றொழில் சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் இருவர்

(ஓ) பலநாள் மீன்பிடித்தலுக்கான படகுச் சொந்தக்காரர்கள் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் இருவர்

(ஔ) வரையறுக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத் தேசிய சம்மேளனத்தின் தவிசாளர்

(க) வரையறுக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத் தேசிய சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஆட்கள் இருவர்.

(ங) கடற்றொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் கழகத்தின் தலைவர்

(ச) இலங்கை உயிருள்ள அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் கழகத்தின் தவிசாளர்

(ஞ) மீன் பிடித்தலில் ஈடுபட்டுள்ள பெண்களின் பிரதிநிதிகள் இருவர்

(ட) கடற்றொழிற் கைத்தொழில் அல்லது வேறு விஞ்ஞானம் தொடர்பான விடயங்களில் விசேட அறிவும் அனுபவமும் உடைய ஆட்களிடையேயிருந்து இதனகத்துப்பின்னர் ”நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படுவோருமான அமைச்சரினால் நியமிக்கப்படும் வேறு உறுப்பினர்கள் ஆறு பேர்.

**அட்டவணை II - கடற்றொழில் முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு்**

**பின்வரும் ஆட்கள் நிரந்தர உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்**

அ) மாவட்ட கடற்றொழில் அலுவலகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரும் அவ்வலுவலகத்திலிருந்து இரு வேறு அலுவலர்களும்

ஆ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்

இ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் பிரதேச செயலாளர்

(ஈ) 1981ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தைச் சேர்ந்த,கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(உ) 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவராண்மைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய நீர்வாழ் உயிரின வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவராண்மையினைச் சேர்ந்த, அம்முகவராண்மையினை ஆளுகின்ற சபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(ஊ) விதித்துரைக்கப்பட்டவாறு பின்வரும் ஆட்களில் ஐவர்,

(i) அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்புக்காக அமைக்கப்பட்ட கடற்றொழிற் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு ஆட்களுக்கு மேற்படாதோர் அல்லது

(ii) அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடற்றொழிற் குழுக்கள் இருக்குமிடத்து, அக்கடற்றொழில் முகாமை இடப்பரப்பிலுள்ள எல்லாக் கடற்றொழிற் குழுக்களினதும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஆட்களாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு கடற்றொழிற் குழுவிலிருந்தும் சம எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்

**பின்வரும் ஆட்கள் தற்போதைய உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்**

(அ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்தப் பிரதேச சபை இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த பிரதேச சபை இடப்பரப்புக்காக அமைத்துருவாக்கப்பட்ட பிரதேச சபையின் தவிசாளர்

(ஆ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாநகரசபைப் பிரதேச எல்லைகளினுள் அமைந்துள்ளதோ அந்த மாநகரசபைப் பிரதேசத்திற்காக அமைத்துருவாக்கப்பட்ட மாநகர சபையின் முதல்வர் அல்லது கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த நகரசபை இடப்பரப்பின் எல்லையினுள் அமைந்துள்ளதோ அந்த நகரசபை இடப்பரப்புக்கான நகரசபையின் தவிசாளர்

(இ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்தவரும், அவ்வதிகார சபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான அலுவலரொருவர்

(ஈ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்தின் கடற்றொழிற் பணிப்பாளர்

(உ) 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சேர்ந்த, அவ்வதிகாரசபையின் பணிப்பாளர் சபைத் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(ஊ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபையைச் சேர்ந்த, அவ்வதிகாரசபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(எ) (469 அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த, வனசீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(ஏ) (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட காடு பேணற் திணைக்களத்தைச் சேர்ந்த, காடு பேணுநர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(ஐ) 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட கடல் சூழற் பாதுகாப்பு அதிகாரசபையைச் சேர்ந்த, அவ்வதிகாரசபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(ஒ) காணி எனும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட காணி அமைச்சின் அலுவலரொருவர்

(ஓ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையைச் சேர்ந்த, அவ்வதிகாரசபையின் தவிசாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

ஔ) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்தின் பிரதிப் பொலிஸ் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பொலிஸ் திணைக்களத்தின் அலுவலரொருவர்

(க) 2009 ஆம் ஆண்டின்41 ஆம் இலக்க, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த, அத்திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்

(ங) கடற்றொழில் முகாமை இடப்பரப்பு எந்த மாகாணத்தினுள் அமைந்துள்ளதோ அந்த மாகாணத்திற்கான கடற்படை ஏவுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இலங்கைக் கடற்படையின் அலுவலரொருவர்

**அட்டவணை III - குற்றப் பணங்கள்**

இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படும் கட்டண மட்டங்கள் பின்வரும் நேரொத்த பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்:

| மட்டம் | பெறுமதி ரூபாவில் |
|---|---|

| | |
|---|---|
| **1** | **[1000 - 5 000]** |
| **2** | **[5 001 - 50 000]** |
| **3** | **[50 001-100,000]** |
| **4** | **[100,001-250,000]** |
| **5** | **[250,001- 500 000]** |
| **6** | **[500 001 - 1 000,000]** |
| **7** | **1 000,001-1 500 000]** |
| **8** | **[1 500 001 - 50 000 000]** |

**<u>கலன் வகைக்கமைவாக தண்டப் பணங்களின் குறித்துரைக்கப்பட்ட மட்டம</u>**

இயந்திரமல்லாத பாரம்பரிய படகு - NTRB

இந்திர பாரம்பரிய படகு -MTRB

கரை வலைப் படகு (இயந்திரமல்லாத) -NBSB

வெளியிணைப்பு இயந்திரம் கொண்ட பய்பர் கிளாஸ் படகு -OFRP

உள்ளக இயந்திரம் கொண்ட ஒரு நாட் படகு -IDAY

கடலோர பல்தினப் படகு -IMUL

| **பிரிவு** | **கலன் வகை** | **பாரதூரமான / பாரதூரமற்ற தன்மை** | **சமரசமாக தீர்க்கக்கூடிய தன்மை** | **தண்டம் (ரூ)** |
|---|---|---|---|---|
| பிரிவு 11 பதிவு | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 1 (1000 – 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 1 (1000 – 5000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | உட்புற மோட்டார் கொண்ட ஒரு நாட் படகு IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001 – 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** (இலங்கை நீர் பரப்பு) | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** (ஆழ்கடல்) | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 13 ஆ. பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி ஒன்றை / எப்பொழுதும் அத்தாட்சிப்படுத்திய பிரதி ஒன்றை எடுத்துச் செல்லல் | மோட்டார் உள்ள பாரம்பரியப்படகு (MTRB) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார் கண்ணாடிப்படகு (OFRP) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | உட்புற மோட்டார் கொண்ட ஒரு நாட் படகு IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 14 பதிவிலக்கத்தை மீன் பிடிக் கலனின் ஒவ்வொரு பக்கத்திலும் அடையாளம் இடுதல் / செதுக்குதல் | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000 – 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000 – 5000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | உட்புற மோட்டார் கொண்ட ஒரு நாட் படகு IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | கடலோரப் பல்தினப் படகு IMUL | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| பிரிவு 31 மீனவர்களின் பெயர் பட்டியல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000 – 5000) |
| பிரிவு 32 படகு கட்டும் தளங்கள், மீன்பிடிக் கருவிகள், கடல்சார் உபகரணங்கள், மீன்பிடி சார் துணைப்பாகங்களின் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |

| | | | | |
|---|---|---|---|---|
| உற்பத்தியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல் | | | | |
| பிரிவு 37 கடற்றொழில் உரிமங்களை கைமாற்றல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| பிரிவு 38 (1) வெளிநாட்டு மீன்பிடி கலன்களின் மூலம் இலங்கை நீர் பரப்பில் மீன் பிடி நடவடிக்கை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 9 (50000001- 100000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 11 (175000001- 220000000) |
| பிரிவு 38 (2) வெளிநாட்டு மீன்பிடி கலன்கள் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| பிரிவு 40 இலங்கை நீர் பரப்பில் மீன் பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமம் ஒன்றுக்காக விண்ணப்பித்தல் | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000 – 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | உட்புற மோட்டார் கொண்ட ஒரு நாட் படகு IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** (இலங்கை நீர்ப் பரப்பு) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** (ஆழ் கடல்) | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| பிரிவு 42 ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான மீன்பிடி உரிமம் ஒன்றிற்காக விண்ணப்பித்தல் | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| பிரிவு 43 பிரிதொரு அரசிற்கு சொந்தமான நீர் பரப்புக்களில் மீன் பிடி நடவடிக்கைகளுக்கான உரிமம் ஒன்றிற்காக விண்ணப்பித்தல் | **பலநாள் கடற்றொழில் கலன்** | பாரதூரமான | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| பிரிவு 48 மீன்பிடி உரிமத்தின் மீதான கடப்பாடுகள் | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001- 50000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001- 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001- 50000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 10.3 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 10.3 மீட்டரை விட கூடிய 15 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 24 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001-1500000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001-50000000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 9 (50000001-100000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| பிரிவு 49 எப்பொழுதும் உரிமத்தை கலனில் கொண்டு செல்ல வேண்டியமை | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமற்ற | தண்டத்தில் 1/3 | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | IDAY | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| பிரிவு 50 புறப்படல் மற்றும் பிரவேசித்தலை அறிக்கையிடல் | அனைத்து உள்ளக மோட்டார் பொருத்திய கலன்கள் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| பிரிவு 51 கடற்றொழில் தரவுக் குறிப்புகளை அறிக்கையிடல் | அனைத்து உள்ளக மோட்டார் பொருத்திய கலன்கள் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| பிரிவு 52 மீன்களை தரையிறக்குதலும் அறிக்கையிடலும் | அனைத்து உள்ளக மோட்டார் பொருத்திய கலன்கள் | | | |
| | கலன் ஒன்று இல்லாது | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமற்ற | ஏற்புடையதன்று | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமற்ற | ஏற்புடையதன்று | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| பிரிவு 53 மீன்பிடிக் கருவிகளை அடையாளமிடல் | **பலநாள் கடற்றொழில் கலன் (இலங்கை மீன் பிடிக் கலன்கள்)** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன் (ஆழ்கடல்)** | | | |
| | IMUL | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| பிரிவு 54 (5) அவதானி மீதான கடப்பாட்டுடன் அமைந்தொழுகாத கப்பற் தலைவன் | IMUL (ஆழ்கடல்) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 54 (6) | IMUL | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| பிரிவு 56 கலன் அற்ற மீனவர்களுக்கான கடற்றொழில் உரிமம் | ஏற்புடையதன்று | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| பிரிவு 57<br>வெளிநாட்டு கலன் ஒன்றில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான மீனவர்களின் கடற்றொழில் உரிமங்கள் | வெளிநாட்டு | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | | | | |
| பிரிவு 58<br>கப்பற் தலைவர்களுக்கான உரிமங்கள் | உள்ளக மோட்டார் பொருத்திய கலன்கள் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | IDAy | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | IMUL | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| பிரிவு 59<br>பொழுது போக்கிற்காக மீன் பிடித்தல் | கலன் ஒன்றுடன் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | கலன் ஒன்று அற்ற | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| பிரிவு 63<br>பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பினால் முகாமை செய்யப்படுகின்ற மீன் இனங்கள் | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 9 (50000001- 100000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| பிரிவு 64<br>பிறிதொரு அரசுக்கு சொந்தமான நீர் பரப்பொன்றில் அனுகல் | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |

| | | | | |
|---|---|---|---|---|
| உடன்படிக்கையுடன் கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | | | |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 9 (50000001- 100000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 10 (100000001 – 175000000) |
| பிரிவு 77 மீன்பிடி ஒதுக்கீட்டுப் பங்கின் அளவும் மீன் பிடி உள்ளீடுகளும் | மீன்பிடிப் படகொன்றை பயன்படுத்தாத சந்தர்ப்பமொன்றில் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | உடலினால் சுழியோடல் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | ஸ்கூபா சுழியோடல் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| பிரிவு 80 (1) (3) (4) (5) மீன்பிடிக் கருவிகள் மற்றும் மீன் பிடி முறைகளின் அடிப்படையில் தடை விதித்தல் | மீன்பிடிப் படகொன்றை பயன்படுத்தாத சந்தர்ப்பமொன்றில் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | உடலினால் சுழியோடல் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | ஸ்கூபா சுழியோடல் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| பிரிவு 80 (2) மீன்பிடி கருவிகள் மற்றும் முறைகள் பாவனையை தடை செய்தல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| பிரிவு 81 சுழியோடல் நடவடிக்கைகள் | உடலினால் சுழியோடல் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | ஸ்கூபா சுழியோடல் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | | | | |
| பிரிவு 82 கரைவலை, சறுக்கல் செவுல் வலைகள் மற்றும் வேறு விதமான தடை செய்யப்பட்ட வலைகள் பாவனை தொடர்பான ஒழுங்கு விதிகள் | செவுல் வலைகள் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | சீன் வலைகள் | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | | | | |
| பிரிவு 83 மீன் பிடித்தலுக்காக நச்சுத் தன்மையான அல்லது வெடி பொருட்களை பயன்படுத்துவதை தடை செய்தல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | | | | |
| பிரிவு 84 கீழ் இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன் பிடித்தலை தடை செய்தல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பிரிவு 85<br>கடற்சூழற் தொகுதியின் மாசுறலை கட்டுப்படுத்தல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 86<br>கைவிடப்பட்ட, தொலைந்த அகற்றப்பட்ட மீன்பிடி கருவிகளை மீளப்பெறல் | ஏதேனும் ஒரு மீன்பிடிக் கலன் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | | | | |
| பிரிவு 87<br>இடம்சார் / நிலையற்ற மூடல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 88<br>கடற்றொழில் இருப்புக்கள் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 89<br>பாதுகாக்கப்பட்ட இனங்கள் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 90<br>மீன் பிடி கலன்கள் மூலமான அறிவியல் ஆராய்ச்சி | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | | | | |
| பிரிவு 91<br>வெளிநாட்டு ஆராய்ச்சி அமைப்பொன்று அல்லது பிரிதொரு அரசினால் செய்யப்படுகின்ற அறிவியல் ஆராய்ச்சிகள் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| | | | | |
| பிரிவு 92<br>கடற்றொழில் தரவு சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| பிரிவு 93<br>தரவுகளை சேகரித்தல், பரிமாறுதல், சரிபார்த்தல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 95<br>மீன்களின் தரம் உணவின் சுகாதாரப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| | | | | |
| பிரிவு 96<br>சட்ட விரோதமாகப் பெற்றுக் கொண்ட கடற்றொழில் உற்பத்திகளை தம் வசம் வைத்திருத்தலையும் அதனை விற்பனை செய்தலையும் தடை செய்தல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | | | | |
| பிரிவு 98<br>மீன் தேடுதல் மற்றும் மீன் பிடித்தல் சான்றிதழ் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 99<br>மீன் பதப்படுத்தும் நிறுவனங்களை பதிவு செய்தல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 100<br>மீன்கள் அல்லது மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள் ஏற்றுமதிக்கான உரிமம் ஒன்றுக்காக விண்ணப்பித்தல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 103<br>கலஞ்சியங்கள் மற்றும் பதனிடல் நிறுவனங்களை சோதனையிடல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| பிரிவு 105<br>பரிசோதிக்கப்பட்ட மீன்கள் அல்லது மீன் உற்பத்திகளுக்கு தலையிடுதல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 109<br>துறைமுகப் பிரவேசம் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |

| | | | | |
|---|---|---|---|---|
| பிரிவு 110 கலன் கண்காணிப்புத் தொகுதி | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| பிரிவு 111 மீளக் கப்பலேற்றுதல் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 112 (1) கரையேறுதல் | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| பிரிவு 112 (2) | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமற்ற | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 4 (100001- 250000) |
| பிரிவு 112 (3) தரையிறக்குதல் | வெளிநாட்டு மீன் பிடிக் கலன்கள் | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| பிரிவு 113 வெளிநாட்டு கொடி தாங்கிய கலன்களுக்கான துறைமுகம் சார் அரச நடைமுறைகள் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| பிரிவு 129 அதிகாரம் அளிக்கப்பட்ட ஆட்களின் கடப்பாடு | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 7 (1000001- 1500000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 8 (1500001- 50000000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 131 (12) கடற்றொழில் பிணக்குகள் | | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியாது | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| பிரிவு 166 ஒழுங்கு விதிகளை மீறுதல் | மோட்டார் அல்லாத பாரம்பரிய கலன்(NTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | கரைவலைக் கலன் (மோட்டார் அல்லாத கலன்) (Non Motorized) (NBSB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | மோட்டார் உள்ள பாரம்பரிய படகு (MTRB) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 1 (1000- 5000) |
| | வெளிப்புற மோட்டார் உடைய நார்கண்ணாடிப் படகு (OFRP) | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 2 (5001 – 50000) |
| | IDAY | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 3 (50001– 100000) |
| | **பலநாள் கடற்றொழில் கலன்** | | | |
| | 15 மீட்டரை விட குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 15 மீட்டரை விட கூடிய 24 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 5 (250001- 500000) |
| | 24 மீட்டரை விட கூடிய 45 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 6 (500001- 1000000) |

| | | | | |
|---|---|---|---|---|
| | 45 மீட்டரை விட கூடிய 75 மீட்டரை விடக் குறைந்த | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 7 (1000001-1500000) |
| | 75 மீட்டரை விட கூடிய | பாரதூரமான | சமரசமாக தீர்க்க முடியும் | தண்ட மட்டம் 8 (1500001-50000000) |

**அட்டவணை IV - சட்ட விரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல்**

**"சட்ட விரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல்"** அல்லது "IUU", மீன்பிடித்தல்'' கீழே வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான சட்ட விரோதமான மீன்பிடித்தல், அறிக்கையிடப்படாத மீன்பிடித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

**சட்ட விரோதமான மீன்பிடித்தல் தொடர்பாக-**

அ) இலங்கைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறி இலங்கையின் நீர்ப்பரப்புக்களில் ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மீன்பிடிக் கலனினால் மேற்கொள்ளப்படும்:

ஆ) இந்து சமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழு அல்லது இலங்கை திறத்தவரொருவராகவுள்ள வேறு கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பொன்றினால் ஏற்றுகொள்ளப்பட்ட பேணிக்காப்பு மற்றும் முகாமை வழிமுறைகளை நடைமுறைப்படத்துவதற்கு ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி உட்பட எவையேனும் சட்டங்களை அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியை மீறி ஆழ்கடலில் ஏதேனும் உள்நாட்டு மீன்பிடிக் கலனினால் மேற்கொள்ளப்படும்:

இ) பிறிதொரு அரசின் நியாயாதிக்கத்தின் கீழுள்ள நீர்ப்பரப்பில் அவ்வரசின் அனுமதியின்றி ஏதேனும் உள்நாட்டு மீன்பிடிக் கலனினால் மேற்கொள்ளப்படும்

ஈ) விடயத்திற்கேற்ப -

(i)இந்து சமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழுவினால் அல்லது மற்றைய பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது

(ii)இலங்கையினால் நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கியுள்ள ஏதேனும் சர்வதேச உடன்படிக்கையின் இயைபான ஏற்பாடுகள் அல்லது கடப்பாடுகளை,

நடைமுறைப்படுத்தி இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக இந்து சமுத்திர டியூனா ஆணைக்குழுவின் அல்லது இலங்கை ஒரு திறத்தவராகவுள்ள வேறு பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்பின் திறத்தவரான ஏதேனும் வெளிநாட்டுக் கொடியை பறக்க விட்டுள்ள மீன்பிடிக் கலனினால் இலங்கை நீர்ப்பரப்பில் மேற்கொள்ளப்படும் கடற்றொழில் நடவடிக்கைகள் எனப் பொருள்படும்

**அறிக்கையிடப்படாத மீன்பிடித்தல் தொடர்பாக:**

இந்து சமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழு அல்லது அத்தகு வேறு பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பின் அறிக்கையிடல் நடைமுறைகளை செயற்படுத்தி அல்லது விடயத்திற்கேற்ப இந்துசமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழுவின் அல்லது வேறேதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பின் அதிகாரப் பிரதேசத்தினுள் அல்லது வேறு அவ்வாறான பிரே தசத்தினுள் இலங்கையினால் பொறுப்பேற்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கையின் அல்லது கடப்பாட்டின் இயைபான ஒழுங்குவிதிகளை செயற்படுத்தியவாறு இச்சட்டத்தின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலாக இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ள அறிக்கையிடல் நடைமுறைகளை மீறி அறிக்கையிடப்படாத அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு பிழையாக அறிக்கையிடப்பட்ட கடற்றொழில் நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.

**ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தல் தொடர்பாக:**

அ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் மூலம் செயற்படுத்தப்படும் இந்து சமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழு அல்லது அத்தகு வேறு பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பின் பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகமைத்துவ வழிமுறைகளுடன் இணங்காத அல்லது அவற்றுடன் முரணாகாத முறையில், ஏதேனும் விதத்தில் ஏதேனும் அரசுக்கு உரித்தல்லாத மீன்பிடிக் கலனினால் அல்லது, இந்து சமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழு அல்லது அத்தகு வேறு பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பின் திறத்தவரொருவராகவல்லாத அரசொன்றின் கொடியுடைய மீன்பிடித்தல் கலமொன்றின் மூலம் இந்து சமுத்திரத்தின் டியூனா ஆணைக்குழு அல்லது இலங்கை ஒரு தரப்பாகவுள்ள வேறதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பின் அதிகாரம் வாய்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும்,.

ஆ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் மூலம் தரப்பட்டுள்ள அளவுக்கு சர்வதேச சட்டத்தின் கீழ் உயிருள்ள கடல்சார் வளங்களை பேணிப் பாதகாப்பதற்கான இலங்கையின் பொறுப்புக்களுடன் இணங்காத ஏதேனும் விதத்தில், ஏற்புடைய பாதுகாப்பு அல்லது முகாமைத்துவ வழிமுறைகள் எதுவுமற்ற பிரதேசங்களில் அல்லது மீன் கையிருப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும், கடற்றொழில் நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.